# அபத்தம்

தை 2024 13



# அவதூறு இலக்கியம்

# அவதூறு இலக்கியம்

விவாதத்தில் தோற்றுப் போனவன், அவதூறை ஆயுதமாக எடுக்கிறான்.

கிரேக்க பேரறிஞர் சோக்கிரட்டீஸ் சொன்னது. பேஸ்புக்கில் வந்தது. உண்மையாகத் தானே இருக்கும். எங்காவது எவனாவது உங்களைப் பற்றி ஏடாகூடமாகச் சொல்லியிருப்பான். நொந்து போன மனதைத் தொட்டிருக்கும். பகிர்ந்தும் இருப்பீர்கள்.

When the debate is lost, slander becomes the tool of the loser.

யாரோ ஒரு அனாமதேய பேஸ்புக் ஞானி பொதுவெளியில் விட்டது. வரலாறாகி விட்டது.

பொய்கள் வரலாறாவது புதுவிடயமும் அல்லவே!?

கண் முன்னால் தினசரி காண்கிறவை ஆயினும்!

சோக்கிரட்டீஸ் புத்தகம் எதுவும் எழுதவில்லை. அவரது சீடர்களும், சீடர்களின் சீடர்களும் தான் அவரைப் பற்றி எழுதினார்கள். அவர் இந்தக் கூற்றைச் சொன்னதுமில்லை. அவர் சொன்னதாக அவரது சீடர்களும் சொன்னதில்லை.

இப்படிப் பல 'ஆன்றோர் வாக்குகள்', 'மணிமொழிகள்' எல்லாம் பேஸ்புக்கிலும், வட்சப்பிலும் பல சான்றோர்களால் மணியாகப் பரப்பப்பட்டபடியே உள்ளன. '24 மணி நேரத்திற்குள் பகிரா விட்டால் இரத்தம் கக்கிச் சாவாய்' போன்ற அறிவுறுத்தல்களுடன்.

அதையும் எந்த அறிவாளியும் கேள்விக்குள்ளாக்கியதாகக் கண்ணில் படுவதுமில்லை. அதை மேற்கோள் காட்டுவது தங்களை புத்திஜீவிகளாகக் காட்டிக் கொள்ள, எங்காவது தங்களைப் பற்றி அவதூறு செய்யும்போது உதவக் கூடும் என்ற எண்ணத்தில் சேகரித்து வைத்திருக்கவும் கூடும்.

தமிழ்ச் சமூகத்தில் விவாதம் என்று ஒரு விடயம் இருப்பதாக நான் அறிந்ததில்லை. 'கற்பில் சிறந்தவள் கண்ணகியா? சீதையா?' என்பதற்கான உண்மை ஏற்கனவே ஒரு தடவை beyond reasonable doubt நிருபிக்கப்பட்டிருந்தால், விவாதம் அத்தோடு முற்றுப் பெற்றிருக்கும். தங்கள் மனைவிமாரே தாங்கள் இல்லாத போது, வேறு யாருடனாவது படுத்து எழும்பி விடுவார்களோ என்று சதா சந்தேகிக்கிற கூட்டத்திற்கு, கற்பு பற்றிய சந்தேகம், எத்தனை தடவை நிரூபித்தாலும், எப்போதுமே மனதில் இருப்பதில் என்ன சந்தேகம்? இராமனும் கோவலனும் கூட இவ்வளவு தூரம் கவலைப்பட்டிருக்க மாட்டார்கள்.

கற்பு என்பது பெண்களின் யோனிகளுக்கு இடையில் என்பதை விட, இவர்களின் மனதிற்குள் தீராத நோயாகவே இருக்கும்போது, அதை எப்படி மாற்றத் தான் முடியும்?

இதனால் தான் 'சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள்' (Caesar's wife must be above suspicion) என்று சொல்கிற சமூகங்கள் நாகரிகத்தில் முன்னேற முடிந்திருக்கிறது. அவர்களுடைய தேடலும் சிந்தனையும் பெண்களின் யோனிகளுக்குள் மட்டும் பிரபஞ்சத்தைக் காண்கிறவையாக இல்லை!

மதக் கலவரங்கள் முதல் ஆணவக் கொலை ஈறான கொலை வெறிக்கு... மதம், சாதிப் பெருமை

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

**அறிவு என்பது தேடல்களாலும், கேள்விகளாலும், சிந்தனைகளாலும், தர்க்கரீதியான விளக்கங்களாலும், நியாயப் படுத்தல்களாலும் உருவாவது. நம்பிக்கை அவ்வாறானது அல்ல. அதற்கு எந்த உண்மைகளும் ஆதாரங்களும் கூடத் தேவையில்லை. ஏதோ வகையில் தன்னுடையது என்பது மட்டும் கூடக் காரணமாக இருக்கலாம். காரணம் எதுவும் இல்லாமல், வெறுமனே பிடித்ததாக இருந்தால் கூடப் போதும். மனம் அதற்கான நியாயங்களைத் தேடிப் பிடித்து விடும்.**

**கடவுள் வானத்தில் இருந்து இறங்கி வருவார் என்பதும், யுகப்புரட்சி வந்து விடியல் மலரும் என்பதும் சாத்தியப்படாத வெறும் நம்பிக்கைகள் தான். அவை எல்லாம் மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் என்று எப்படித் தான் நியாயப்படுத்தினாலும், அவை தர்க்க ரீதியான, நடைமுறைச் சாத்தியமான, அறிவு சார்ந்தவை அல்ல.**



facebook: George RC

என்பதை விட, தங்கள் பெண்களின் யோனிகளுக்குள் மற்றச் சாராரின் லிங்கங்கள் நுழைந்து விடுமோ என்ற அச்சம் தானே அடிப்படையானதாக இருக்கிறது!? மற்றச் சாராரை அவமானப்படுத்த அவர்களின் பெண்களின் யோனிகளுக்குள் தங்கள் லிங்கங்களை நுழைப்பது பெருமையாகவும் தானே கருதப்படுகிறது? தொட்டால் தீட்டு என்று கருவறைக்கே நுழைய அனுமதி மறுக்கிற மனுதர்மம் கூட லிங்கத்தால் யோனியைத் தொட்டு கருவறைக்குள் நுழைவதற்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கத் தானே செய்கிறது?

இஃது அவ்வாறிருக்க...

ஏற்கனவே தாங்கள் ஏதோ காரணத்தினால் நம்புகிற, கைக்கொள்கிற ஒன்றை முழுமுதல் உண்மையாக விசுவசிக்கிற ஒரு சமூகத்திற்கு, அந்த நம்பிக்கைகள் தான் அவர்களின் ஆளுமையின் முழு அடையாளமாக, இருப்பின் அர்த்தமாக இருந்து விடுகிறது. அந்த நம்பிக்கைகள் கூடப் பெரும்பாலும் இவர்களின் பிறப்புக் காரணமான சாதிகள், மதங்கள், இனங்களாகவும், கொஞ்சம் வாசிக்கிறவர்கள் என்றால், அவர்கள் பின்பற்றுகிற தத்துவங்கள், கொள்கைகளாகவும் இருக்கின்றன.

அறிவு என்பது தேடல்களாலும், கேள்விகளாலும், சிந்தனைகளாலும், தர்க்கரீதியான விளக்கங்களாலும், நியாயப் படுத்தல்களாலும் உருவாவது. நம்பிக்கை அவ்வாறானது அல்ல. அதற்கு எந்த உண்மைகளும் ஆதாரங்களும் கூடத் தேவையில்லை. ஏதோ வகையில் தன்னுடையது என்பது மட்டும் கூடக் காரணமாக இருக்கலாம். காரணம் எதுவும் இல்லாமல், வெறுமனே பிடித்ததாக இருந்தால் கூடப் போதும். மனம் அதற்கான நியாயங்களைத் தேடிப் பிடித்து விடும்.

கடவுள் வானத்தில் இருந்து இறங்கி வருவார் என்பதும், யுகப்புரட்சி வந்து விடியல் மலரும் என்பதும் சாத்தியப்படாத வெறும் நம்பிக்கைகள் தான். அவை எல்லாம் மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் என்று எப்படித் தான் நியாயப்படுத்தினாலும், அவை தர்க்க ரீதியான, நடைமுறைச் சாத்தியமான, அறிவு சார்ந்தவை அல்ல.

எனவே, இந்த வெறும் நம்பிக்கைகள் வெறும் உண்மைகள் என்று கூட இல்லாமல், ஒரு மனிதனின் இருப்பின் அடையாளமாக மட்டுமாகவே இருக்கும்போது, அதைப் பற்றிய எதையும் கேள்விக்குள்ளாக்குவது ஆளுமைக்கும், இருப்புக்குமான அச்சுறுத்தலாகி விடுகிறது. எனவே, விவாதம் மூலமாக சிந்தனையைச் செழுமைப்படுத்தி, அறிவை வளர்த்துக் கொள்ளும் இயல்பு இந்தச் சமூகத்தில் இல்லாமல் போய் விடுகிறது.

உலகில் வளர்ச்சி, முன்னேற்றம் என்று சொல்லக் கூடிய அனைத்தும் ஏதோ வகையில் தற்போதைய நிலையைக் குறித்த, எல்லாராலும் வழமையானவையாக ஏற்றுக் கொள்ளப்பட்டவைகள், ஏற்கனவே முயற்சித்துக் கண்ட தோல்விகள் மீதான கேள்விகளில் இருந்து தான் ஆரம்பித்திருக்கின்றன.

திறந்த மனதும் தன்னம்பிக்கையும் கொண்ட மனிதர்களின் தேடல்கள் அவர்களை வளர்த்துக் கொண்டே இருக்கின்றன. உண்மைகளை அறிந்து கொள்ளும்போது, தங்களை வளர்த்துக் கொள்கிறார்கள். தங்கள் தவறுகளை உணர்ந்து கொள்ளும்போது தங்களைத் தயக்கம் இன்றித் திருத்திக் கொள்கிறார்கள்.

தன்னம்பிக்கை இல்லாதவர் களாக இருந்தால், உண்மையை அறிந்து கொண்ட பின்னால், கருத்துக்களை மாற்றிக் கொள்வது

அவர்களின் ஆளுமையின் அடையாளத்தைத் தகர்த்து விடக் கூடியது. அத்தோடு அவ்வாறானதொரு நம்பிக்கையைக் கொண்டிருந்ததற்கான முட்டாள் தனம் குறித்து தனக்கே வெட்கத்தை வருவிக்கக் கூடியது.

கண் முன்னாலேயே புலிகள் அழிந்து முடிந்த பின்னாலும், புலிவாலில் இன்றைக்கும் யாழ்ப்பாணிகள் தொங்கிக் கொண்டிருப்பது கூட, அந்த வெட்கம் குறித்தானது தான்.

இதனால் தான், தர்க்கத்துக்கு முரணான முட்டாள்தனமான வியாக்கியானங்களை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கவும், அயோக்கியர்கள் அது குறித்து பொய்களைச் சொல்லிப் பிழைப்பு நடத்தவும் முடிகிறது.

முட்டாள்தனத்தை மறைக்க நடித்தே ஆக வேண்டும்!

இந்த 'நம்பிக்கைமுதல்வாதம்' எந்த வித தர்க்கரீதியான விவாதங்களுக்கும் இடம் கொடுக்க விரும்பாது. கேள்வி கேட்ட உடனேயே துரோகி என்றோ, சங்கி என்றோ, ஆன்டி பாரத் என்றோ முத்திரை குத்த வைத்து விடுகிறது.

இந்த இயல்பு வெறும் 'நம்பிக்கை முதல்வாதிகளுக்கு' மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதும் இல்லை. கொஞ்சமாவது வாசிக்கத் தெரிந்தவர்களுக்குக் கூட இவ்வளவு வாசிப்பின் பின்னாலும், அறிவு வ(ள)ரும் என்பதே இல்லாதிருக்கும்போது, இவர்கள் எல்லாருக்கும் பகுத்தறிவு எப்படி வந்து விட முடியும்?

இப்படி படித்தவர்களில் கூட எவரும் விவாதங்களுக்குத் தயாரானவர்களாக நான் கண்டதில்லை. வெறும் நம்பிக்கைகளுடன் விவாதம் செய்ய முடியாது. உண்மையின் அடிப்படையிலான தர்க்கரீதியான நியாயப்படுத்தல்களுடன் மட்டுமே விவாதம் செய்ய முடியும்.

அந்தந்த நேரக் கேளிக்கைகளாக உள்ள தொலைக்காட்சி விவாதங்கள் எல்லாம் வெறும் standup comedy களே. அவை தர்க்கரீதியான, அறிவு சார்ந்து தெளிவு நோக்கிய தேடல்கள் இல்லை.

**இந்த 'நம்பிக்கைமுதல்வாதம்' எந்த வித தர்க்கரீதியான விவாதங்களுக்கும் இடம் கொடுக்க விரும்பாது. கேள்வி கேட்ட உடனேயே துரோகி என்றோ, சங்கி என்றோ, ஆன்டி பாரத் என்றோ முத்திரை குத்த வைத்து விடுகிறது.**

**இந்த இயல்பு வெறும் 'நம்பிக்கை முதல்வாதிகளுக்கு' மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதும் இல்லை. கொஞ்சமாவது வாசிக்கத் தெரிந்தவர்களுக்குக் கூட இவ்வளவு வாசிப்பின் பின்னாலும், அறிவு வ(ள)ரும் என்பதே இல்லாதிருக்கும்போது, இவர்கள் எல்லாருக்கும் பகுத்தறிவு எப்படி வந்து விட முடியும்?**

எங்கள் சமூகத்தில் இருக்கும் idolization வியாதி பாமரர்களுக்கு மட்டுமன்றி, படித்தவர்களுக்கும் தொற்றி இருப்பது இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று.

வெறுமனே மதங்களில் உள்ள சிலைக் கடவுளரை மட்டுமன்றி, அரசியல், சினிமா, இலக்கியம் என்று எதை எடுத்துக் கொண்டாலும், அதில் உருவ வழிபாடு செய்கிறவர்கள் அதிகம். கல்லுக்கும் கட்டவுட்டுக்கும் பால் ஊற்றுகிறவர்களை விட, அரசியல்வாதிகளுக்காக தீக்குளிக்கிறவர்களும், இலக்கிய மேதகுக்களுக்காக தற்கொலைப் போராளிகளாகத் தயாராக உள்ள இலக்கியப் பெருந்தகைகளும் இங்கே உண்டு.

போராட்டம், மதம், சினிமா என்று பாமரர்கள் மட்டும் வழிபடுகின்றனவாக மட்டுமில்லை, அரசியல், இலக்கியம் என்பவற்றிலும், கொஞ்சமாவது படித்தவர்கள், சிந்திக்கத் தெரிந்தவர்கள் என்று நம்புகிறவர்கள் கூட, தங்களுக்கான முழுமுதல் கடவுளரை வரித்து வழிபட்டவாறே உள்ளனர். அந்தக் கடவுளர்கள் பற்றிய எந்தக் கேள்வியும், இவர்களின் இருப்புக்கும் அடையாளத்துக்கும் அச்சுறுத்தலாக இருந்து விடுகிறது.

இவர்களுக்கும் மத நம்பிக்கை கொண்டிருப்போருக்குமான வித்தியாசம், மத நம்பிக்கை கொண்டோர் கண் காணாத சிலைக் கடவுள்களை நம்புகிறவர்களாகவும், இவர்கள் கண்ணால் காணும் மனிதர்களை கடவுள்களாக சிலை வைக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

அவர்கள் தேங்காய் உடைப்பது போல, இவர்கள் சில நேரம் மண்டைகளையும்! அவ்வளவு தான்.

அந்த மனிதர்களை புனிதர்களாகவும், எல்லாம் வல்லவர்களாகவும், 'சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாகவும்' விசுவசிக்கிறார்கள். இந்த விசுவாசம் அறிவு சார்ந்ததாக இல்லாமல், வெறும் நம்பிக்கை சார்ந்ததாக மட்டுமே இருக்கிறது.

மதங்களில் நம்பிக்கை கொண்ட பாமரனுக்கும், தத்துவங்களில் நம்பிக்கை கொண்ட படித்தவனுக்குமான வித்தியாசங்கள் இங்கே பெரிதும் இல்லை.

இதனால், கருத்துப் பரிமாற்றங்கள், விவாதங்கள் மூலமாக உண்மைகளைக் கண்டறியும் பண்பு இந்தச் சமூகத்தில் இல்லாதிருக்கிறது.

வெளியீட்டு விழாக்களில் ஒலிவாங்கி கிடைக்கும் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதவர்கள் கூட, ஒன்றில் ஆகா ஒகோ என்று புகழ்கிறார்கள், அல்லது பொறாமையை மறைக்க முடியாமல் மோசமாக விமர்சிக்கிறார்கள். அல்லது, பேச வந்த விடயத்தை விட்டு தங்களைப் பற்றிய சுயபிரதாபங்களை அவிழ்த்து விடுகிறார்கள். அதையும் மீறி, ஒரு தர்க்கரீதியான விமர்சனத்தை வைக்கப் போனாலும், அழைத்தவர்களுக்கும், உட்கார்ந்திருப்பவர்களுக்கும் அதைக் கேட்பதில் ஆர்வமும் இல்லை.

இப்படி, கருத்துப் பரிமாற்றம் என்பது விவாதம் என்ற நிலைக்குப் போக முடியாமல் மேடைகளும் மைக்குகளுமாக முடங்கி விடுகிறது.

அடுத்து, விவாதம் என்பது பற்றிய தாற்பரியம் இங்கே ஏதோ ஒரு யுத்தம் என்ற வகையில், வெற்றி,

தோல்வியில் முடிய வேண்டிய ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

தோல்வி அடைகிறவர் ஆயுதங்களை ஒப்படைத்துச் சரணாகதி அடைந்து, தண்ணீரால் ஞானஸ்நானம் பெற்றுத் தங்களுடைய மதத்திற்கு மாற வேண்டும் என்ற சிந்தனையில் தான் விவாதங்கள் நடக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது.

விவாதங்கள் நாங்கள் வைத்திருக்கும் கருத்துக்களைச் செழுமைப்படுத்தவும், மற்றவர்கள் தங்கள் கருத்துக்களை வைத்திருப் பதற்கான அவர்களின் உரிமைகளை மதிப்பதற்குமானதாகத் தான் இருக்க வேண்டுமே அன்றி, மற்றவர்களை தண்ணீரில் அமுக்கி, 'யேசுவைக் காண வைப்பதற்கானது இல்லை' என்ற அடிப்படை உண்மை இங்கே புரிந்து கொள்ளப்படுவதில்லை.

விவாதங்கள் கருத்துப் பரிமாற்றத்துக்கும், தங்கள் பக்கத்தை தர்க்கரீதியாக நியாயப்படுத்தவும், தங்கள் தவறுகளை உணர்ந்து கொண்டால் கருத்துக்களை மாற்றிக் கொள்வதற்குமானவை. கருத்துக்களை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை கூட இல்லை. முரண்பாடுகளுக்குள் உடன்பாடுகளைக் காணக் கூடியவற்றில் உடன்பாடுகளையும் காணலாம். தேவையானவற்றில் முரண்பட்டும் போகலாம். நிலைப்பாடுகளை விட்டுக் கொடுக்காமல், agreeing to disagree என்று கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கான உரிமையை மதிக்கலாம்.

ஆனால், அதெல் லாம் கருத்துக்களைக் கொண்டிருப் போருக்கும், அறிவை வளர்த்துக் கொள்ள திறந்த மனதோடு இருப்பவர்களுக்கும் ஆனது. நம்பிக்கைகளைக் கொண்டிருப் போருக்கும், தங்களை கருத்துக்களை மாற்ற வேண்டிய தேவை இல்லாத அதிபுத்திசாலிகளாக நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் ஆனது இல்லை.

இங்கே இருக்கின்ற கருத்து வறுமையும், எதையாவது தெரிந்து வைத்திருப்பதாகக் காட்டிப் பெருமை கொள்வது தான் சுய

**தமிழ்நாட்டில் உள்ள ஒரிஜினல் சங்கிகளை விட, பெரியாரிய, அம்பேத்காரிய, கம்யூனிஸ வாதிகளால் பரஸ்பரம் சங்கிகளாக்கப் பட்டவர்களின் தொகை அதிகம்.**

**இது தர்க்கரீதியான விவாதங்களின் பின்னால் வந்த முடிவுகள் இல்லை. தேர்தல் கூட்டணி சம்பந்தமானதாகக் கூட இருக்கிறது. நியாயமான விமர்சனங்களினால் வந்ததாகக் கூட இருக்கிறது. தனிப்பட்ட கோபதாபங்களால் வந்ததாக இருக்கிறது. வெறும் ஆளுமைக் கோளாறுகளால் ஆனதாக இருக்கிறது.**

அடையாளமாக இருப்பதும் இந்த விவாதங்களுக்கு வழிவிடுவதில்லை. தங்களது கருத்துக்களைத் துணிந்து சொல்லவும், அதை தர்க்க ரீதியாக நியாயப்படுத்தவும் முடியாதவர்களால் விவாதங்களில் கலந்து கொள்ள முடியாது.

தன்னுடைய கடவுள் தான் மேலானவர் என்று ஆளை ஆள் கொல்வதற்குத் தயாராக இருக்கும் மதவாதிகளை விட, இந்த கருத்துவாதிகள் எந்த விதத்திலும் மேலானவர்கள் இல்லை.

சமூக ஒழுக்கத்திற்கான வழிகளாக மதங்கள் இருக்கும் என்றாலும், அந்த நம்பிக்கைகளுக்காகக் கொல்லலாம் என்னும் போதே அந்த மதத்தின் ஒழுக்கம் பற்றிய கருத்து அடிபட்டுப் போகிறது.

தத்துவங்கள் சமூக நீதிக்கானவை. அவை கூட, அந்தக் கருத்துக்களுக்காக மற்றத் தத்துவங்களை கைக் கொண்டிருப்பவர்கள் மீது அவதூறு செய்யலாம் என்னும் போதே அவற்றின் நோக்கங்களும் அடிபட்டுப் போகின்றன.

பெரியாரியமும், அம்பேத் காரியமும், கம்யூனிசமும் சமூக நீதிக்கானவை. ஒன்றுக்கு ஒன்று compatible ஆனவை. They complement each other. அவை அவற்றவற்றுக்கான வழிகளில் மாறுபடலாம், அவை செயற்பட வேண்டிய சமூக அமைப்புகள் மாறுபடலாமே ஒழிய, அவற்றின் நோக்கமும் முடிவும் சமூக நீதியே!

தமிழ்நாட்டில் உள்ள ஒரிஜினல் சங்கிகளை விட, பெரியாரிய, அம்பேத்காரிய, கம்யூனிஸ வாதிகளால் பரஸ்பரம் சங்கிகளாக்கப் பட்டவர்களின் தொகை அதிகம்.

இது தர்க்கரீதியான விவாதங்களின் பின்னால் வந்த முடிவுகள் இல்லை. தேர்தல் கூட்டணி சம்பந்தமானதாகக் கூட இருக்கிறது. நியாயமான விமர்சனங்களினால் வந்ததாகக் கூட இருக்கிறது. தனிப்பட்ட கோபதாபங்களால் வந்ததாக இருக்கிறது. வெறும் ஆளுமைக் கோளாறுகளால் ஆனதாக இருக்கிறது.

இன்றைக்குக் கூட திராவிடத்தைக் காட்டி ஆட்சிக்கு வந்தோரின் ஊழல்களையும், மற்றைய சமூக நீதித் தத்துவங்களைக் கைக் கொண்டிருப்போர் பற்றிய நியாயமான விமர்சனங்களையும் நீங்கள் தர்க்கரீதியாகக் கூட கேள்வி எழுப்ப முடியாது. உங்களைப் பற்றிய அவதூறுகளைச் செய்வதற்காகவே சம்பளத்திற்கு அமர்த்தப்பட்ட கூட்டம் உண்டு. சம்பளமில்லாமல் குரைக்கிற ஆர்வக் கோளாறுகளும் உண்டு.

ஆக, விமர்சனம் என்பது கருத்துப் பற்றியதாக இல்லாமல், தன் ஆளுமை, இருப்பு மீதான அச்சுறுத்தலாகப் பார்ப்பதன் விளைவாகத் தான் இந்த அவதூ றுகள் எழுகின்றன.

யாழ்ப்பாணச் சமூகத்தில், புலி பிராண்ட் தமிழ்த் தேசியத்தின் மீதான எந்தக் கேள்வியும் துரோகி என முத்திரை குத்தப்பட்டு, மரண தண்டனை விதிக்கக் கூடிய குற்றமாகக் கருதப்படுகிறது. கொலைகாரர்களை விடுதலை வீரர்களாகவும், போராட்டத்தைக் காட்டி பணத்தைச் சுருட்டுகிற அயோக்கியர்களைத் தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள் ஆகவும் கொண்டாடுகிற ஒரு சமூகத்தில், சிந்திக்கத் தெரிந்த எவனும் கருத்துச் சொல்ல முடியாத நிலையில்

இருப்பதால் தான், பல நல்லவர்கள் இந்தச் சமூகத்தில் இருந்த விலகிப் போய், எங்களுக்கு அயோக்கியர்கள் தலைவர்களாகவும், எந்த ஒரு அரசியல் தீர்வை முன்னெடுக்க முடியாமலும் இருக்கிறது.

இந்தச் சமூகம் அவ்வவ்போது மந்தை போலப் பின்தொடருகிற எந்தக் கொள்கையையும் நீங்கள் கேள்விக்குள்ளாக்கி விவாதப் பொருளாக்க முடியாது.

அதன் நடத்தையில் உள்ள முன்பின் முரண்பாடுகளைக் கூட நீங்கள் கேள்வி கேட்க முடியாது. விவாதத்திற்குத் தயாராக இல்லாமல், அவதூறுகளையும் மரணத்தையும் கோருகிற கொலை வெறிச் சமூகம் குறித்து என்ன நம்பிக்கையைக் கொண்டிருக்க முடியும்?

தான் ஒரு காலத்தில் போற்றிக் கொண்டாடிய ஒருவரை அவதூறு செய்வதில் இந்தச் சமூகம் எந்த வெட்கத்தையும் கொண்டிருந்ததில்லை. அது அமிர்தலிங்கமாக இருந்தால் என்ன? கருணா, கே.பியாக இருந்தால் என்ன?

அந்தந்த நேரத்தில் அரிப்பு எடுக்கும் போது வரும் சிந்தனைகளுக்கு நீங்கள் ஆமாம் சாமி போட்டே ஆக வேண்டும்.

யுத்தம் முடிந்து இத்தனை ஆண்டுகளின் பின்னாலும், கண் முன்னால் நடந்த இந்தத் தோல்விக்கான காரணம் என்ன என்பது பற்றிய எந்த விவாதமும் இந்தச் சமூகத்தில் எழுந்ததில்லை. ஐம்பது வருடங்களிற்கு முந்திய பிரச்சனைகளையும் சூழ்நிலைகளையும் இன்றைக்கும் காட்டி, தன்னை ஏமாற்றிக் கொண்டிருப்பதைத் தவிர, இன்றைய சூழலில் சாத்தியமான தீர்வுகள் பற்றி இந்தச் சமூகத்தில் எந்த முடிவுக்கும் வர முடியாமல் இருப்பதன் காரணம், அதன் கருத்து வறுமையும், அதிபுத்திசாலிகள் என்ற நினைப்பும் எந்த ஒரு விவாதத்திற்கும் வழிவிடாமல் இருப்பது தான்.

**யுத்தம் முடிந்து இத்தனை ஆண்டுகளின் பின்னாலும், கண் முன்னால் நடந்த இந்தத் தோல்விக்கான காரணம் என்ன என்பது பற்றிய எந்த விவாதமும் இந்தச் சமூகத்தில் எழுந்ததில்லை. ஐம்பது வருடங்களிற்கு முந்திய பிரச்சனைகளையும் சூழ்நிலைகளையும் இன்றைக்கும் காட்டி, தன்னை ஏமாற்றிக் கொண்டிருப்பதைத் தவிர, இன்றைய சூழலில் சாத்தியமான தீர்வுகள் பற்றி இந்தச் சமூகத்தில் எந்த முடிவுக்கும் வர முடியாமல் இருப்பதன் காரணம், அதன் கருத்து வறுமையும், அதிபுத்திசாலிகள் என்ற நினைப்பும் எந்த ஒரு விவாதத்திற்கும் வழிவிடாமல் இருப்பது தான்.**

அது இன்றைக்குப் புலிகளின் வாலில் தொங்கி, மாவீரருக்கு அஞ்சலி செலுத்தி போஸ் கொடுக்கிற கூட்டத்திற்குள்ளே பல முகாம்கள் உருவாகி, அடிபிடி வரைக்கும் போய், அவர்களே தங்களுக்குள் ஆளை ஆள் துரோகி என்பதில் வந்து முடிந்திருக்கிறது. புலிகளில் இருந்த மாத்தயா முதல் கே.பி வரைக்கும் தாங்களே புகழ்ந்தவர்களைக் கூச்சமில்லாமல் அவதூறு செய்தவர்கள் இவர்கள். இன்றைக்கு யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியம் கொண்டாடுகிற தலைவர்களில் தங்களில் ஏதோ ஒரு குழுவினரால் துரோகி என்று அழைக்கப்படாத ஒருவர் கூட இல்லை.

ஒன்றாக இருந்து சமூகத்தை ஏமாற்றிய அயோக்கியர்கள் ஆளை ஆள் அடித்துக் கொண்டு அவதூறு செய்து கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணச் சமூகத்தில் 'பொம்பிளைப் பிரச்சனை', 'காசு அடிச்சிட்டார்' என்பவை மிகச் சுலபமாகச் சுமத்தக் கூடிய அவதூறுகள். யாரும் ஆதாரம் கேட்கப் போவதுமில்லை. முழுச் சமூகமும் அப்படியே முழுமையாக நம்பி அதையே கீறல் விழுந்தபடி சொல்லிக் கொண்டே இருக்கும்.

தனிநாட்டுக் கோரிக்கைக்கு எதிரானவர்கள் பற்றி தமிழரசுக் கட்சியினர் செய்த அவதூறுகள் பல பொய்யானவை என்பது இப்போதும் எல்லாருக்கும் தெரியும். துரையப்பா பற்றிச் சொல்லப்பட்ட அதே குற்றச்சாட்டுத்தான் அவரது கொலைக்கு உசுப்பேத்தி விட்ட அமிர்தலிங்கத்திற்கும் வைக்கப்பட்டது.

புலிகள் காலத்தில் பிரபலமான 'காட்டியும் கூட்டியும் கொடுப்பவர்கள்' என்ற பதம் கூட, இவ்வாறான அவதூறு மனநிலையில் உருவானது தான்.

தானே போற்றிப் பாடிய ஒருவரை தூற்றிக் கொள்வதற்கு இந்தச் சமூகத்திற்கு நேரம் எடுப்பதுமில்லை. அது குறித்து வெட்கமும் இல்லை. கொஞ்ச நாளைக்கு முன்னால், இதையெல்லாம் தெரிந்து கொண்டு தான் இவர்களை எல்லாம் போற்றிப் பாடிக் கொண்டிருந்தோமே என்பதுகூட வெட்கத்துக்குரியதாக இருப்பதில்லை.

இந்த அவதூறுகள் எல்லாம் கருத்துக்கள் சார்ந்தோ, விவாதத்தின் அடிப்படையில் ஆனதாகவா இருக்கின்றன? எதிராளியை அவமானப்படுத்துவதற்கான ஒரு வழியாகத் தான் இந்த அவதூறுகள் இருக்கின்றன. தன்னுடையபக்கத்தின் தர்க்கரீதியான நியாயங்களைச் சொல்ல வக்கில்லாமல், எதிராளியை அவதூறு செய்வதன் மூலம் அவமானப்படுத்திப் பின்வாங்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை அது.

பேஸ்புக்கில் இன்று முன்னெடுக்கப்படும் இவ்வகையான அவதூறுகள் கூட, எதிராளியை களத்திலிருந்து அப்புறப்படுத்தும் நோக்கம் கொண்டவையே அன்றி, கருத்துக்களால் தோற்கடிக்கும் நோக்கம் கொண்டவை இல்லை. இன்றைக்கும் புலிகள் பற்றிய விமர்சனத்தை, புலிகளால் பாதிக்கப்பட்டவர்கள், புலிகளோடு இருந்தவர்கள், புலிகள் பற்றி நியாயமான விமர்சனங்களை முன்வைப்பவர்கள் யாராக இருந்தாலும், சொல்லும்போது, புலிகளுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லாமல், புலிகளைப் பற்றிய கேள்விச் செவிச் செய்திகளை விசுவசிக்கிற தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், 'துரோகிகளுக்கு

மரண தண்டனை வழங்கத்தானே வேண்டும்!' என்று சொல்லும் போது, அதையிட்டுச் சிரித்துக் கொள்ளத் தானே முடியும்? புலிகள் அழிந்து போய் விட்டார்கள் என்ற உண்மை கூட இந்த முட்டாள்களுக்குத் தெரிவதில்லை.

அவதூறு என்பது என்ன?
தனக்கு அது உண்மையில்லை என்று தெரிந்த பின்னாலும் சொல்கிற பொய். அல்லது தன்னோடு இருக்கும்போது கண்டும் காணாமலும், ஏற்றுக் கொண்டும் இருந்த ஒரு இயல்பை தற்போது குற்றச்சாட்டாக முன்வைப்பது.

யாழ்ப்பாணிகளுக்கு அவதூறு என்பது பொய் மட்டுமே! தனக்கே தெரிந்து சொல்கின்ற பொய்.

பலரைக் கண்டிருக்கிறேன். இவர்கள் யாரையும் பற்றி நல்ல கருத்துக்கள் எதையும் சொன்னதில்லை. எவரைப் பற்றியாவது ஏதாவது நன்றாகச் சொன்னால், அவரைப் பற்றிய பொய் அவதூறு ஒன்றை சம்பந்தமில்லாமல் சொருகுவதில் ஒரு வகை குரூர உளவியல் திருப்தி கொள்கிறவர்களை நெருக்கமாகக் கண்டிருக்கிறேன். எனக்கே கேட்கக் கூச்சமாக இருக்கும். எந்த வித தயக்கமும் இல்லாமல், கண்ணைப் பார்த்துச் சொல்வார்கள்.

இதில் பொறாமையும், பொய்யும் என்பதை விட, இது இவர்களின் இயல்பு என்பதாகத் தான் இருக்கும். இந்த நச்சுமனிதர்கள் என்னிடம் மற்றவர்கள் பற்றிச் சொல்லும்போது, என்னைப் பற்றியும் இப்படித் தானே மற்றவர்களிடம் சொல்வார்கள் என்று நினைத்துக் கொள்வதுண்டு.

யாழ்ப்பாணிகள் ஒருவரை எவ்வளவுக்கு எவ்வளவு வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் புகழ்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு வேகமாக பொய் அவதூறு செய்வதில் எந்தத் தயக்கமும் கொள்வதில்லை. இது தனிமனித இயல்பு என்பதை விட, சமூக இயல்பு.

இதனால் தான் என் முன்னால் என்னைப் புகழ்கிறவர்கள் மீது எனக்கு எப்போதுமே சந்தேகம் ஏற்பதுண்டு. அந்தச் சந்தேகம் பல தடவைகளில் நிருபணமாகியும் இருக்கின்றது.

**தனிமனிதர்களாக இருக்கும்போது கூட, தங்களோடு நெருங்கிப் பழகியவர்களுடன் கருத்து முரண்பாடு வருகிற போதும், எதிர்பார்த்தது கிடைக்காமல் ஏமாறிக் கசந்துபோகிற போதும் இதையே தான் செய்கிறார்கள். இதுவரை நாளும் பொது எதிரியாக இருந்தவர்களோடு வெட்கமும் தயக்கமும் இல்லாமல், ஓடிப் போய் ஒட்டிக் கொள்கிறார்கள். தங்களை நியாயப்படுத்த, உடனடியாகவே 'உங்களைப் பற்றி முந்தி உப்பிடிச் சொன்னவர்' என்று ஆட்சேர்க்கிறார்கள். தங்களுக்குத் தெரிந்தும் பொய்களைப் பரப்புகிறார்கள். தங்களுடைய கருத்துக்களால் முகம் கொள்ள முடியாததால், மற்றவர் போய் தங்களைப் பற்றிச் சொல்லி விடக் கூடும் என்ற பயத்தில், முந்தி விழுந்து இதையெல்லாம் செய்கிறார்கள்.**

யாழ்ப்பாணிகள் காலத் திற்குக் காலம் தங்கள் தலைவர்கள் என்று மந்தைகள் போலப் பின்னால் போன சகலரையும் அதே 'நாற' வாய்களால் துரோகிகள் என்று திட்டியிருக்கிறார்கள். அவர்களின் மரணத்தை நியாயப் படுத்தியிருக்கிறார்கள். குறைந்த பட்சம் கர்மா என்றாவது!

அவர்களின் பின்னால் மந்தைகள் போலப் பின் தொடர்ந்ததைப் பற்றி எந்த வெட்கமும் இல்லாமல், இப்படி எப்போதும் அவதூறு செய்வதன் மூலம் தங்களைப் புனிதர்களாகப் படம் காட்டுகிறார்கள்.

அவதூறு என்பது, நண்பர் வட்டம், குடும்பங்கள் என நெருக்கமான இடங்களில் இருந்தே தொடங்குகிறது.

தனிமனிதர்களாக இருக்கும்போது கூட, தங்களோடு நெருங்கிப் பழகியவர்களுடன் கருத்து முரண்பாடு வருகிற போதும், எதிர்பார்த்தது கிடைக்காமல் ஏமாறிக் கசந்துபோகிற போதும் இதையே தான் செய்கிறார்கள். இதுவரை நாளும் பொது எதிரியாக இருந்தவர்களோடு வெட்கமும் தயக்கமும் இல்லாமல், ஓடிப் போய் ஒட்டிக் கொள்கிறார்கள். தங்களை நியாயப்படுத்த, உடனடியாகவே 'உங்களைப் பற்றி முந்தி உப்பிடிச் சொன்னவர்' என்று ஆட்சேர்க்கிறார்கள். தங்களுக்குத் தெரிந்தும் பொய்களைப் பரப்புகிறார்கள்.

தங்களுடைய கருத்துக்களால் முகம் கொள்ள முடியாததால், மற்றவர் போய் தங்களைப் பற்றிச் சொல்லி விடக் கூடும் என்ற பயத்தில், முந்தி விழுந்து இதையெல்லாம் செய்கிறார்கள்.

இத்தனை நாள் இனிப்பாக இருந்த உறவுக்கு உண்மையாகக் கூட இவர்கள் இருப்பதில்லை.

அவதூறு என்பது விவாதங்களில் தோற்றுப் போவதால் எழுகின்றவை அல்ல. நம்பிக்கைகளால் உருவாகும் ஆளுமைகளும், ஆளுமைகளில் இயல்பாகவே உள்ள அயோக்கியத்தனமும் காரணமாகவே இந்தச் சமூகத்தில் உருவாகின்றன.

இதை விட, அவதூறுக்கான இன்னொரு பெரிய காரணம், தான் செய்கின்ற ஏதோ ஒன்றில் தன்னை விட மேலானவனாக இருக்கிறான், மேலானவன் ஆகி விடுவான் என்ற பொறாமை.

இன்னொருவன் பற்றி நல்ல அபிப்பிராயத்தைச் சொன்னாலேயே, அல்லது நல்ல அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கக் கூடும் என்ற எண்ணம் வந்தவுடனேயே அவதூறுகளைச் சொல்கிறவர்களை என் காதுபடக் கேட்டிருக்கிறேன்.

அவர்கள் சொல்வது பொய் என்பதும் எனக்குத் தெரியும். தாங்கள் சொல்வது பொய் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் நான் அதை நம்ப வேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்கான அடிப்படைகளாக உண்மைகள் இருப்பதில்லை.

நாக் கூசாமல் சொல்வார்கள். கேட்கிற எனக்கு வெட்கமாக

இருக்கும்.

ஆனால், நாளைக்கு எங்காவது எனக்கு முன்னால் சந்திக்கும்போது, ஏனோ நெடுநாளைய நண்பர்கள் நீண்ட நாட்களுக்குப் பின் சந்திப்பது போல உருகுவார்கள்.

அப்போது என் கண்களைக் காணும்போதும் அவர்களுக்கு வெட்கம் இருப்பதில்லை.

இது இவர்களுக்கு இயல்பாகவே வருகிறது.

இந்த நெருங்கிய வட்டங்களைப் போன்றவை தான், பகிரங்க அவதூறுகளும்.

இதெல்லாம் நான் பட்டுத் தெளிந்த அனுபவங்கள். என்னோடு இருந்த விட்டு, ஓடிப் போய் தாங்கள் இதுவரை நாளும் எதிர்த்த எதிர்முகாமில் வெட்கமில்லாமல் ஓடிப் போய் ஒட்டிக் கொண்டு, அங்கு ஆதரவு தேடிக் கொண்டு அவதூறு செய்தவர்கள், செய்கிறவர்கள் உள்ளார்கள்.

இவர்கள் எல்லாம் சுயாதீனமாகவே தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முடியாதவர்கள். எங்காவது ஒட்டிக் கொண்டு தான் பிழைப்பு நடத்த வேண்டிய கட்டாயங்களுக்குள் இருப்பவர்கள். தங்களைப் பற்றிப் பெருமைப்பட எதுவும் இல்லாதவர்கள். மற்றவர்களை அவதூறு செய்வதன் மூலம் தான் தங்களை மேலானவர்களாகக் காட்டிக் கொள்ள முடியும். மற்றவர்களை அவமானப் படுத்துகிறோம் என்று தொடங்கி, தாங்கள் அவமானப்படுகிறவர்கள்.

பொதுவெளியில் உள்ளவர்களுக்குப் பெரும்பாலும் இவர்களின் இயல்புகள் தெரிந்திருக்கும். இவர்கள் பற்றி நல்ல அபிப்பிராயங்கள் இருப்பதில்லை. இருந்தாலும், இவர்கள் அவதூறு செய்து கொள்வார்கள்.

எதிர்ப்பார்த்து ஏமாந்தவர்களை விட, பொறாமையால் அவதூறு செய்கிறவர்கள் தனிரகம். இவர்களுக்குத் தன்னம்பிக்கை அதிகம் இருக்காது.

**கூட்டணியில் இருக்கும்போது புகழும் அதே தலைவர்களை, ஆசனப் பகிர்வுச் சண்டையில் கூட்டணி மாறும்போது, மேடையில் சொல்லும் அவதூறுகள் கேட்கக் கூசும். அதற்குக் கிடைக்கும் கைதட்டலும் அதிகம். பின்னர், அடுத்த தேர்தலில், 'மறப்போம், மன்னிப்போம்' தான்.**

**'நாங்கள் ஒரே இலையில் சாப்பிட்டவர்கள்.'**

**அதே கைதட்டல்!**

**இவற்றை அவதூறுகள் என்று யாரும் நினைத்துக் கோபம் கொள்வதில்லை. மனதில் வைத்துக் கொள்வதுமில்லை. இது யாருக்கும் தீங்கு நினைக்காத அவதூறுகள்.**

**அவதூறு செய்வோரும்** don't mean it.

**செய்யப்படுவோரும்** don't mind it.

பொறமை என்பதற்கு அடுத்து அவதூறுகளுக்கான காரணமாக இருப்பது... பயம்!

இன்றைய தமிழ்நாட்டு அரசியலில் நடத்தப்படுகின்ற அத்தனை அவதூறுகளும் பொறாமையால் விளைந்தவை என்பதை விட, பயத்தினால் உருவாகின்றவையே. தங்களுக்குப் போட்டிக்காரர்களாக இருந்து, வாக்குகளைப் பிரித்து ஆட்சியைக் கவிழ்த்து விடுவார்களோ? பிடித்து விடுவார்களோ? என்ற பயம் தான் இன்றைய அரசியல் அவதூறுகளுக்கான அடிப்படை. பொறாமை கொள்கிற அளவுக்கு இவர்களோ, இவர்களுடைய எதிரிகளோ ஏதும் பலம் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டிய தேவை கூட இல்லை. வெறும் உதிரிகளைக் கண்டவுடனேயே பீதியில் கலங்குகிறார்கள். தங்கள் பிழைப்பில் மண் விழுந்து விடுமோ என்று பயப்படுகிறார்கள். எவராவது சினிமாக்காரர்கள் அரசியலுக்கு வரப்போகிறார்கள் என்றதும் அனாவசியமாகப் பயப்படுகிறார்கள். அது சினிமாக்காரர்களுக்கு மட்டுமான பயம் இல்லை.

கொஞ்ச நாள் சகாயம் அரசியலுக்கு வரப் போகிறார் என்ற கதை வந்ததும் பட்டபாடு பலருக்கும் ஞாபகம் இருக்கும்.

அவர்கள் தலைவர்களாகி விடுவார்களோ என்ற பயத்தில் அவதூறுகளை அள்ளி விடுகிறார்கள். மரணம் அடைந்தவர்கள் பற்றி அவர்களின் கடந்த காலத் தவறுகளைப் பட்டியல் போட்டு அவதூறுகளை அள்ளி விடுகிறார்கள்.

இவர்களுக்குத் தங்களில் தன்னம்பிக்கை இல்லை. தங்கள் அரசியல் கருத்துக்கள், நிலைப்பாடுகள், செயற்பாடுகள் எதிலும் நம்பிக்கை இல்லை. அவதூறுகளை மட்டுமே நம்புகிறார்கள்.

புலி ஆதரவுக் குழுக்களுக்கு இடையிலான இந்த துரோகிப் பட்டமளிப்புப் போட்டி கூட, பிழைப்புக் கெட்டு விடும் என்ற பயத்தினால் விளைந்ததே. இவர்கள் எல்லோருக்குமே தெரியும், தாங்கள் எந்த விதத்திலும் பலம் வாய்ந்தவர்கள் இல்லை என்பது. ஒன்றாக இருந்து ஒட்டுமொத்தமாக மக்களை ஏமாற்றியவர்களே இன்று பல்வேறு குழுக்களாகப் பிரிந்து, அதே மக்களிடம் ஆளை ஆள் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பிழைப்புக் கெட்டு விடும் என்ற பயத்தைத் தவிர, இவர்களால் விடுதலை தடைப்பட்டு விடும் என்ற காரணம் எதுவும் இல்லை.

இந்த அவதூறுகளை எல்லாம் விட, தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சொல்கிற அவதூறுகள் எந்த வகைப்படுத்தலிலும் அடங்காதவை.

கூட்டணியில் இருக்கும்போது புகழும் அதே தலைவர்களை, ஆசனப் பகிர்வுச் சண்டையில் கூட்டணி மாறும்போது, மேடையில் சொல்லும் அவதூறுகள் கேட்கக் கூசும். அதற்குக் கிடைக்கும் கைதட்டலும் அதிகம்.

பின்னர், அடுத்த தேர்தலில், 'மறப்போம், மன்னிப்போம்' தான்.

'நாங்கள் ஒரே இலையில் சாப்பிட்டவர்கள்.'

அதே கைதட்டல்!

இவற்றை அவதூறுகள் என்று யாரும் நினைத்துக் கோபம் கொள்வதில்லை. மனதில் வைத்துக் கொள்வதுமில்லை. இது யாருக்கும் தீங்கு நினைக்காத அவதூறுகள்.

அவதூறு செய்வோரும் don't mean it.

செய்யப்படுவோரும் don't mind it.

எங்கள் இலக்கிய உலகமும் இந்தச் சமூகத்திலிருந்து வந்தது தானே?

அதனால், அதுவும் நாறிப் போய்த் தான் இருக்கிறது.

மீன் தலையிலிருந்து நாறத் தொடங்கும்.

Fish rots from the head.

அவதூறுகள் இங்கே மேதகுக்களில் இருந்தே ஆரம்பிக்கின்றன.

அந்த அவதூறுகளும் விவாதங்களில் இருந்து ஆரம்பித்தவை அல்ல.

ஆளுமைக் கோளாறால், பொறாமையால், பயத்தினால் எழுகின்றவையே.

ஆசான் மத மாற்றம் பற்றிச் சொல்கிறதை நீங்களும் பார்த்திருப்பீர்கள். நேரே கண்ணைப் பார்த்தபடியே எந்தக் கூச்சமும் இல்லாமல், யாரையும் குறித்துச் சொல்லாமல், சிலாவி அடிப்பார்.

பா.ஜ.க ஆட்சி இருக்கும் காலத்தில், பொய்க் குற்றச்சாட்டுகளோடு உள்ளே தள்ளுகிற பாசிசம் உலவுகிற நாட்டில், வெளிநாட்டுப் பணம் கிடைத்து மத மாற்றத்தில் ஈடுபடுகிறார்கள் என்று ஆதாரங்களோடு நிருபித்தால் தேசத் துரோகக் குற்றத்திற்கான தண்டனைக்கும், அந்நியச் செலாவணிச் சட்டத்திற்கும், சட்டம் சொல்வதை விட இன்னும் அதிகமாகப் போட்டுக் கொடுப்பார்கள். இப்படி தனது தாய் நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டிய ஒருவர், அவ்வாறானவர்களைத் தனக்குத் தெரியும் என்று பகிரங்கமாகச் சொல்கிறார். எந்த நடவடிக்கையும் எடுக்காமல் போகிற போக்கில் அடித்து விடுகிறார்.

ஆசான் அவதூறு செய்யாதவர்கள் என இலக்கிய உலகில் யாராவது இருந்தால், அவர்கள் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களதே!

இலக்கியத்திற்கு சம்பந்தம் இல்லாத, நான் கூட அவரால் 'அற்பர்களுக்குள்' வகைப்படுத்தப்பட்டிருக்கிறேன்.

அவரும் அவதூறு செய்தவர்களுக்கு விருதும் கொடுப்பதால், அவரும் பாவமன்னிப்புப் பெற்று, அவருக்கும் விண்ணரசில் இடம் கிடைக்காமலா போகும்?

விருது பெற்றவர்கள், மாற்று முகாம்களில் உள்ளவர்கள், முகாம்களிலிருந்து முகாம் தாவிய ஓடுகாலிகள், சினிமாவுக்கும் வார இதழ்களுக்கும் எழுதப் போனவர்கள்... இப்படி மற்றவர்களால் அவதூறுகளுக்கு உள்ளாகாதவர் என்று யாருமே இலக்கிய உலகில் இல்லை என்னுமளவுக்கு, ஒரு சர்வசாதாரணமான விடயமாகவே அவதூறு இருக்கிறது.

வெறும் விருது அறிவிப்பு வந்தாலேயே பலராலும் தங்கள் முகமூடிகளோடு நெடுநேரம் இருக்க முடிவதில்லை. சுயத்தை அப்பட்டமாகவே காட்டி விடுகிறார்கள்.

அயோக்கியர்கள் அதிகமாக இருக்கும் இடத்தில், அவதூறுக்கு என்ன குறைச்சல்?

எங்கள் புலன் பெயர்ந்த இலக்கியச் சூழலில் உள்ள பெருந்தகைகளில் கூட என்னை வெறும் புலி எதிர்ப்பு மட்டும் தான் என்றவர்களும், இலங்கை அரசாங்கத்தை ஆதரிக்கிறேன் என்றவர்களும் அதிகம். இவர்களுக்கு உண்மை தெரியாது என்று இல்லை. என்னைத் தங்களுக்குள் வைத்துக் கொண்டால் தங்களது 'பெருந்தகைப் பிழைப்புக்கு பங்கம் என்பதால் இப்படி முத்திரை குத்திக் கடந்து போக வேண்டி இருந்திருக்கிறது. நானும் அவர்களுடன் அங்கீகாரத்துக்கான ஓட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதுமில்லை.

இத்தனை வருட காலத்தில் சகல விதமான அவதூறுகளையும் அதற்குக் காரணமான அயோக்கியர்களையும் கண்டு கடந்து வந்திருக்கிறேன். கால ஓட்டத்தில் இவர்கள் பலரும் தங்களது சுயரூபத்தை அடையாளம் காட்டி, தாங்களே அவமானப்பட்டபடியே இருக்கிறார்கள். என்னுடைய சொந்த வாழ்வில் ஈனத்தனங்கள் செய்தவர்கள், என் கண் முன்னாலேயே சமூகத்தின் முன்னால் அவமானப்பட்டு நின்றார்கள்.

இந்த இலக்கியச் சூழலில் விவாதத்திற்கான எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன. விவாதங்களுக்கான தொடக்கமாக எத்தனையோ விடயங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே ஒரு ஆரோக்கியமான என்ன, அவதூறுகள் இல்லாத கருத்துப் பரிமாற்றம், விவாதம் என்பவை சாத்தியமாக முடியாதவையாகத் தானே இருக்கின்றன?

தங்களுக்கு நியாயபூர்வமாகச் சேர வேண்டியவற்றையே, உரிமைகளையே பெறுவதற்குப் போராட்டம் நடத்தத் திராணியற்றவர்களுக்கு, எந்த வித பயனும் இல்லாத அங்கீகாரம் என்றதொரு abstract thing க்காக தங்கள் வாழ்நாளைச் செலவிடுவோருக்கு, கருத்துக்களும், கருத்துப் பரிமாற்றங்களுக்கான உரையாடல்களும் விவாதங்களும் அனாவசியமானவை.


அங்கீகாரத்திற்கான போட்டியில் வெற்றி பெறுவதற்கு தங்களின் திறமையை விட, மற்றவர்களை அவதூறு செய்வதன் மூலம் தகுதி இழக்க வைத்தோ, அவமானத்தால் போட்டியிலிருந்து விலக வைப்பதன் மூலமோ வெற்றி பெற முடியும் என நம்புகிறார்கள்.

இப்படி, ஆளுமைக் கோளாறுகளும், பொறாமையும், பயமும் நிறைந்த அயோக்கியர்களுக்கு கருத்து வறுமை அவர்களை எந்த விதமான தேடல்களுக்கும் கருத்துப் பரிமாற்றங்களுக்கும் இட்டுச் செல்லாது. அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் வழிவிடாது.

அந்த இயலாமை அவர்களை மற்றவர்கள் மீது அவதூறுகளை வீசுவதற்கு வழிவகுத்துக் கொண்டே இருக்கும்.

இதனால் தான், முட்டாள்களிடம் கொலைகாரர்களைப் பற்றியும், அயோக்கியர்களிடம் அயோக்கியர்களைப் பற்றியும் உண்மைகளைச் சொல்கிறவர்கள் எப்போதும் அவதூறுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அ

அபத்தம்
தை 2024




# போகிற வழியில் ஒரு 'நாலு தட்டு!'

எங்கள் இலக்கியப் பிரகிருதிகள் மாதிரி, சஞ்சிகை நடத்தி, உலகத்தை மாற்றியமைக்கும் கனவுகள் எதுவும் எனக்கு இருந்ததில்லை.

யாழ்ப்பாணத் தமிழ் ஆண்களில் பாதிப் பேர் முன்னாள் இதழ் ஆசிரியர்கள், மீதிப் பேர் இதழ் ஆரம்பிக்கும் கனவில் இருப்பவர்கள் என்பது என் அரதப்பழசான ஜோக்.

அகழ் மின்னிதழ் பேட்டியில் சொல்லியிருப்பேன். 'இலக்கியம் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தால், காலாண்டிதழ் வெளியிட்டிருப்பேன். உலகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று நினைத்திருந்தால், மாதச்சஞ்சிகை விட்டிருப்பேன். நான் நடத்தியது வார இதழ்!'.

வாரப் பத்திரிகை கூட, எழுத்து அனுபவம் எதுவும் இல்லாமல், பத்திரிகை வடிவமைப்பு என்பது பற்றி எதுவுமே தெரியாமல், என் ஆண்டாண்டு கால வாசிப்பையும், மக்கின்ரோஷ் கம்பியூட்டர் மூலமான தொழில்நுட்ப அறிவையும் மட்டும் நம்பி, ஆரம்பித்த ஒன்றே. என்னுடைய இலட்சியம், கனவு என்று நினைத்துக் கொண்டிருந்த ஒன்றுக்கான காலம் கனிந்து வரும் வரைக்கும் தற்காலிகமாகச் செய்யலாமே என்று தொடங்கியது.

என் வாழ்க்கையையே மாற்றி விட்டது.

இதனால் வாழ்க்கையில் இழந்தது அதிகம்.

என் காதல் நிறைவேறாமல் போனதற்கான காரணங்களில் அது ஒன்று என்றாலும், அதன் மூலமாக பொக்கிஷமாகக் கிடைத்தது வாழ்க்கைத் துணை ஒன்று மட்டும் தான்.

பத்திரிகை தொடங்கி இருக்காவிட்டால், நீ எனக்குக் கிடைத்திருக்க மாட்டாய் என்பதை அடிக்கடி சொல்லிக் கொள்வதும் உண்டு.

அதைத் தவிர, வேறுவழிகளில் எதிலும் கிடைத்திராத பல நண்பர்கள். அனுபவங்கள். அவற்றின் மூலமான அறிவும் தெளிவும்.

இழப்புகள் தான் அதிகம் என்றாலும், இது தான் விதி என்றான பின்னால்...

Do what else you love doing and do it with passion.

வாழ்க்கை திசை மாறி, கனவுகளும் வெறும் கனவாகிப் போனாலும், என் இலட்சியத்திற்காக நான் தேடிக் கொண்ட அறிவு என்னோடு தான் இருக்கிறது. என்னுடைய பல்துறைத் திறன்களுக்கான அடிப்படையாக நான் தேடிக் கொண்ட அறிவு தான் இருக்கிறது.

யாழ்ப்பாண சமூகம் பற்றி இருந்த மேலான நம்பிக்கைகள் எல்லாம் பத்திரிகை ஆரம்பித்த பின்னால் தான் தகர்ந்து சிதைய ஆரம்பித்தன. ஒரு சமூகத்தில் உண்மையைப் பேசுவதும் தேடுவதும் 'மண்டையில் போடப்பட வேண்டிய் குற்றமாகக் கருதப்பட்டதும், நேர்மையோடும் சமூக உணர்வோடும் செயற்படுவோர் எவ்வாறான பொய் அவதூறுகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என்பதும் எனக்குப் பத்திரிகை ஆரம்பித்த பின்னால் தான் தெரிய வரும் அளவுக்கு, நான் ஒரு 'விசயம் தெரியாத அப்பாவியாக' இருந்தேன்.

வந்து சேர்கிறவர்கள் எப்படியானவர்களாக, என்ன நோக்கம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்று தெரிந்து கொள்ளாமல், எல்லாரையும் நம்புகிற ஒருவனாகத் தான் இருந்தேன்.

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
Editor/Design
George R. Ckrhushchev

வளர்ந்து வரும்போதும் என்னை வளர்த்தவர்களின் கவலையும் அதுவாகத் தான் இருந்தது.

'நல்லவன், ஏமாற்றி விடுவார்களே?'.

இன்றைக்கும் என் அக்காமாருக்கு அந்தக் கவலை இன்னமும் அதிகமாக இருக்கிறது. 'பெண்கள் ஏமாற்றி விடுவார்கள்!' என்று. அப்படி ஏமாற்றுவதற்குக் கூட யாரும் கிடைக்கவில்லை என்பதைச் சொல்லி, இந்த வயதுகளில் அவர்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கவும் அவர்கள் மீதான அன்பு விடுவதில்லை.

பத்திரிகை வெளிவந்த காலம் சவால்கள் நிறைந்த காலம். ஒரு சமூகம் பொய்ப் பிரசாரங்களை நம்பிக் கனவு கண்டு கொண்டிருந்த காலம். 'யாழ்ப்பாணிகள் ஒரு பிராங்கென்ஸ்டைன் பூதத்தை உருவாக்குகிறார்கள், அந்தப் பூதம் அவர்களையும் அழித்து தானும் அழியும்' என்பது முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் நான் சொன்ன தீர்க்கதரிசனம்.

இன்றைக்கும் இந்த யாழ்ப்பாணிகளுக்கு நான் சொல்வது, அன்றைக்கு நான் சொன்ன, 'உங்களைப் புத்திசாலிகள் என்று நினைப்பதில் எந்த தப்பும் இல்லை, மற்றவர்களை முட்டாள்கள் என்று நினைப்பது தான் தவறு!' என்பது தான்.

உண்மை சொல்கிறவனைத் துரோகி என்று சொல்கிற சமூகத்தில், அயோக்கியர்கள் வைரவருக்கு வாய்ச்ச நாய் மாதிரி தலைவர்களாக வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு கோமாளிகள் தரகர்களாக!

இந்தச் சமூகத்திற்கு இவர்களே மேல்!

எஞ் சாமிகளா!? என்ஜாய்!

ஊரோடு ஒத்தோடுவது தானே மந்தைக் கூட்டத்திற்குத் தெரிந்தது.

ஓரமாய் நின்று, நானும் என்ஜாய் தான்!

துரோகி என்ற பட்டமும், கொலைப் பயறுமுத்தல்கள், பத்திரிகைத் தடைகள், தாக்குதல்கள், கடை உடைப்பு என்று எல்லாம் புலிகள், வால்களிடம் இருந்து மட்டுமல்ல, கூட இருந்தவர்களின் அவதூறுகள் வரைக்கும் பரிசாகவும், அன்பளிப்பாகவும் கிடைத்தன.

அதற்கும், 'என் நண்பர்களிடம் இருந்து காத்துக் கொள்ளும் இறைவா, ஏனென்றால் என் எதிரிகளிடமிருந்து என்னைக் காத்துக் கொள்ள எனக்குத் தெரியும்!' தான்.

பத்திரிகை என்பதற்காக, ஒரு வெறும் பத்திரிகையை நான் உருவாக்க நினைத்ததில்லை. அரசியல் பற்றிய ஆழமான பார்வை கொண்ட ஒரு பக்க ஏடு இட்டோர் இயல் முதல் 'வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்' கியூறியஸ் ஜி கட்டுரை வரைக்கும் வித்தியாசமானதாகத் தான் இருந்தது.

நான் புலிகளை மட்டுமே எதிர்க்கிறேன் என்ற குற்றச்சாட்டுக்கு, அகழ் மின்னிதழுக்கு அளித்த பேட்டியில் சொன்னது போல, 'எந்த முட்டாளாலும் செய்ய முடிந்ததைச் செய்வதற்கு நான் எதற்கு? மற்றவர்களால் செய்ய முடியாததை, செய்யப் பயப்படுகிறவைகளைத் தானே நான் செய்ய வேண்டும்?'.

அந்தச் சவால்களை ஏற்றுச் சாதிக்க வேண்டும் என்பதால் தான், 'நான் முட்டாள்களுக்குத் தலைவனாக அல்ல, புத்திசாலிகளுக்கு எதிரியாகவே இருக்க விரும்புகிறேன்' என்று அகழ் மின்னிதழ் பேட்டியில் சொல்லியிருந்தேன்.

புலம் பெயர்ந்த இலக்கியம் என்பதில் அடையாளம் சொல்லக் கூடியவர்களில் பலர் தாயகத்தில் எழுதியவர்கள். மற்றவர்கள் புலிகளுக்குப் பயந்து எழுத மறுத்தவர்கள். என்னோடு தொடர்புகளைப் பேணிச் சிலாகித்தபடியே, வெளியே தெரியாமல் மறைந்திருந்தவர்கள். மறைத்து வைத்து வாசித்தவர்கள்.

இதெல்லாம் ஏற்கனவே என்னைத் தொடர்ந்து வாசித்தவர்களுக்குத் தெரிந்தவை தான்.

என்னைப் பற்றியெல்லாம் நானே சொல்லிக் கொள்வது குறித்து எனக்கு எப்போதுமே கூச்சமும் வெட்கமும் நிறைய. நான் சொன்னது போல, என்னை அறிமுகப்படுத்தும்போது சொல்லப்படுவன குறித்து எப்போதுமே நான் கூச்சப்படுவதுண்டு.

இப்போது அபத்தம் மூலமாக புதிதாகக் கிடைத்திருக்கிற வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான், ஒரு தன்னடக்கத்தோடு இதெல்லாம்!

முழுநேர வேலையும் செய்து கொண்டு, ஒரு வாரப் பத்திரிகையை நடத்துவது என்பது எப்படி என்பது, சஞ்சிகைக் கனவில் இருப்போருக்குப் புரியாது. பட்ட பின்னாலே ஞானம் பெற்ற, மூன்று இதழோடு நின்று போன பின்னாலும், அந்த இதழின் பெயரை தங்கள் பெயரின் முன்னால் வைத்துக் கொண்டிருக்கும் முன்னாள் இதழியலாளர்களுக்குத் தெரியும்.

இப்படி சொந்தச் செலவில் சூனியம் வைத்து வாழ்க்கை மாறிப் போய், அரச உதவிப்பணத்திலோ, பெண்டாட்டி உழைப்பிலோ முழுநேர இலக்கிய எழுதுவினைஞராக 'இலக்கிய சேவை' செய்ய முடியாதபடிக்கு, குடும்பச் சுமையும் விதியும் துரத்தத் தொடங்கி, பத்திரிகை நின்று போய் தலைமறைவு ஆன பின்னாலும், இணையம் வந்து சேர்ந்த பின்னால் திரும்பவும் இணைய அவதாரம் எடுத்து, இந்த நாசமாய் போன சமூகத்திற்கு,'அழிந்து நாசமாய் போகப் போறீங்கடா!' என்பதைச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டி இருக்கிறது.

என் இயல்பு அப்படி. இந்தச் சமூகத்தை மற்றவர்கள் போல ஏமாற்றிப் பிழைக்கும் அளவிலும் நான் இல்லை. அதற்கான தேவையும் இல்லை. முழு நேர வேலை இருக்கிறது.

மற்றவர்கள் செய்வதைச் செய்வதற்கு நான் எதற்கு?

இரண்டு சிறுகதை, உலக சினிமா, ஹருகி முரகாமி, எவருக்கும் புரியாத நாலு பின்நவீனத்துவக் கவிதை, ஒரு

நாளும் கேட்டறியாத யாரோவின் ஒரு நேர்காணல், எதையுமே சொல்லாத ஆசிரியர் கருத்து என்று நாலு இலக்கியக் கோயில் மேளங்களைப் பிடித்து, அல்லது அதற்கும் தேவையில்லாதபடிக்கு நானே எல்லாவற்றையும் எழுதி, ஆயிரத்தொன்பதாவது இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டுக் கொண்டு, நானும் இலக்கியவாதி என்றபடி, விருதுப் புரவலர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற எல்லாம் எனக்கு நேரமுமில்லை. ஆர்வமும் இல்லை.

இந்த இலக்கியச் சூழல் பற்றி நண்பர் கற்சுறாவோடு எப்போதும் பேசிக் கொண்டிருப்பேன். சமூகமே அயோக்கியர்களால் நிறைந்து போயிருக்கும் போது, இலக்கிய உலகம் என்ன விதிவிலக்கா?

'உது எல்லாம் எங்களுடைய பிழை! நாங்களும் தமிழ்நாட்டில் எழுதியிருக்க வேண்டும். பேர் வாங்க வேண்டும், அங்கீகாரம் பெற வேண்டும் என்ற எந்த நினைப்பும் இல்லாமல் நாங்கள் இருந்தபடியால் தான், அதை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்கள் பொய்களைச் சொல்லி ஏமாற்றிப் பிழைப்பு நடத்துகிறார்கள். அவர்கள் பெயர் பெறுவது எல்லாம் பற்றி எங்களுக்கு எந்தப் பொறாமையும் இல்லை. அவர்களை எங்களுக்குப் போட்டியாளர்களாக ஒருபோதும் நினைத்ததில்லை. அந்தப் போலிப் புகழ்ச்சிகளில் பெருமிதங் கொள்ளும் அளவிலும் நாங்கள் இல்லை.

ஆனால், நாங்கள் சொல்லாவிட்டால், இந்தப் பொய்கள் தான் வரலாறாகப் போகிறது. அதற்கு நாங்கள் ஏதாவது செய்தே ஆக வேண்டும்?' என்று, ஏதோ பெரிய 'வரலாற்றுக் கடமை' எங்கள் தோள்களில் சுமத்தப்பட்ட மாதிரி, அவ்வப்போது நான் சொல்லிக் கொள்வதுண்டு.

அதன் முடிவாக, தமிழ்நாட்டில் நாங்களும் எழுதத் தொடங்க வேண்டும்!

நண்பர் நோயல் நடேசன் அம்ருதா இதழுக்குப் பொறுப்பான தளவாய் சுந்தரத்துடன் தொடர்பு ஏற்படுத்தி, அவர் நடத்திய இணையத்தளத்திற்கு ஒரு கட்டுரை அனுப்பியிருந்தேன். அது வெளிவந்தது.

பின்னர், அம்ருதா இதழுக்கு அனுப்பிய கட்டுரையை வெளிவரும் என்று சொன்ன பின்னால், அது வெளிவராமல், என்னுடைய தொடர்புகளுக்கு அவர் பதிலளிக்காமலும் போனதால், தமிழ்நாட்டில் எழுதிப் பிரசுரமாவது பற்றிய உண்மை நிலைமையும் ஓடி வெளித்தது.

தெய்வீகனின் கதை ஒன்றுக்கு முன்னுரையாக அ.முத்துலிங்கம் எழுதியது பற்றிய நீண்ட கட்டுரை. என்னைப் போன்ற, முன்பின் தெரியாத 'அற்ப' 'சாமான்யனுக்காக', ஏற்கனவே குப்பை கொட்டும் இலக்கிய மேதகுக்களைப் பகைக்கும் அளவில் எவரும் இல்லை.

ஈழப் பேராட்டத்தின் இறுதித் துளி இரத்தத்தையும் கறந்து, எல்லாரும் எழுதுகிறதை எழுதுவதற்கு நான் எதற்கு? அதைக் குடிசைக் கைத்தொழிலாக வைத்துக் கொண்டு மற்றக் கடையை விட மலிவாக விற்கும் போட்டிக் கடை திறந்து, பிழைப்பு நடத்துகிறவர்களின் பிழைப்பில் மண் போட மனச்சாட்சியும் இடம் கொடுக்கவில்லை.

நான் எழுதுகிறவைகளையும் அவர்கள் முழுமையாகப் பிரசுரிக்கப் போவதில்லை. வெட்டிக் கொத்தி, குற்றுயிரும் குறையுயிருமாக வெளிவரப் போகும் ஏதோ ஒன்றுக்கு என் பெயரைப் போட்டு, இலக்கியக் கடவுளரின் சாபங்களுக்கு உள்ளாகவும் விரும்பவில்லை.

ஒருநாள் கற்சுறாவோடு பேசிக் கொண்டிருந்த போது, 'ஐயா, நாங்கள் ஏதாவது செய்யத் தான் வேணும்!' என்று திரும்பவும் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்.

பெயர் கூட உடனே தோன்றியது தான். இரவு முன்பக்க வடிவமைப்பு தயாரானது. எவருக்குமே பெயரைக் கூடச் சொல்லவில்லை.

'தமிழ்நாட்டு வாசகர்களை இலக்கு வைத்து ஒரு சஞ்சிகை வெளிவருகிறது. நீங்கள் எழுத வேண்டும் என்று விரும்புகிறேன்.'

அவ்வளவுதான் உட்பெட்டிகளுக்குள் நான் சொன்னது.

எல்லோருமே நான் யார் என்பதைத் தெரிந்து கொண்டவர்கள். தாயகம் காலம் முதல் பேஸ்புக்கில் குறும்பு பண்ணும் காலம் வரைக்கும் என்னைத் தெரிந்தவர்கள். அவர்கள் என் மீது கொண்டிருந்த நம்பிக்கை இவ்வளவு காலத்திலும் நான் கொண்டிருந்த என் நிலைப்பாடுகள் மீதான என் அசைக்க முடியாத நேர்மை குறித்தது தான்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் மீதான, புலிச் சார்புச் சாதிமேலாதிக்கத் தமிழ்த் தேசியச் சிந்தனை மீதான என் விமர்சனங்கள் குறித்து தெரிந்து வைத்திருப்பவர்கள் தான் அவர்கள் எல்லாரும்.

ஆனால், அவர்கள் எல்லாருக்கும், தனிப்பட்ட அவதூறுகள் தவிர்த்து, சமூகம் சார்ந்த எந்த விமர்சனத்தையும் எந்தத் தயக்கமும் இல்லாமல் எழுத முடியும் என்ற நம்பிக்கையைத் தந்தது அந்த என்னுடைய நிலைப்பாடுகளின் நேர்மை தான்.

எங்களுக்கு எழுதுங்கள் என்ற தொடரில் உற்சாகப்படுத்தும் போது கூட, எந்த தயக்கமும் இல்லாமல் எழுதுங்கள் என்று தான் சொல்லியிருக்கிறேன்.

இதுவரை காலத்தில் என்னோடு இருந்தவர்களில் குத்துக்கரணம் அடித்து, தமிழ்த்தேசிய ஜோதியில் கலந்து சங்கமித்தவர்கள் பலர். அவர்களை நான் தூர விலத்தியே வைத்திருக்கிறேன். எந்த முட்டாளும் செய்கிறதையே செய்கிற முட்டாள் கோமாளிகளுக்குத் தலைவனாகி என்ன பண்ண முடியும்? என்னோடு இருந்தால் தங்கள் பிழைப்புக்குப் பங்கம் என்பதற்காக, 'மெல்ல மெல்ல தமிழ்த் தேசிய எழுத்து வேளாளரானவர்கள்', என்னோடு இருந்தது தெரிந்தால், தற்போது தொங்கிக் கொண்டிருக்கும் வால்களுக்குப் பதில் சொல்ல வேண்டி வரும், அண்டிப் பிழைப்புக்கு வழியே அற்றுப் போய் விடும்'

என்று, 'அவனை நான் அறியேனே!?' என்று என்னை மறுதலிப்போரின் பிழைப்பைக் கெடுப்பானேன் என்று நானே அவர்களை விட்டுத் தூர விலத்தி இருக்கிறேன்.

பிழைப்பு என் வாழ்க்கை முறையாக இருக்காதபடிக்கு, எப்போதுமே உழைத்துக் கொண்டு தான் இருக்கிறேன். விளம்பரத்தை நம்பியிருந்து, அற்பர்களுக்குப் பல் இளித்தோ, நான் எழுதிய எதற்காவது அவர்கள் என்னை பிளாக்மெயில் பண்ணும் அளவுக்கோ தங்கியிருக்கக் கூடாது என்பதற்காகத் தான் விளம்பரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

அபத்தத்தை ஆரம்பித்த போது கூட, இதை நீண்ட நாள் நடத்தும் உத்தேசம் கூட இருந்ததில்லை. சொல்ல வேண்டிய விடயங்கள் கொஞ்சம் இருக்கின்றன. சொல்லப்பட வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் சொல்லி முடிந்த பின்னால், முப்பது ஆண்டில் அறுபது இதழ் விடும் காலாண்டிதழ் பெருமையை எல்லாம் வைத்து என்ன செய்ய முடியும்?

உதாரணம் இசகு பிசகானது தான். தம்பதிகளுக்கு இடையில் உள்ள பால் உறவு மாதிரி. வெறும் அன்றாடக் கடமை என்ற அளவில் வரும்போது, அது தன் அர்த்தத்தையே இழந்து விடுகிறது.

இன்னொரு வீட்டில் விருந்தினராகப் போனால் கூட, மிகவும் கவனமாக இருப்பேன். என்னை வரவேற்றவர்களின் வீட்டில் அதிகம் நேரம் தங்கி வேண்டா விருந்தாகக் கூடாது.

எனவே, உத்தேசம் இரண்டு வருடங்கள் தான். சொல்ல வேண்டியவை சொல்லி முடியாவிட்டால் மேலும் சில இதழ்கள். நிச்சயம் மூன்றாண்டுகளின் பின்னால் இல்லை என்றே நினைக்கிறேன்.

கதிரையை விட மறுக்கும் அரசியல்வாதிகள் மாதிரி, இறுதிவரை கட்டிப் பிடித்துக் கொண்டு, இன்னொரு தடவை வாழ்வை இழக்கும் உத்தேசம் இல்லை.

இது தனிமனித முயற்சி என்பதால் தான் இத்தனை தூரம் வந்திருக்கிறது. மத்திய குழு பொலிட்பீரோ அமைத்து ஆசிரியர் குழு அங்கீகாரம் பெற்று வெளிவருவதாக இருந்திருந்தால், இரண்டாவது இதழே வந்திருக்காது. முழுவேலையும் நான் செய்வதாகவும், 'எல்லாம் செய்யும் போதும் தங்களிடம் கேட்டுச் செய்ய வேண்டும்' என்று நினைக்கும் மேதகு ஆசிரியர் குழுவுமாகத் தான் இருந்திருக்கும். தங்களைப் பயன்படுத்தி நான் பெயர் வாங்கி விடுவேன் என்று ஆசிரியர் பெயரிலும் என் பெயர் இருந்திருக்காது.

நண்பர் கற்சுறா இல்லாமல் இந்த முயற்சி ஆரம்பித்திருக்காது என்பதுடன், இத்தனை தூரம் வந்தும் இருக்காது. என்னோடு ஆரம்பத்தில் இருந்த அதே உற்சாகத்தோடு தானும் இருந்து, என்னையும் சோர்ந்து போகாதபடிக்கு உற்சாகப்படுத்திக் கொண்டிருப்பதால்தான் நானும் ஓடிக் கொண்டிருக்கிறேன். அபத்தத்தில் தமிழக இலக்கியம் பற்றிய பல்வேறு படைப்புகளும் பேட்டிகளும் தொடர்புகளும் கற்சுறா இல்லாமல் சாத்தியமாகியே இருக்காது. இன்றைக்கும் அபத்தத்தில் இன்னும் பலரை எழுத வைக்க வேண்டும் என்பதில் காட்டுகின்ற முனைப்பு காரணமாகத் தான் பலர் அபத்தத்தில் எழுதுகிறார்கள். தான் கருத்து ரீதியாக விமர்சிக்கிறவர்களைக் கூட, அபத்தத்தில் தயக்கம் இல்லாமல் எழுத வைக்க வேண்டும் என்பதில் அவர் காட்டுகின்ற அக்கறையும் ஆர்வமும் அதிகம். மூன்று மணி நேர வீடியோவைப் பார்த்து உரையாடப்பட்டதை தட்டச்சிடுவதற்கு அசாத்திய பொறுமையும் ஆர்வமும் வேண்டும்.

எங்கள் கருத்துக்கள் அறுதியானதும் இறுதியானதும் என்ற மேதகுத்தனங்கள் இல்லாமல், அவை உரையாடல்களுக்கும் விவாதங்களுக்குமான தொடக்கப் புள்ளி மட்டும் தான் என்பதே எங்கள் இருவரின் கருத்தும்.

இதை விட, அபத்தம் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து எழுதுகிறவர்கள் உண்மையிலேயே எங்களுக்கு ஒரு தார்மீக பலத்தைத் தருகிறவர்கள். எங்களுக்குள் கருத்து முரண்பாடுகள் இருக்கும். நாங்கள் சொல்கிற எல்லாவற்றோடும் எல்லாரும் உடன்படுவதுமில்லை.

ஆனால், தங்கள் கருத்துக்களை அவரவர் கொண்டிருப்பதற்கான சுதந்திரத்தை மதிக்கவும், அந்தக் கருத்துக்களை நாகரீகமான முறையில் விவாதிக்கவும் தயாரானவர்களாகத் தான் நாங்கள் எல்லாரும் இருக்கிறோம்.

அந்தக் கருத்துக்களை ஒரு சமூகத்தின் நலனுக்கும் நீதிக்கும் முன்னேற்றத்திற்குமாகப் பயன் படுத்த வேண்டும் என்பதில் எங்கள் எல்லாருக்குமே உடன்பாடு இருக்கிறது.

இதை வைத்துப் பயனும் பிரபலமும் அங்கீகாரமும் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எங்களில் எவருக்கும் இல்லை. நாங்கள் பேசுகிற விடயங்களும் பிழைப்பு நடத்துதற்கு ஆனவையாகவும் இல்லாதபடிக்கு, சொந்தச் செலவுச் சூனியங்களே.

சமூகத்திற்கு கேட்க விரும்பு, கின்றவையை, இனிப்பவற்றைப் பேசுவதற்கு நாங்கள் எதற்கு? அதற்கு ஆயிரம் அயோக்கியர்கள் ஊருக்குள்ளேயே உண்டே!?

இப்படி புத்தாண்டு நள்ளிரவில் ஏவிய கணை.

அது ஏற்படுத்திய அதிர்வலைகள் அதிகம்.

இதுவரை காலமும் அடித்து விட்ட கதைகள் எல்லாம் வெறும் பீலாவாக முடியப் போகிறதே என்று பயந்தவர்கள் முதல், 'இவங்கள் பெரிய ஆட்களாகி விடுவாங்களோ?' என்று பொறாமைப்பட்டவர்கள் வரைக்கும்...

யாழ்ப்பாணிகள் தானே?

ஆச்சரியப்பட எனக்கு என்ன இருக்கிறது?

ஏற்கனவே சஞ்சிகை நடத்தித்

தோற்றுப் போனவர்களும், இவ்வாறான ஒரு சஞ்சிகையை நடத்தும் கனவில் தோற்றுப் போனவர்களும், இதன் வெற்றியில் குளிர் காய்ந்து உரிமை கோர முடியாமல், பொறாமையால் புழுங்குவதை பின்னூட்டங்களில் காணத் தானே கிடக்கிறது?


எங்காவது அனாமதேயங்கள் தங்களைப் பற்றி எழுதுவதையும், ஏதாவது இதழ்களில் பிரசுரமான தங்களைப் பற்றிய குறிப்புகளையும் பேஸ்புக்கில் பெருமையோடு பகிரும் பல இலக்கியப் பிரபலங்கள், அபத்தத்தில் தங்களைப் பற்றி புகழ்ந்து வந்தவைகளைக் கூட பகிர்ந்து கொள்ள விரும்பாத அளவுக்கு அபத்தம் தீண்டத் தகாத 'தலித் இலக்கிய' இதழாகத் தான் இருக்கிறது.

தாங்கள் வாசித்தோம் என்பதைக் கூடப் பகிரங்கமாகச் சொன்னால், அது அங்கீகாரமாகி விடுமோ என்ற பொறாமையில் பம்மிக் கொண்டிருப்பவர்களை யாம் அறிவோம்! தன்னைச் சூரியதேவன் என்று நினைத்தவரைக் கடந்து வந்த எனக்கு, தங்களை இலக்கிய மேதகுக்கள் என்று நினைப்போரைப் பார்த்துச் சிரிக்கத் தானே முடியும்.

இவர்களை எல்லாம் தாயகம் காலத்திலேயே தெரிந்து வைத்திருந்ததால், இன்றைக்கு இந்த 'விசயம்' தெரியாத அப்பாவியை ஏமாற்ற முடிவதில்லை.

இதில் வடிவமைப்பு, வெவ்வேறு வடிவங்களில் அனுப்பப்படும் ஆக்கங்களை வடிவமைப்புக்கு ஏற்ப மாற்றுவது என நிறைய நேரத்தை செலவிட வேண்டி உள்ளது. பெரிய குழு ஒன்று செய்ய வேண்டிய விடயத்தை தனிமனிதனாகச் செய்து கொண்டிருக்கிறேன்.

இதற்குள் நான் எழுத வேண்டிய பல முழுநீள 'வெண்முரசு' காவியங்கள் வேறு. இதை முழுநேர வேலையும், அதைக் கடந்த எனது ஆர்வங்களும், குடும்பப் பொறுப்புகளும் கடந்து செய்வது என்பது சாதாரண விடயம் இல்லை. இதற்குள் அதிகாலை வேலை என்பதால், வேலை முடிந்து




வந்து போடும் குட்டித் தூக்கச் சோம்பேறித் தனம் வேறு.

இதனால் சரியான மாதத் தொடக்கத்தில் கொண்டு வர முடிவதில்லை. அதனால் என்ன? நாங்கள் என்ன யாரோடும் ஓட்டப் பந்தயமா ஓடுகிறோம்? நாங்கள் எவருக்கும் போட்டிக்காரர்கள் இல்லை என்றாலும், எங்களை அவ்வாறு கருதிக் கொள்கிறவர்களை என்ன செய்ய முடியும்?

ஆரோக்கியத்துக்காக ஓடுகிறவன் தன் வசதிக்குத் தகுந்த மாதிரித் தானே ஓட முடியும்?

என்னுடைய முழுமையான திருப்தி கிடைக்கும் வரைக்கும் அவசரப்பட்டு வெளியிட அச்சுப் பிரச்சனைகளும் இல்லை.

இருந்தாலும், காணவில்லையே என்று பொறுமை கடந்து காத்திருப்போரின் எதிர்பார்ப்புக்கு ஏமாற்றம் தராதபடிக்கு ஒவ்வொரு இதழும் ஆவணப்படுத்தக் கூடிய அளவுக்கும், எனக்கு பொதுமன்னிப்பை வழங்கக் கூடிய அளவுக்கும், பெறுமதியானவையாகத் தான் வந்து கொண்டிருக்கின்றன.

ஏதோ பெரியதொரு இலக்கியப் பூகம்பத்தை நிகழ்த்தி, சாதனை புரிந்து விட்டோம் என்று, எங்கள் இலக்கிய மேதகுக்கள் மாதிரி, எங்களை நாங்களே புகழ்ந்து கொள்ளப் போவதில்லை. அதைத் தீர்மானிப்பது வாசிக்கிறவர்கள் தான்.

இந்த இதழின் பெறுதியையும், அதற்காகச் செலவிடப்படும் உழைப்பையும் தாங்களாகவே உணர்ந்து மதித்து, அதற்கான தங்களால் ஆன உதவியை மாதாந்தமும் ஒரேயடியாகவும் நல்கும் நண்பர்கள் உண்டு. அவர்கள் தரும் உற்சாகத்தின் பெறுமதி அதிகம்.

அபத்தம் வெளிவந்ததும் அதைப் பகிர்ந்து கொள்வோர் நிறைய. அவர்களின் அன்பு என் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

எனவே, வாசியுங்கள்.

அபத்தத்தைப் பற்றிய உங்கள் கருத்துக்களை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

எங்களுக்கு எழுதுங்கள்! எதைப் பற்றியும்!

Self-proclaimed கதைசொல்லிகள், கவிஞர்களை விட, உங்களிடம் சொல்வதற்கு ஆயிரம் கதைகள், உணர்வுகள் இருக்கும். தரத்தை விட, நான் மதிப்பது ஆர்வத்தை.

ஒரு குழந்தையின் கிறுக்கல் தரும் இன்பத்தை, மேதகுக்களின் எந்தப் படைப்பும் தர முடியாது.

எனவே, எழுதுங்கள்.

இரத்தம் கக்கிச் சாவதற்கான சாபம் கிடைக்க முன்னால், கிடைத்த 24 மணி நேரத்திற்குள் பகிருங்கள்!

•••

அப்பிள் ஸ்தாபகர் ஸ்ரீவ் ஜொப்ஸ் சொன்ன புகழ் பெற்ற வாக்கியம் ஒன்று உண்டு.

We are here to make a dent in the universe.
இது பிளேபோய் சஞ்சிகைக்கு அவர் கொடுத்த பேட்டியில் சொன்னது.


அதைப் போல, அப்பிள் கம்பியூட்டர்கள் பிரபஞ்சத்தில் செய்தது மாதிரி, இதெல்லாம் தமிழ் இலக்கிய உலகில் நாங்கள் போகிற வழியில் தட்டுகிற நாலு 'தட்டுகள்' தான்! அ









Images by Reuben












‘டேய், மச்சான், நீ’ என்று நான் ஒருமையில் அழைப்பது என் பாடசாலை நண்பர்களை மட்டும் தான். அன்றைய உறவுகள் இங்கே வந்தாலும், இத்தனை வயதிலும் மாறாமலேயே இருக்கின்றன. முன்பு அடிக்கடி மற்ற நண்பர்கள் யாராவது கனடா வந்தால் சந்திப்போம். இப்போது சந்திப்பது குறைவு.
நண்பன் ஒருவனின் தாயாரும் இன்னொருவனின் மாமனாரும் காலமான போது, இறுதிப் பார்வையிட நானும் மற்றும் இரு நண்பர்களும் சென்றிருந்தோம். அங்கே எங்கள் மற்ற நண்பர்களையும் சந்திக்க முடிந்தது.

என் எட்டாம் வகுப்பு நண்பன் ரூபனை அங்கே சந்திக்க முடிந்தது. ரூபனை இங்கே இருபது வருடங்களுக்கு முன் சந்தித்திருந்தேன். இங்குள்ள பெரும் வங்கி ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பின்னர், ஜமெய்க்காவில் உள்ள அவர்களின் கரிபியன் பிராந்திய அலுவலகத்தில் பெரும் பதவியில் நியமித்து, அனுப்பி வைத்திருந்தார்கள். இப்போது ஓய்வு பெற்றுக் கொண்டு விட்டதாகச் சொன்ன போது, ‘அப்போ ஓய்வு நேரத்தில் என்ன செய்கிறாய்?’ என்று கேட்டேன்.
‘போட்டோக்கள் எடுக்கிறேன்!’
‘என்ன?’.

பிறகென்ன? சுற்றி நிற்போர் பற்றிய கவலை இல்லாமல், உரையாடல் நீண்டு, ‘பொறு, உன்னுடைய படங்கள் வேண்டும். அடுத்த முறை என் சஞ்சிகையில் உன் படங்கள் வரும்’ என்றேன்.
ரூபனுக்கு தன் தந்தையிடம் இருந்து தான் இந்தப் புகைப்பட ஆர்வம் தொற்றியிருக்கிறது.
தான் சேவையில் இருந்து ஓய்வு பெற்றதே, தன்னுடைய புகைப்பட ஆர்வத்தைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் என்கிறார் அவர்.
இதுவரையில் ஐந்து கண்டங்களிலும், 42 நாடுகளுக்குச் சென்று ரூபன் படங்கள் எடுத்திருக்கிறார். தென்னமெரிக்காவில் கொலம்பியா, மத்திய அமெரிக்காவில் மெக்சிக்கோ, வட அமெரிக்கா, கரிபியனில் எண்ணற்ற தீவுகள், ஐரோப்பாவில் இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிட்சலாந்து, ஸ்கன்டிநேவியாவில் ஐஸ்லண்ட், கிரீன்லண்ட், நோர்வே, ஆசியாவில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, மத்திய கிழக்கில் துபாய், அபுதாபி, ஆபிரிக்காவில் தென்னாபிரிக்கா, ஸாம்பியா, ஸிம்பாவே, தன்சானியா, உகண்டா, எதியோப்பியா, நமிபியா, பொட்ஸ்வானா, அவுஸ்திரேலியா என்றெல்லாம் உலகம் சுற்றும் இந்த வாலிபன் தன்னுடைய பயணங்களை படம் பிடிப்பைச் சுற்றித் தான் திட்டமிடுகிறார்.

என் எதியோப்பிய நண்பர்கள் தங்கள் நாட்டில் உள்ள, நிலத்தின் கீழ் ஒற்றைக் கல்லில் வடித்த கிறிஸ்தவ ஆலயங்கள் பற்றி எல்லாம் எனக்குச் சொல்லியிருந்தார்கள். அங்கு கூட ரூபன் சென்று படங்கள் எடுத்திருக்கிறார். இரண்டு பிள்ளைகள், மனைவி என ரூபனின் ஆர்வத்திற்கு குடும்பத்தினர் மிகவும் உற்சாகம் ஊட்டுகிறவர்களாக இருக்கிறார்கள். இப்போது இன்னொரு பெரும் வங்கிக்கான ஆலோசகராக பார்படோஸ் தீவுக்குப் போகப் போகிறார். ‘மச்சான், நீ பெலி தீவு பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?’ என்றேன். ‘தெரியும், கனடாவின் தென் முனை!’. ஒன்ராறியோ ஏரிக்குள் இருக்கும் தீவு. கப்பலில் போக வேண்டும். ‘அடுத்த மே மாதம் அங்கே போகிறேன், பறவைகளைப் படம் பிடிக்க வருகிறாயா?’ என்றேன். ‘தொடர்பு கொள். இங்கே நின்றால், நாங்கள் போகலாம்!’.

அதே சின்ன வயதுக் குதூகலம். அந்த முழு நேரப் படப்பிடிப்பாளனுக்கு, இந்த கற்றுக்குட்டியும், அபத்தத்தில் வந்த நான் எடுத்த விமானச் சாகசப் படங்களைக் காட்டிக் கொண்டேன். இந்தப் புதுவருடத்தில் அட்டைப்படமாக, எட்டாம் வகுப்பில் ஒரே வாங்கில் எனக்குப் பக்கத்தில் இருந்த நண்பனின் படம் வருவது குறித்து எனக்கு பெருமையும், பெரும் மகிழ்ச்சியும்.

இன்ஸ்டாகிராம், யூடியூப், பேஸ்புக், இணையம் எங்கும், images by reuben என்று தேடினால், ரூபனின் பல்லாயிரக்கணக்கான படங்களையும், வீடியோக்களையும் பார்வையிட்டு, இந்த உலகம் சுற்றும் வாலிபனோடு நீங்களும் உலகைச் சுற்றி வரலாம்.
























# பாலசிங்கத்தின் ஜேனஸ் முகம்

> தனிப்பட்ட முறையில் விடுதலைப்புலிகளின் போக்கையும் பிரபாகரனின் தற்கொலை அரசியலையும் நெருங்கியவர்களிடம் அவர் விமர்சித்து இருப்பினும் பொதுவெளியில் புலிகளின் ஊதுகுழலாகவே செயல்பட்டார்.

**ராகவன்**

உரோம கடவுளான ஜேனசுக்கு ஒரு தலையில் இரண்டு முகங்கள். ஒன்று முன்னோக்கியும் மற்றது பின்னோக்கியும் இருக்கும். அரசியலில் ஜேனஸ் முகம் என்பது ஏமாற்றும் வஞ்சனையும் கொண்ட அரசியல் வாதியின் இருமுகங்களை குறிக்கும்.

இவ்வகையில் பால சிங்கமும் ஜேனஸ் முகத்தவர். பாலசிங்கம் பல மேல் நாட்டு அரசியல் தத்துவங்களை கற்றவர். ஹேகல்பற்றிய ஆய்வை மேற்கொண்டு பின்னர் தமிழ் தேசிய அரசியலில் ஈடுபட்டதால் கைவிட்டவர். கலா நிதிப்பட்டத்தை அவர் பெறவில்லை. அதனை பெற்றிருப்பதற்கான புத்தக அறிவு அவருக்கு இருந்தது. ஆனால் சூழல் இடம் கொடுக்கவில்லை என்பதும் யதார்த்தம்.

பாலசிங்கம் தமிழிலும் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றவர். எழுத்தாற்றல் மிக்கவர். ஆனால் அவரது அறிவுப்புலமை என்ற கலாசார மூலதனம் மக்களுக்கானதாக இருக்கவில்லை. மாறாக தான் சார்ந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் அனைத்து நடவடிக்கைகளையும் பொது வெளியில் நியாயப்படுத்தும் செயல்களுக்காகவே தனது கற்றறிவை பயன்படுத்தினார்.

தனிப்பட்ட முறையில் விடுதலைப்புலிகளின் போக்கையும் பிரபாகரனின் தற்கொலை அரசியலையும் நெருங்கியவர்களிடம் அவர் விமர்சித்து இருப்பினும் பொதுவெளியில் புலிகளின் ஊதுகுழலாகவே செயல்பட்டார்.

பிரபாகரனை பதவி வெறி கொண்டவர், பாசிஸ்ட், மிஸ்டர் புனிதம், மொக்கன் எனப் பல்வேறு பெயர்களில் தன்னுடன் நெருங்கி பழகுபவர்களிடம் விளிப்பார். இகழுவார். என்னிடமும் அவ்வாறு கூறியுள்ளார்.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தும் போதும் ஊடகவியலாளர், சர்வதேச ராஜதந்திரிகளுடன பேசும் போதும் கண்ணியமான மொழியில் பேசுவார். தமிழர்களின் உள்ளக சுய நிர்ணயம், அரசியல் உரிமை போன்ற பல விடயங்களை எடுத்துரைத்து,

புலிகள் உண்மையாக சமாதானத்தை விரும்புகிறார்கள் போர் அரசால் திணிக்கப்பட்டது என்றெல்லாம் பேசி புலிகள் புல்லைத்தின்னும் என அவர்களுக்கு பாடமெடுப்பார்.

எரிக் சொல்ஹெய்ம் தொடக்கம் பாலாவின் மறுமுகம் அறியாமல் அவரை விதந்துரைப்பர். அவரை ஒரு பெரும் ராஜதந்திரி என புகழ்ந்துரைப்பவர்கள் பலர்.

அதே வேளை தமிழில் உரை நிகழ்த்தும் போது புலிகளின் கொலைக் கலாசாரத்தையும், சர்வாதிகார போக்கையும் நியாயப்படுத்தி கொஞ்சம் பாலியல் நிந்தனையையும் கலந்து அரசியல் நீக்கம் செய்யப்பட்ட மக்கள் கூட்டத்தினை திருப்தி செய்யும் அரசியலை பாலசிங்கம் முன்னெடுத்தார். இவ்வகையில் அவரது உள்கிடக்கை புலிகளின் பாசிச அரசியல் சிந்தனைக்கு முண்டு கொடுப்பதும் அரசியல் நீக்கம் செய்யப்பட்ட கும்பல் கலாசாரத்தை வளர்ப்பதுமாகும்.

விடுதலைப் புலிகளின் அரசியலானது மக்களை அரசியல் நீக்கம் செய்யும் அரசியல். அங்கு விவாதம், பகுத்தறிவு ,ஜன நாயகம் போன்ற விழுமியங்களுக்கு இடமேயில்லை. இலங்கை அரசின் மோசமான இனவாத அரசியலின் உபவிளைவு விடுதலைப்புலிகள் என்பதில் சில நியாயப்பாடுகள் இருப்பினும் விடுதலைப்புலிகள் எவ்வாறு தம்மை ஒரு பாசிச கூறுகள் கொண்ட சர்வாதிகார ராணுவ அமைப்பாக மாற்றிக்கொண்டனர் என்பதை அவர்களின் நடவடிக்கைக ளூடாகவும்பரப்புரைகள்மூலமாகவும் எளிதில் படித்துக்கொள்ள முடியும்.

பாசிசம் எவ்வாறு மக்கள் திரளாக (fascism as a mass movement) உருவாகிறது என்பதை நாசி ஜெர்மனியில் வாழ்ந்த ரோசன்பெர்க் மிக ஆழமாக ஆய்வு செய்துள்ளார். அவர் ஒரு கம்யூனிஸ்ட். ஒரு 100 பேர் கொண்ட நாசிகள் எவ்வாறு மக்கள் திரளின் ஆதரவைப்பெற்ற அமைப்பாக மாறினர் என்பது அவர் ஆய்ந்த விடயம்.

ஒரு பியானோவின் பொத்தான்களை தட்டுவதால் மட்டும் ஒருவர் இசைக்கலைஞன் ஆக முடியாது. இசை பற்றிய அறிவு, இசையின் மொழியை புரிந்து கொள்ளும் திறன் அதற்கு அவசியம். அதே போல் சமூக விடயங்களை ஆய்வதும் என்கிறார்

அவர். குட்டி பூர்சுவாக்கள் தான் பாசிசத்தின் காரணகர்த்தாக்கள் என்று சில மார்க்சிஸ்டுகள் அறிவியல் சோம்பேறித்தனமான முடிவுகளை எடுப்பதை அவர் நிராகரிக்கிறார். ஒரு பெட்டிக்கடைக்காரன் பாட்டாளி வர்க்கத்தை ஒரு புறமும் முதலாளித்துவத்தை மறுபுறமும் ஆட்டிப்படைக்கும் பலத்தை கொண்டிருப்பவன் என்பதை நம்புபவர்களை பார்த்து ஏளனம் செய்கிறார் அவர்.

தேச உருவாக்கத்தில் உருவான தேசிய வாத சிந்தனை முறை பாசிசத்துக்கான அடித்தளம். அதன் தீவிரவாத போக்கு பாசிசத்துக்கு வழிகோலுகிறது. அதீத தேசபக்தியுடன் சேர்ந்த இனவாதம் மூலமாக உருவாகும் இந்த போக்கு இடது சாரிகளின் மேலான அதீத வெறுப்பை கக்குகிறது.

பாசிசம் அரச அதிகாரத்தை அடைந்தபின்னால் உருவாகும் விடயமல்ல. மாறாக பாசிசம் மக்கள் திரளில் ஆதிக்கம் செலுத்தும் வளர்ச்சிப்போக்கை பார்க்கிறார் ரோசன்பெர்க். இவ்வகையில் 10 பேராக இருந்த புலிகள் ஒரு பெரும் மக்கள் கூட்டத்தை தனக்கு ஆதரவுத்தளமாக பெற்று நின்றதென்பதற்கு பின்னால் உள்ள நிகழ்ச்சிப்போக்கை தரிசித்தல் அவசியம். 83 இல் தமிழ் மக்களுக்கு மேலான அரசின் திட்டமிட்ட வன்முறையால் தமிழர் பலர் கொல்லப்பட்டதும் சொத்துக்களை இழந்ததும் வரலாறு.

அக்கால கட்டத்தில் தன்னெழுச்சியாக தமிழ் முஸ்லிம் மக்கள் தமது ஆதரவை அனைத்து இயக்கங்களுக்கும் நல்கியதும் ஒரு குறிப்பிட்ட சிங்கள முற்போக்கு சக்திகளும் தமிழரின் அரசியல் உரிமைக்காக குரல் கொடுத்ததும் நிகழ்ந்தது. ஆனால் தமிழ் தேசியத்தின் வளர்ச்சிப்போக்கில் விடுதலைப்புலிகள் தமது தனியான ஆதிக்கத்தை நிறுவி ஒரு அழிவு அரசியலை நோக்கி பயணித்தனர்.

விடுதலைப் புலிகளின்

83 இல் தமிழ் மக்களுக்கு மேலான அரசின் திட்டமிட்ட வன்முறையால் தமிழர் பலர் கொல்லப்பட்டதும் சொத்துக்களை இழந்ததும் வரலாறு.
அக்கால கட்டத்தில் தன்னெழுச்சியாக தமிழ் முஸ்லிம் மக்கள் தமது ஆதரவை அனைத்து இயக்கங்களுக்கும் நல்கியதும் ஒரு குறிப்பிட்ட சிங்கள முற்போக்கு சக்திகளும் தமிழரின் அரசியல் உரிமைக்காக குரல் கொடுத்ததும் நிகழ்ந்தது.



**போராட்டத்தில் இறப்பது என்பதை மாற்றி இறப்பதே போராட்டத்தின் குறிக்கோள் என்பதற்கு வரைவிலக்கணமாக சயனைட் கலாசாரத்தை உருவாக்கினர். இவ்வகையான ஒரு அமைப்பில் அரசியல் ஆலோசகராக செயல்பட்ட பாலசிங்கம் தனது மனச்சாட்சிக்கு விரோதமாகவே சாகும் வரை செயல்பட்டிருக்கிறார்.**



கட்டுக்கோப்பான ராணுவம், மறு கேள்வியில்லாமல் தலைவனின் ஆணைக்கு கீழ்ப்படிந்து தாக்குதல்களை நடத்தும் செயல்பாடு போன்றவை அவர்கள் மேலான ஒரு பயத்துடன் கலந்த மரியாதையை மக்கள் மத்தியில் உருவாக்கியது.

83 க்கு பின்னரான அரச வன்முறைக்கெதிரான ஆயுத வன்முறை ஒரு பெரும் மக்கள் கூட்டத்தை நாட்டை விட்டு வெளியேற காரணியாகியது. வசதியற்ற விளிம்பு நிலை மக்கள் பெரும் தொகையாக தமிழ் நாட்டில் தஞ்சம் பெற்றனர். அத்துடன் பெரும்பான்மையானோர் உள் நாட்டிலேயே இடப்பெயர்வுக்கு ஆளானார்கள். ஓரளவுக்கு வசதியுள்ளவர்கள் மேற்கு நாடுகளை நோக்கி புலம் பெயர்ந்தனர். இந்த மேற்கு நாடுகளில் புலம் பெயர்ந்தவர்களையே புலிகள் தமது அரசியல் நீக்கம் செய்யப்பட்ட கும்பல் அரசியலுக்கு பயன்படுத்தினர்.

தமிழ் பாடசாலைகள், பரத நாட்டிய, சங்கீத வகுப்புகள், கோவில்கள், விளையாட்டு கழகங்கள், பழைய மாணவர் சங்கங்கள் என எல்லா அமைப்புகளும் புலிகளின் நெட்வோர்க்குக்குள் கொண்டுவரப்பட்டன. இலங்கையில் இருக்கையில் விடுதலை அரசியலிலோ சமூக செயல்பாடுகளிலோ எவ்வித பங்கும் செலுத்தாதவர்கள் புலிகளால் முகவர்களாக்கப்பட்டனர். அரசியல் நீக்கம்செய்யப்பட்ட கும்பல் அரசியலுக்கு இந்த முகவர்களே பொருத்தமானவர்கள். இவர்களே புலிகளுக்கு பெருவாரியான நிதியை திரட்டுவதில் முன்னணி வகுத்தனர். தமது கட்டுப்பாட்டு பிரதேசங்களில் மாற்றுஇயக்கங்களை சேர்ந்தவர்களை அழிப்பது, மாற்றுக் கருத்தாளர்கள்-புத்திஜீவிகளை கொல்வது போன்ற மிக மோசமான ஜனநாயக மறுப்பு அரசியலை முன்னெடுத்த புலிகள் தமது அழிவு அரசியலுக்கு விடுதலை என்ற பதாகையை சூட்டி மக்கள் மத்தியில் பாரிய பரப்புரைகளை நிகழ்த்தினர். விடுதலைக்கான ஏகபோக அரசியலுக்கு வித்திட்டவர்கள் என்ற அதிகாரபூர்வமான வரலாற்று புனைவுகளையும் பிரபாகரனே தமிழரின் தனிப்பெரும் தலைவன் என்ற மாயையையும் மக்கள் மத்தியில் விதைத்தனர். போராடி மடிந்த புலிகளின் உறுப்பினர்களுக்கு துயிலும் இல்லங்களை நிறுவி அவற்றை வழிபாட்டுத்தலங்களாக்கி அவர்களை மலரப்போகும் தமிழீழத்தின் விதைகளாக சித்தரித்து தமது அழிவு அரசியலுக்கான அத்திவாரமாக மாவீரர் தினத்தை உருவாக்கினர்.

போராட்டத்தில் இறப்பது என்பதை மாற்றி இறப்பதே போராட்டத்தின் குறிக்கோள் என்பதற்கு வரைவிலக்கணமாக சயனைட் கலாசாரத்தை உருவாக்கினர். இவ்வகையான ஒரு அமைப்பில் அரசியல் ஆலோசகராக செயல்பட்ட பாலசிங்கம் தனது மனச்சாட்சிக்கு விரோதமாகவே சாகும் வரை செயல்பட்டிருக்கிறார். பல முறை தனது அதிருப்திகளை தன்னுடன் நெருங்கியவர்களுடன் பகிர்ந்து கொண்டிருப்பினும் இறுதி முடிவாக அவர் பொது வெளியில் புலிகளை நியாயப்படுத்தும் செயலையே செய்து வந்துள்ளார்.மார்க்ஸ், ஹேகல், சாத்தர், பூக்கோ, லெனின் போன்ற அரசியல், தத்துவ ஆசிரியர்களின் நூல்களை ஆழமாக அவர் வாசித்துள்ளார். அது மட்டுமல்ல இந்திய தத்துவ மரபையும் அறிந்தவர். ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி போன்றவர்களை வாசித்தவர். மனோதத்துவவியலிலும் ஈடுபாடு கொண்டவர்.

ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க விடுதலைப்போராட்டங்கள் பற்றிய அறிவும் அவருக்கு இருந்தது. ஆரம்பத்தில் இங்கிலாந்தில் இடது சாரி ரொக்சிச அமைப்பில் ஈடுபாடு கொண்டிருந்த போது 1970 களில் இலங்கை தமிழர்களின் சுய நிர்ணய உரிமை பற்றிய ஒரு சிறு நூலை ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்.

1978 இல் அவருக்கு புலிகள் அறிமுகமாகின்றனர். அதே நூலை அவர் சில புதிய விடயங்களையும்

உள்ளடக்கி தமிழில் விடுதலைப் புலிகளுக்காக எழுதினார். அது தான் சோசலிச தமிழீழத்தை நோக்கி எனும் நூல். அந்த பிரதியை நான் பேபி சுப்பிரமணியத்துடன் சேர்ந்து எழுத்துப்பிழைகள் பார்த்தேன். இது நிகழ்ந்தது இந்தியாவில்.

அப்போது உமாமகேஸ்வரன் விடுதலைப்புலிகளின் தலைவராக இருந்தார். சோசலிசத்தமிழீழம் நூல் லெனினின் சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை அடித்தளமாக கொண்ட நூல். அந்த வெளிச்சத்தில் தமிழர்களின் மொழி , கலாசாரம் ,பாரம்பரிய பிரதேசம் என்ற விடயங்களை உள்ளடக்கி தமிழர் களின் சுதந்திரப்போரட்டத்திற்கான நியாயப்பாடுகளை வலியுறுத்தி யதுடன், தெற்கின் இடதுசாரிகளையும் அது விமர்சனத்துக்குள்ளாக்கியது. தமிழ் மக்களின் விடுதலைக்கு சிங்கள முற்போக்கு சக்திகளை இணைக்கும் அவசியத்தையும் வலியுறுத்தி போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல எனவும் விளம்பியது. ஆனால் அந்த நூல் தமிழ் சமூகம் பற்றிய எவ்வித ஆய்வையும் மேற்கொண்டிருக்கவில்லை. சாதி அமைப்பு, மற்றும் பால் வர்க்க வேறுபாடுகள் பற்றிய எவ்வித ஆய்வும் நூலில் இருக்கவில்லை. ஒரு வகையில் தமிழர்களின் சுய நிர்ணய உரிமைக்கான நியாயப்பாட்டை லெனினின் சுய நிர்ணய உரிமைக்கோட்பாடு மூலமாக நிறுவ முயன்ற நூலே அது. எவ்வித சமூக ஆய்வுமற்ற ஒரு பிரச்சார நூலே அது.

ஆனாலும் அந்த நூலை படித்தபோது சில கேள்விகள் என்னிடம் எழுந்தது. அதனால் நான் உமாமகேஸ்வரனை பின்வருமாறு கேட்டேன். எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல என்று எழுதியிருக்கும் நிலைப்பாடு சரி தானே என்று. அது பொது வெளியில் பிரச்சாரம் செய்யும் உத்தி. நீ அது பற்றி அலட்டிக்கொள்ளாதே என்றார் உமா. அந்த நூலை புலிகளில் எத்தனை பேர் வாசித்திருப்பார்கள் என்பதும் கேள்விக்குறி .

புலிகளின் சோசலிச தமிழீழ பிரகடனத்துக்கும் நடைமுறைக் குமான பெரும் முரண்பாட்டின் வெளிப்பாடே உமாமகேஸ்வரனின் கூற்று. சோசலிசம் பற்றியோ, வர்க்க, சாதிய வேறுபாடுகள் பற்றியோ புலிகள் அமைப்பு தமது உறுப்பினர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது கிடையாது. மாறாக வர்க்க வேறுபாடுகள் மற்றும் சாதிய அடக்குமுறைகளை முதன்மைப் படுத்துவது தேசிய வாதத்துக்கு ஆபத்தானதென்றே அவர்கள் கருதினர். புலிகளின் நிலைப்பாடு அது தான். புலிகளை விட்டு பின்னர் வெளியேறிய உமாமகேஸ்வரனின் நிலைப்பாடும் அதே தான். ஒரு வகையில் பிரபாகரன் தனது அரசியல் நிலைப்பாட்டில் வெளிப்படையாக இருந்துள்ளார். ஆனால் உமாமகேஸ்வரன் மக்கள் போராட்டம், சிங்கள தமிழ் முற்போக்கு சக்திகளை இணைத்தல் என்று தனது பொய் முகத்தை காட்டியதன் விளைவு அந்த நிலைப்பாடை உண்மையென நம்பி சென்ற பல முற்போக்கான இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட வரலாறு தெரிந்த விடயம். அதன் பின் 1979 இறுதிப்பகுதி என நினைக்கிறேன். உமாமகேஸ்வரன் ஊர்மிளா உறவு சம்பந்தமான பிரச்சனையில் பிரபாகரன் இயக்கப்புனிதம் கெட்டுவிட்டதாக கூறி அதற்கு மத்திய குழுவினரின் ஆசியுடன் உமா தலைமைப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட காலத்தில் பாலசிங்கம் இந்தியா வருகிறார்.

அவரிடம் இந்த பிரச்சனை சொல்லப்படுகிறது. அவர் மார்க்சியம் பற்றிய சில வகுப்புகளை எடுக்கிறார். அத்துடன் பாலியல் வேட்கை சம்பந்தமான விடயங்களையும் பேசுகிறார். மனிதர்களுக்கு பாலியல் வேட்கை இயல்பானது எனக்கூறி சிக்மன் பிராய்ட் பற்றியும் விளக்குகிறார். ஆனால் பிரபாவுக்கும் தூய்மை வாத சிந்தனையில் ஆட்பட்ட பலருக்கும் அவர் சொன்ன விடயம் தலைக்குள் ஏறவில்லை.

உமாவை கொல்லும் திட்டமும் தயாரானது. உமாமகேஸ்வரன் ஊர்மிளாவுடன் தப்பி செல்கிறார். பாலசிங்கத்தின் ஜெனஸ்முகம் அங்கு வெளிப்படுகிறது. உமாமகேஸ்வரன் பாலியல் உறவை வைத்திருந்த காரணத்தால் அவரை பதவி நீக்கம் செய்வதும் கொலை முயற்சியில் ஈடுபடுவதும் மோசமான நடவடிக்கை என நன்கு தெரிந்தும் அவர் அதனை இடித்துரைக்காமல் பிரபா தலைமையிலான அமைப்பின் செயல்பாடுகளை

**சோசலிசம் பற்றியோ, வர்க்க, சாதிய வேறுபாடுகள் பற்றியோ புலிகள் அமைப்பு தமது உறுப்பினர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது கிடையாது. மாறாக வர்க்க வேறுபாடுகள் மற்றும் சாதிய அடக்குமுறைகளை முதன்மைப் படுத்துவது தேசிய வாதத்துக்கு ஆபத்தானதென்றே அவர்கள் கருதினர்.**





‘போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதில்லை என நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் இங்கு புலிகளுக்கு பொறுப்பாக இயங்குபவர் சிங்களவரின் இரத்தத்தை குடிப்பேன் என்கிறார் என்றார். நான் அப்படி இருக்காது என்று சமாளிக்க உதயன் என்ற புலிக்கு பொறுப்பாயிருந்தவர் எனது மைக்கை வாங்கி ஆர் என்ன சொன்னாலும் நான் சிங்களவரின் இரத்தத்தை குடிப்பேன் என கத்தினார். இப்படியான மொக்கு கூட்டத்துடன் தான் சேர்ந்து இயங்க வேண்டியிருக்குது. கொஞ்சம் பொறுமையாக தான் இயங்கவேண்டுமென்றார்.

அங்கீகரித்தது மட்டுமல்லாமல், பிரபாகரனை அரசியல் ராணுவ தலைவராகக் கொண்ட ஒரு புதிய மத்தியகுழுவையும் உருவாக்கியதில் பாலசிங்கம் முக்கிய பாத்திரம் வகித்தார். மீண்டும் இங்கிலாந்து சென்று விடுதலைப்புலிகளின் தொடர்பை பேணினார்.

1983 கலவரங்களின் பின்னர் தனது கலாநிதி படிப்பை கைவிட்டுவிட்டு இந்தியா வந்தார் பாலசிங்கம். 50 பேர்களுக்கு உட்பட்ட அங்கத்தவர்களை கொண்ட இயக்கங்கள் ஊதிப்பெருத்த காலகட்டம் அது. பனிப்போர் காலகட்டத்தில் ஜே ஆர் தலைமையிலான அரசு மேற்கு சார்பு நிலை எடுக்கும் போக்கை தனது பிராந்திய நலன்களுக்கு குந்தகமாக கருதிய இந்திய அரசு , ஆயுத அமைப்புகளுக்கு இராணுவ பயிற்சி கொடுக்க முன்வந்தது.

ரோ அமைப்பினர் அனைத்து அமைப்புகளுடனும் தொடர்புகளை மேற் கொண்டனர்.

பாலசிங்கம் ஆங்கிலப்புலமை மிக்கவரென்றதாலும் பிரபாவின் நம்பிக்கைக்குரியவர் என்றதாலும் ரோவுடனான தொடர்புகளை கொண்டவர்களில் பாலசிங்கமும் முக்கியமானவர்.

ஈ பி ஆர் எல் எப் அமைப்பு 83 கலவரங்களுக்கு முன் இந்தியாவில் இடது சாரிக்கட்சிகளுடனும் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (நக்சலைட்) கட்சிகளுடனும் தொடர்பை பேணியது. இது பாலசிங்கத்துக்கு தெரியும் ரோவினரிடம் ஈபிஆர்எல்எப்க்கு பயிற்சி கொடுக்கவேண்டாம் ஏனெனில் அவர்கள் நக்சலைட் தொடர்பை கொண்டிருந்தார்கள் என சொல்லவும் அவர் தயங்கவில்லை.

அத்துடன் ஒரு முறை எஸ். வி.ராஜதுரையை சந்திக்க நான் ஏற்பாடு பண்ணியிருந்தேன். பாலசிங்கம் கடைசி நேரத்தில் அதனை ரத்து செய்தார். காரணம் அவர் நக்சலைட் அனுதாபி என்பதே.

பாலசிங்கம் நகைச்சுவையாக பேசுபவர். அமைப்பு இப்படி மோசமான சர்வாதிகாரப் போக்கை கொண்டிருப்பதையும் மற்ற அமைப்புகளை அழிக்க முனைவதையும் நான் விமர்சித்த போது அவரின் பதில் ‘இவங்கள் சிற்றரசர்களாக இருந்தவங்க் இப்போ பேரசரசர்களாக வருகிற சூழல். இவங்களுக்கு எப்படி ஒரு பெரும் அமைப்பை கட்டுப்படுத்துவதென்று தெரியாமல் இப்படி நடக்கிறாங்க. நீ கொஞ்சம் பொறுமையாயிரு, படிப்படியாத்தான் ஏதாவது செய்யலாம் என்றார். பிறகு பகடியா ‘எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில சக்கடத்தாரும் ஏறி சறுக்கி விழுந்தார்’ என்ற நிலை எனக்கும் வருமோ தெரியாதென்று சொல்லி சிரித்தார்.

எமது அமைப்பு சிங்கள மக்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தை கொண்டிருக்கிறது. அது தவறு தானே என பாலசிங்கத்திடம் ஒரு முறை வினவினேன். அதற்கு அவர் ஒரு கதை சொன்னார். ஓமடாப்பா. அது ஒரு பிரச்சனை தான். அதை படிப்படியாக தான் மாத்த வேணும். என்னை ஜேர்மனிக்கு அங்கு புலிகளுக்கு வேலை செய்தவர்கள் அழைத்திருந்தனர். நான் தமிழர்களின் சுய நிர்ணய உரிமை பற்றி பேசிய போது அங்கிருந்த ஒருவர் என்னை விளித்து போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதில்லை என நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் இங்கு புலிகளுக்கு பொறுப்பாக இயங்குபவர் சிங்களவரின் இரத்தத்தை குடிப்பேன் என்கிறார் என்றார். நான் அப்படி இருக்காது என்று சமாளிக்க உதயன் என்ற புலிக்கு பொறுப்பாயிருந்தவர் எனது மைக்கை வாங்கி ஆர் என்ன சொன்னாலும் நான் சிங்களவரின் இரத்தத்தை குடிப்பேன் என கத்தினார்.

இப்படியான மொக்கு கூட்டத்துடன் தான் சேர்ந்து இயங்க வேண்டியிருக்குது. கொஞ்சம் பொறுமையாக தான் இயங்கவேண்டுமென்றார். ஆனால் நடைமுறையில் பாலசிங்கம்

தமிழ் இனவாதத்துக்கு எதிரான செயல்பாடுகள் எதனையும் முன்னெடுக்க வில்லை.

பாலசிங்கத்துக்கு அழகான கையெழுத்து. ஆனால் பாக்கின்சன் வியாதி இருந்ததால் கை நடுக்கம். தாளில் பேனாவை குற்றி விட்டால் எழுத்து அழகாக தொடரும்.அவர் பெரும் குடிகாரனல்ல. ஆனால் குடிப்பதை விரும்புபவர். சிகரட் பிடிக்கும் பழக்கமுடையவர்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் குடிப்பதற்கு அனுமதி இல்லை. ஆனால் பாலசிங்கத்துக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அதற்கு அவரது நியாயப்பாடு என்னவெனில் தான் புலி அங்கத்தவர் கிடையாது, அரசியல் ஆலோசகர் மட்டுமே என்பதே. ஆனால் பத்திரிகையாளர் மாநாடு போன்ற நிகழ்வுகளில் தேசியத்தலைவரின் கருத்தும் எனது கருத்தும் ஒன்று என கூறுவார் .

தன்னை தேசியத் தலைவரின் குரலாகவே அவர் முன்னிறுத்தினார். அதனால் தான் அவருக்கு தேசத்தின் குரல் என்ற பட்டம் அளிக்கப்பட்டதுமென சொல்லலாம்.

பிரபாகரன் மேடைக் கூச்சம்கொண்டவர்.அத்துடன் பொது வெளியில் வெளிப்படுவதையோ பத்திரிகையாளருக்கு பேட்டி கொடுப்பதையோ பெரும்பாலும் தவிர்ப்பவர். ஒருவகையில் அவருக்கு மேடைப் பேச்சாளுமை இருக்கவில்லை.அந்த இடைவெளியை பாலசிங்கம் நிரப்பினார் எனலாம். பிரபாகரனின் அரசியல் குரலாக அவர் தன்னை முன்னிறுத்தினார். அத்தி பூத்தால் போல் வரும் மாவீரர் உரைக்கு பொழிப்புரை கூறும் பணியை அவர் செய்தது தன்னை பிரபாகரனின் அரசியல் முகமாக காட்டிக்கொள்ளவே எனலாம்.

இவ்வகையில் பாலசிங்கம் பல்வேறு அரசியல் தத்துவார்த்த நூல்களை படித்திருப்பினும், உலக அரசியல் பற்றிய ஞானம் இருந்திருப்பினும் இடதுசாரி பின்னணியை கொண்டிருப்பினும் அவரது செயல்பாடுகள் வியாக்கியானங்கள் விடுதலைப்புலிகளின் அதிகார பீடத்தின் விருப்புகளுக்கேற்ப அவற்றிற்கு அரசியல் முலாம் பூசுவதும் அவற்றை நியாயப்படுத்துவதுமே.

அவர் எழுதிய நூல்கள் எதிலும் இலங்கை பற்றிய சமூக ஆய்வு எதுவும் இருக்கவில்லை. மாறாக புலிகளின் தமிழ் தேசிய அரசியலுக்கானநியாயப்படுத்தல்களே நிரம்பி இருந்தன.

அவ்வகையில் அவர் ஒரு பப்ளிக் அறிவு ஜீவி அல்ல. உதாரணமாக எட்வர்ட் சயிட் பாலஸ்தீன மக்களின் ஜன நாயக உரிமைகளுக்காக இறுதி வரை குரல் கொடுத்தவர். இஸ்ரேலுடனான ஒஸ்லோ ஒப்பந்தத்தில் ஆரம்பத்தில் முழுமையான பங்கை கொடுத்தவர். ஆனால் பாலஸ்தீன விடுதலை அமைப்புகள் பொதுமக்கள் மேலான தாக்குதலை மேற்கொள்கையில் அதனை விமர்சித்தவர். இஸ்ரேலின் பயங்கரவாத செயல்களுடன் ஒப்பிடுகையில் பாலஸ்தீன விடுதலை அமைப்புகளின் பொதுமக்கள் மேலான தாக்குதல்கள் பெரிதல்ல என்ற பார்வை கொண்டிருப்பினும் அவர் அத்தாக்குதல்களை கண்டிக்கத் தவறவில்லை. அவரது பார்வை பாலஸ்தீனர்களும் யூதர்களும் வேற்றுமைகளை முதன்மைப் படுத்தாமல் சமாதான சகவாழ்வு வாழ்வதே. மனிதமே அவரது குறிக்கோள்.

இவ்வகையில் பாலசிங்கம் பல்வேறு அரசியல் தத்துவார்த்த நூல்களை படித்திருப்பினும், உலக அரசியல் பற்றிய ஞானம் இருந்திருப்பினும் இடதுசாரி பின்னணியை கொண்டிருப்பினும் அவரது செயல்பாடுகள் வியாக்கியானங்கள் விடுதலைப்புலிகளின் அதிகார பீடத்தின் விருப்புகளுக்கேற்ப அவற்றிற்கு அரசியல் முலாம் பூசுவதும் அவற்றை நியாயப்படுத்துவதுமே.

அவர் எழுதிய நூல்கள் எதிலும் இலங்கை பற்றிய சமூக ஆய்வு எதுவும் இருக்கவில்லை. மாறாக புலிகளின் தமிழ் தேசிய அரசியலுக்கான நியாயப்படுத்தல்களே நிரம்பி இருந்தன.

அதே போல் பிராங்க் பனன் பிரான்ஸின் காலனித்துவத்துக்கு எதிரான அல்ஜீரிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்தவர். ஆனால் தேசியவாதம் பற்றிய விமர்சனம் அவருக்கு இருந்தது. காலனித்துவ பொலிசுக்கும், ராணுவத்துக்கும், அரச அமைப்புக்கும் மாற்றீடாக உள் நாட்டு பொலிஸ், ராணுவ அரசியல் அமைப்பு அதே அடக்குமுறைகளை கொண்டிருப்பது அர்த்தமற்றதென்றார்.

ஆனால் பாலசிங்கத்துக்கு அவ்வாறான பார்வை இருக்கவில்லை. 1984 இல் புலிகள் அனுராதபுரதத்தில் சிங்கள் பொதுமக்களை கொன்றதை நியாயப்படுத்தி அது கூட்டுதண்டனை (collective punishment) என பாலசிங்கம் கூறியதாக கேள்விப்பட்டேன்.

ஒரு வகையில் பிரபாகரன் தன்னை தமிழரை மீட்க வந்த அவதாரம் என கற்பனை செய்ததன் இன்னொரு வடிவம் பாலசிங்கம். அவர் தன்னை புலிகளின் விடுதலை வரலாற்றின் அரசியல் ஆன்மா என கருதிக்கொண்டார். இது அவரது ஹெகேலிய தத்துவப்பின்னணியில் இருந்து வந்த நிலைப்பாடோ என நான் சந்தேகிப்பதுண்டு. நான் 1984 இல் இயக்கத்தை விட்டு வெளியேறியபின் பாலசிங்கத்தை சந்திக்க ஏற்பாடு செய்திருந்தேன். எனக்கு இருந்த அதிருப்திகள் அவருக்கு நன்கு தெரியும்.

1982 இல் பாண்டி பசாரில் உமாமகேஸ்வரன், கண்ணனுக்கு மேலான துப்பாக்கிப்பிரயோகத்தின் பின் நானும் பிரபாகரனும் சென்னை சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் கட்டுப்பாட்டு பிணையில் விடுவிக்கப்பட்டோம். எனக்கு கொடுக்கப்பட்ட இடம் புதுக்கோட்டை.

இயக்கத்தின் ஆபத்தான போக்கு பற்றி ஒரு நீண்ட கடிதமொன்றை பாலசிங்கத்துக்கு எழுதினேன். அவர் அதற்கு பதில் போடவில்லை. மாறாக எஸ்டிடி தொலைபேசிமூலமாக பேசி எனது விமர்சனங்களின் நியாயப்பாட்டை ஏற்றுக்கொண்டார். அந்தக்கடிதம் பற்றி லண்டனில்

ஒரு உரையாடல் நிகழ்ந்ததாகவும் பின்னர் தெரிவித்தார்.

83 கலவரத்தின் பின் அவர் இந்தியாவிற்கு வந்த பின் அவருடன் நீண்ட நேரம் உரையாடியிருக்கிறேன். எனவே இயக்கத்தை விட்டு வெளியேறியதன் பின் அவரை சந்திக்க விரும்பினேன். அந்த சந்திப்பின் இறுதியில் அவர் பின்வருமாறு கூறினார். நீ விலகிப்போவதன் மூலம் விடுதலை வரலாற்று ஓட்டத்தில் காணாமல் போய்விடுவாய் என்றார். அதற்கு, இந்த மோசமான வரலாற்றில் நான் காணாமல் போவது பற்றி எனக்கு மகிழ்ச்சியே என்றேன் நான். இதனை நான் சொல்வதற்கு காரணம் அவர் தன்னையும் பிரபாகரனையும் விடுதலை வரலாற்றின் உந்துவிசையாக கருதிக்கொண்டது என்பதற்காக. அவரது பார்வையில் விடுதலை வரலாறு என்பது புலிகளின் விடுதலை வரலாறு. அதன் அரசியல் ராணுவத்தலைவராக பிரபாகரன். அதன் கொள்கை பரப்பு நாயகனாக தன்னை உருவகித்துக்கொண்டார். இந்த வளர்ச்சிப்போக்கில் பிரபாகரனுடனான ஒரு நெருக்கமான உறவும் உருவானது. பிரபாகரனுக்கு தனது கருத்துகளை முன்வைக்கக்கூடிய நிலையில் அவர் இருந்தார். ஒரு தந்தை - மகன் உறவு போன்ற உறவை அவர் பேணினார்.

ஆனால் பிரச்சனை என்னவெனில் பிரகாரனைப் பொறுத்தவரை பாலசிங்கத்தின் பணி விடுதலைப்புலிகளுக்கு அரசியல் கற்றுக்கொடுப்பதல்ல. மாறாக விடுதலைப்புலிகளின் அனைத்து நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தி பரப்புரை செய்யும் பணியே அரசியல் பிரிவின் கடமை.

70 களில் தங்கத்துரை , குட்டிமணி ஆகியோர் இயக்கம் என்று சொல்வதில்லை. கம்பனி என்றே சங்கேத மொழியில் அழைப்பர். பிரபாகரனும் இயக்கத்தை ஒரு கம்பனியாகவே கருதினார்.

கம்பெனியின் முகாமை யாளராக தன்னை நியமித்தபின், ஒவ்வொரு பிரிவுகளை உருவாக்கி அதற்கான பொறுப்புகளை தனக்கு நம்பிக்கையானவர்களுக்கு கொடுப்பார். அவரிடம் நிர்வாகத் திறமை இருந்ததை மறுக்கமுடியாது.

தனக்கு விசுவாசமாக நடப்பார்கள் என நம்பிவிட்டால் அவர்களது நாளாந்த நடவடிக்கைகளில் அவர் தலையிட மாட்டார். ஆனால் தலைமையையோ புலிகளின் நடவடிக்கைகளையோ பற்றி விமர்சனப்பார்வை இருக்கக்கூடாது. அவ்வகையில் தான் பாலசிங்கத்துக்கு கொடுக்கப்பட்டது விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை அரசியல் ரீதியாக நியாயப்படுத்தும் பணி.

1984 தொடக்கத்தில் ஒரு முறை பாலசிங்கம் இயக்க நடவடிக்கைகள் சம்பந்தமான தனது அதிருப்தியை பிரபாகரனிடம் தெரிவித்திருக்கிறார். பாலா அண்ணை! உங்களுக்கு விருப்பமில்லாட்டி விட்டிட்டுப் போங்க. உங்களைப்போல ஆயிரம் பாலசிங்கங்களை என்னால் வாங்க முடியும் என்றார் பிரபாகரன்.

பாலசிங்கத்துக்கு நன்கு தெரியும் தான் விரும்பும் கொள்கைகளோ அல்லது குறைந்தபட்சம் இயக்கம் ‘விடுதலை‘ என விளம்பரப்படுத்தும் விடயமோ மக்களின் விடுதலைக்கு வழிவகுக்கமுடியாது என்பது. அதிகார மையத்தில் அவர் கோலோச்சுவதற்கு விடுதலையில் ஆழ்ந்த நம்பிக்கை வைப்பது ஆபத்தானது என்பதுதான் யதார்த்தம்.

சிசாக் எனும் அறிஞர் ஒரு உபகதை சொல்வார். ஒரு விஞ்ஞானி தனது வீட்டு வாசலில் குதிரை லாடனை கட்டியிருந்தாராம். குதிரை லாடன் கெட்ட ஆவிகளை வரவிடாது என்பது ஐதீகம். அவரிடம் சென்ற நண்பர் ஒருவர் அதைக்கண்டு வியந்து உங்களுக்கு இதில் நம்பிக்கையில்லை என நினைத்தேன் என்றாராம்.

அதற்கு விஞ்ஞானி° ஆம் எனக்கு நம்பிக்கையில்லைத்தான். ஆனால் நம்பிக்கையற்றவர்களுக்கும் அது வேலை செய்யும் என்றாராம்.

இந்த நம்பிக்கையற்ற விடயத்தில் நம்பிக்கை வைக்கும் போக்கின் வெளிப்பாடே பாலசிங்கத்தின் ஜெனஸ் முகம்.

முக்கியமாக 2002 சமாதான ஒப்பந்த காலகட்டங்களில் அவர் எரிக் சொல்ஹெய்ம் உடனான நெருங்கிய தொடர்பை கொண்டிருந்தார். 90 களின் ஆரம்பத்திலும் பின்னர் நடுப்பகுதிகளிலும் நோர்வே இலங்கையில் சமாதான ஒப்பந்தத்தில் ஈடுபட விருப்பம் காட்டியது.

1996 இல் சர்வதேச செஞ்சிலுவை சங்க தொடர்பு மூலம் பாலசிங்கத்தை நோர்வே பிரதிநிதி எக்லண்ட் சந்திக்கிறார;(pawns of peace:2011.Michelsen institute/ SOAS) அக்டோபர் 98 இல் புலிகளின் பிரதி நிதிகள் சொல்ஹாயிம் மூலமாக பாலசிங்கத்தை சிகிச்சைக்காக வெளிநாடு கொண்டுவர கேட்டதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. 1999 இல் சந்திரிக்கா விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை நோர்வே தலைமையில் தொடங்க பச்சைக்கொடி காட்டினார்.

புலிகள் சம்மதம் தெரிவித்த அதே வேளை தங்கள் ஆயுதபலத்தை காட்டுவதற்கு பல வெற்றிகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன் உச்சகட்டமாக கட்டு நாயக்க விமானப்படை முகாம் தகர்ப்பு. அதன் பின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை புலிகள் அறிவித்தனர்.

அதன் பின் சமாதான உடன்படிக்கையில் அரசும் புலிகளும் கைச்சாத்திட்டனர். ஆனால் அவர்களது நோக்கம் தமிழீழ கோரிக்கையை கைவிடுவதன்று.

தமிழீழக் கோரிக்கையை கைவிடும் பட்சத்தில் தன்க்கு மரண தண்டனை கொடுக்கும்படி பிரபாகரன் தனது மெய்ப்பாதுகாப்பாளர் ஒருவரிடம் கூறியிருந்தாராம். பாலசிங்கத்துக்கு இது நன்கு தெரியும்.

ஆனால் பேச்சுவார்த்தை காலகட்டங்களில் விடுதலைப் புலிகள் நியாயமான அரசியல் தீர்வுக்கு தயார் என்ற நம்பிக்கையை அவர் வளர்த்தார்.

உலக அரசியலை கற்றுத்தேர்ந்த ராஜதந்திரி. காய் நகர்த்தலில் கை தேர்ந்தவர் என தமிழ் தேசிய ஊடகங்கள் அவருக்கு புகழாரம் சூட்டின.

ஆனால்,விடுதலைப்புலிகள் ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான



அரசியல் தீர்வை ஏற்றுக்கொள்ள தயாரில்லை என்பதை அவர் அறிந்திருந்தும் அவர் தொடர்ந்து அரசியல் தீர்வுக்கான நம்பிக்கையை சர்வதேசத்துக்கு கொடுத்து வந்தார். ஒருவகையில் தன்னையும் ஏமாற்றி, மக்களையும் ஏமாற்றி , சர்வதேசத்தையும் ஏமாற்றி ஒரு அர்த்தமற்ற பேச்சு வார்த்தை நாடகத்தை அரங்கேற்றி தோற்றுப்போன அரசியலைத்தான் பாலசிங்கம் முன்னெடுத்தார்.

எரிக் சொல்ஹாயிமுடன் பாலசிங்கம் நெருங்கிய நட்பை கொண்டிருந்தார். இவரது ஜேனஸ் முகத்தை எரிக் சொல்ஹெய்ம் அறிந்திருக்கவில்லை.

பிரபாகரனை வழிக்கு கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கையை அவர் சொல்ஹயிமுக்கு ஊட்டினார். இன்னொரு புறம் எரிக் சொல்ஹயிமும் மற்றைய நோர்வே பிரதி நிதிகளும் புலிகளை மூன்றாமுலக கெரில்லா ராணுவமாக மேற்கத்தய சிந்தனை முறையினூடாக பார்த்தனர்.

ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு விஜயம் செய்தபோது புலிகளின் சீரான ராணுவ அமைப்பு மற்றும் அவர்களது உணவு பரிமாறும் முறை, மேசை விரிப்பு, நன்கு ஷேவ் எடுத்த முகங்கள் கொண்ட உறுப்பினர்களும் தலைவர்களும் என்பவை அவர்களை ஈர்த்ததெனலாம். அத்துடன் புலிகள் மேற்குலகு பற்றிய விமர்சனப்பார்வையோ, ஏகாதிபத்தியம், காலனித்துவம் பற்றிய ஆழமான புரிந்துணர்வோ கொண்டிருக்கவில்லை.

எனவே புலிகளை மேற்குலகின் நேச சக்திகளாக அவர்கள் கருதினர். அப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் தமது ஆயுதபலத்தின்மூலம் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட மேற்குலக அரசுகளுக்கு இலங்கையில் ஒரு சமாதான முகம் தேவைப்பட்டது. இலங்கை அரசோ புலிகளோ ஏகாதிபத்தியத்துக்கு எதிரானவர்களல்ல என்ற யதார்த்தத்தை பயன்படுத்தி தமது நவதாராள சமாதான மொடலை இலங்கையில் பரீட்சித்துப்பார்க்க முயன்றனர்.

பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. பாலசிங்கமும் மற்றைய புலி உறுப்பினர்களும் உலக சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். பிரச்சனை என்னவெனில் பிரபாகரனுடனான நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறாமல் பாலசிங்கம் பிரபாகரனின் அரசியல் முகமாகினார். அவருக்கு புலிகளினதும் பிரபாகரனதும் உள்மனக்கிடக்கை நன்கு தெரியும்.

சமாதானம் என்பதுபுலிகளின் ராணுவ பலத்தை இழக்கச்செய்யும். உறுப்பினர்கள் 'குழம்பிப்' போடுவர்கள் என்ற சித்தாந்தமே பிரபாகரனின் கொள்கை.

இங்கு 'குழம்பிப்போதல்' என்பது இராணுவ நடவடிக்கைகள் இல்லாதபோது உறுப்பினர்கள் சிந்திக்கத் தலைப்படும் போக்கு.

இவ்வாறு சிந்திக்கத்தலைப்படும் போக்கால் இயக்கம் கட்டுப்பாட்டை இழந்துவிடும். எனவே கட்டுப்பாட்டையும் விசுவாசத்தையும் நிலை நிறுத்தத்தொடர்ந்த போர் அவசியம். இந்த லொஜிக் பாலசிங்கத்துக்கு நன்கு தெரியும்.

இவ்வகையில் பாலசிங்கம் ஒரு அரசியல் தரகராக செயல்பட்டார். அவர் படித்த அரசியல் தத்துவங்களுக்கும் அவரது சிந்தனை முறைக்கும் எவ்வித தொடர்புமில்லை. மாறாக அவர் படித்துக்கொண்ட விடயங்களை ஒரு உத்தியாகவே அவர் பயன்படுத்தினார்.

ஒரு புறம் நோர்வே பிரதி நிதிகளிடம் பேசும் போதோ அல்லது ஆங்கிலத்தில் பேசும் போதோ உலக விடயங்களைப்பற்றியும் பேச்சுவார்த்தைகளில் ஏற்படும் பிரச்சனைகள் பற்றியும் நயமாக பேசி புலிகள் சமாதானத்தை விரும்புபவர்கள் தமிழ் மக்களுக்கான ஒரு நியாயமான அரசியல் தீர்வை அவர்கள் ஏற்றுக்கொள்வர் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவார்.

மாறாக, புலம் பெயர் தமிழர்களின் கூட்டத்தில் மிக வக்கிரமாக பேசி சிங்களவனுக்கு மேல் மாடி இல்லை என இனவாத அரசியல் பேசுவார். மாற்றுக்கருத்தாளர்களைகொல்வதற்கு நியாயம் கற்பிப்பார். உதாரணத்துக்கு பிரபாகரனின் 200 மாவீரர் தின உரையை லண்டனில் விளக்கும் போது ஆனந்தசங்கரி கிளிநொச்சிக்கு போக விரும்புகிறாராம். அவருக்கு நான் கட்டிப்பிடிச்சு ஒரு முத்தம் கொடுக்க ஆசை என்றார்.

கட்டிப்பிடிச்சு முத்தம் கொடுப்பது என்பது புலிப்பாஷையில் கொல்லுதல் என்ற அர்த்தம்.

அதனை தொடர்ந்து கிளிநொச்சியில் பொட்டம்மான் நல்ல விடுதி வைத்திருக்கிறார். சங்கரி போனால் நன்கு கவனிப்பார் என்றார். அரசியல் நீக்கம் செய்யப்பட்ட கும்பலை குளிர்ச்சிப்படுத்தும் இந்த சொல்லாடலில் திளைத்த



**அரசியல் நீக்கம் செய்யப்பட்ட கும்பலை குளிர்ச்சிப்படுத்தும் இந்த சொல்லாடலில் திளைத்த கும்பல் விசில் அடித்து தனது மகிழ்ச்சியை தெரிவித்து ஆரவாரம் செய்தது. அது மட்டுமல்ல 1994 இல் சந்திரிக்கா கொண்டுவந்த அரசியல் தீர்வுத்திட்டத்தை பாலியல் வன்மத்துடன் கேலி பண்ணி கும்பலிடம் கைத்தட்டல் பெற்றார்.**

கும்பல் விசில் அடித்து தனது மகிழ்ச்சியை தெரிவித்து ஆரவாரம் செய்தது. அது மட்டுமல்ல 1994 இல் சந்திரிக்கா கொண்டுவந்த அரசியல் தீர்வுத்திட்டத்தை பாலியல் வன்மத்துடன் கேலி பண்ணி கும்பலிடம் கைத்தட்டல் பெற்றார். சந்திரிக்கா ஒரு பொதி வச்சிருக்கிறாவாம். தலைவர் சொன்னார் எனக்கு தேவையில்லை அண்ணை நீங்க வேணுமென்றால் அவவை வைச்சிருங்க என்ற மிக மோசமான வார்த்தைகளை பொது மேடையில் அவர் கொட்டினார்.

இதன் பின்னணி புலிகளின் தற்கொலை அழிவு அரசியலுக்கு புலம் பெயர் தமிழரின் ஆதரவை பெறுவதே. இது குடித்து விட்டு பிதற்றுவதல்ல.

மாறாக புலம் பெயர் தமிழர்களை அரசியல் நீக்கம் செய்து கும்பலாக்கி விடுதலைபுலிகளுக்கு கண்மூடித்தனமாக ஆதரவு வழங்க செய்யும் கைங்கரியம். அது மட்டுமல்ல கும்பல் மன நிலையை தோற்றுவித்து மாற்றுக்கருத்து கொண்டவர்கள் மீது வன்முறையை தூண்டும் அரசியலுமாகும். இதன் மூலம் விடுதலைப்புலிகளின் அதிகார மையத்தில் தனது பாத்திரத்தை உறுதிப்படுத்துவதே அவரது நோக்காக இருந்தது.

இயக்கத்தில் அதிருப்தி விமர்சனங்கள் வரும்போது அவற்றை ஏற்றுக்கொள்வது போல அவர் நடந்து கொள்வார். ஆனால் இறுதியில் பிரபாகரனுக்கு விசுவாசமான நிலைப்பாடையே எடுப்பார்.

மாத்தையா மேல் இந்திய உளவாளி என்ற பொய் குற்றச்சாட்டு சுமத்தப்பட மாத்தையா பாலசிங்கம் வீட்டுக்கு போய் உண்ணாவிரதம் மேற்கொள்ள முயற்சித்தார். ஆனால் பாலசிங்கம் அவரை அனுமதிக்கவில்லை.

அதே போல் 2004 இல் சமாதான பேச்சுவார்த்தைகளின் போது சமஸ்டியை பரிசீலிக்கலாம் என பாலசிங்கம் கூறி அதனை கருணாவையும் ஒப்புக் கொள்ளப் பண்ணினார்.

பாலசிங்கம் லண்டனில் தங்கி விட கருணா இலங்கை போய் பிரபாகரனின் ஆத்திரத்துக்கு ஆளாகி பிரிந்தது வரலாறு.

சமஸ்டியை பரிசீலிக்கலாம் என்பதையே பிரபாகரன் ஏற்றுக்கொள்ள மறுத்தது அரசியல் தீர்வில் எவ்வித நம்பிக்கையும் அற்ற புலிகளின் அரசியலை வெளிச்சத்துக்கு கொண்டு வருகிறது.

ஆனால் பாலசிங்கம் தனது இறுதி மூச்சுவரை விடுதலைப்புலிகள் பற்றி பொதுவெளியில் எவ்வித விமர்சனத்தையும் முன்வைக்கவில்லை. தமிழ் மக்களின் மேல் உண்மையான கரிசனம் கொண்டவராக அவர் இருந்திருப்பின் குறைந்தபட்சம் 2004 இல் ஆவது அவர் விடுதலைப்புலிகளின் விட்டுக்கொடா அழிவு அரசியலுக்கெதிரான விமர்சனங்களை பொது வெளியில் வைத்திருக்க வேண்டும்.

குறைந்தபட்சம் சமஸ்டி தீர்வு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிவர்த்தி செய்யும் தீர்வென்றாவது சொல்லி தமிழ் மக்களிடையே ஒரு கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தி இருக்க முடியும்.

ஆனால் புலிவாலைப்பிடித்த பாலசிங்கத்தின் அரசியல் அவரை புலிகளின் தலைமையை விமர்சிக்கா நிலைக்கு இட்டுச்சென்றது மட்டுமல்ல முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு பங்காளனாக மாற்றியதும் யதார்த்தம்.

இவ்வகையில் பாலசிங்கம் புலிகளின் அழிவுப்பாதையின் ஜேனஸ் முகம்.

# உன்னை முகநூலில் தொடர்வேன்



நோயல் நடேசன்

அன்று ஞாயிற்றுக்கிழமை. வசந்தனுக்கு விடுமுறை நாள். படுக்கையிலிருந்தபடி தொலைபேசி வழியே முகநூலைப் பார்த்தவனுக்கு, அதிலிருந்த பதிவொன்று நெஞ்சாம் குழியுள் ஒரு பூகம்பமாக அதிர்ந்து சில கணத்தில் ஓய்ந்து, இதயத்தில் சுருக்கென ஏதோ கடித்தது போன்ற உணர்வு ஏற்பட்டு, உடலெங்கும் பரவிய அந்த உணர்வுடன் மேலும் படுக்க முடியாது எழுந்தவன், கட்டிலில் சாய்ந்து இருந்தபடி நெஞ்சைக் கையால் அழுத்தமாக நீவியபடி பழைய நினைவுகளுடன் போராடினான்.

சாதாரணமாக உதறித் தள்ளிவிட்டுப் போகமுடியாத பதிவு அது. உறங்கு நிலையிலிருந்த வித்து, மழைத்துளி கண்டு முளைவிடுவது போன்று அந்த செய்தி அவனைத் திக்குமுக்காடச்செய்தது.

முக்கியமான விடயங்கள் நல்லது கெட்டது எதையும் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக மனைவி ராதையுடன் பரிமாறும் அவனுக்கு இதை யாரிடம் சொல்லது?

எப்படிச் சொல்வது?

பதின்மூன்று வருடங்களுக்கு முன்பாக முகநூலில் விடுத்த நட்பு அழைப்புக்கு விவியனிடமிருந்து பதில் வரவில்லை. மீண்டும் பின்னால்

**இதுவரையில் நண்பர்கள், மனைவி என எவரிடம் பகிர்ந்து கொள்ளாத, இளமையிலிருந்தும் அள்ளி வாரிப்போடமுடியாது உறைந்து போயிருக்கும் முதல் முத்தம், பகிர்ந்து கொண்ட காதல், விரும்பியோ விரும்பாமலோ பார்த்த பெண்ணின் அந்தரங்கங்கள், காமம் சார்ந்த நிகழ்வுகள் எல்லாருக்கும் உண்டு. பதின்மூன்று வயதில் காமத்தின் பாதையில் முதலடி எடுத்தபின் முப்பதுகளில் திருமணம் என்ற சட்டபூரவமான பந்தம் ஏற்படும்வரையும் முற்றும் துறந்த முனிவனாக ஒருவன் இருப்பான் என எதிர்பார்க்க முடியாது.**

**இளமையின் அந்தரங்க நினைவுகளை கோவிலில் திருடிய நகைகள்போல், மற்றவர்கள் மத்தியில் சொல்லிப் பெருமைப்பட முடியாது. இடையிடையில் வெளியே எடுத்தோ, இருட்டில் தடவியோ பார்த்துக் கொள்ளலாம்.**



நடந்த கொரானா காலத்தில் முகநூலில் அழைப்பு வந்ததா எனத் தேடிப் பார்த்தபோது ஏமாற்றமே மிஞ்சியது. வெள்ளை பொக்சர் நாயுடன் விவியன் எடுத்த முகநூல் படம் தெளிவாக அவளை அடையாளம் காட்டியது. 2020 பின்பாக எந்த முகநூல் பதிவும் இருக்கவில்லை. பெருந் தொகையானவர்கள் முகநூலில் பதிவுகள் போடாது மற்றையோர் பதிவுகளை மட்டும் பார்ப்பவர்கள். அந்த வகையில் விவியனும் ஒருத்தியோ?

ஆனால் இன்று 2020 ஜூலை 25ம் திகதி விவியனின் முகநூலில் விவியன் நண்பியான மார்க்கிரட் ஒரு பதிவை சேர்த்திருந்தாள் ‘சிறுவயதிலே இருந்து எனது தோழியாகி, பின்பு விக்ரோரியன் ஓவியக்கல்லூரியில் ஒன்றாகப் படித்து ஐம்பது வருடங்களாக மகிழ்விலும் துன்பத்திலும் கலந்து கொண்ட எனது தோழி விவியனின் மறைவு எனக்குப் பெரிய இழப்பு. பல வருடங்கள் முன்பாக இருவரும் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்று அங்குள்ள சுவட்ரோ மக்களோடு இருந்தபோது அங்குள்ள அனாதை சிறுவர்கள் பள்ளியில், ஓவியங்கள் தீட்ட விவியன் அவர்களுக்கு கற்றுக் கொடுத்த அனுபவம் என்னால் மறக்கமுடியாது. தற்பொழுது தனது ஓவியம்போல் ஃபாக்னர் இடுகாட்டில் அமைதியாகத் தூங்குகிறாள். அவளுக்கு எனது அஞ்சலிகள்’ என எழுதியிருந்தார்.

விவியன், எனக்கும் ஒரு முறை தனது தென்னாப்பிரிக்கப் பயணக்கதையை சொல்லியிருந்தாள். அதில் இரண்டு தடித்த ஆப்பிரிக்கப் பெண்கள் மத்தியில் தான் படுத்திருந்த போது அவர்கள் விட்ட குறட்டையில், இரவு தூங்காத அனுபவத்தை நகைச்சுவையோடு விவரித்ததும் இன்றும் நினைவில் உள்ளது.

வசந்தனது மனத்தில் இரைச்சல், அதிர்வுகளை உருவாக்கியபடி காட்டாறு கரை புரண்டு ஓடியது. தொலைப்பேசியை அருகில் வைத்துவிட்டு பழைய நினைவுகளைப் பரசூட்டாக விரித்து தனது இளமைக் காலத்தை நோக்கிச் சஞ்சரித்தான்.

இதுவரையில் நண்பர்கள், மனைவி என எவரிடம் பகிர்ந்து கொள்ளாத, இளமையிலிருந்தும் அள்ளி வாரிப்போடமுடியாது உறைந்து போயிருக்கும் முதல் முத்தம், பகிர்ந்து கொண்ட காதல், விரும்பியோ விரும்பாமலோ பார்த்த பெண்ணின் அந்தரங்கங்கள், காமம் சார்ந்த நிகழ்வுகள் எல்லாருக்கும் உண்டு. பதின்மூன்று வயதில் காமத்தின் பாதையில் முதலடி எடுத்தபின் முப்பதுகளில் திருமணம் என்ற சட்டபூரவமான பந்தம் ஏற்படும்வரையும் முற்றும் துறந்த முனிவனாக ஒருவன் இருப்பான் என எதிர்பார்க்க முடியாது. இளமையின் அந்தரங்க நினைவுகளை கோவிலில் திருடிய நகைகள்போல், மற்றவர்கள் மத்தியில் சொல்லிப் பெருமைப்பட முடியாது. இடையிடையில் வெளியே எடுத்தோ, இருட்டில் தடவியோ பார்த்துக் கொள்ளலாம். நெல்லிக்காய் தின்றவன் தண்ணீர் குடிக்கும்போது ருசிப்பதுபோல் பிற்கால உறவுகளிலும் ஒரு தித்திப்பை உருவாக்கலாம். ஆனால் அவைகளைப் பிற்காலத்தில் மனைவி, குழந்தைகள் என்று வந்தபின், அதுவும் நடுத்தர வயதின் பின் பகிர்ந்து கொள்ளமுடியுமா என்ன? அதனால் எந்த லாபமும் இல்லை. தேவையற்ற மனக்கசப்பே மிஞ்சும்.

நாற்பது வருடங்களுக்கு முன்பாக அதாவது 80பதுகளின் ஆரம்பக் காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகத்திலிருந்து கொழும்புத் திட்டத்தின் கீழ் மேற்படிப்புக்குப் புலமை பரிசில் பெற்று மெல்பேன் வந்தவன் வசந்தன். புலமைப்பரிசு வழங்கிய பணத்தில் படித்தும் கைச்செலவுக்குப் பஞ்சாபி உணவுக்கடையில் வேலை செய்துகொண்டும் சராசரி மாணவனாக மற்றும் இரண்டு இலங்கை நண்பர்களோடு பல்கலைக்கழகத்தின் அருகாமையில் உள்ள ஒரு வீட்டின் மேல் மாடியில் குடியிருந்தான். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரியே விவியன். நாற்பது வயதைத் தாண்டிய விவியனுக்கு ஒரு மகன் அடிலேய்ட்டில் படிப்பதால் அவனது அறையை மாணவர்களுக்கு கொடுத்துள்ளார். விவியன் திருமணம் செய்து விவாகரத்தானதால் பல காலமாக வேலை செய்யவில்லை. மாலை நேரத்தில் உணவகங்களில் பகுதிநேர புகைப்பட கலைஞராக வேலை செய்தாள். அக்காலத்தில் கைபேசிகள் இல்லை. உணவக விருந்துகளில் புகைப்படம் எடுப்பது பலருக்கு பகுதி நேர வேலையாகவிருந்தது.

வசந்தனுக்கும் மற்றைய இலங்கையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் விவியனை பல நாட்கள் பார்க்காது இருக்கமுடியும்.

மாடிக்கு வந்து போவதற்குத் தனியான வழி உள்ளது. மாத முடிவில் வாடகைப் பணத்தை கொடுப்பதற்கு அவளைச் சந்திப்பதைத் தவிர மற்றைய எந்தவிதமான தொடர்பும் இல்லை.

83ம் ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் வசந்தனது குடும்பம் இலங்கையில் பாதிக்கப்பட்டது. அவனது வீடு எரிந்து பெற்றோர்கள் கொழும்பு அகதி முகாமிலிருந்தார்கள். அக்காலத்தில் ஒழுங்காகப் பல்கலைக்கழகம் செல்லாது வசந்தன், பறக்கும்போது மரக்கிளையில் அடிப்பட்டு நிலைகுலைந்து தரையில் விழுந்த பறவையாகத் தத்தளித்தான்.

அக்காலத்தில் வசந்தனிடம் வந்து ஆறுதல் சொல்லிய விவியன், உணவுகள் கொண்டு கொடுப்பது வழக்கமாக இருந்தது. இந்தக்காலத்தில் வசந்தனோடு இருந்தவர்கள் ஆன்ரி என கூப்பிட தொடங்கியபோது விவியன், என்னை விவியன் என்றே அழையுங்கள் அல்லது விவா என அழையுங்கள் என்றாள். அக்காலத்தில் நட்பான அன்னியோன்னியம் ஏற்பட்டபோதும் இரண்டு வருடங்கள் பின்பாக எல்லோரும் பிரிந்துவிட்டார்கள்.

வசந்தனுக்கு முனைவர் பட்டம் கிடைத்ததும், மெல்பேன் பல்கலைக்கழகத்திலே வேலை கிடைத்தது. இதனால் சில நாட்களில் வேறு அபாட்மெண்ட் எடுத்து சென்று விட்டான். யாழ்ப்பாணத்தில் இருந்த பெற்றோர்கள், இலங்கையில் நெருக்கடி அதிகரிக்க 87ல் சென்னைக்குச் சென்று விட்டனர். அங்கு இலங்கை பெண்ணொருத்தியை பார்த்து திருமணம் செய்ய சொல்லியபடியிருந்தனர்.

பல்கலைக்கழக ஆய்வு வேலை வசந்தனுக்கு நிரந்தரமற்றதானதால் திருமணத்தை மறுத்தபடியிருந்தான். இறுதியில் பெற்றோரின் நச்சரிப்பு காரணமாகவும் பலகாலம் அவர்களைப் பார்க்காத தவிப்பால் சென்னை வருவதாகச் சொல்லியிருந்தான்.

இக்காலத்தில் ஒரு நாள் தற்செயலாக ரயில் நிலையத்தில் விவியனை சந்தித்தபோது, சென்னை போக இருப்பதாகச் சொன்னான். அவள் ‘நானும் எனது நண்பி மார்கிரட்டும் இந்தியாவின் கேரளாவிற்கு பத்து நாட்கள் போகவிருக்கிறோம். நீயும் எங்களுடன் வந்தால் எங்களுக்குத் துணையாக இருக்கும்‘ என்று அழைத்தாள். அவர்களது பயணநாளை கேட்டு அவனும் ஆன்லைனில் பதிவு செய்வதாகவும் சொல்லியிருந்தான்.

அது ஒரு ஜுலை மெல்பேனில் குளிர்கால நாள். வசந்தன் விமான நிலையத்திற்குப் போன போது விவியன் மட்டும் அங்கே நின்றாள்.

‘மார்கிரட்டின் மகளுக்கு உடல் நிலை சரியில்லை என்பதால் பயணத்தை நிறுத்திவிட்டாள். நீ ஏற்கனவே எங்களை நம்பி பயணத்தில் பதிவு செய்து வருவதால் நான் பயணிப்பது எனவந்தேன்‘ என்றாள்.

இது வரையும் இரு பெண்களுடன் போவதாக இருந்த பயணத்தில் வசந்தனுக்கு எந்த பிரச்சனையும் இருக்கவில்லை. இப்பொழுது தன்னை நம்பியே விவியன் வருவதால் அவனது இதயம் கனத்தது. மூன்று வருடங்கள் உணவு, வசிப்பிடம் என ஆதரவு தந்து, அன்பு காட்டிய பெண். வேறு வழியில்லை.

விவியனது வயது நாற்பத்தைந்தாக இருந்தபோதிலும் அதிகம் நரையில்லை. மெல்லிய உடல், தோல் சுருங்காத கழுத்து, ஒட்டிய வயிறும் ஒடுங்கிய இடுப்பு எல்லாம் ஐந்து வருடங்களைக் குறைத்துக் காட்டியது. மற்றவர்கள் அவனைத் திரும்பி வித்தியாசமாக பார்ப்பதான உணர்வு ஏற்பட்டது. யார் இவன்? ஏன் வெள்ளைக்காரப் பெண்ணுடன் செல்கிறான் என்ற உணர்வு அவனுள் குறுகுறுத்தது. அதே நேரத்தில் அதில் என்ன தவறு? என்ற நினைப்பும் ஒரு புறம் சமாதானம் செய்தது. விமானத்தில் இருவருக்கும் வேறு இடங்களில் இருக்கை அமைந்ததால் சங்கடங்கள் தவிர்க்கப்பட்டன.

கொச்சியில் இறங்கியவர்கள் ஏற்கனவே பதிவு செய்தபடி வாகனத்தில் பயணித்து ஆலப்புழாவை இரவில் சேர்ந்தார்கள். அங்கு ஒரு ஹோட்டலில் இரு வேறு அறைகளில் தங்கியபின்பு மதியத்தில் படகுப்பயணம் ஆரம்பித்தது. அந்த சிறிய படகு ஒரு குடும்பத்துக்கானது. மதியத்திலிருந்து ஆரம்பித்த பயணத்தை விவியன் ரசித்தாள். ஆற்றின் கரையோரங்களில்நடப்பவை அவளுக்கு வியப்பைக்கொடுத்தன. அந்த கிராமத்து மக்களது சூழல், உடை, கலாச்சாரம் என்பன பற்றி பலதை விவியன் தெரிந்து வைத்திருந்ததால் வசந்தனுக்கு அவை புதிய விடயங்களாகத் தெரிந்தன. வசந்தனுக்கு இதுவே முதலாவது இந்தியப் பயணம். ஆரம்பத்திலே தமிழ்ச் சினிமாவில் பார்த்ததை விட இந்தியாவைப் பற்றி தனக்கு அதிகம் தெரியாது என ஒப்புக்கொண்டுவிட்டான். மாலை நேரத்தில் ஜேசுதாசின் பக்தி பாடல்கள் காற்றில் மிதந்து, ஆற்றில் தழுவி படகிற்கு வந்து சேர்ந்தன. மாலையில் உணவு, மீன் கறியுடன் கிடைத்தது. ஒரு கிராமத்தருகே இரவு படகை நிறுத்திவிட்டார்கள். விவியனை அறையின் உள்ளே இரவில் படுக்க சொல்லிவிட்டு வெளியே உள்ள வராந்தாவில் உள்ள மூங்கில் சோபாவில் படுத்து தூக்கத்திலிருந்தவனை நடுநிசியில் கேரளத்தின் பருவ மழை வானத்தைப் பிளந்து சோபாவில் படுத்திருந்தவனைத் தட்டி எழுப்பியது. நல்லவேளையாகப் படகின் பகுதிகள் உள்ளே தண்ணீர் வாராதபோதும வராந்தாவில் சாரல் மட்டுமே அடித்தது. உள்ளே செல்வோமா என யோசித்தபடி இருந்த வசந்தனை, விவியன் உள்ளே வரும்படி அழைத்தாள். தவிர்க்க இயலாத சந்தர்ப்பம் இருவரும், ஒரே கட்டிலில் படுத்தபோது நடுநிசியில் தொடங்கிய மழை காலைவரையும் தொடர்ந்தது வசந்தனுக்குச் சிவராத்திரியானது மட்டுமல்ல, அது முதல் ராத்திரியானது!

அதிகாலையில் சேவல்கள் கூவியது. இருவரும் எழுந்து ஒருவரை ஒருவர் பார்த்து காலையில் மன்னிப்புக் கேட்ட போதிலும் அந்த ஒரு கிழமையும் மூனூர், கன்னியாகுமரி



பெரியார் தேசிய பூங்கா என இரவுகள் முதலிரவுகளாக தொடர்ந்தன. வாகனச் சாரதி முகமது இருவரையும் திருமணமானவர்கள் என நினைத்துப் பேசியபடி வந்தான்.

மீண்டும் கொச்சியில் விமான நிலையத்தில் மெல்பேனுக்கு வழி அனுப்பியபோது, வயதாகிய பெண் என என்னைப் புறக்கணிக்காது இந்த பத்து நாளும் உண்மையான துணையாக இருந்ததற்கு எனது நன்றிகள் என இறுக்கமாகத் தழுவி முத்தமிட்டாள்.

வசந்தனுக்கு அந்த பத்து நாட்கள் மயில் வாகனத்தில் ஏறி உலகத்தை வலம் வந்த மகிழ்வு. சிற்றின்பமா அல்லது இதுதான் பேரின்பமா? தற்காலிகமா நிரந்தரமா?

விவியனுக்கு அவனிலும் பதினைந்து வயது அதிகம் ஆனால் கண்ணனைவிட ராதாவுக்கு 18 வருடங்கள் மூத்தவள் என்று எங்கோ படித்தது நினைவுக்கு வந்தது. அந்த நினைப்பில் அசையாது நின்றவனை விவியன், 'உன்னை மறக்கமுடியாது' என இறுக அணைத்து விடைகொடுத்துவிட்டு மெல்போனுக்கு பயணிக்க, வசந்தன் சென்னைக்குப் புறப்பட்டான்.

சென்னைக்கு வந்ததும் ராதாவைக் காட்டினார்கள். ராதா, சென்னையில் வணிகம் படித்து, கணக்கியலில் மேற்படிப்பு படித்த கொழும்பைச் சேர்ந்த அழகான பெண். எந்தக்காரணங்களாலும் அவளை எவரும் நிராகரிக்க முடியாதவள். வட பழனி கோவிலில் மிகச் சொற்பமானவர்கள் மத்தியில் திருமணம் நடந்தது.

***

வசந்தன், மெல்பேன் திரும்பியதும், மறு நாள் விவியனுடன் மெல்பேன் நகரிலுள்ள உணவகத்தில் உணவருந்தியபின்பு அவளை வாகனத்தில் மீண்டும் விவியனது வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

வீட்டில் விவியனை நெருங்கிக் கட்டிப்பிடித்து முத்தமிட முனைந்தபோது அவளது இடது கையின் ஐந்து விரல்கள் அவனது உதடுகளை 'உஸ்' என்றபடி மறைத்தன. அவளது வலது கை, அவனது கையிலுள்ள மோதிரத்தைப் பிடித்து அவனது கண்ணெதிரே உயர்த்தி சிரித்துவிட்டு

'உனது உதடுகளை ராதாவிற்காக ஈரமாக வைத்திரு' என்றாள்.

நெஞ்சில் அஸ்திரமாகத் தைத்த அவளது வார்த்தைகள் அவனை நிலைகுலையச் செய்தது. விவியனை விட்டு விலகி அருகிலுள்ள சோபாவில் வீழ்ந்தான்.

வீழ்ந்தவன் மீது தொடர்ந்து வார்த்தைகளை விவியன்,அர்ச்சுன பாணங்களாகத் தொடுத்தாள்.

'நான் உன்னைக் கேரளாவில் சந்தித்தபோது நீ பிரம்மச்சாரியாக இருந்தாய். அப்பொழுது நீயும் நானும் ஒன்றாக உறவு கொண்டபோது எம்மிடம் ஒரு நியாயம் இருந்தது. இப்பொழுது திருமணமாகியவன் என்பதால் நியாயமற்ற நிலை ஏற்பட்டுள்ளது. ராதா தனக்கு மட்டுமே நீ உரியவன் என நம்பியிருப்பாள். அதுதான் பெண்களது இயல்பு. அந்த நம்பிக்கையை நான் கலைக்கக்கூடாது' என்றாள்.

அவளது கருத்துகளில் உள்ள நியாயங்கள் புரிந்தாலும் தலைக்கேறியிருந்த காம உணர்வின் அழுத்தத்தில் தலைகுனிந்தபடி மவுனமாக இருந்தான்.

விவியன் தனது நியாயங்களைத் தொடர்ந்தாள்॰

'பதினைந்து வருடங்களுக்கு முன்பு எனது கணவன் பிரான்சிஸ் தனது வேலை செய்யுமிடத்தில் ஒரு பெண்ணிடம் தொடர்பாக இருந்தது தெரியவந்ததால் நான் அவனை விட்டுப் பிரிந்தேன். அப்பொழுது எனது மகனுக்கு பதின்மூன்று வயது. மகனுக்காகவாவது பிரான்சிஸை மன்னிக்கலாம் என நான் நினைக்கவில்லை. நான் வெறுத்த அதே விடயத்தை இப்பொழுது நீ செய்ய நான் அனுமதிக்க முடியாது. நீ என்னை நேசித்தால் என்னிடமிருந்து விலகிவிடு. அது உனக்கும் நல்லது...

எனக்கும் நல்லது' என்றாள் உறுதியாக.

விவியனிடத்தில் மேலும் பேசி பிரயோசனமில்லை என உணர்ந்த வசந்தன் அங்கிருந்து வெளியேறினான்.

விவியன் மூட்டிய காமத் தீ அவனைச் சுட்டது. காமம் ஒரு நோய் என்பது உண்மையே. என்றும் காமம் அவனுள் இருந்தபோதிலும் அது சாம்பலின் மறைவில் தகித்தபடியிருந்தது. பாரம்பரியமான கட்டுப்பாடு, சமூக ஒழுக்கம் என்பன போர்வையாக இருந்தது. ஆனால் ஆலப்புழா கட்டு வள்ளத்தில் விவியனது அணைப்பு எரிபொருளைச் கலந்து போர்வையை எரித்துவிட்டது.

அடுத்த வருடத்தில் வந்த வலன்ரைன் நாளொன்றின் எதிர்பார்ப்புகள் அதிகமில்லாதபோதும், குறைந்த பட்சமாக அவளோடு பேசவிரும்பி வசந்தன் அவளது வீட்டின் கதவைத் தட்டியபோது, கதவைத் திறக்க மறுத்துவிட்டாள். தொலைப்பேசியில் எடுத்து 'உனக்காக பூச்செண்டு கொண்டு வந்தேன் அதையாவது வாங்கிக்கொள். வேறு எதுவும் தேவையில்லை ' என்றான்

'அந்தப் பூச்செண்டையும் எடுத்துச் செல். உனது நினைவு எனக்கு வரக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன் தயவு செய்து என்னைவிடு. நீ உள்ளே வந்தாலோ பூசெண்டைக் கண்டாலோ எனது இதயமும் தடுமாறும். அதுவும் இன்று நீ வந்தது நல்லதல்ல' என்று கூறி

தொலைபேசியை துண்டித்தாள்.

முப்பத்தைந்து டாலர்கள் கொடுத்து வாங்கிய சிவப்பு ரோஜாமலர் செண்டை அவளது வீட்டிற்கு வெளியே இருந்த குப்பைக் கூடையில் போட்டுவிட்டு, காரில ஏறிய வசந்தன் நேரடியாக தெற்கு மெல்பேனிலுள்ள விபசார விடுதிக்குச் சென்றான். வாழ்வில் அதுவே முதல் முறையாகவும், அங்கிருந்து வெளியேறும்போது இதுவே கடைசியாக இருக்கவேண்டும் என உறுதியெடுத்தான்.

அதன் பின்பு இருவருக்கும் எந்த தொடர்புமில்லை.

மூன்று மாதங்களில் ராதா மெல்பேன் வந்து இறங்கிய பின்பாக, குழந்தைகளின் படிப்பு, வீடு - அதற்கான கடன் எனப் பல அத்தியாயங்கள் தொடர்ந்து சமுத்திரத்தின் எதிர்கரையாக விரிந்தன. விவியனின் நினைவுகள் இடையிடையே நெஞ்சத்தின் வந்து குளத்தில் எறிந்த கல்லாக குமிழிகளை ஏற்படுத்தியபோதிலும், யாழ்ப்பாணத்தில் வசித்த வீடு, கொழும்பில் படித்த கல்லூரி, பழகிய நண்பர்கள் என்ற தரிசனங்கள் வேகமாக ஓடும் வாகனத்தில் வந்து மறையும் காட்சிகளாக பின்னோக்கி சென்றன.

கிட்டத்தட்ட இருபது வருடங்கள் பின்பாக முகநூல் வந்தபோது, ஒருநாள் விவியன் நினைவு வந்தபோது, முகநூலில் இருக்கிறாளா எனத் தட்டி பார்த்தபோது பூங்கா ஒன்றில் எடுத்த படத்தில், முற்றாக நரைத்த தலையுடன், சிறிது உடல் பருமனாக இருந்தபோதும், முகத்தோற்றத்தில் மாற்றமற்று வெள்ளை பொக்சர் நாயுடன் இருப்பது தெரிந்தது. அதில் அவளது ஓவியக் கண்காட்சி, சுற்றுச் சூழல், மனித உரிமை என்ற பதிவுகள் இருந்தன.

ஆலாப்புழாயில் கட்டு வள்ளத்தில் செல்லும்போது உடலுறவு கொண்டபின்பு தென் ஆபிரிக்காவின் நிற வேறுபாடுகளையும், பாலத்தீன மக்களின் துன்பத்தையும் பற்றி தெளிந்த உணர்வுடன் பேசினாள். விவியன் பேசிய விடயங்கள் என்ன என்பது புரிந்தாலும் அந்த நேரத்தில் ஏன் பேசுகிறாள் எனமனத்துள் வசந்தன் நினைத்தான். அவளுக்கு அதைச் சொல்லவில்லை. அவளது அனுபவங்கள் வசந்தனுக்கு இல்லை என்பதும், அன்று அவளது வார்த்தைகளை வேத மந்திரங்கள் புரியாதபோதும் தொடர்ச்சியாக அமைதியாக கேட்கும் பக்தனாக அன்று சிவராத்திரி அனுஷ்டித்தான். அந்த பத்து ராத்திரிகளும் மறக்க முடியாதவை.

குறைந்த பட்சம் அவளுடன் முகநூலிலாவது தொடர்பு கொள்வோம் என்ற ஆசையில் அவளுக்கு முகநூல் நட்பு அழைப்பு விட்டான் ஆனால் பதில் கிடைக்கவில்லை. ஆனால் அவன், அவளது பதிவுகளை சில நேரத்தில் பார்ப்பதுண்டு.

அவளது நினைவுகள் வந்தாலும், பல காலங்கள் பார்க்காது இருந்துவிட்டு இன்று பார்த்தபோது அவளது இறப்பு தெரிந்தது.

மரணமானவர்களது நட்பைத் தடைசெய்யும் வசந்தன், இன்று விவியனை பின்தொடர்வதற்கான பதிவைச் செய்துவிட்டு, அவளது புதிய பதிவுகள் இனி முகநூலில் வராது போனாலும் என்னுள் தொடரும் என மனத்தில் நினைத்தபடி படுக்கை அறையை விட்டு வெளியே வந்தான்.

'காலை உணவை விரைவில் முடித்தால், இன்று ஞாயிற்றுக்கிழமை மார்கட் போவோமா?' என்றாள் எதிரே வந்த ராதா.

ராதாவை, கண்ணன் திருமணம் செய்யவில்லை ஆனால் எனக்கு அந்த விடயத்தில் அதிஸ்டமோ!

'ராதா, இன்று என்னை மன்னிக்கவேண்டும் நான் படிக்கும்போது மூன்று வருடங்கள் ஒரு வீட்டில் நண்பர்களுடன் இருந்தேன். 83 கலவர நேரத்தில் எங்களை ஆதரித்து உதவியாக இருந்த அந்த வீட்டின் உரிமையாளர் விவியன் மரணமாகிவிட்டாள். அவளது உணவைப் பலமுறை உண்டிருக்கிறேன். எப்போது, எப்படி மரணமடைந்தாள் எனத் தெரியாது. கொரோனா காரணமாக இருக்கலாம். இன்று அவளது சமாதிக்கு நான் சென்று மலர் வளையம் வைத்தால் நல்லது என நினைக்கிறேன்' என்றான்.

'வழக்கமாக சென்ரிமன்ரல் இல்லாத மனிதராகிய நீங்களா? நானும் வரவேண்டுமா?'

'நான் மட்டும் போகிறேன். எனக்கான கடமையாக இதை நினைக்கிறேன். உனக்கேன் தேவை இல்லாத அலைச்சல்' என்று சொல்லிவிட்டு குளிப்பறை நோக்கிச் சென்றான் வசந்தன். அ



# முள்ளிவாய்க்காலுக்குள் ஒரு முட்டாள் எறிந்த கல்!

புலன் பெயர்ந்த தமிழர்கள் குழு ஒன்று சிங்கள பௌத்த குருமார் குழு ஒன்றுடன் நேபாளத்தில் சந்தித்துக் கலந்துரையாடி, இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக முன்மொழிவு ஒன்றை, இமாலயப் பிரகடனம் என்ற பெயரில் முன்வைத்திருக்கின்றது. அத்துடன் இலங்கையின் சகல தரப்பு அரசியல்வாதிகளையும் சந்தித்து அந்த முன்மொழிவின் அடிப்படையிலான தீர்வை அமுலாக்குவதற்கான ஆதரவைப் பெற முனைந்திருக்கிறது.

இது யாழ்ப்பாணிகள் சம்பந்தப்பட்ட விவகாரம். எல்லாரும் இந்த நகரத்தின் தேசிக்காய் தலையர்கள்.

‘என்னை விட்டால், மணியா தீர்வு எடுப்பன்!’ என்று நம்புகிற...!

அது ‘திருகோணமலையை அமெரிக்காவுக்கு கொடுப்பது’ முதல், ‘கனடாவில் ஆயிரம் கார் பவனி நடத்தி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பது’ வரைக்கும்!

இந்த அறிவாளிகள் எல்லாம் ஒரு மனதான முடிவுக்கு வர வேண்டும் என்றால், இவர்களுக்குத் தலைவனாக வருகிறவன் கையில் துப்பாக்கியை வைத்துக் கொண்டு, வாயைத் திறந்தால் கேட்டுக் கேள்வி இல்லாமல் மண்டையில் போடுகிறவனாகத் தான் இருக்க வேண்டும்.

இவர்களை எல்லாம் கதைக்க விட்டிருந்தால், அவர் தேசிக்காய் தலையராகி இருக்க முடியுமா? அவரே முடியைப் பிய்த்துக் கொண்டு தனக்கே மண்டையில் போட்டிருப்பார்!

வழமை போல, இந்த முயற்சிக்கு முட்டுக் கொடுக்கிறவர்கள் ஒரு புறம். மறுபுறத்தில் இது ‘துரோகம்’ என்றபடி, ஈழக்கனவோடு இன்றைக்கும் ஒரு கூட்டம்.

இவர்கள் எல்லாரும் இப்போது காண முயற்சிக்கின்ற தீர்வு என்பது அதிக பட்சம், 13ம் திருத்தச் சட்டம். அந்தத் திருத்தத்தை இந்திய அழுத்தத்தோடு அரசியலமைப்பில் அமுலாக்கச் சந்தர்ப்பம் வந்த போது, அதைச் சிதைப்பதற்காக இந்திய இராணுவத்தோடு ஒரு முட்டாள் தொடக்கிய போர் எங்கே போய் முடிந்தது என்று எல்லாருக்கும் தெரியும்.

**ஜோர்ஜ் இ**

ஆனால், அந்தத் தீர்வை நாசமாக்கிய அந்தப் போரை வீரமாகக் கொண்டாடியவர்கள் தான், ‘நான்காவது இராணுவத்தை அடிச்சுக் கலைச்சு, அடிச்சுப் பறிக்கப் போறார்’ என்று அவரைத் தேசியத் தலைவர் ஆக்கியவர்கள் தான், சமாதானப் பேச்சுவார்த்தையின் போது, ‘ஆணையிடுங்கள் தலைவா, போருக்குக் காத்திருக்கிறோம்’ என்று ஊர்வலம் போன முட்டாள்கள் தான், இன்றைக்கு அந்தத் தீர்வையாவது (வாங்கித்) தாருங்கள் என்று மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதெல்லாம் எனக்கு ‘அப்பவே சொன்னேன், கேட்டியா?’ மோமன்டுகள்!

புலிகள் கோலோச்சிக் கொண்டிருந்த காலத்தில், புலிகளின் வீரசாகச விளையாட்டுக்களில் புல்லரித்துப் போயிருந்த முழு யாழ்ப்பாணிச் சமூகமும், ‘அண்ணை அடிச்சுப் பறிக்கப் போறார்’ என்று கனவு கண்டு கொண்டிருந்தது. அதற்காகப் பணம் திரட்டுவதற்காக சர்வதேச அளவில் புலிகள் பல நாடுகளில் பல்வேறு பெயர்களில் அமைப்புகளை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் அகதிகள்

**கொலைகாரர்களுக்கு அயோக்கிய ர்கள் தானே நண்பர்களாக இருக்க முடியும்?**

**புலிகளோடு ஒட்டிக் கொண்டால் பிரமுகர்கள் ஆகலாம், 'நாங்களும் ஈழம், இன அழிப்பு' என்று கோஷம் போட்டால், நாங்கள் தேர்தலில் நிற்கும் போது, இந்த முட்டாள் கூட்டம் வாக்களிக்கும் என்று நம்பிய சகல அயோக்கியர்களின் இறுதிப் புகலிடங்களாகத் தான் இந்த புலிகளின் வால்களான தமிழர் அமைப்புகள் இருந்தன.**

மத்தியில், இந்த அமைப்புகளில் முக்கியமானதான 'புனர்வாழ்வுக் கழகம்' என்ற பெயரில் சேர்க்கப்பட்ட பணம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்காகப் பயன்படுத்தியதாக எந்த வரலாறும் இல்லை. ஆயுதக் கொள்வனவுக்காகப் பணம் சேர்த்த உண்டியல்காரார்கள், அதை எப்படி எல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டார்கள், பெரும் நேர்மையாளர்கள் என்று புலிகளால் புகழப்பட்ட இந்த உண்டியல்காரார்கள் எப்படி அதே புலிகளால் பணத்தை மோசடி செய்தார்கள் என்று நீக்கப்பட்டார்கள் என்பதை ஜேர்மனி முதல் கனடா வரைக்கும் கண்டது பற்றி தாயகம் வெளிவந்த காலத்திலேயே முப்பது வருடங்களுக்கு முன்னால் எழுதியிருக்கிறேன்.

அங்கே புலிகள் தமிழ் மக்களிடம் வரி என்ற பெயரில் எல்லைச் சோதனை முகாம்களில் உருவிக் கொண்ட பணம் தேவைக்கதிகமான அளவில் இருந்ததால், 'ஊருக்கு வா, கவனிக்கிறம்' என்ற மிரட்டலோடு சேர்க்கப்பட்ட வெளிநாட்டுப்பணம், ஒரு கட்டத்தில் 'இங்கே அனுப்ப வேண்டாம்' என்று மேலிடத்தால் சொல்லப்பட்டு, இங்கேயே பினாமிகளின் பெயரில் முதலீடு செய்யப்பட்டது. அந்த முதலீடுகள் வியாபார நிலையங்கள், கோயில்கள், கட்டடங்கள், கல்வி நிறுவனங்கள், ஊடகங்கள் என்று பட்டியல் நீளும்.

முள்ளிவாய்க்காலோடு அந்தப் பணத்திற்கும், 'தேசிய சொத்துக்களுக்கும்' என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும்.

மிரட்டிப் பணம் சேர்ப்பதற்காகவும், பிரசாரம் செய்வதற்காகவும், முதலீடுகளைக் கவனிப்பதற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட புலிகளின் அடியாட்களைக் கொண்ட இந்த அமைப்புகளை விட வேறு அமைப்புகளும் இருந்தன.

அகதிகளுக்கு முன்பாகவே வந்து சேர்ந்த படித்த யாழ்ப்பாணித் தமிழ் இமிக்கிரண்டுகள் உருவாக்கி வைத்திருந்த 'சங்கங்கள்' பல இருந்தன. பெரும்பாலும் தமிழரசுக்கட்சி, தமிழர் கூட்டணி ஆதரவான அமைப்புகளாக இருந்த இந்தச் சங்கங்களும், புலிகளின் மிரட்டலோடும் ஊடுருவலோடும் 'தேசிய மயமாக்கப்பட்டன'. 'பிச்சை வேண்டாம், புலியைப் பிடி' என்று படித்தவர்கள் சிலர் விலகிக் கொள்ள, புலிகளோடு இருந்து பிழைப்பு நடத்தலாம், தலைவரோடு நெருக்கமாகலாம் என்ற அயோக்கியர்கள் பலர் அந்தச் சங்கங்களிலேயே தொடர்ந்தும் இருந்தார்கள்.

அவர்கள் தமிழர்கள் பிரதிநிதிகள் மாதிரி, அரசாங்கத்திற்கு கதை விட்டு, கிடைத்த பெரும் தொகை அரச உதவிப் பணத்தில் தங்கள் மாமன், மருமகளுக்கு வேலைகளும் கொடுத்து, சொகுசான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். புலிகளுக்கு அது வசதியானதாகவும் இருந்தது. இந்த அயோக்கியர்களை எல்லாம் புலிகள் கண்டிக்கவும் இல்லை. வெளியேற்றவும் இல்லை.

கொலைகாரர்களுக்கு அயோக்கிய ர்கள் தானே நண்பர்களாக இருக்க முடியும்?

புலிகளோடு ஒட்டிக் கொண்டால் பிரமுகர்கள் ஆகலாம், 'நாங்களும் ஈழம், இன அழிப்பு' என்று கோஷம் போட்டால், நாங்கள் தேர்தலில் நிற்கும் போது, இந்த முட்டாள் கூட்டம் வாக்களிக்கும் என்று நம்பிய சகல அயோக்கியர்களின் இறுதிப் புகலிடங்களாகத் தான் இந்த புலிகளின் வால்களான தமிழர் அமைப்புகள் இருந்தன.

இந்த அயோக்கியர்கள் சகலரின் பெயரிலும் புலிகளின் பினாமிச் சொத்துக்கள் வாங்கப்பட்டன. இதெல்லாம் அந்த நேரமே தாயகத்தில் நாங்கள் எழுதியவை.

தங்களது பணம் சேர்க்கும் அடியாட்களான காடையர்களைக் கொண்டு அகதித் தமிழர்களை மிரட்டலாம். ஆனால், அவர்களை வைத்துக் கொண்டு அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல் வாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியாது. அதற்கு கொஞ்சமாவது படித்தவர்கள் தேவை.

இப்படி, புலிகளின் போராட்டத்திற்கு சர்வதேச ஆதரவைத் திரட்டலாம் என்று புதுச்சங்கங்கள் புலிகளின் ஆசியுடனும் அனுசரணையுடனும் ஆரம்பிக்கப்பட்டன. அதில் தங்களைப் படித்தவர்களாக நினைத்துக் கொண்டவர்கள் சேர்ந்து கொண்டார்கள். வன்னிக்குப் போனால் சிறப்பு வரவேற்புக் கிடைக்கும் என்ற பலத்த நம்பிக்கை. இவர்களில் பலரின் பெயர்களிலும் 'தேசியச் சொத்துக்கள்' உண்டு.

இப்படித் தோன்றிய, புலிகள் தோற்றுவித்த பல்வேறு சங்கங்களும், 'நாங்கள் எங்கட ஒற்றுமையைக் காட்ட வேணும், அப்ப தான் சர்வதேசம் நாங்கள் சொல்லிறதைக் கேட்கும்' என்று சங்கங்களுக்கு எல்லாம் சங்கம் அமைக்கத் தொடங்கினார்கள்.

இவை கனடாவில் கனடியத் தமிழ்க் காங்கிரஸ், சம்மேளனம் என்றும், ஐரோப்பாவில் பூகோள தமிழர் பேரவை என்ற பெயரிலும் என பல்வேறு 'கூட்டுறவுவே நாட்டுயர்வுச்' சங்கங்களாக உருவெடுத்தன.

பூகோள தமிழர் பேரவை அமைப்பின் முக்கியஸ்தராகக்

**புலிகள் அதிகாரத்தில் இருந்ததைப் பயன்படுத்தி, ஒரு சாத்தியமான தீர்வு ஒன்றை முன்னெடுக்கும் எந்த நோக்கமும் இல்லாமல், இறுதித் தீர்வு என்று நம்பிக் கொண்டிருந்த ஈழம் என்ற கனவுக்கு சர்வதேசம் ஆதரவு தெரிவிக்க வேண்டும், அதை அடிச்சுப் பறிக்க, மல்யுத்த இரட்டையர் குழு மாதிரி, இலங்கை அரசாங்கத்தை பின் பக்கம் இருந்து இந்த சர்வதேசம் இறுக்கிப் பிடிக்க வேண்டும் என்ற ரீதியில் தான் இவர்கள் சர்வதேசத்திற்கு கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள்.**

**சர்வதேசம் வழங்கும் எந்தத் தீர்வும் பிரபாகரன் என்ற வாழ்நாள் சர்வாதிகாரிக்கான அங்கீகாரமாக இல்லாமல், ஒரு ஜனநாயக தேர்தல் அடிப்படையிலான தீர்வாகத் தான் இருக்கும் என்ற அடிப்படை உண்மை கூட இவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.**

கத்தோலிக்க குருவானவரான எஸ்.ஜே.இம்மானுவல் அடிகளார் இருந்தார். அவர் பிரபாகரன் பைபிளின் மோசஸ் மாதிரி, ஆனையிறவுக் கடலைப் பிரித்து வாக்களிக்கப்பட்ட பூமிக்கு கூட்டிக் கொண்டு போவார் என்று நம்பிக் கொண்டிருந்தவர்.

இந்த அமைப்புகள் ஒருபோதுமே இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகளாக இல்லாமல், புலிகளின் பினாமி அமைப்புகளாகவும், ஊதுகுழல்களாகவுமே இருந்தன.

'அண்ணை அடிச்சுப் பறிப்பார்' என்று மற்ற உண்டியல் காடையர்கள் யாழ்ப்பாணிகளுக்குச் சொல்லிக் கொண்டிருந்ததை, இவர்கள் சர்வதேசத்திற்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அவ்வளவு தான்.

மற்றும்படி இவர்கள் புலன் பெயர் மக்களால் எந்த விதத்திலும் தெரிவு செய்யப்பட்டவர்களோ, அவர்களின் பிரதிநிதிகளோ இல்லை.

புலிகள் அதிகாரத்தில் இருந்ததைப் பயன்படுத்தி, ஒரு சாத்தியமான தீர்வு ஒன்றை முன்னெடுக்கும் எந்த நோக்கமும் இல்லாமல், இறுதித் தீர்வு என்று நம்பிக் கொண்டிருந்த ஈழம் என்ற கனவுக்கு சர்வதேசம் ஆதரவு தெரிவிக்க வேண்டும், அதை அடிச்சுப் பறிக்க, மல்யுத்த இரட்டையர் குழு மாதிரி, இலங்கை அரசாங்கத்தை பின் பக்கம் இருந்து இந்த சர்வதேசம் இறுக்கிப் பிடிக்க வேண்டும் என்ற ரீதியில் தான் இவர்கள் சர்வதேசத்திற்கு கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

சர்வதேசம் வழங்கும் எந்தத் தீர்வும் பிரபாகரன் என்ற வாழ்நாள் சர்வாதிகாரிக்கான அங்கீகாரமாக இல்லாமல், ஒரு ஜனநாயக தேர்தல் அடிப்படையிலான தீர்வாகத் தான் இருக்கும் என்ற அடிப்படை உண்மை கூட இவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

பிரபாகரன் என்ற முட்டாள் ஆயுட்காலச் சர்வாதிகாரியின் கீழ் தங்கள் யாழ்ப்பாணி நலன்களைப் பாதுகாக்க முடியும் என்று தான் இந்த மெத்தப்படித்த யாழ்ப்பாணிகள் நம்பிக் கொண்டிருந்தார்கள். இலங்கையின் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கு ஜனநாயக அடிப்படையிலான தீர்வு என்பது பற்றி இவர்கள் ஒருபோதுமே அக்கறைப்பட்டதும் கிடையாது.

தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடிய புலிகளின் எந்த நடவடிக்கையையும் இவர்கள் விமர்சிக்கவில்லை. அவர்களின் அரசியல் தலைவர்களின் படுகொலைகளையும், சுய இன அழிப்பையும், தீர்வுகள் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களைச் சிதறடித்ததையும் இவர்கள் சாதாரண யாழ்ப்பாணிகள் போலவே, ஆதரித்துக் கொண்டிருந்தார்கள். புத்திசாலித்தனமான விளக்கங்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

வெளிநாட்டில் இருந்தபடியே, வெற்றி அல்லது வீரமரணம்! என்பது தான் இவர்களின் கோஷமாக இருந்தது.

இவர்களுடைய பகல் கனவு, முள்ளிவாய்க்காலில் உச்சந்தலை அடியோடு கலைந்து போய், சுயநினைவுக்கு வர வைத்தது. அதன் பின்னாக, இலங்கைத் தமிழ் அரசியல் என்பது கசநந கடிச யடட என்ற நிலைக்கு வந்து விட்டது.

அறிவாளிகள் மட்டுமே நிறைந்த யாழ்ப்பாணிகளுக்குள் தலையாரிகளின் எண்ணிக்கைக்கு கேட்கவா வேண்டும்?

வெளிநாட்டில் புலிகளின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் இலங்கையில் அரசியலில் ஈடுபடுபவர்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து தாங்கள் சொல்கிறபடி அரசியல் செய்ய வைக்க முடியும் என்று நம்பினார்கள்.

இதில் உண்டியல் பொறுப்பாளர்களாக இருந்தவர்கள் கூட்டமைப்பினரிடம் இந்த முயற்சியை மேற்கொண்டபோது, அந்தப் பருப்பு கூட்டமைப்பினரிடம் அவியவில்லை. இதனால், வாய்வெட்டுக் குழுக்களான கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் மற்றும் முன்னாள் புலிப் பெயரை வைத்து அரசியல் செய்ய நினைத்த அனந்தி போன்றவர்களைக் களமிறக்க முயன்றார்கள். அந்த முயற்சிகள் வெற்றி பெற்று அவர்களைப் பாராளுமன்றம் அனுப்பிய பின்னாலும், எந்த நிலையிலும் மாற்றம் ஏற்படவில்லை. இன்றைக்கு அவர்கள் கூட, கிட்டத்தட்ட அவர்களின் தீவிர ஆதரவாளர்களைக் கடந்து, மற்றப் புலி ஆதரவாளர்களால் துரோகிப் பட்டங்களுடன் முக்தி அடைந்திருக்கிறார்கள்.

இதில் கனடியத் தமிழ்க் காங்கிரஸ் போன்றன சுமந்திரன்

தலைமையிலான தமிழரசு அணியை வைத்து தங்கள் அரசியலை முன்னெடுக்கலாம் என்று நம்பியிருந்தனர்.

யுத்த காலத்தில் புலிகளின் ஆதரவு அமைப்புகள் என்று பல வெளிநாட்டு அமைப்புகளை இலங்கை அரசு தடை செய்திருந்தது.

பின்னர் ஆட்சி மாறி ரணில் ஆட்சிக்கு வந்த பின்னால், கனடியத் தமிழ் காங்கிரஸ், பூகோள தமிழர் பேரவை என்பன மீதான தடை நீக்கப்பட்டது. பிறகென்ன? உடனடியாகவே, தடை நீக்கப்படாத மற்ற அமைப்புகள் அவர்களைத் துரோகிகள் ஆக்கி விட்டனர்.

தடை நீக்கப்பட்டதும், பூகோள தமிழர் பேரவை அமைப்பின் முக்கியஸ்தரான எஸ். ஜே.இம்மானுவேல் அடிகளார் இலங்கை சென்று சந்திரிகா முதலான அரசியல் தலைவர்களைச் சந்தித்த பின்னால், தற்போது யாழ்ப்பாணத்தில் இளைப்பாறிக் கொண்டுள்ளார்.

இப்போது அதே பூகோள தமிழர் பேரவையும், கனடியத் தமிழ்க் காங்கிரசும் சிங்களக் குருமாருடன் கருத்துப் பரிமாறி வெளியிட்ட இமாலயப் பிரகடனம் வழமை போல, இனப்பிரச்சனையை வைத்துப் பிழைப்பு நடத்தும் சகல தரப்பினருக்குள்ளும் பெரும் சண்டையை மூட்டி விட்டிருக்கிறது.

இந்த அமைப்பினர் தங்களுடைய பிரதிநிதிகள் இல்லை என்று பல புலன் பெயர்ந்த அமைப்புகள் அறிக்கை விட்டிருக்கின்றன. இலங்கை அரசியல்வாதிகளும் அதற்குப் பெரிய வரவேற்புக் கொடுத்த மாதிரியும் இல்லை.

மறுபுறத்தில் இதற்கு முட்டுக்கொடுக்க பல புலன்பெயர் அரசியல் புல நாய்வாலர்களும், கோமாளி அல்லக்கைகளும் ஆரம்பித்திருக்கிறார்கள். அதில் பல யாழ்ப்பாணிக் கனடிய மந்திரி, பிரதானிகளும் அடக்கம்.

கனடியத் தமிழ்க் காங்கிரஸ் என்கிற அமைப்பே, கனடியப் பாராளுமன்றத் தமிழ் உறுப்பினரும் அமைச்சருமான கரி ஆனந்தசங்கரியின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கனடியத் தமிழர்கள் மத்தியில் பரவலாகக் கூறப்பட்டாலும், அவரும் திடீரென்று கிளம்பி, இந்தப் பேச்சுவார்த்தை முயற்சியை கடுமையாகக் கண்டனம் செய்திருக்கிறார். அதற்கான காரணம், கனடிய ரமில்ஸ் மத்தியில் இதற்குப் பரவலான எதிர்ப்பு இருப்பது போலக் காணப்படுவதால், தற்போது செல்வாக்கிழந்து இருக்கும் லிபரல் கட்சியினருக்கு வெற்றி வாய்ப்பு இல்லாதிருப்பதால், தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, கனடியன் ரமில்ஸைக் குஷிப்படுத்துவதற்கான முயற்சியாக இது இருக்கக் கூடும்.

**அடே, ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்ட மாதிரி, நீங்கள் இன்றைக்கு வானத்திற்கும் பூமிக்கும் குதிக்கிறீர்களே, இவர்கள் என்ன வானத்தில் இருந்தாடா இறங்கி வந்தார்கள்?**

**இதே அயோக்கியர்களைத் தான் நீங்கள் இத்தனை நாளும் ‘தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள் என்று தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொண்டாடிக் கொண்டிருந்தீர்கள்.**

**இன்றைக்கு உங்களைத் தூண்டி விட்டிருக்கிற அயோக்கியர்கள் மட்டும் ஏதோ புனிதர்களா? அவர்களும் இது தங்கள் பிழைப்பில் மண் போடப் போகிறது என்பதற்காகத் தானே இப்படித் துள்ளிக் குதிக்கிறார்கள்?**

**இப்படி, இன்றைக்கு இந்த முட்டாள்கள் எல்லாம், என்ன செய்வது என்று தெரியாமல், ஆளையாள் துரோகி என்று கொண்டிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் கட்டி மண்டையில் போட, யாழ்ப்பாணத்தில் இருக்கும் மின்கம்பங்கள் போதாது.**

ஒன்ராறியோ மாகாண அரசியல் ஈழப் பிரதிநிதியாக இருக்கும் லோகன் கணபதி மட்டுமன்றி, தமிழர்களால் ஒன்ராறியோ முதல்வராகவதற்கு முட்டுக்கொடுக்கப்பட்டு, தற்போது சீக்கியர்கள் அதிகம் வாழும் பிராம்ப்டன் நகரின் மேயராக இருக்கும் பற்றிக் பிரவுணும், இரத்தத்தின் ஈரம் காய முன் இலக்கியச் சந்திப்பா? என்ற மாதிரி, இனப்படுகொலைச் சூத்திர தாரிகளுடன் படத்திற்கு போஸா? என்று தொடங்கியிருக்கிறார்கள்.

ஆனால், தமிழ் காங்கிரசிற்கு முட்டுக் கொடுப்போர் சங்கத்தினர் தற்போது கரி ஆனந்தசங்கரிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிக் கொண்டிருப்பதை பேஸ்புக்கில் காணக் கூடியதாக இருக்கிறது. இதில் முன்னாள் புலி சுவிஸ் பொறுப்பாளர், முன்பு பிரபாகரன் இருந்த காலத்தில் புலி வாலில் தொங்கி கூட்டமைப்பினருக்கு மரணதண்டனை கொடுத்துத் திரிந்து, தற்போது தமிழரசே தமிழர் தீர்வு என்று கொடுந்தமிழில் துன்பம் தரும் தங்கவேலு, அதை விட, போகிற இடமெல்லாம் வால் பிடித்துத் தற்போது புலிவாலில் தொங்கித் திரியும் அங்கிடுதத்திக் கோமாளி அல்லக்கைகள் என்று பலரும் இந்தத் திட்டத்திற்கு எதிரானோரைக் கழுவி ஊற்றுவதில் முனைப்பாக இருக்கின்றனர்.

மறுபக்கத்தில், காற்றடிக்கும் திசை பார்த்து பிழைப்பு நடத்தும் ‘ஊடகவியலாளர்கள்’ உட்பட, பலர் இந்த சமாதான முயற்சியில் ஈடுபடுவோரை துவைத்துக் காயப் போடுகிறார்கள்.

அடே, ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்ட மாதிரி, நீங்கள் இன்றைக்கு வானத்திற்கும் பூமிக்கும் குதிக்கிறீர்களே, இவர்கள் என்ன வானத்தில் இருந்தாடா இறங்கி வந்தார்கள்? இதே அயோக்கியர்களைத் தான் நீங்கள் இத்தனை நாளும் ‘தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள் என்று தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொண்டாடிக் கொண்டிருந்தீர்கள். இன்றைக்கு உங்களைத் தூண்டி விட்டிருக்கிற

அயோக்கியர்கள் மட்டும் ஏதோ புனிதர்களா? அவர்களும் இது தங்கள் பிழைப்பில் மண் போடப் போகிறது என்பதற்காகத் தானே இப்படித் துள்ளிக் குதிக்கிறார்கள்?

இப்படி, இன்றைக்கு இந்த முட்டாள்கள் எல்லாம், என்ன செய்வது என்று தெரியாமல், ஆளையாள் துரோகி என்று கொண்டிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் கட்டி மண்டையில் போட, யாழ்ப்பாணத்தில் இருக்கும் மின்கம்பங்கள் போதாது.

இது முன்கதைச் சுருக்கம்.

யாழ்ப்பாணி ஈழத்தமிழர்களுக்கு தலைவர்கள், பிரதிநிதிகள் எல்லாம் எக்கச்சக்கம். இந்த படிச்ச மண்டைக்காய்களில் யாரும் தலைவராகலாம். பிரதிநிதியாகலாம்.

முன்பு தான் துப்பாக்கி வைத்திருக்க வேண்டும் என்பது முன்நிபந்தனையாக இருந்தது. இப்போது அந்தத் தலையிடியும் இல்லை.

அதற்கு எல்லாம் கட்சி பதிவு செய்ய வேண்டிய கட்டாயமும் இல்லை. ஒரு லெட்டர்ஹெட்டும் பேஸ்புக் கணக்கும் போதும்.

சர்வதேசத் தலைமையகம், செயலகம் என்று, கையெழுத்து வைத்தது யார் என்ற கேள்வி கூட இல்லாமல், அறிக்கை விடலாம். மாவீரர் பட்டமும் கொடுக்கலாம்.

கேட்க இந்த சமூகத்தில் யாரும் இல்லை. அதைக் கொண்டா(டோ)ட ஊளையிடலாளர்கள், புல நாய்வாலர்கள் அதிகம். அதை வைத்து ஆராய்ச்சி செய்து கட்டுரை, யூடியூப் என்று...!

நான் தான் சங்கிலியனின் வாரிசு, நான் தான் பிரபாகரனின் வாரிசு என்றாலும், 'தேசிக்காயர் எனக்கு மட்டும் தான் கனவில் வந்த காட்சி தந்தார்' என்றாலும், இந்தக் கும்பலுக்கு எல்லாமே குஷியும், வேடிக்கையும் தான்!

'துப்பாக்கி வைத்திருந்த எட்டாம் வகுப்புப் படித்த பிரபாகரன் யாழ்ப்பாணிகளுக்கு மட்டுமல்லாமல், உலகத்திற்கே தேசியத் தலைவராகவில்லையா? நமக்கென்ன குறைச்சல்' என்பது தான் இவர்களின் நிலைப்பாடு

இந்தப் புலன் பெயர் அமைப்புகள் என்பன புலிவால் அமைப்புகளாகத் தான் இருந்தன, புலிகளால் நியமிக்கப்பட்டவர்களே அந்த அமைப்புகளில் இருந்தார்களே அன்றி, இது தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டதோ, அவர்களின் நலன்களில் அக்கறை கொண்டவர்களைக் கொண்டவையோ அல்ல. படித்தவர்கள் என்பதால், இங்குள்ள அரசியல்வாதிகளை அண்டி நெருக்கத்தை உண்டாக்கிக் கொள்ள, அந்த அரசியல்வாதிகளும் இவர்களைச் சமூகத் தலைவர்கள் என்று நினைத்து, தமிழர்களின் வாக்குகளைப் பெற, வேட்டியும் கட்டி, இனஅழிப்புக் கோஷங்களுக்கு பிற்பாட்டுப் பாடிக் கொண்டிருப்பதுண்டு. அந்த நெருக்கம் கூட, இவர்களில் இங்கே அரசியல் கனவுகளில் இருப்பவர்கள், இந்தத் தமிழர்களைப் பேய்க்காட்டி தங்கள் சுயநலன்களுக்காகப் பயன்படுத்தப்படுத்த உதவியதே அன்றி, அங்குள்ள மக்களுக்கான எந்தத் தீர்வுக்கும் வழி வகுப்பதற்கானதாக இருந்ததில்லை. முடிந்தால், இந்த கனடிய அரசியல்வாதிகளைக் கூட்டிச் சென்று முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்த வைத்தாவது இவர்கள் தங்கள் பிழைப்பை நடத்திக் கொண்டிருந்தார்களே அன்றி, இன்று வரைக்கும் இன அழிப்பு முத்திரையைக் கூட சர்வதேசத்திடம் இருந்த பெற்றுக் கொடுக்க முடிந்ததில்லை.

எந்தத் தீர்வுக்கும் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியாக வேண்டும் என்பது எந்தக் கற்றுக்குட்டிக்கும் தெரிந்த நிலையில், இலங்கையில் இன அழிப்பு நடந்தது, அதை நடத்தியவர்களைக் கழு ஏற்றவேண்டும் என்று சொல்லும் கனடிய அரசியல்வாதிகளுக்கு, அது தெரியாமல் இருந்திருக்குமா?

**எந்தத் தீர்வுக்கும் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியாக வேண்டும் என்பது எந்தக் கற்றுக்குட்டிக்கும் தெரிந்த நிலையில், இலங்கையில் இன அழிப்பு நடந்தது, அதை நடத்தியவர்களைக் கழு ஏற்றவேண்டும் என்று சொல்லும் கனடிய அரசியல்வாதிகளுக்கு, அது தெரியாமல் இருந்திருக்குமா? அவர்களுக்கு என்ன? வேட்டி கட்டி 'நன்றி, வானக்கம்' சொன்னாலே போதும். இந்த அல்லக்கை அயோக்கியர்கள் 'அவர்கள் ஈழம் வாங்கித் தரப் போகிறார்கள்' என்று கதையளப்பார்கள்.**

**அதை நம்பி, இந்த முட்டாள் யாழ்ப்பாணிகள் தங்கள் பொன்னான வாக்குகளை அள்ளி அள்ளிப் போடுவார்கள்.**

அவர்களுக்கு என்ன? வேட்டி கட்டி 'நன்றி, வானக்கம்' சொன்னாலே போதும். இந்த அல்லக்கை அயோக்கியர்கள் 'அவர்கள் ஈழம் வாங்கித் தரப் போகிறார்கள்' என்று கதையளப்பார்கள்.

அதை நம்பி, இந்த முட்டாள் யாழ்ப்பாணிகள் தங்கள் பொன்னான வாக்குகளை அள்ளி அள்ளிப் போடுவார்கள்.

இலங்கை அரசாங்கமும் வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் முதலீடு செய்ய வேண்டும், புலன் பெயர்ந்த தமிழர் அமைப்புகள் அரசியலில் கலந்து கொள்ள வேண்டும் என்று எல்லாம் அடிக்கடி சொல்லிக் கொள்ளும்.

இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று முத்திரை குத்த வேண்டும், அதற்குக் காரணமான மகிந்தவை கழு ஏற்ற வேண்டும் என்று துடிக்கிற புலன் பெயர் யாழ்ப்பாணிகளுக்கு எந்த வகையான அரசியலை நீங்கள் முன்னெடுக்க முடியும்?

இலங்கை அரசோடு பேச்சுவார்த்தை நடத்த முயல்கிற எந்த அமைப்பையும்

துரோகிகளாக முத்திரை குத்தி, கர்ப்பத்திலேயே கருக் கலைக்கப்பட்டு விடும்.

அதையும் விட, மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் தினம் என்றெல்லாம் இங்கே கொத்துரொட்டியும் மட்டன் றோலும் விற்றுச் சம்பாதிக்கிறவர்களுக்கு அங்கே தீர்வு வருவதில் எந்த விருப்போ, உடன்பாடோ கிடையாது. அங்கே இனவாதத்தை ஒரு கொதிநிலையில் வைத்திருப்பதன் மூலமே ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள் எனப்படும் கோமாளித் தரகர்களை வைத்து இங்கே உள்ள முட்டாள் கூட்டத்தைக் கறக்க முடியும்.

அங்கே கொதிநிலையில் வைத்திருப்பதற்காக, உசுப்பேத்தும் பேச்சுக்களைப் பேசுகிற வாய்வெட்டுக் குழுக்களுக்குப் பணம் கொடுத்து, அவர்களைப் பாராளுமன்றம் வரைக்கும் அனுப்பியாயிற்று.

அவர்கள் அடிக்கடி அறிக்கை விடுவார்கள், ஏதோ அடிச்சுப் பறிக்கப் போகிற மாதிரி! எந்தத் தீர்வு முயற்சி வந்தாலும், 'தட்டில் வைத்துத் தரப்படும் தமிழ் ஈழம் தவிர்ந்த வேறு எந்தத் தீர்வையும் வாங்க மாட்டோம். இந்த மண்ணுக்காக தங்கள் இன்னுயிரை ஈந்த மாவீரர்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்றால், அண்ணை அடிச்சுப் பறிக்கப் போய் மண் கவ்வின ஈழம் தான் ஒரே முடிவு' என்று பொங்கி எழுவார்கள்.

வெளிநாடுகளில் இந்த முள்ளிவாய்க்கால், மாவீரர் தின களியாட்ட விழாக்களுக்கான விளம்பரங்களுக்காக இந்த அயோக்கியர் கூட்டத்தில் தங்கியிருக்கும் ஊடக வியலாளர்களும், ஆய்வாளர்களும், அங்கிடுதத்திக் கோமாளி அல்லக்கைகளும் உருட்டுவார்கள்.

உசுப்பேத்தப்பட்ட மந்தைக் கூட்டம் கொத்துரொட்டி வாங்க அள்ளுப்படும்.

இது யுத்தம் முடிந்த காலத்திற்குப் பின்னால் என்ன, அதற்கு முன்பாகவே நடந்து வரும் திருக்கூத்து.

அங்கே ஒரு தீர்வு வந்து நிலைமை சுமுகம் ஆகும் எனில், இந்த ஈனப் பிழைப்பும் இல்லாமல் போகும். இந்த சமூகத்தில் தங்களை புத்திஜீவிகளாகவும், தலைவர்களாகவும் காட்டிக் கொள்ளும் வாய்ப்புகளும் இல்லாமல் போய் விடும்.

ஒரு தடவை பேஸ்புக்கிலும் கேட்டிருக்கிறேன்.

'எங்களுடைய போராட்டம் நியாயமான, இன ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம், அதற்கு ஒரு நியாயம் இருக்கிறது, அதற்கு ஒரு சரியான தீர்வைத் தந்து, சகல இன மக்களையும் சமமாக அங்கீகரிப்பது தான் ஒன்றுபட்ட இலங்கை என்ற நாட்டின் நலனுக்கு உகந்தது' என்று சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா?

ஒரு போதும் இல்லை.

இவர்கள் செய்த பிரசாரங்கள் உசுப்பேத்திய காலங்கள் முதல், போராட்டம் கோவணத்தை உருவிய காலங்கள் வரைக்கும் இந்த முட்டாள் தமிழர்களிடம் பணத்தையும், வாக்குகளையும் பறிப்பதற்கானதாகவே இருந்து வந்திருக்கிறது. ஏஜன்சிக்காரன் முதல் சீட்டுக்காரன் வரைக்கும், ஏன், இந்தியாவிலிருந்து வந்து இங்கே எல்லாம் கடைகளுக்குக் கீழ் வீட்டில் ஜாகை அமைத்து, சனியன் கலைக்கிற சாத்திரிமார் வரைக்கும், 'அண்ணையிட்ட காசைக் குடுத்தாச் சரி, மிச்சத்தைப் பாத்துக் கொள்வார்' என்று தங்களுடைய சுயநலப் பேராசைக்காக முன்பின் தெரியாத எந்த அயோக்கியத் திருடனிடமும் பணத்தை நம்பிக் கொடுக்கத் தயாரான சமூகத்திடம் பணம் பறிப்பது இலகுவானது.

அது கேட்க விரும்பும் பொய்யைச் சொன்னால் போதும்.

போராட்டம் என்பது பணம் பறிப்பதற்கான ஒரே வழியாகி விட்டது. அதில் உறுஞ்சிக் கொழுத்த கூட்டத்திற்கு சிங்கள மக்களுக்குத் தங்கள் போராட்டத்துக்கு ஒரு நியாயம் இருக்கிறது என்று சொல்ல வேண்டிய தேவை எங்கே இருக்கிறது?

பிரச்சனை இருந்தால் தானே, பிழைப்பு நடத்தலாம்.

இலங்கை இனப்பிரச்சனை ஒரு இடியப்பச் சிக்கல்.

யாழ்ப்பாணிகள் நினைப்பது போல, அண்ணையால் அடிச்சுப் பறிக்க முடிந்ததோ, சர்வதேசமோ, இந்தியாவோ வந்திறங்கி பிடிச்சுக் கொடுக்கிறதோ இல்லை.

அல்லது, அவ்வப்போது காலத்துக்கு காலம் இந்த வெளிநாட்டு அயோக்கியர்கள் ஊதிப் பெருப்பிப்பிக்கிற வாய்வெட்டுக் குழுக்கள் வாங்கித் தரப் போவதோ இல்லை.

**ஒரு தடவை பேஸ்புக்கிலும் கேட்டிருக்கிறேன்.**

**'எங்களுடைய போராட்டம் நியாயமான, இன ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம், அதற்கு ஒரு நியாயம் இருக்கிறது, அதற்கு ஒரு சரியான தீர்வைத் தந்து, சகல இன மக்களையும் சமமாக அங்கீகரிப்பது தான் ஒன்றுபட்ட இலங்கை என்ற நாட்டின் நலனுக்கு உகந்தது' என்று சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா?**

**ஒரு போதும் இல்லை.**

**இவர்கள் செய்த பிரசாரங்கள் உசுப்பேத்திய காலங்கள் முதல், போராட்டம் கோவணத்தை உருவிய காலங்கள் வரைக்கும் இந்த முட்டாள் தமிழர்களிடம் பணத்தையும், வாக்குகளையும் பறிப்பதற்கானதாகவே இருந்து வந்திருக்கிறது.**

ஆனால், இந்த முட்டாள் யாழ்ப்பாணிகளுக்கு சாட்சிக்காரன் காலில் விழுவதை விட, சண்டைக்காரன் காலில் விழுந்தால் காரியத்தைச் சாதிக்கலாம் என்ற எளிய உண்மை புரிவதில்லை. இதில் பிழைப்பு நடத்துகிறவர்களுக்கு இந்த சமூகத்திற்கு உண்மை புரியக் கூடாது என்பதில் சுயநலன்கள் இருக்கின்றன.

முதலில் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அரசு தீர்வு கொடுப்பதென்ன, வெறும் பேச்சுவார்த்தையைத் தொடங்கியதுமே, தமிழர்களுக்குத் தனிநாடு கொடுக்கப் போகிறார்கள் என்று எதிர்க்கட்சி கூக்குரல் போடும். ஆட்சியிலும், எதிர்க்கட்சியிலும் எந்தக் கட்சி இருக்கிறது என்பது பிரச்சனை இல்லை.

அன்றைக்கு சந்திரிகா அரசின் தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் வைத்து எரித்தவர்கள் ரணில் விக்கிரமசிங்க கூட்டத்தினர். எதிர்த்தவர்கள் கூட்டமைப்பினர்.

இன்றைக்கு ரணில் தீர்வு தரப் போகிறார் என்றால், மகிந்த தரப்பு கூச்சல் போடும்.

கட்சிகள் எந்தப் பக்கம் போனாலும், இந்தப் பொது இயல்பு மாறுவதில்லை.

எனவே, இரு தரப்பினரிடனும் முதலிலேயே பேச வேண்டும், அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

இதைவிட, இடையில் இருக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள். அவர்களிடம் ஆதரவு பெற வேண்டும்.

இதை விட, இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் பௌத்த பீடங்களின் ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும்.

அதற்குப் பிறகு ஏதோ ஒரு வகையில் தேர்தல் மூலமாக அதற்கான அரசியலமைப்பு மாற்றத்தை உறுதி செய்ய, சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவு வேண்டும்.

இதற்குள் இலங்கை அரசியலில்

**தெருப் பிச்சைக்காரர்களுக்குப் புண் மாறுவதில் விருப்பமில்லை. அவர்களுக்கு உழைத்துப் பிழைப்பதில் ஆர்வமும் இருப்பதில்லை. அது பல பிச்சைக்காரர்களுக்கு சொகுசான வாழ்க்கை.**

**ஏழைகள் எனப்படுவோர் நிலைமை வேறு.**

**இந்தப் பிரச்சனை தீர்வது, தற்போதைய யாழ்ப்பாண அரசியல் தலைமைகளுக்குத் தேவையுமில்லை.**

எந்தக் கட்சியும் பெரும்பான்மைப் பலம் பெற முடியாதபடிக்கும், சிறிய கட்சிகள் பிளாக்மெயில் செய்யும் அளவுக்கும், விகிதாசாரப் பிரதிநிதித்துவம் வழி வகுத்து விட்டிருக்கிறது.

அது எல்லாம் தாண்டித் தான் ஒரு தீர்வைக் கண்டடைந்தாலும், ‘உதுக்கோ எங்கட மாவீரர் உயிரைக் குடுத்தவே?’ என்று, திரும்பவும் யாழ்ப்பாணி தன்னுடைய குண்டுச் சட்டிக் கிணற்றுக்குள் குதிரையோட்டத் தொடங்குவான்.

இவற்றை எல்லாம் மீறி ஒரு தீர்வைக் கண்டடைவது என்பது கடவுளால் கூட முடியாது. இந்த இலட்சணத்தில் ஒரு தீர்வைக் கண்டடைய முடியும் என்று நம்புகிறவர்களைப் பார்த்துச் சிரிப்பதைத் தவிர என்னால் எதையும் செய்ய முடியவில்லை.

தெருப் பிச்சைக்காரர்களுக்குப் புண் மாறுவதில் விருப்பமில்லை. அவர்களுக்கு உழைத்துப் பிழைப்பதில் ஆர்வமும் இருப்பதில்லை. அது பல பிச்சைக்காரர்களுக்கு சொகுசான வாழ்க்கை.

ஏழைகள் எனப்படுவோர் நிலைமை வேறு.

இந்தப் பிரச்சனை தீர்வது, தற்போதைய யாழ்ப்பாண அரசியல் தலைமைகளுக்குத் தேவையுமில்லை.

உசுப்பேத்தும் அரசியலுக்கு முன்பாக, யாழ்ப்பாணி அரசியல் பலருக்கு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தது. ஆசிரியர்களாகவும் வேறு பல வழிகளிலும் வேலைவாய்ப்புகளை இந்த ஈழத் பைத்தியம் முற்றுவதற்கு முன்னால் பலரும் பெற்று பயன் அடைந்து கொண்டிருந்தார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் பணத்தில் சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், தெரு மின்விளக்குகள் என ஏதோ ஒரு வகையில் அபிவிருத்திகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

உசுப்பேத்தும் ஈழ அரசியல் வந்த பின்னால், எந்த வேலைவாய்ப்பு, அபிவிருத்தி பற்றியும் எந்த ஈழ அரசியல்வாதியும் அக்கறை கொண்டதில்லை.

அதற்கான தேவையும் இல்லை.

ஈழம் கிடைச்சா, அஞ்சு வரியத்தில வல்லரசு கதை தான்! வெளிநாட்டுக் கனவு இருக்குது. வெளிநாட்டுக் காசு வரும்.

பிறகென்னத்துக்கு, அபிவிருத்தியும் வேலைவாய்ப்பும், பொருளாதார வளர்ச்சியும்?

இன்றைக்கு, தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் மட்டத்தில் தமிழ் அரசியல்வாதிகள் செல்வந்தர்களாக இருக்கிறார்கள். இதனால் தான் பாராளுமன்றக் கதிரைகளுக்காக இந்த யாழ்ப்பாணிகள் ஆலாய் பறக்கிறார்கள்.

மற்றும்படி, இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான அறிவும், தெளிவும், ஆர்வமும் இல்லை. அது தேவையும் இல்லை.

அவ்வப்போது பாராளுமன்றத்தில் ஆவேசம், எச்சரிக்கை, இடித்துரைப்பு, காட்டம் செய்ய வேண்டியது. திரும்பவும் மௌனிக்கப்பட்ட ஆயுதங்களை ஏந்த நேரிடலாம் என்று அறிக்கை விட வேண்டியது. அதை தங்கள் அல்லக்கைகள் மூலமாக ஊடகங்களில் முற்பக்கச் செய்தியாகவும், பேஸ்புக்கில் அந்த வாரப் பரபரப்பாகவும் வரச் செய்ய வேண்டியது.

தேர்தல் நேரங்களில், அந்தக் கால அமிர்தலிங்கம் மாதிரி, மூன்று

மாதத்தில் தமிழீழம் என்று கதை விட வேண்டியது. ஜெனிவாவில் சுருங்கி விட்டிருக்கிற சர்வதேசத்திடம் போய், அங்குள்ள கன்டீனில் டீ குடித்து... இடித்துரைப்பு செய்ய வேண்டியது.

மாவீரர் மாதத்தில் மயான சிரமதானம், மர்ம உறுப்பை மறைத்தபடி போஸ்.

பாராளுமன்ற வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்கு வழங்கப்படும் பெட்டிகளையும், வெளிநாட்டு முட்டாள்கள் சேர்த்து அனுப்புகிற பணத்தையும் அமுக்கி, ஆட்டையைப் போட வேண்டியது.

இதை விட, இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் செய்வது வேறு என்ன? அவர்கள் எதையாவது செய்ய வேண்டிய தேவை தான் என்ன?

போராட்டம் என்பது துப்பாக்கி முனை வழிப்பறிக் கொள்ளையிலிருந்து, பிழைப்பாக மாறி விட்டிருக்கிறது. மண் மீட்புக்குத் தங்கம் பறிப்பு, எல்லைச்சோதனை முகாமில் வரி, போதாக்குறைக்கு வைப்பகம்.

இந்தப் பணமும் நகைகளும் கடைசியில் யார் கையில் போய்ச் சேர்ந்தது? தேவைக்கு அதிகமாகச் சேர்த்த பணத்தை கறையான் அரித்த கதைகளும், எரித்த கதைகளும் எங்களுக்குத் தெரியாததா? புலன் பெயர்ந்த தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள் சுருட்டிக் கொண்ட தேசியச் சொத்துக்களின் கதை என்ன?

போராட்டம், அரசியல் என்பது வெறும் பிச்சைக்காரப் பிழைப்பாக இல்லாமல், பலரை பில்லியனர்களாக்கி வைத்திருக்கிறது. போராட்டம் இன்றைக்குப் பணம் சம்பாதிப்பதற்கான வழி.

இந்த அரசியல்வாதிகளுக்குத் தங்களை மீறி ஒரு தீர்வு வருவதை விரும்பும் அளவுக்கு, தமிழ் மக்களின் நலன் மீது அக்கறை இருக்கும் என்று யாழ்ப்பாணி முட்டாள்கள் மட்டுமே நம்புவார்கள்.

இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று வெள்ளைக்காரனிடம் முத்திரை குத்தி வாங்க வேண்டும், மகிந்தவைக் கழு ஏற்ற வேண்டும் என்று இந்த ஏமாளிக் கூட்டத்திடம் கதை சொல்கிற புலன் பெயர்ந்த அரசியல் கனவு அயோக்கியர்களுக்கு மட்டும் ஒரு தீர்வு வருவதில் அக்கறை இருக்குமா?

இலங்கை அரசியலில் யார் விரும்பாவிட்டாலும், கோத்தபாயா விரட்டி அடிக்கப்பட்டாலும், மகிந்த ஒரு தவிர்க்க முடியாத சக்தி. மீண்டும் ஆட்சியைப் பிடிக்கக் கூடிய அளவுக்கு அவர்களிடம் கொள்ளையடித்த பணம் இருக்கிறது. இவ்வாறான பேச்சுவார்த்தை முயற்சிகளில் அவரைச் சந்திப்பதும் தவிர்க்க முடியாதது. அவரை மீறி தீர்வு எடுக்க முயன்றாலும், அதை வழமை போல அவர் குழப்புவார்.

ஆனால், அவரைச் சந்திப்பதும், அவரோடு படம் எடுப்பதும் இவர்களுக்கு இனத் துரோகம். அதை வைத்தே இவர்களின் பிழைப்பு நடக்கிறது.

சரி, இதைத் தவறு என்று தான் வைத்துக் கொள்ளுவோம். மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க பெரும் ராஜதந்திர நகர்வு செய்து சரத் பொன்சேகாவுக்கு தலையால் மண் கிண்டினார்களே? அவர் ஆட்சிக்கு வந்திருந்தால் இவர்களுக்குத் தீர்வா வழங்கியிருப்பார்? எவ்வாறாயினும் அவரோடு பேச்சுவார்த்தை நடத்தத் தானே வேண்டியிருக்கும்? அப்போது இந்த யுத்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் எங்கே போயிருக்கும்? பிரபாகரனின் மரணத்திற்கு மகிந்த வெளிநாட்டில் இருந்த போது, அந்த வெற்றியை தொலைக்காட்சியில் அறிவித்தவர் அவர் தானே? பிரபாகரனின் மண்டை பிளந்த கொலையில் சரத்தின் பங்கு என்ன என்று இவர்களுக்குத் தெரியாதா?

**சரி, இதைத் தவறு என்று தான் வைத்துக் கொள்ளுவோம். மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க பெரும் ராஜதந்திர நகர்வு செய்து சரத் பொன்சேகாவுக்கு தலையால் மண் கிண்டினார்களே? அவர் ஆட்சிக்கு வந்திருந்தால் இவர்களுக்குத் தீர்வா வழங்கியிருப்பார்? எவ்வாறாயினும் அவரோடு பேச்சுவார்த்தை நடத்தத் தானே வேண்டியிருக்கும்? அப்போது இந்த யுத்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் எங்கே போயிருக்கும்? பிரபாகரனின் மரணத்திற்கு மகிந்த வெளிநாட்டில் இருந்த போது, அந்த வெற்றியை தொலைக்காட்சியில் அறிவித்தவர் அவர் தானே? பிரபாகரனின் மண்டை பிளந்த கொலையில் சரத்தின் பங்கு என்ன என்று இவர்களுக்குத் தெரியாதா?**

இன்றைக்கு ரணில் தீர்வு தருவார் என்று நம்பினாலும், 'ரணில் ஒரு நரி' என்று நாசத்தின் குரல் பாலேய்ங்கம் சொன்னதைக் தலையால் கிண்டி எடுத்துக் கொண்டு வந்து குழப்புவார்கள்.

எந்தத் தீர்வு என்றாலும், அதற்கு இந்தியாவின் ஆசி வேண்டும். அமெரிக்கா உட்பட்ட சர்வதேசத்தின் அனுசரணை வேண்டும்.

அந்தத் தீர்வு எதுவும் நாங்கள் எதிர்பார்க்கிற, தட்டில தமிழீழமாகவோ, சமஷ்டியாகவோ இருக்கப் போவதில்லை.

மிகக் குறைந்த பட்சமானதாக இருந்தாலும், அதை வாங்கிக் கொண்டு, இன்று இந்தச் சமூகத்தைச் சூழ்ந்து கொண்டு, அதன் எதிர்காலத்தை நாசமாக்குகின்ற சகலத்தையும் கட்டுக்குள் கொண்டு வந்து, இந்த நாட்டில் வாழ்வது எங்கள் எதிர்காலத்திற்குப் பயன் தரக் கூடியது என்ற அங்கு வாழும் மக்களுக்கு நம்பிக்கையைக் கொண்டு வரவேண்டும், இந்த நாட்டில் எங்கள் பணத்தையும் உழைப்பையும் முதலீடு செய்வதால் எங்களுக்குப் பயன்கிடைக்கும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் உருவாக்க வேண்டும்.

அந்தத் தீர்வுக்கான மனநிலை அங்கு வாழும் மக்கள் மனதில் உருவாக வேண்டும்.

வெளிநாடுகளில் நேர்மையீனமான வழிகளில் சேர்த்த பணத்தைக் கொண்டு போய், கோயில் கட்டுகிறவர்களையும், நல்லூ

ர் கொடியேற்றத்திற்கு வருகிறவர் களையும், ஒரு இனத்தின் தலைவிதி யை நிர்ணயிக்க விட்டால், இந்தச் சமூகத்திற்கு எந்த எதிர்காலமும் கிடையாது.

இந்த வெளிநாட்டு முட்டாள்கள் போடுகிற இன அழிப்புக் கூச்சலுக்கும் அங்கு தங்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு போக அல்லலுறும் மக்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய பிரச்சனை மகிந்தவைக் கழு ஏற்றுவது இல்லை.

இந்த புலன் பெயர்ந்த முட்டாள்களால் சிங்கள இனம் உசுப்பேற்றப்பட்டால், டொனால்ட் ட்ரம்ப் மாதிரி, மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வரவும் கூடும். அங்கே மகிந்த வந்தால், இந்தப் பிழைப்புவாதிகளுக்கு அதை விட்ட சந்தோசம் வேறு எதுவும் இருக்க முடியாது. அதை வைத்து அடுத்த ரவுண்ட் பிழைப்பை எந்தத் தடங்கலும் இல்லாமல் ஆரம்பிப்பார்கள். அவர்களுடைய நோக்கமும் அது தான்.

இவர்களில் எவருக்குமே தீர்வு ஒன்று வருவதில் விருப்பமோ, அக்கறையோ இல்லை.

ஈழம் தான் முடிஞ்ச முடிவு என்ற அந்தக் கனவை இன்றைக்கு மட்டுமல்ல, இந்த முட்டாள் தலைமுறை இருக்கும்வரைக்கும் விற்கலாம்.

சரி, இன்றைக்கு இந்த முயற்சியில் ஈடுபடுகிறவர்கள் திருடர்களாகவோ, துரோகிகளாகவோ இருந்து விட்டுப் போகட்டும். அதை எதிர்த்து குதியங் குத்துகிறவர்கள் என்ன தீர்வை வைத்திருக்கிறார்கள் என்று இன்னமும் இந்த அறிவார்ந்த சமூகம் ஒரு கேள்வியைத் தன்னும் கேட்கவில்லை. யுத்தம் முடிந்து பதினைந்து வருடங்களாகின்றன, புலன் பெயர்ந்த நாடுகளில் கம்பு சுற்றுகிற உங்களால் இன அழிப்பு என்றதற்கு சர்வதேச அங்கீகாரமோ, யுத்தக் குற்றத்திற்கான விசாரணை ஒன்றை உருவாக்கவாவது முடிந்திருக்கிறதா? அல்லது இனிமேலும் அதற்கான சாத்தியங்களுக்கான சூழ்நிலை ஏதாவது இருக்கிறது என்றாவது உங்களால் உறுதியாகச் சொல்ல முடியுமா? என்றெல்லாம் இந்தச் சமூகம் கேட்கப் போவதில்லை. மகிந்தவைக் கழு ஏற்ற வேண்டும் என்று வெளிநாட்டில் இருந்த கம்பு சுற்றி எதைச் சாதிக்க முடியும்? புலன் பெயர்ந்த முட்டாள் தமிழனுக்கு சீன் காட்டுவதை விட!

நேற்றைக்கு மற்றவர்களைத் துரோகிகள் என்றவர்கள் சிங்கள அரசோடு பின் கதவால் ஒட்டிக் கொண்டதெல்லாம் இன்று நேற்றல்ல, யுத்தம் முடிந்த நாட்களிலிருந்தே நடைபெறுகின்றன. இன்றைக்கு துரோகிகள் என்று முத்திரை குத்துவோர் அடுத்த நல்லூர் கொடியேற்றத்தில் செல்பி போட மாட்டார்கள் என்று எந்த உத்தரவாதமும் இல்லை. யாழ்ப்பாணி அயோக்கியர்கள் சிங்கள அரசுகளோடு, குறிப்பாக அமெரிக்க சார்பு ஐ.தே.கட்சியோடு படுக்கையைப் பகிர்வதில் ஒரு போதும் பின்நின்றதேயில்லை.

இன்றைக்கு நிலவைப் பார்த்துக் குரைப்பவர்கள் எல்லாம் கொழும்பு ஹோட்டல்களில் வாலை ஆட்டிக் கொண்டு நிற்கப் போகிறவர்கள் தான்.

இன்றைக்கு அறிக்கை விடுகிற கரி ஆனந்தசங்கரி, இலங்கைக்கு விஜயம் செய்து எதைச் சாதித்தார், தமிழர்களின் வாக்குகளில் கனடிய அரசில் இன்றைக்கு அமைச்சராக இருக்கும் அவர் இத்தனை நாள் எதைச் செய்தார் என்ற கேள்வி கூட இந்தச் சமூகத்தில் இருந்து எழுந்ததில்லை. ஒன்ராறியோ அரசில் இனஅழிப்பு முத்திரைக் குத்து வாங்கிக் கொடுத்த விஜய் தணிகாசலம் என்ன சொல்கிறார் என்று இன்னமும் என் கண்ணில் படவில்லை. அவரே புலிகளோடு ஒட்டிக் கொண்டிருந்ததை 'நான் அறியேனே?' என்று தேர்தல் காலத்தில் மறுக்கப் போய் துரோகி ஆக்கப்பட்டிருந்தவர் தான்.

எந்தத் தீர்வு என்றாலும், அது மிகவும் சொற்பமான ஒன்றில் தான் ஆரம்பிக்க முடியும், அதை வைத்து இந்தச் சமூகத்தை பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், அறிவுபூர்வமாகவும் வளர்த்தெடுத்து பலம்பெறவைப்பதன்மூலமாகத்தான் அடுத்த தளங்களுக்கு மேல் எழலாம் என்ற உண்மையை அறிந்து கொள்ளாமல், முள்ளிவாய்க்காலில் மண்டை பிளந்த, அதே 'வெற்றி அல்லது வீரமரணம்' என்ற 'அடிச்சுப் பறிப்பம்' கனவைத் தொடரவே இந்தச் சமூகம் விரும்புகிறது. அதை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவர்கள் விரும்புகிறார்கள்.

ஏற்கனவே கிடைத்த மாகாண சபைகளையும், பிரதேச அபிவிருத்திச் சபைகளையும், ஏன் பல்கலைக்கழகத்தையும் நடத்துகின்ற யாழ்ப்பாண நிர்வாகிகளின் இலட்சணம் ஏற்கனவே தெரிந்த ஒன்று தான். இந்த இலட்சணத்தில் கிடைக்கின்ற தீர்வு அலகுக்கும் நிர்வாகம் எப்படி இருக்கும் என்பதும் எல்லாருக்கும் தெரிந்தது தான்.

பட்டுத்துகிலுக்கு ஆசைப்பட்டு, கோவணத்தை இழந்து, சர்வதேசத்திடம் காப்பாற்று என்று கெஞ்சி மன்றாடினாலும், 'மாவீரர், தாயகம், தேசியம், தன்னாட்சி' என்றபடி, இந்தக் கனவை இந்த முட்டாள் கூட்டத்தின் இந்தத் தலைமுறைக்கு அதன் முடிவு வரைக்கும் விற்றுக் கொண்டே இருக்கலாம். அதனால் பலர் இன்னும் கோடானுகோடீஸ்வரர்கள் ஆகலாம்.

அப்படித் தான் இதை எல்லாம் மீறி, ஒரு தீர்வைக் காண முடியும் என்று எவராவது கனவு கண்டால் நான் சொல்லக் கூடியது இதுதான்.

ஒரு முட்டாள் நந்திக்கடல் என்ன, முள்ளிவாய்க்காலில் எறிந்த கல்லை, ஆயிரத்தெட்டு யாழ்ப்பாணி மண்டைக்காய்களோ, மயிராண்டிகளோ சேர்ந்தாலும் தேடி எடுக்க முடியாது!

ஏன் என்றால்...

நீங்கள் நாசமா(க்)கவே பிறந்தவர்கள்!

ஒரு இனத்தின் அழிவிலும் இரத்தத்திலும் பிழைப்பு நடத்துகிற உங்களை இயற்கை கூட மன்னிக்காது!

# மனக் காயங்களில் வேர் விட்டெழுந்து வியாபிக்கும் காட்சிகள்



## தர்சன்

ஊர் என்பதனை ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்களில் கணிசமானவர்கள் ரம்மியமான உணர்வுடன் நினைவுகூர்வதை அவதானித்திருக்கிறேன். விட்டுவந்த இடத்தையும் காலத்தையும் நாம் நினைவுகூரும்போது அனேமானவர்கள் தாம் விரும்பிய நினைவுகளின் தொகுப்புடன் அவர்களது ஊர்களையும் கடந்து காலத்தையும் தொடர்புபடுத்திப் பார்ப்பதாலையே இவ்வாறான நினைவுமீட்டல் ரம்மியமான உணர்வை அவர்களுக்கு வழங்குகிறதோ எனத் தோன்றும்.

ஆனால், 'ஊர்' என்ற கிரமமோ, நகரமோ எல்லாருக்கும் எப்போதுமே ஒரு ரம்மியமான இடமாக இருந்ததில்லை. ஒடுக்குமுறைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்படாத 'ஊர்கள்' எங்கேயாவது இருக்கிறதா?

சாதி ரீதியான, பால் ரீதியான, பாலின ரீதியான, வர்க்க ரீதியான, இனரீதியான ஒடுக்குமுறைகளைக் கொண்ட ஊர்களையே நான் பார்த்திருகிறேன்.

இவ்வாறான ஊர்களின் அதிகார அமைப்புக்களின் உச்ச நிலையில் இருந்தவர்களுக்கு வாழ்க்கையில் அனுகூலங்களை இலகுவாக கிடைத்துவருகின்றன. இந்த அனுூகூலங்களை அனுபவித்ததன் விளைவாக அவர்கள் ஊர் சார்ந்து கட்டமைத்த ரம்மியமான கருத்தியல்கள் சமூகத்தில் பரவலாக பரப்பப்படுகின்றன. இவ்வாறான கருத்தியல் தாக்கத்தினாலும் ஊர் பற்றிக் கதைக்கும்போது அனேகர் ஒரு கனவுவாத கண்ணோட்டத்தில் கதைகிறார்கள் என்று நினைக்கிறேன்.

ஆனால், இது சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளின் நலன் சார்ந்த கருத்தியற் போக்கு. ஊர்கள் என்ற கிராமங்களிலோ, நகரங்களிலோ பல்வேறுவித ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் மனிதர்களின் வாழ்வையும் நலன்களையும் கணக்கிலெடுக்காத கருத்தியல் போக்கு. ஒடுக்கப்பட்ட மாந்தார்களின் வாழ்க்களையும் கதைகளையும் மழுங்கச் செய்யும் கருத்தியற் செல்நெறி.

இவ்வாறான கருத்தியல் போக்குகளை இடை நிறுத்தி, சமூகங்களில் ஒடுக்கப்பட்டுவரும் மனிதர்கள் தமது வாழ்க்கைகளையும், கதைகளையும் முன்வைப்பதனூடாகத்தான் மானுட சமத்துவம் நோக்கிய புள்ளிக்கு பாதைகளை வகுக்க முடியும்.

அந்த வகையில் தமிழ் குயர் கூட்டிணைவின் (Queer Tamil Collective) 'ஊர்' என்ற கண்காட்சி முக்கியத்துவம் பெறுகிறது. தமிழ் சமூகங்களில் பாலின ரீதியாக ஒடுக்குமுறைக்கு முகங்கொடுத்துவரும் குயர் மாந்தர்கள் 'ஊர்' என்பதனை எவ்வாறு பார்க்கிறார்கள், தமது வாழ்வையும் அனுபவங்களையும் அடிப்படியாகாக் கொண்டு இந்த உலகத்தை எவ்வாறு மீள் கட்டமைக்கிறார்கள் என்பவற்றை வெளிகொணர்கிறது இக்கண்காட்சி.

கடந்த வருடம் ஜூன் மாத தொடங்கிய இக்கண்காட்சியில்

'போராட்டம் குயராக இருப்பதும் தமிழராக இருப்பதும்', 'நினைவுகூர்தல்◦ 1983 தமிழருக்கு எதிரான வன்முறை' என்ற இரு கருப்பொருட்களைக் கொண்ட ஆக்கங்கள் இடம்பெறுகின்றன.

கண்காட்சி தொடங்கிய மாதமே நான் முதற் தடவையாகப் பார்க்கச் சென்றிருந்தேன்.

கண்காட்சியில் எனது கவனத்தைப் முதலில் பெற்றது ஹுகூஹயால் தயாரிக்கப்பட்ட ஒரு 'யெடுேநச' தான். 2022ஆம் ஆண்டு நடைபெற்ற குயர் கூட்டிணைவின் முதலாவது 'பெருமிதம்' நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் உள்ளங்கை அடயாளங்களுடன் குயர் மனிதர்களைக் குறிக்கும் சுட்டுப் பெயர்ச் சொற்களையும் அந்தப் பாதகை கொண்டிருந்தது. அதில் #Dalit Queer& Pround# என்று பங்குபற்றியவர் ஒருவரின் கையெழுத்தும் அமைந்திருந்தது.

ஒடுக்கு முறைக்கு முகம் கொடுக்கும் மனிதர்கள் தமது போராட்டங்களையும் கொண்டாட்டங்களையும் முன்னெடுக்கும் போது தனியே ஒரு அடுக்குமுறைக்கு முகங் கொடுப்பவர்களை மனதிற்கொண்டு அவற்றை முனனெடுக்காமால் தாம் முகங்கொடுக்கும் ஒடுக்குமுறை வகைக்குள்ளும் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள் என்பதனை மனதிற் கொள்ள வேண்டும் என்பதனைப் #Dalit Queer& Pround# என்ற கையெழுத்து குறிப்பதாவிருந்தது.

உலகத்தின் எட்டு நாடுகளிலிருந்து இந்தக் கண்ட்சிக்காக தமிழ்க் குயர் கலைஞர்கள் தமது ஆக்கங்களை அளித்திருந்தார்கள். அவற்றில் இலங்கையிலும் மலேசியாவிலும் ஒத்த பாலுறுவு என்பது இன்றுவரை சட்ட விரோதமாகவே இருக்கிறது.

200 வருட கரிபின் தீவுகளின் வரலாற்றைக் கொண்ட தமிழ் மக்களின் மிகப் பழய டயஸ்போறாவிலிருந்து இரு குயர் கலைஞர்கள் தமது 'ஹீல்ஸ் அணிந்திருக்கும் சேவல்' போன்றவொரு ஓவியத்தையும்



அதனுடன் தொடர்புடையை கதையாடற் பின்னணியையும் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தக் கொடுத்திருந்தார்கள். ஆண்டில் கோஸின், கெலி சின்னப்பா மேரி ஆகியோரே அந்த இரு கலைஞர்களும். கெலி குடெலொப் (Guadeloupe) தீவுகளைச் சேர்ந்தவர். ஆண்டலில் றினிடாட்டைச் (Trinidad) சேர்ந்தவர்கள்.

2016 ஆம் ஆண்டு இந்த இரு கலைஞர்களும் '1,2' என்ற நூலாக்கத்தை 'வயது வந்தோருக்கான சிறுவர்களின் கதை' என உருவாக்கினார்கள். இந்த படைப்பின் கதை பதின்ம வயதில் பாலியல் சார்ந்த தேடலுக்கும் துஷ்பிரயோகத்திற்கும் இடையேயான சாம்பல் நிற வெளியை ஆய்வு செய்தது. இப்புத்தகத்தை அடைப்படையாகக் கொண்டு 108 சித்திரங்களை சின்னப்பா மேரி வரைந்திருக்கிறார். இவை வெவ்வேறு கண்காட்சிகளில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்த 108 சித்திரங்களை பார்ப்பவர்களுக்குதான் '1,2' ஆக்கத்தின் முழுமையான கதை தெரியவரும். இந்த உந்த உத்தி படைப்பாகத்தின் கருப்பொருளின் அங்கங்களான அமைதியையும் இரகசியத்தையும் வெளிப்படுத்த உதவுகிறது.

108 சித்திரங்களில் ஒன்றான 'ஹீல்ஸ்' அணிந்திருக்கும் சேவலே இந்த கண்காட்சியில் காண்பிக்கப்பட்டது. இந்த ஓவியம் மனிதருக்கும் மிருகங்களுக்கு இடையே சாம்பல் வெளியையும் ஆண், பெண் என்ற இரு பாலிற்க்கு இடையேயான திரவ வெளியையும் சிறப்பாக வெளிப்படுதியிருந்தது.

ஓவியத்தில் சேவலின் கால்கள் ஹீல் அணிந்த 'பெண்களின்' கால்கள் போன்று வரையப்பட்டுளன். அதன் முடியும் பின்னப்பட்டிருக்கின்றன. ஆனால், வரையப்பட்ட உருவம் சேவல் போன்று அமைந்திருந்தது.

பாலினம் என்பது திண்ம நிலை சார்ந்து சமூகங்கள் வரயறுக்கும் எல்லைக்குள் இருப்பதில்லை. அது திரவ நிலை சார்ந்தது. ஆண்களின் பெண்களின் குணாம்சங்களையும் இருக்கின்றன. பெண்களில் ஆண்களின் குணாம்சங்களும் இருக்கின்றன. இதற்கு அப்பால் இருக்கு பாலின சாத்தியங்களை இவ் ஓவியம் சிறப்பாக வெளிப்படித்தியிருக்கிறது. மேலும், மனிதர் மிருக குணங்களுடலும் மிருகங்கள் மனித மிருக குணங்களுடனும் வாழும்போது சமூகங்கள் வரையறுத்த எல்லைகளுக்குள் எமது வாழ்க்கைகள் அமைந்திருக்கவில்லை என்ற கருத்தையும் ஓவியம் சுட்டி நின்றது.

சிங்கப்பூரிய கலைஞரான ஹரி சுப்பிரமணித்தின் 'இது உண்மையில், தாயகம்' (This is truly. home) என்ற படைப்பாக்கத்தையும் இந்த கண்காட்சியில் எனது கவனத்தைப் பெற்றது. இவ்வாக்கத்தில் QR codeஉடன் கூடிய சிங்கபூரின் பிரசித்தி பெற்ற இடங்களின் படத் தொகுப்பு புத்தகம் முக்கிய பங்கு வகிக்கிறது. புத்தகத்தில் ஒவ்வொரு படத்திற்கு அருகிலிருக்கும் QR codeI #scan# செய்வதன் மூலம் அந்த இடத்துடன் தொடர்பு பட்ட குயர் மனிதர்களின் கதையைக் கேட்க, பார்க்க முடியும். உதராணத்திற்கு ஒரு வீட்டு கட்டடத் தொகுப்பை படத்திற்கு அருகிலிருக்கும் QR codeஇன் ஊடாக 'அம்மாவிற்கு ஒரு கடிதம்' என்ற கதையை வாசிக்க முடியும்.

ஆதிக்க சக்திகளின் கதையாடல்களுக்கு ஊடாக சிங்கப்பூரின் இடங்களை அறிந்த எமக்கு இப்படைப்பு மறைக்கப்பட்ட குயர் மாந்தர்களையும் அவர்களின் கதைகளையும் தெரிந்துகொள்வதற்கான புதிய வெளிச்சத்தை பாய்ச்சுகிறது.

இறுதியாக நான் கவனத்தைக் கோர விரும்பும் ஆக்கம்

நம்பிக்கையின் விதை (A Seed of Hope) என்ற காட்சியாக்கம். இவ்வாக்கம் குயர் தமிழ்ப் பல்துறைக் கலைஞரான விஷ்ணு பிரேமதாஸால் வடிவமைக்கப்பட்டிருந்தது. 'கறுப்பு ஜூலை' வன்முறையின் தாக்கம் எவ்வாறு தலைமுறை தலைமுறையாக விஷ்ணுவின் பெற்றோர்களின் ஊடாக தொடர்கிறது என்பதனை அவர் இப்படைப்பில் காட்சிப்படுத்த முனைந்திருக்கிறார். அத்துடன், இந்த மனத் தாக்காத்திற்குள்ளான உலகத்தில் எவ்வாறு தானும், பெற்றோர்களும் பயணிக்கிறோம் என்பதனையும் சித்தரிக்க விழைந்திருக்கிறார்.

ஆக்கத்தில் ஒரு கதிரையின் சாயும் பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் தடித்த நூலினால் பின்னப்பட்ட திரை துண்டுகள் ஓடுகின்றன. இந்த நூல் திரைகள் துவாரங்களைக் கொண்டிருந்தது. இத்திரைத் துண்டுகள் 'ஜூலை கலவரத்தின்' தாக்கம் உண்டாக்கிய நினைவுகளின் அழிவையும், அவற்றின் தொடர்ச்சி ஏற்படுத்தும் வாழ்வியற் கட்டுப்பாடுகளையும் குறிக்கின்றன். இருக்கைப் பகுதித் துணியில் தென்படும் மாதுளம் பழங்கள் மனித அனுபவத்தை உவமைப் படுத்துகின்றன. கதிரை ஒரு குளிருக்கு அணியும் சால்வையின் (shawl) மீது வைக்கப்பட்டிருந்தது.

புலம்பெயர் சூழலில் ஈழத்தமிழர்கள் இவ்வாறன சால்வை அணிவதைக் கவனித்த விஷ்ணு இதனை ஒரு கலாச்சார அடையாளமாக காண்கிறார். இது இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தால் ஏற்பட்ட கலாச்சார விளைவு என்பதால் அதனை சமூகத்தில் தொடரும் மனக்காயத்தின் அடையாளமாகவும் காண்கிறார். இந்த மனக்காயத்திலிருந்து





வேர்கொண்டுதான் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தோர்களில் வாழ்வும் இருப்பும் கனடா போன்ற நாடுகளில் அமைந்திருக்கின்றன என்பதனை இந்த காட்சிப்படுத்தலுக்கு ஊடாக அவதானிக்கலாம்.

தேயிலைச் சாயத்தால் அமைந்திருந்த திரைத் துண்டுகள் இராணுவச் சீருடையை பார்வையாளர் சிலருக்கு ஞாபகப் படுத்தியிருந்தது. அதேபோல் மதுளம் பழத்தின் நிறம் இரத்ததை குறிப்பதாகவும் விளங்கிக் கொண்டனர்.

எனது பார்வை கதிரை என்ற பொருளிலிருந்தே தொடங்கியது. இவ்வாக்கத்தில் அது இருப்பின் குறியாடாகப் பிரதானமாக அமைந்திருந்தது என்றே நம்புகின்றேன். மேலதிகமாகா, அது காலனித்துவத்தின் குறியீடகத் தோன்றியது. தேயிலைச் சாயத்தைக் கொண்ட நூல்த் திரைத் துண்டுகள் காலனித்துவத்தின் வன்முறையையும் அதன் தொடர்சியையும் ஞாபகப்படுத்தின. 'கறுப்பு ஜூலை' வன்முறைகளுக்கான வித்து காலனித்துவ காலத்திலையே விதைக்கப்பட்டுவிட்டது என்ற அனுபவத்தை இந்த காட்சியாகம் எனக்குக் கொடுத்திருந்தது.

நம்பிக்கையின் விதை என்ற காட்சியாக்கத்தில் பயன்படுத்தப்பட்ட சால்வை, கதிரை, திரைத்துண்டுகளெல்லாம் எனக்குத் தமிழ்ச் சூழலில் மத்தியதர வர்க்கத்தையும், உயர்த்தப்பட்ட வர்க்கத்தைச் சார்ந்தவர்களின் வாழ்வைப்பிரதிபலிபாகவேயிருந்தது. மனிதர்கள் ஒவ்வொருவது கதையும் தத்தம் வேர்களில் ஆரம்பிப்பது இயல்பே. ஆனால், எமது கதைகளில் வரும் மேலாதிக்க கூறுகளை எதற்காக நாம் பயன்படுத்துகிறோம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதலிருந்துதான் எமது படைப்புக்களின் வெளிப்படும் அறத்தின் குரலை முழுமையை நோக்கி நகர்த்த முடியும். அதன் அடிப்படையில், தேயிலைச் சாயம் மாலையகத்தின் தேயிலைத் தொழிலாளர்கள் ஞாபகப்படுத்தினாலும், மத்தியதர, உயர்த்தப்பட்ட வர்க்கங்களைச் சார்ந்தவர்களுக்கு கிடைத்திருக்கும் வாழ்வின் சௌகரிகங்கள் இன்னொரு வர்க்கத்தைச் சார்ந்தவர்களின் சுரண்டலில் இடம்பெற்றிருப்பதையும் இன்னும் கொஞ்சம் மேலதிகமாகப் படைப்பில் வெளிக் கொணர்ந்திருந்தால் மேலும் சிறப்படைந்திருக்கும் என்று நம்புகின்றேன். ஒவ்வொரு சுரண்டலும் வன்முறை சார்ந்ததுதான். மனக்காயங்களை உண்டாக்குதுதான். நாம் எமது மனக்காயங்களை பற்றிக் கதைக்கும்போது ஆக்கம் வெளிப்படுத்தபடும் சூழலைப் பொறுத்து தெரிந்தோ தெரியாமலோ நாம் உண்டாக்கிய மனக்காயங்களைப் பற்றியும் சிந்தித்தால் அறத்திற்கான எமது குரல்கள் வலிமைபெறும். இந்த கலையாக்காத்தில் 'எமக்கு' ஏற்பட்ட மனக்காயத்தை கூறிய அதே நேரம் 'நாம்' உண்டக்கியிருக்கக்கூடிய மனக் காயத்தையும் ஏதோவொருவகையில் மேலதிகமாக வெளிப்பட்டிருந்தால், இந்தப்படைப்பு இன்னும் மிளிர்ந்து இருக்கும் என்று நம்புகின்றேன்.

தமிழ்க் குயர் கூட்டிணைவின் இந்த கண்காட்சி ஒட்டுமொத்தமாக உரையாடல்களைத் தூண்ட விழைகிறது. பார்க்க விரும்புவோம் ஜனவரி 31, 2024 ற்கு முன் Scarborough Museum சென்று பார்வையிடலாம்.



**(Photos:Myuri Srikugan)**

# அரசியல் ஒரு வட்டம்



அலெக்ஸ் பரந்தாமன்
(புதுக்குடியிருப்பு)

தேர்தல் வரப்போவதாக
செய்திகளில் தீப்பிடித்தபோதுதான்
அந்தத் ‘திருவிளையாடல்‘ ஆரம்பமானது.

வாக்குப்பிச்சைகள் வங்குரோத்து ஆனதில்
அவற்றைத் தூக்கி நிறுத்த வேண்டிய
துர்ப்பாக்கியநிலை அவர்களுக்கு.

எரியும் வயிறுகள் எங்கும் நிறைந்திருக்க...
‘வயிறுகளுக்கு‘ நடுவில்
அரங்கேறியது ஒரு நாடகம்!

கட்சிக்குள் கனகாலம்
கடும் ஊழியம் புரிந்த ஒருவனை
உச்சி குளிரும் வார்த்தைகளால்போர்த்து
மேடையில் உறங்கவைத்து மூடியிருந்தார்கள்
ஊரின் முச்சந்தித் தெருவருகே
ஓர் ‘உண்ணாவிரதி‘யாக.

ஒருநாள்... இரண்டுநாள்...
மூன்றாம் நாளுக்குப்பின்
மூச்சுக்காற்றோடு
முரண்படத்தொடங்கியது அவனது சுவாசப்பை.

வாழ்வின் அந்திமத்தில்
‘சேடம்‘ இழுப்பவன் போலாகினான்
கட்சியின் தொண்டன்.

ஊடகங்கள் பலவும்
உமிழ்ந்து கொண்டன ஒவ்வொரு செய்திகளாக.
ஊர்ச்சனங்கள் அனைத்தும்
ஒன்று திரண்ட அவன் முன்பாக.

இனத்தின் ஒற்றுமையை வலியுறுத்தி
பசியில் கிடந்த தொண்டனுக்கு
பருக்கப்பட்டது நீராகாரம்
பேச்சுவார்தைகள் வெற்றியென.

திரும்பவும் அவர்கள்
வென்றுகொண்டார்கள் தேர்தலில்!
திரும்பிப் பாராமல்
சென்றுவிட்டார்கள் தம்வழிகளில்!

அடுத்த தேர்தல் வர
இன்னமும் ஐந்து வருடங்கள்...

காத்திருக்கிறார்கள் அவர்கள்
இன்னொரு வெற்றிக்காக

கட்சித்தொண்டனோடும்...
கரம்கோர்த்த தோழனோடும்...

வாழ்க்கை ஒருவட்டம்
அரசியலும் அஃதே!




# யாழ்ப்பாணத் திமிர்

கடுமையானதும் பல்வேறு மன உளைச்சல்களைக் கொண்டதுமாகக் கடந்து போன காலங்களின் ‘சில பதிவுகள்‘ கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டியன. பலர் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசினாலும் அதிகமானவர்களுக்கு அதனை எழுதுவதில் தயக்கம் இருக்கிறது. தமது அனுபவங்களைப் பொது வெளியில் பேசுவதிலும் அவர்களுக்குத் தயக்கம் இருக்கிறது. பேசுவதனால் எங்காவது ஓரிடத்தில் தாங்கள் இந்தப் பொதுச் சமூகத்தினால் புறக்கணிக்கப் பட்டுவிடுவோம் என்ற பயத்தினால் எழுகின்ற தயக்கந்தான் அந்தத் தயக்கம் என்று நினைக்கிறேன்.

# கற்சுறா

வெறுமனே இவ்வாறான அனுபவப் பகிர்வுகள் தனிப்பட்ட மனிதர்களைச் சுற்றி அடையாளம் காட்டப்பட்டாலும், ஒரு சமூகமாக- ஒரு இனமாக அந்தத் தனிப்பட்ட மனிதர்களது செயற்பாடுகள் மிகவும் கட்டுக் கோப்பான தொடராகவும் மிகத் திட்டமிட்ட தொடர் பரப்புரையாகவும் இருந்து விடுவது நமக்குக் கிடைத்த சாபக் கேடு. இவ்வாறுதான் மொத்த சமூகத்தின் தலைவிதியாக அவை பொதுப்புத்தி மட்டத்தில் கட்டிக் காக்கப்படுகிறது.

கடந்த டிசம்பர் அபத்தம் இதழில், விமல் குழந்தைவேலுடனான இடைமறிப்பு உரையாடலின் பகுதியில் பிரதேசவாதம் பேசுவதில் சாதி பேதம் இருப்பதில்லை என்பதனைச் சுட்டிக்காட்டி -யாழ்ப்பாணத்தில் சாதியக் கட்டமைப்பின் துயரம் சொல்லமுடியாத அளவு துயரமானதுதான். அனாலும் அங்கே வாழும் அத்தனை சாதிகளும் ஒன்றாக இணைந்து பிரதேசவாதம் பேசுவதையும், தங்களை விட மற்றய பிரதேசத்தவர்களை அவர்கள் அணுகும் போது, அனைவரும் ஒரு சேரச் சேர்ந்து கிழக்கு- மலையகம்- மற்றும் வன்னிப்பிரதேசத்தவர்களைப் புழுவிலும் கேவலமாக அணுகுவது பற்றி எழுதியிருந்தேன். மற்றயவர்களை இழிவாக நினைக்கும் தன்மையும் தங்களைத் தூய்மையானவர்களாகவும் படிப்பறிவில் தங்களை மேன்மையானவர்களாகவும் காட்டிக் கொள்ளும் தன்மையையும் அவர்கள் எந்தக் கூச்சமும் இல்லாமல் பொதுவெளியில் தெரிவிப்பார்கள். அதுதான் அவர்களுடைய திமிர். அந்தத் திமிர் எந்தச் சிறு கூச்சமுமற்று தாங்கள் அறிந்திராத சிங்களவர்களைக் கூட மோட்டுச் சிங்களவர்கள் என்றுதான் அடையாளம் காட்டுகிறது. அதற்கு அவ்வளவு திமிர்.

இந்த யாழ்ப்பாணத் திமிர் என்பது தனியே கல்வியிலோ, அரசியல் நடவடிக்கைகளிலோ மட்டும் தன்னை வெளிக்காட்டி நிற்பதாகத்தான் ஒற்றைப்பார்வையில் வெளியில் தெரியும். ஆனால், தான் உண்ணும் உணவிலிருந்து அன்றாடம் உரையாடும் 'ஐசே' உரையாடல் தொடக்கம் ஈழவிடுதலைப் போராட்டத்தில் மற்றய பிரதேசத்தவர்களைக் கொலை செய்யத் தூண்டிய சிந்தனை வரை அது திமிர் கொண்டே தொடர்ந்து நகர்ந்து வருகிறது. நம் முன்னோர்களது அனுபவங்கள் தொடக்கம் இன்று வரை இதற்கு பல உதாரணங்களைச் சொல்லி விட முடியுமென்றாலும் இங்கே நான் சுட்டிக்காட்ட முன்வருவது நமது யுத்த காலத்தில் இந்த யாழ்ப்பாணத் திமிர் எப்படித் தலை விரித்தாடியது என்று மட்டுந்தான்.

ஏனெனில் இந்த 'யாழ்ப்பாணத் திமிர்' என்ற கதையாடல் மிகப்பெரியதொரு கதையாடல். அது யாழ்ப்பாணத்திற்குள் வாழ்பவர்களை மட்டும் பீடித்திருக்கவில்லை. அதற்கு வெளியிலிருப்பவர்களையும் அது பீடித்திருந்தது. பீடித்திருக்கிறது. புலம்பெயர்ந்த பின்னாலும்கூட அது பின் நகர்ந்ததுதான். சாதியச் சிந்தனையைப் போல் அது வெளிப்படையாகத் தோன்றினாலும், அதற்குச் சாதி பேதமிருக்கவில்லை என்பதுதான் இன்னொரு ஆபத்தான நிலையே.

> **"இந்த 'யாழ்ப்பாணத் திமிர்' என்ற கதையாடல் மிகப்பெரியதொரு கதையாடல். அது யாழ்ப்பாணத்திற்குள் வாழ்பவர்களை மட்டும் பீடித்திருக்கவில்லை. அதற்கு வெளியிலிருப்பவர்களையும் அது பீடித்திருந்தது. பீடித்திருக்கிறது. புலம்பெயர்ந்த பின்னாலும்கூட அது பின் நகர்ந்ததுதான். சாதியச் சிந்தனையைப் போல் அது வெளிப்படையாகத் தோன்றினாலும், அதற்குச் சாதி பேதமிருக்கவில்லை என்பதுதான் இன்னொரு ஆபத்தான நிலையே.**

அதனை நான் பட்டுணர்ந்ததாலும் பார்த்துணர்ந்ததாலும் படித்துணர்ந்ததாலும் முடியுமானவரை எனது எழுத்துக்களில் அதனைக் கேள்விக்குள்ளாக்கியே வந்திருக்கிறேன். அதனால்த்தான் அது மிகவும் ஆபத்தானதாக உணருகிறேன். இதனை ஒரு சிறு பக்க விளக்கங்களுடன் மட்டுப்படுத்திப் பேசிவிட முடியாது. அதற்கு நீண்டகால வரலாறு உண்டு. அந்த நீண்டகாலவரலாறு குறித்த ஆய்வு அல்ல இது. அதனை ஆய்வு செய்வதற்குரிய போதிய தகமை என்னிடம் தற்பொழுது இல்லை. அதனால்த்தான் கட்டாயம் நாம் பேசியே ஆகவேண்டிய பகுதி குறித்து அக்கறை கொள்கிறேன்.

நமது யுத்தகாலத்தில் இந்த 'யாழ்ப்பாணியத்திமிர் எவ்வாறு நகர்ந்தது என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதனால் தான் அதுபற்றிப் பேச முனைகிறேன். அதனைச் சொல்லும் தகமை என்னிடம் மேலதிகமாக இருப்பதாகவே உணருகிறேன். அதனால் நான் ஏற்கனவே பேசியது போல் அதனை வெளிப்படையாகப் பேச வேண்டும் என்று எண்ணுகிறேன்.

யாழ்ப்பாணத்திற்குள் கல்வி கற்க வந்த பிற பிரதேச மாணவர்களுக்கு, யாழ்ப்பாணத்து மாணவர்களாலும் அந்த பாடசாலைகளின் ஆசிரியர்களாலும் ஏற்படும் உள- உடல் துன்புறுத்தல்கள் வார்த்தைகளால் சொல்ல முடியாதவை என்பதனை நன்கு அறிவேன். அதேபோல் பிற பிரதேசங்களுக்கு கல்வி கற்பிக்கச் செல்லும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அந்தப் பிரதேசங்களிலுள்ள மாணவர்களுக்குக் கொடுக்கும் துன்பங்களுக்கும் துஸ்பிரயோகங்களுக்கும் பெரும்பாலும் குறைவிருந்ததில்லை. யாழ்ப்பாணத்திற்க்குக் கல்வி கற்கவரும் வன்னி மாவட்ட மாணவர்களைக் காட்டான் என்றும் யங்கிள் என்றும் வன்னி என்றும் அந்தப் பாடசாலை

ஆசிரியர்களே பெயரிட்டு அழைக்கும் வழக்கம் இன்று வரை இருந்து கொண்டுதான் இருக்கிறது. *1977* கலவரத்தில் தமது ஊரைவிட்டு வெளியேறி வடபகுதிக்கு வந்து கல்விகற்ற மலையகத்தைச் சேர்ந்த மாணவனை மலைவெட்டி என்று பெயரிட்ட ஆசிரியர்களையும் எனக்குத் தெரியும். இவ்வாறான சிந்தனை பொதுப 'புத்தியிலிருந்துதான் ஒவ்வொரு தனிமனிதர்களிடமும் தாவுகிறது. இந்த மாதிரியான மானிட சமூகத்திற்கு விரோதமான கருத்தியல் ஒட்டுமொத்த சமூகத்தின் கருத்தியலாக இன்று வரை கொண்டு காவப்படுவது என்பது, இந்த யாழ்க்காணியச் சமூகம் ஒரு பொழுதிலும் உன்னத சமூகமாக உய்த்து உணர்ந்து வளரவே வளராது என்பதற்காகன இன்னுமொரு அறிகுறி.

இதன் மறுபுறம், யாழ்ப்பாணத்திலிருந்து பிற மாவட்டங்களுக்குக் கல்வி கற்பிக்கத் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படுபவர்களது சிந்தனையும் இதே போன்றதுதான். பெரிதான வேறுபாடுகளைக் காணமுடியாது. தாம் கல்வி கற்பிக்கச் செல்லும் சமூகம் தங்களை விடத் தாழ்ந்தவர்கள் என்பதனை அவர்களுக்கு ஆரம்பத்திலேயே சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அங்கே வாழ்பவர்களுக்கு ஒரு வாழ்வு முறை இருக்கிறது என்பதனை அறியாதவர்களல்ல அவர்கள். ஆனால் அவர்களிலும் விட தம்மை மேலானவர்கள் என்று சிந்திந்துக் கொள்ளவைக்கப்பட்ட ஒரு யாழ்ப்பாணிய மனநிலை கொண்டவர்களின் நடைமுறை இது.

கனடாவில் பழங் குடியினருக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து அக்கறை கொள்வதாகப் படங்காட்டும் ஒரு யாழ்ப்பாணிய மனநிலை கொண்டவருக்கு இந்த வதைகள் புரியாதிருப்பதும் அதற்கெதிராகப் பேசாதிருப்பதும் வேடிக்கையானது. வெறுமனே விளையாட்டானதும்கூட. இங்கே இன்னொரு விடயம் விவாக ஆராயப்பட வேண்டும். வடபகுதியை விட்டு வேறு பிரதேசங்களுக்குக் கல்வி கற்பிக்கத் தெரிவுசெய்து அனுப்பப்படும் ஆசிரியர்களது தெரிவு முறை குறித்ததுதான் அது. அதன் பின்னால் உள்ள அரசில் விபரங்களையும்' நாம் தீர ஆராய வேண்டும். தமது இடங்களில் வேலை கொடுக்காமல் பிற பிரதேசங்களுக்கு அனுப்பப்படுபவர்களின் தெரிவு எவ்வாறு நடைபெறுகிறது என்று ஆராய்ந்தால் இன்னும் யாழ்ப்பாணியத்தின் கேவலமான பக்கங்கள் வெளித்தெரியவரும்.

இன்னொருபுறம் ஈழ இலக்கியம் என்பதே இன்று யாழ்ப்பாணத் திமிருக்குள் பயணப்படுவதாகத்தான் பெரும்பாலும் அடையாளம் காட்டப்படுகிறது. அதன் மொழி பேசும் இலக்கியங்களே பேசுபொருளாக்கப்படுவதும் பிற காணாமல் விடப்படுவதுமாகத்தான் கொண்டு காவப்படுகிறது. உணவு முறைகளோ ஆடை வகைகளோ அல்லது ஆடல் மற்றும் பிற கலை வடிவங்களோ யாழ்ப்பாண வலயத்திற்குள்ளேதான் இருந்துதான் தொடங்குகிறது என்பதான ஒரு கருத்தின் பின்னாலுள்ள மிகமோசமான முட்டாள்தனத்தை அவர்கள் விளங்கவேயில்லை.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு கற்பிக்க அனுப்பப்படும் ஆசிரியர்களுள், நானறிந்திருந்தவர்களில் எங்காவது ஒரு சிலரைத் தவிர மிகுதி அனைவரும் சிந்தனையில் ஒரே தன்மையுடையவர்களாகவே இருந் திருக்கிறார்கள். இவ்வாறானவர்களை சிறிய புள்ளியிலேனும் சரியான முறையில் தன்னுடைய 'மண்' திரைப்படத்தில் புதியவன் இராசையா அவர்கள் பதிந்திருப்பார். ஆனாலும் இந்தவகைப் பக்கங்கள் எல்லாம் நமது இலக்கியத்தில் வெளிப்படுவதே இல்லை.

அது ஏனெனில் இன்னொருபுறம் ஈழ இலக்கியம் என்பதே இன்று யாழ்ப்பாணத் திமிருக்குள் பயணப்படுவதாகத்தான் பெரும்பாலும் அடையாளம் காட்டப்படுகிறது. அதன் மொழி பேசும் இலக்கியங்களே பேசுபொருளாக்கப்படுவதும் பிற காணாமல் விடப்படுவதுமாகத்தான் கொண்டு காவப்படுகிறது. உணவு முறைகளோ ஆடை வகைகளோ அல்லது ஆடல் மற்றும் பிற கலை வடிவங்களோ யாழ்ப்பாண வலயத்திற்குள்ளேதான் இருந்துதான் தொடங்குகிறது என்பதான ஒரு கருத்தின் பின்னாலுள்ள மிகமோசமான முட்டாள்தனத்தை அவர்கள் விளங்கவேயில்லை. கட்டாயம் மருந்தெடுத்துக் குணமாக்கப்பட வேண்டிய வருத்தம் இது.

ஆனால் இவர்களுக்கு தங்களது இருப்பு நிலை தெரிவதில்லை. தங்களுக்கு ஒரு 'நோய்' இருப்பதென்பதையே அறியாதவர்கள் அவர்கள். அவர்கள், 'தாங்கள் புத்திசாலிகள்' என்று



# வடக்கு கிழக்கு மீண்டும் இணைக்கப்படவேண்டும்

நியூஸிலாந்து தூதுவரிடம் சம்பந்தன் நேரில் வலியுறுத்து

தமிழ்பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்படவேண்டும் என்று நியூஸிலாந்து தூதுவரிடம் நேரில் வலியுறுத்தினார் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன்.

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சர்வதேசத்துக்கு வழங்கியவாக்குறுதிகள் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்திய அவர், இவை தொடர்பில் இலங்கை அரசுக்கு நியூசிலாந்து உள்ளிட்ட அனைத்து வெளிநாடுகளும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க

சொல்வது ஒன்றும் பாரதூரமான சொல் அல்ல. ஆனால் தாங்கள்தான் புத்திசாலிகள் என்பது ஒரு நோய். இப்படியொரு நோய் தங்களுக்கு இருக்கிறது எனத் தெரியாது கதை சொல்லிக் கொண்டிருக்கும் நமது பேரறிவாளர்கள் அனைவருக்கும் மனநோய் பிடித்திருக்கிறது என்பதே உண்மை.

அடுத்து,

இலங்கைவாழ் தமிழ் இனத்தை அடையாளம் காட்டி எழுப்பப்பட்ட தமிழீழ எழுச்சி என்பது யாழ்ப்பாணியத் திமிருக்குள் சுருங்கிச் சுருண்டது என்பது ஏதோ திடீரென நடந்ததொரு சம்பவமல்ல. அது நமது சாபக்கேட்டின் தொடர்ச்சி.

இதற்கு பல உதாரணங்களைச் சொல்லலாம். ஆனாலும் ஒரு சிறு சம்பவத்தைச் சொல்லுகிறேன்.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.1984 காலப்பகுதி. பழைய முறிகண்டிக்கும் புத்துவெட்டுவானுக்குமிடையில் கண்டி றோட்டில் வெடிக்க வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியினால் வீதி முழுதாக முடக்கப்பட்டிருந்தது. அந்த வீதியூடான போக்குவரத்து முழுதாகத் தடை செய்யப்பட்டது. கொழும்பிலிருந்து யாழ் செல்லும் சொகுசுப் பேரூந்துகள் பூநகரிப் பாதையூடாகப் பயணிக்க, மாங்குளத்தின் வழியாக மல்லாவி வந்தடைந்தன. கிட்டத்தட்ட ஐந்தாறு பெரிய வாகனங்கள். வந்த நேரம் மாலை ஆனதால் ஊர் வாசிகளால் அவர்களுக்கான தங்குமிட வசதிகள் அங்குள்ள பாடசாலையில் தயார் செய்து கொடுக்கப்பட்டது. எங்கள் பாடசாலையில் மூன்று வாகனங்கள் தரித்து நின்றன. அதிலிருந்த பயணிகளுக்கான தேனீர் மற்றும் உணவு வசதிகள் விரைவு படுத்தி ஒழுங்கு செய்யப்பட்டது. அந்தச் செயற்பாட்டில் எனது தந்தையின் ஈடுபாடு மூலமாக நானும் எனது சகோதரர்களும், நண்பர்களும் பங்காற்ற வேண்டியிருந்தது. நாங்கள்தான் வீடுவீடாகச் சென்று மரக்கறிகளும் அரிசியும் சேகரித்தோம். இதெல்லாம் ஒரு இரண்டு மணி நேரத்திற்குள் நடைபெற்ற விடயங்கள்.

நமது பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட பயணிகளுக்கு நுளம்புத்திரி கொழுத்தி விடுவதிலிருந்து வாங்கில்களை அடுக்கிப் படுக்கை அமைப்பது வரை நாங்கள் ஒழுங்கமைத்துக் கொடுத்துக் கொண்டோம். அவர்களுக்கான தேனீரும் உணவும் பாடசாலையின் பின்வளவில் திடீரென நிலத்தைத் தோண்டி அமைக்கப்பட்ட அடுப்பில் தயாராகிக் கொண்டிருந்தது. நாட்டு நிலைமை சரியாகி நல்லமுறையில் பாதுகாப்பாக அவர்கள் தமது பயணத்தைத் தொடரும் வரை அவர்களுக்கு உதவி செய்து விடவேண்டும் என்பதுதான் நமக்குச் சொல்லப்பட்டது. அதில் ஒரு குறையும் வந்துவிடாதபடி நாம் கரிசனையுடன் செயற்பட்டோம். மல்லாவியில் மொத்தம் மூன்று வெவ்வேறு பாடசாலைகளில் அவர்கள் தங்கவைக்கப்பட்டாலும் எனதுபாடசாலையில்கிட்டத்தட்ட60 பேருக்குக் குறையாமல் இருந்தார்கள்.

அங்கிருந்த அனைவருக்கும் தேனீர் தயாரிக்கப்பட்ட போதும் ஓரிருவரைத் தவிர வேறு யாரும் தேனீர் அருந்தவில்லை. சிலர் தாங்கள் தேனீர் குடிப்பதில்லை என்றார்கள். அவர்களிலும் ஒரு சிலர் மல்லாவிக் கடைத் தெருவுக்குச் சென்று தேனீர் அருந்தி வந்ததாக அறிந்தோம். மல்லாவியிலும் சில யாழ்ப்பாணத்தவர்களும் கடை வைத்திருந்தார்கள்.

மாலை புட்டும் மறுநாள் மதியம் சோறு, பயிற்றங்காய் பிரட்டல், பருப்பு என்று சமைத்த உணவில் பெரும்பாலானவற்றை மறுநாள் மாலை நாங்கள் நிலத்தில் வெட்டித் தாட்டோம். ஓரிருவரைத் தவிர யாருமே அதனை உண்ணவில்லை. அவ்வளவு திமிர் அவர்களுக்கு. மரணப்படுக்கையில் இருக்கும் போதும்கூட சாதிய வாதமும் பிரதேசவாதமும் யாழ்ப்பாணியத்தவர்களிடமிருந்து ஒருபொழுதும் விட்டுப் போகாது.

ஒரு சாதாரண பொதுப்புத்தி அறிவோடு, சமூகவிழிப்புணர்வு அற்று தன்னை வெளிக்காட்டும் ஒரு யாழ்ப்பாணியத்தானின் மனநிலைக்கும் தன்னை ஒரு புத்திசாலி என்றும், அறிவுத் துறையில் தன்னை மீறி எதுவுமில்லை என்றும் சொல்லி வரும் யாழ்ப்பாணியத்தானுக்கும் அடிப்படைச் சிந்தனை ஒன்றுதான். அதுதான் 'நான் பெரியாள்' என்ற சிந்தனை.

இந்த 'அசல் யாழ்ப்பாணியக் கருத்தியல்' தன்னை முழு நிர்வாணமாக நமது யுத்தகாலத்தில் வெளிக்காட்டி நின்ற இடங்கள் மிக முக்கியமான இடங்கள்.

ஒட்டு மொத்த தமிழினத்தின் விடுதலைக்கான போராட்டம் என்று சொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் தனியே யாழ்ப்பாணியச் சிந்தனைக்குள் குறுக்கப்பட்ட நிலை குறித்து 'அசல் யாழ்ப்பாணிய' மனநிலை கொண்டோர் கவலை கொள்வதேயில்லை.

1986 களில் ரெலோ விடுதலை இயக்கப் போராளிகளிலும் ஈ.பி. ஆர்.எல்.எவ். இயக்கப் போராளிகளிலும் வன்னி மற்றும் கிழக்கு மாகாணத்தவர்களை மட்டும் அதிகமாகக் கொலை செய்து அவர்களைத் தடை செய்வதாக அறிவித்தார்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர். இதனை எவ்வித மறு பேச்சுமின்றி கைகட்டி வாய்பொத்தி மவுனமாக ஆதரித்து நின்றவர்கள் இந்த 'அசல் யாழ்ப்பாணிய' மனநிலை

ஒரு சாதாரண பொதுப்புத்தி அறிவோடு, சமூகவிழிப்புணர்வு அற்று தன்னை வெளிக்காட்டும் ஒரு யாழ்ப்பாணியத்தானின் மனநிலைக்கும் தன்னை ஒரு புத்திசாலி என்றும், அறிவுத் துறையில் தன்னை மீறி எதுவுமில்லை என்றும் சொல்லி வரும் யாழ்ப்பாணியத்தானுக்கும் அடிப்படைச் சிந்தனை ஒன்றுதான். அதுதான் 'நான் பெரியாள்' என்ற சிந்தனை.
இந்த 'அசல் யாழ்ப்பாணியக் கருத்தியல்' தன்னை முழு நிர்வாணமாக நமது யுத்தகாலத்தில் வெளிக்காட்டி நின்ற இடங்கள் மிக முக்கியமான இடங்கள்.

கொண்டவர்கள். தமது தமிழ்த் தேசியத்தில் எந்தக் குறை விழுந்தாலும் அறிக்கை விடும் இந்தப் பெரிய படிப்பாளிக் கூட்டம் இதற்கு ஒரு சிறு எதிர்ப்பும் தெரிவிக்காது கடந்து போனதென்பது வியப்பானதேயல்ல. அது கட்டமைக்கப்பட்டது.

இதன் பிற்பாடு 1990 காலப்பகுதியில் வடபகுதியிலிருந்து ஒட்டு மொத்த முஸ்லீம் மக்களும் துடைத்து வெளியேற்றப்பட்ட போதும் இந்த 'அசல் யாழ்ப்பாணிய'க் கூட்டம் அதனை வரவேற்று நின்றது. அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் வடக்கிலிருந்த கட்டளையின் பேரில் காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலையைப் புலிகள் மேற்கொண்டனர். அந்தக் கொலைகள் எல்லாமே தமழீழ விடுதலைப் போராட்டத்திற்காகப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாகத்தான் இந்த 'அசல் யாழ்ப்பாணிய' வாதிகள் இன்றுவரை நம்பி கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அப்படித்தான் சொல்லப்பட்டு இருக்கிறது.

இன்று முழத்திற்கு முழமும் நிமிடத்திற்கு நிமிடமும் 'இன அழிப்பு'க் குறித்துப் பேசிவரும் இந்த 'அசல் யாழ்ப்பாணிய' கருத்துரைப்பாளர்கள், இந்தக் கொலைகளெல்லாம் எப்படி தமது தேசியத்திற்கே கேடு விளைவித்தது என்று சிந்திக்கத் தயாராக இல்லாத மடைச் சாம்பிராணிகளாகத் தான் இருக்கிறார்கள்.

இவ்வாறான சிந்தனையற்ற மோட்டுச் சமூகத்திடமிருந்து எந்த எதிர்ப்புணர்வும் எழவே எழாது என்ற நிலையில் கிழக்கில் 2004 ஏப்ரல் 10ந் திகதி வடக்குப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைதான் வெருகல் படுகொலை. கிழக்குப் பிளவு நடந்த இந்த 2004 காலப்பகுதியில்புலம்பெயர் தேசங்களிலிருந்த அச்சவுணர்வை இந்த 'அசல் யாழ்ப்பாணிய' மனநிலை கொண்டவர்களால் புரிந்து கொள்ளவே முடியாது. ஒரு கிழக்கு மாகாணத்தவனையாவது கொன்று விடத் துடித்துக் கொண்டிருந்தது இந்தப் புலம்பெயர்ந்த யாழ்ப்பாணிய மண். கடைகளுக்குச் சென்று

*இன்று முழத்திற்கு முழமும் நிமிடத்திற்கு நிமிடமும் 'இன அழிப்பு'க் குறித்துப் பேசிவரும் இந்த 'அசல் யாழ்ப்பாணிய' கருத்துரைப்பாளர்கள், இந்தக் கொலைகளெல்லாம் எப்படி தமது தேசியத்திற்கே கேடு விளைவித்தது என்று சிந்திக்கத் தயாராக இல்லாத மடைச் சாம்பிராணிகளாகத் தான் இருக்கிறார்கள்.*

பொருட்களை வாங்கப் பயந்து வீட்டிற்குள் இருந்த கிழக்கு மாகாணத்தவர்கள் இருந்தார்கள். 1990ம் ஆண்டு காலத்தில் புலம்பெயர் தேசத்தில் கூட ஒரு முஸ்லீம் ஒருவர் வெளியில் நடமாடமுடியாதிருந்த நிலையை ஒத்ததாக இருந்தது இந்தக்காலமும். இப்பொழுது நினைத்தால் இது வேடிக்கையாகத்தான் இருக்கும். இந்த யாழ்ப்பாணிய மனநிலை கொண்டவர்கள், அப்பொழுதுகளில் இங்குள்ள வானொலிகளில் ஆற்றிய உரைகளும் ஆய்வுகளும் ஏராளம் ஏராளம். அவ்வாறான துவேசம் படிந்த கதைகளை எந்த வெட்கமும் இல்லாது இந்த வானொலிகள் காற்றலைகளில் ஒலிபரப்பின. அதனையும் மேவி புலம்பெயர் சூழலில் வெளிவந்த தமிழ்ப்பத்திரிகைகளோ அந்தக் கோரத்தாண்டவத்திற்கு தமது ஆதரவுக் குரலை வெளிப்படையாக வழங்கி நின்றார்கள். தமிழ்ச்சூழலில் ஒரு சிறிய எண்ணிக்கையைத் தவிர, தம்மை அறிவாளர்கள் என்று அடையாளம் காட்டுபவர்களோ அல்லது ஈழ அரசியற் செயற்பாட்டாளர்களோ யாருமே எந்த வியாக்கியானங்களையும் தெரிவித்ததாக நான் அறியவில்லை.

ஆனால் 2006 ஒக்ரோபர் 16 இல் சட்டரீதியாக வடக்குக்கிழக்கு இணைப்பு நீக்கப்பட்டபோது இந்த 'அசல் யாழ்ப்பாணிய மனநிலை' கொண்டவர்களது தூக்கமும் மவுனமும் கலைந்தது. நமது ஈழ தேசியத்திற்கு இடைஞ்சல் வந்து விட்டது என்றும் வடக்கையும் கிழக்கையும் பிரிப்பது நியாயமற்றது என்றும் அது ஆரோக்கியமான செயல் இல்லை என்றும் பல்வேறுபட்ட தரப்பினர் அறிக்கைகளை வெளியிட்டார்கள். ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தொடக்கம் ஈ.பி.ஆர்.எல்.எவ். சிறீ சுகு, மனோ கணேசன், புளொட் சித்தார்த்தன், தமிழ்க் கூட்டமைப்பினர் என்று ஒரு பெரும் பட்டியல் இந்தக் கதைக்குள் வருகின்றன.

இந்த அறிக்கையாளர்களுக்கு தமிழினத்தின் பெயரில் செய்யப்பட்ட எத்தனையோ படுகொலைகளுக்கு ஒரு அறிக்கை விடத் துப்பற்றுப் போனது. இந்தக் காலப்பகுதியில்த்தான் தினக்குரலில் 'யாழ்ப்பாணத்தைப் பிரித்து வைப்பது யார்' என்று பீஷ்மர் எழுதுகிறார். ஏ9 பாதை மூடப்பட்டது குறித்து எழுதும் பீஷ்மர், நாட்டைத் துண்டாடக் கூடாது எனச் சொல்லிவரும் அரசு இப்பொழுது யுத்த உபாயத் தேவைக்காக யாழ்ப்பாணத்தை ஏறத்தாழ புவியியல் அடிப்படையில் ஒரு தனித் துண்டாகக் கொள்கிறது.' என்று எழுதுகிறார் (நவம்பர் 2006 தினக்குரல்). அவருக்கு யாழ்பகுதி தற்பொழுதுதான் முதன்முறையாகப் பிரிக்கப்பட்டது என்ற கருத்து. 1987 இல் ஒபறேசன் லிபறேசன் காலத்தில் கூட முழுதாகத் தடை செய்யப்பட்டதனை அவர் மறந்து போயிருப்பார்.

ஈழத்தில் அவ்வப்போது நடைபெறுகின்ற யுத்த மாற்றங்களை எப்பொழுதும் தங்களுடைய 'அசல் யாழ்ப்பாணிய' அடிப்படைச் சிறுமைத் தனத்திற்கு ஏற்றாற்போல் கதை சொல்லி வந்தவர்களில், இந்தவகை ஆய்வாளர்களும் இவர்களைத் தாங்கி நடந்த பத்திரிகைகளும் முக்கியமானவர்கள், இன்றுள்ள நிலாந்தனைப் போல்.

இவர்கள் யாருக்கு மிடையிலும் ஒரு பேதமில்லை. எவ்வாறு வடகிழக்கு பிரிக்கப்பட்ட போது ஓடிவந்து தமிழர் தாயகம் - மக்களின் அபிலாசை என்று அறிக்கை விட்ட கும்பல் இருந்தது. அதேபோன்று இன்று மீண்டும் இணைக்கப்பட வேண்டும் என்று சொல்லும் இந்தக் கும்பலுக்கும் அவர்களுக்கும் பேதமில்லை. எல்லாமே ஒரே நுகத்தடியில் பொருத்தப்பட்ட வேறு வேறு மாடுகள்.




# பேராசிரியருடன் பாசாங்குகள் இல்லாத பகிர்வு 4

**ஜோர்ஜ்:** நீங்கள் பிரபல எழுத்தாளர்களும் பல கல்வியாளர்களும் புத்தக விற்பனையால் போதிய அளவு பணம் சம்பாதிப்பதாக கூறுகிறீர்கள். அதற்கு அவர்களுக்கு இருக்கும் சரியான தொடர்புகளும் காரணம் என்றுதான் விளங்கிக் கொள்கிறேன்.

ஆனால், இலக்கியப் பொதுவெளியில் தங்கள் புத்தகங்கள் விற்பனை ஆகாமல் இருப்பது பற்றி பிரபலங்கள் முதல் அறிமுக எழுத்தாளர்கள் வரைக்கும் குறைப்படுகிறார்கள். அதற்குப் பல காரணங்களைச் சொல்கிறார்கள். அதில் பெரும்பாலும் வாசிப்புக் குறைந்த சமூகம் பற்றிய குற்றசாட்டுகள் தான் அதிகமாக இருக்கும்.

அச்சகங்கள், பதிப்பாளர் களின் நேர்மை குறித்த பகிரங்கமான குற்றச்சாட்டுக்கள் மிகவும் அபூர்வம். இதனால் பணம் சம்பாதிப்பதை விட, இழப்பு அதிகம் என்று தெரிந்த பின்னாலும் வெளியிடுவதிலான ஆர்வம் குறையவில்லைத் தானே?

யமுனா ராஜேந்திரன் கூட அடிக்கடி பேஸ்புக்கில் தனது வெளிவர இருக்கும் புத்தகப் பட்டியலைப் போட்டுக் கொண்டே இருக்கிறார்.

ஏற்கனவே புத்தகம் வெளியிட்டவர் தொடர்ந்தும் வெளியிட்டுக் கொண்டே இருக்கிறார். வேலைக்கு போகாமல் முழுநேர எழுதுவினைஞர் ஆக இருக்க முடிகிறது என்றால், அதற்குள் ஏதோ ஒரு economic sense இருக்கத் தானே வேண்டும்?

இல்லையேல் இதெல்லாம் தங்களைச் சிந்தனையாளர்கள், படைப்பாளிகள், இலக்கியவாதிகள் என்று முன்னிலைப்படுத்த முனைகிற, சொந்தச் செலவில் சூனியம் வைக்கிற வெறும் ஆர்வக் கோளாறுகள் தானா?

அல்லது முன்னால் அன்னாசிப்பழம் கொண்டு போனவருக்கு நடந்தது தெரியாமல் பலாப்பழத்தோடு வரிசையில் நிற்கிற கதையா?

**அ.ராமசாமி:** பொதுவான போக்கிலிருந்து விலகுதல் என்பது தன்முனைப்பின் அடையாளம் தானே. ஒவ்வொருவரும் அவரவர் அளவில் பொதுமனிதர்களாக இருப்பதிலிருந்து விலகவே நினைக்கிறார்கள். விலகல் நடக்கும்போது கவனிக்கப்படுகிறோம் என்று உணர்ந்து கொண்டால் அதனைத் தொடர்கிறார்கள். இளம் பருவத்திலிருக்கும்போது

வரையப்பட்ட ஓவியம், எழுதப்பெற்ற கவிதை, பேசிய உரை கவனிக்கப்பட்டுப் பாராட்டும் கிடைத்தால் அது தொடர்ந்துவிடும். அதே நேரம் கலை, இலக்கிய ஈடுபாடு என்பதில் உறுதியான ஏற்புநிலை கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. சிலபேருக்கு வித்தியாசமாய் இருப்பதில் தொடங்கும் ஆர்வம், பின்னர் அதன்மீதான நோய்மையாக மாறித் தொற்றிக் கொள்ளும். அதனைக் கைவிட முடியாமல் தொடர்வார்கள். கல்விப்புலங்களில் முன்வைக்கப்படும் சிலவகை முன்வைப்புகள் மீது ஏற்படும் நம்பிக்கைகளும் கலை இலக்கிய ஈடுபாட்டை உண்டாக்குகின்றன. அவரவர் எல்லைக்குள் கிடைத்த முன்மாதிரிகளும் இத்தகைய ஈடுபாட்டுக்குக் காரணமாக இருக்கிறார்கள்.

நூல்கள் எழுதுவதும் வெளியிடுவதும் கவனிக்கப்படுவதில் கிடைக்கும் மனத்திருப்தியோடு தொடர்புடையது. தனித்திறன் களோடு, நுட்பமான பார்வையோடு , சமூக மாற்றத்தில் பங்கெடுக்கிறோம் என்ற நம்பிக்கைகளோடு தொடர்புபடுத்திக் கொண்டு ஒவ்வொருவரும் நூல்களை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அதில் கிடைக்கும் புகழ்வெளிச்சம் தாண்டி, வருமானமும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. முழுநேர எழுத்தாளர் என்ற நிலையைத் தேர்வு செய்பவர்கள் அதற்காகத் தொடர்ந்து உழைக்கிறார்கள். எனது காலத்தில் அப்படித் தேர்வுசெய்தவர்களாகவே எஸ்.ராமகிருஷ்ணன், ஜெயமோகன், சாருநிவேதிதா, கோணங்கி போன்றவர்களைப் பார்க்கிறேன். எஸ்.ரா. ஆரம்பத்திலேயே அப்படி யொரு முடிவை எடுத்தவர். கோணங்கியும் கூட. ஜெயமோகனும் சாருவும் பார்த்துக் கொண்டிருந்த வேலையை உதறிவிட்டு எழுத்துக்குள் நின்றவர்கள். இவர்கள் ஓரளவு அவர்களின் எல்லைகளைத் தொட்டவர்கள். அப்படியான இலக்குகள் -எல்லைகளைத் தொடமுடியாமல் தோற்றவர்களையும் எனக்குத் தெரியும். அவர்களின் பெயர்களைச் சொல்லிக்காட்டி எச்சரிக்கை செய்யலாம் தான். ஆனால் அப்படியானவர்கள் வரட்டும் என்றே நினைக்கிறேன். தோற்றவர்களின் பெயர்களைச் சொல்வது கலை இலக்கிய விமரிசனப் பார்வைகளுக்குள் புதியவர்கள் வருவதைத் தடுத்துவிடும்.

எழுத்து, நூலாக்க விருப்பம், தன்னை முன்வைத்தல் என்பதில் நவீனத்து நிலை முடிந்து பின் நவீனத்துவ நிலைக்குள் தமிழ்ப்பரப்பு நுழைந்துவிட்டதாகவே நினைக்கிறேன். நான் இருக்கிறேன், நாங்கள் குழுவாகச் செயல்படுகிறோம் என்ற இருப்புநிலையைத் தாண்டிய போக்கு தமிழ்ப்பரப்பில் உருவாகிவிட்டது. தனிமனிதர் களாகவும் குழுக்களாகவும் அலையும் ஒவ்வொருவருக்குள்ளும் ஒருவிதக் குற்றவுணர்வு உந்துதல் இதில் ஈடுபடச்செய்கிறது. அடித்தள மக்களின் வாழ்க்கையைவிடக் கூடுதல் வசதிகள் கிடைத்துள்ள நடுத்தரவர்க்க வாழ்க்கை உருவாக்கும் குற்ற உணர்வு இங்கே - தமிழில் நிறைய எழுத்தாளர்களை உருவாக்குகிறது. புலம் பெயர்ந்தவர்களுக்குத் தப்பி விட்டோம் என்பதால் உருவாகும் குற்றவுணர்வு துரத்துகிறது. தோற்றுக் கொண்டிருக்கும் தத்துவங்கள் மீதும் கோட்பாடுகள் மீதும் வைத்துள்ள நம்பிக்கைகளைக் கைவிட முடியாத குற்றவுணர்வு பலருக்கு. வணிக ரீதியான வெற்றி கிடைத்தவர்களுக்கு இந்தக் குற்றவுணர்வுகள் எதுவும் கிடையாது அதனை மனம் ஒப்பிய தொழிலாகச் செய்துகொண்டே இருப்பார்கள். பதிப்பகங்களும் வியாபாரமாகவும் வியாபாரம் அல்லாத குற்றவுணர்வுகளோடும் இயங்குகின்றன.

**ஜோர்ஜ்**: இந்த இலக்கிய உலகத்தினருக்கு தமிழ்சினிமாவோடு இருக்கிற love-hate relationship பற்றிக் கேட்க வேண்டும்.

ஒருபுறத்தில் அதில் இலக்கியத்தனம் இல்லை என்று குப்பையாக முற்றாகக் கூட்டி ஒதுக்குவது. மறுபுறத்தில் அதனால் கிடைக்கக் கூடிய பணமும் புகழும் குறித்து, நடிகையாக நினைக்கிற ஒரு கிராமத்துப் பெண்ணுக்கோ, இயக்குநராக நினைக்கும் சிறுநகர இளைஞனுக்கோ இருக்கிற அதே கனவை ஒரு secret crush மாதிரி உள்ளூர வைத்துக் கொள்வது.

ஜெயமோகன் பகிரங் கமாக பல்டி அடித்ததை விமர்சிக்கிறவர்களுக்கு பின்புறமாக பல்டி அடிக்கும் அளவுக்கு அந்தக் கனவு இருக்கிறது என்று நினைக்கிறேன். அல்லது அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தாலும், நான் கைக்கொள்ளும் அறம் அதை அனுமதிக்காது என்று பகிரங்கமாகச் சொல்ல முடியாமல் இருக்கிறது.

இந்த இடைவெளிக்குள் தமிழ்சினிமாவில் இருக்கிற இலக்கியத்தை மூழ்கி முத்தெடுக்க விமர்சகர்களும் இருக்கிறார்கள். யமுனா ராஜேந்திரன் மாதிரி!

இவர்கள் காட்டுகிற இந்த இலக்கிய முகங்களுக்கும் அப்பால், ஒரு புதுப்படம் வருகிற போது இவர்களுக்கு ஏற்படுகிற excitement க்கும் கட்டவுட்டுக்கு பால் ஊற்றுகிறவர்களுக்கும் பெரிதாக வித்தியாசம் இல்லை.

நான் காணக்கூடிய வித்தியாசம் இவர்கள் அந்த ரசிகர்கள் மாதிரி இல்லாமல், ஒரே ஹீரோவை வழிபடாமல் வஞ்சகம் இல்லாமல் எல்லாரையும் வழிபடுகிறவர்கள் என்பது தான்.

பேஸ்புக்கில் பார்த்தால் சகல உலக சினிமாக்களையும் பார்த்த பிரமிப்பும் பெருமையுமாகத் தான் பலரின் பதிவுகள் இருக்கின்றன. அதே எதிர்பார்ப்புகளுடனும், திருப்தியுடனும் தான் இவர்களின் மசாலாத்தமிழ்ப்பட விமர்சனங்களும் இருக்கின்றன. முதல்நாள் முதல் ஷோ செல்பி என்பது ஒரு சமூக அந்தஸ்து மாதிரியான நிலைக்கு வந்தது போலக் காணப்படுகிறது.

இந்த முரண்பாடுகளை எல்லாம் எப்படி விளங்கிக் கொள்வது?

**அ.ராமசாமி**: நவீனத்துவம் கடந்த நிலை ஒன்றை ஐரோப்பிய வாழ்க்கையை முன்வைத்து அதன் சிந்தனாவாதிகள்

அரைநூற்றாண்டுக்கு முன்னால் பேசத் தொடங்கினார்கள். எல்லா அடையாளங்களும் அழிக்கப்படுவதாக அந்தப் பேச்சுகள் முன்வைத்தன. தனி அடையாளங்கள் நீக்கப்பட்டுப் பொது அடையாளங்களுக்குள் காணாமல் போவது தவிர்க்கமுடியாதது என்று நினைத்தார்கள். அமைப்பியல் கட்டமைப்புகளாகப் பேசப்பட்ட அடையாளங்கள் கரைந்து காணாமல் போய்க்கொண்டிருந்த காலகட்டம். அந்தக் காலகட்டத்தில் கீழைத்தேயங்கள் அடையாளங்களைத் தேடும் பயணத்தில் இருந்தன. காலனியத்திற்குப் பின்னான நகர்வுகளுள் முதன்மையானது அடையாளங்களைத் தேடுதல் தான். அதன் வெளிப்பாடுகளே பொதுப்புத்திக்கு எதிராகத் தீவிர மனநிலை எனவும், வணிக எழுத்துக்கு மாற்றாக இலக்கிய எழுத்து என்பதாகவும் நவீனக் கலைப்பார்வைகள் என்பதாகவும் உருவாக்கப்பட்ட சொல்லாடல்கள். அப்படிப்பேசியதை கைவிட்டுவிட்டு எல்லாமும் இருக்கும் ஒன்றோடொன்று விலகியும் கலந்தும் ஊடாடும் பரவும் என்ற சொல்லாடல்களுக்குள் இப்போதுதான் தமிழ் அறிவுலகம் சந்தித்துக் கடக்க முயல்கிறது. தனியர்களாக, தனித்துவம் கொண்டவர்களாகத் தங்களை முன்வைத்த நவீன எழுத்தாளர்கள் பொது நீரோட்டத்தில் கலந்து விடுவதில் இருந்த தயக்கங்களைக் கைவிட்டுவிட்டு நகர்கிறார்கள்.

சிறுகதையாடல்களும் பெருங் கதையாடல்களும் கலப்பதைக் காட்சிப்படுத்தும் வெளியாகவே இந்த நகர்வுகள் இருக்கின்றன. இலக்கியவாதிகளின் சினிமா நகர்வுகளும், பெரும்பத்திரிகைகளில் இடம்பிடிப்பதையும் முன்பு பேசிய அறங்களிலிருந்து,நம்பிக்கை களிலிருந்து விலகிச் சமரசம் செய்கிறார்கள் எனக் குற்றம் சாட்டலாம் ஆனால் ஆகப்போகும் விளைவுகள் குறித்து தீர்மானம் எதுவும் இல்லாதபோது நகர்வதே உத்தமம் என்றாகிறது. இது ஒருவித பரமபத விளையாட்டுதான். தீர்மானிக்கப்பட்ட இலக்குகள் தள்ளித்தள்ளிப் போகும்போது இன்னொரு இலக்கை = எதிர்த் திசைப்பயணமாகத் தோன்றினாலும் தேர்வு செய்யவே தோன்றும். ஆனால் அதையும் நியாயப்படுத்தும் வாதங்களை வைக்கும்போதுதான் அவர்களின் மீது கோபமும் எரிச்சலும் உண்டாகிறது. எப்போதும்போலவே அறங்களைப் பேசிக்கொண்டு பின் தொடர்பவர்களை மடை மாற்றக்கூடாது என்று விமரிசனம் எழும். ஆனால் அத்தகைய விமரிசனத்தை வெளிப்படுத்தும் மேடைகள். பத்திரிகைகளிலும் இப்போது குறைந்துவிட்டன. ஏனென்றால் ஒவ்வொரு துறையிலும் இப்படி நடக்கிறதே.

தீவிர இலக்கியத்திலிருந்து திரைப்படத்திற்குள் நகர்வது -சிற்றிதழ் எழுத்தாளர்கள் பெரும்பத்திரிகைகளில் பங்கேற்பது மட்டுமல்ல இன்னும் சில நகர்வுகளையும் காண்கிறேன். திராவிட அரசியல் கட்சிகள், இடதுசாரிக் கட்சிகளிலிருந்தும் அவற்றின் கலை, இலக்கிய அமைப்புகளிலிருந்தும் வெளியேறித் தங்களின் தனி அடையாளத்தைப் பேணப் போவதாக வெளியேறியவர்கள் எல்லாம் இப்போது அந்தக் கட்சிகளின் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்த போட்டி போடுகிறார்கள். வாய்ப்புக் கிடைத்தால் பாரதிய ஜனதாவின், ஆர் எஸ் எஸ் அமைப்பின் கலை இலக்கியங்களையும் பயன்படுத்தவே செய்கிறார்கள். அந்த அமைப்புகளும் விருதுகள் வழங்கி மரியாதை செய்கின்றன. ஆலோசனைக் குழுக்களின் இடம் தருகின்றன. ஊடும் பாவுமான பயணக்கோடுகள் உருவாவதும் அழிவதும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.

தமிழ்நாட்டுக் கலை இலக்கியவாதிகளின் இந்த நகர்வுகளில் ஈழநாட்டுக் கோரிக்கைக்கான யுத்தமும் போராட்டங்களும் பெரும் பங்கு வகித்துள்ளன. ஈழப்போராட்டம் தமிழ்நாட்டு அறிவுஜீவிகளை, எழுத்தாளர்களைப் பொதுப் புத்தியாளர்களாகவே மாற்றிக்கட்டமைத்து விட்டது என்றே சொல்வேன். ஒரு காந்தியவாதியும், பெருந்தேசிய ஆதரவு பேசும் இடதுசாரி எழுத்தாளனும் கூட விடுதலைப்புலிகள் மீது விமரிசனம் செய்யமுடியாமல் தவித்ததைப் பார்த்திருக்கிறோம். அதே மனநிலையையே இப்போது உலகமயமான பொருளாதார நகர்வுகளும் நுகர்வியமும் உருவாக்கி வருகின்றன. நுகர்வியம் உருவாக்கித்தரும் சமூக ஊடகப்பரப்பிற்குள் ஒவ்வொருவரின் இருப்பும் அவர்களின் தன்னிலையை மறக்கச் செய்கின்றன. கண்ணிமைக்கும் நேரத்தில் வரிசைகட்டும் காட்சிக் கோர்வைகளும் தன்படங்களும் இயக்கத்தைத் திசைதிருப்புகின்றன. அங்கீகாரங்களைத் தேடியலையும் மனிதர்களாகவே எல்லாரும் ஆகிக் கொண்டிருக்கிறார்கள். தப்புதல் யார்க்கும் எளிதன்று என்றாகிவிட்டது. சிந்திப்பவர்களும் எழுத்தாளர்களும் அவர்களை அறியாமலேயே பகுதிநேர எழுத்தாளர்களாகவும் சிந்தனையாளர்களாகவும் இருக்க நேரிடுகிறது. நூறு சதவீதத் தன்னிலை இருப்பு தொலைந்துவிட்ட து. விதம் விதமான நகர்வுகளைச் செய்து பார்க்கிறார்கள். எண்ணிக்கையில் அதிக பக்கங்களைக் கொண்ட நூல்கள் விற்பதில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கும் அதே வேளையில் பாரதக் கதையினைப் பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட தொடர் தொகுப்புகளாக வெளியிட்டு விற்றுக் காட்டுகிறார். மூத்த எழுத்தாளர்களின் பெருந்தொகைக் கவிதை நூல்களும் சிறுகதை நூல்களும் வந்து விற்கவே செய்கின்றன. புதுபுதுப் பதிப்பகங்களும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

யார் வாங்குகிறார்கள்? எப்படிப் படிக்கப்படுகிறது என்பதற்கான அடையாளங்கள் வெளிப்படுவதில்லை. சாகித்திய அகாதெமி விருதுக்காகப் போட்ட சண்டைகள் குறைந்து விட்டன. அவ்விருதுத் தொகைக்கும் அதிகமான தொகையைத் தரும் விருதுகள் இருபதுக்கும் மேல் இருக்கின்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறு நகரங்களிலும் பெருநகரங்களிலும் இலக்கியச் சந்திப்புகளும் விருதுவிழாக்களும்

நடந்துகொண்டிருப்பதாக சமூக ஊடகத் தகவல்கள் காட்டுகின்றன. அவரவருக்கான இடங்களை -விருதுகளை-நகர்வுகளை அவர்களே உருவாக்கிக் கொள்கிறார்கள். அவர்களை உள்ளடக்கிய அமைப்புகள், குழுக்கள் உருவாக்கித் தக்கவைக்கின்றன. இந்தக் குழப்பம் தான் பின் நவீனத்துவக்குழப்பம் அல்லது தெளிவு.

**ஜோர்ஜ்**: பொதுசன வணிகப் பத்திரிகைகள் குறித்தும் இவர்களுக்கு இதே எண்ணப்பாடு தான் இருக்கிறது. அதில் இல்லாத இலக்கியம் பற்றிய விமர்சனங்கள் இருக்கும். அத்தோடு கிசுகிசு முதல் சகலத்தையும் இவர்கள் ஆர்வத்தோடு வாசிக்கவும் செய்வார்கள்.

மறுபுறத்தில் அவற்றில் தங்கள் நேர்காணல்களும், தங்கள் நூல்களைப் பற்றிய பெட்டிச் செய்திகளும் வரவேண்டும் என்பதில் அக்கறையும், அவற்றில் எழுதுவதற்கான சந்தர்ப்பங்கள் பற்றிய கனவும் இருப்பதாகத்தான் அவதானிக்கிறேன். பல சிற்றிதழ் எழுத்தாளர்கள் வணிக வார இதழ்களில் எழுதியபின் தான் பொதுவெளிக்குள் பெரும்புகழ் பெற்றார்கள், அதில் கிடைக்கக் கூடிய பணவருவாய் என்பதும் அதற்கான காரணங்கள

இலக்கிய உலகத்திற்குள்ளே இப்படி இந்தகைய முரண்பாடுகளைக் கொண்ட சிந்தனைத் தேக்கம் இருக்கும்போது, ஒரு சமூகத்திற்குள் ஒரு சிந்தனை மாற்றத்தை இந்தப் படைப்பாளிகள் உலகம் ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா?

**அ.ராமசாமி**: நீங்கள் சொன்னதுதான். சினிமாவுக்குள் நகர்வது தொடங்குவதற்கு முன்பே பெரும்பத்திரிகைக்கனவு ஆரம்பித்து விடுகிறது. பத்துப்பேருக்குத் தெரிந்தவர் என்பதைத் தாண்டி நூறு, ஆயிரம், லட்சம் என அறிந்தவர்கள் எண்ணிக்கை கூட வேண்டும் என நினைக்கிறார்கள். அந்த எண்ணிக்கை பணப்பலனைத் தரும் ஒன்றாக மாறும் வாய்ப்பை உருவாக்கித்தருகிறது.

சிறுபத்திகை = பெரும் பத்திரிகைக் கோடுகள் அழிப்பு வணிகப்பத்திரிகைகளிடமிருந்தே தொடங்கியது. ஆனந்தவிகடன், குமுதம் போன்ற இதழ்கள் நட த்திய போட்டிகளிலும் விருதளிப்புகளிலும் இரண்டு தரப்பையும் தேர்ந்தெடுத்ததின் மூலம் அதனைச் செய்தார்கள். குறிப்பாக சுஜாதா, மாலன், வாசந்தி போன்றவர்கள் பெரும் பத்திரிகைகளின் ஆசிரியத்துவத்தில் அமர்ந்தபோது இப்படி நடந்தன. விருதுகள் வெளிநாட்டுப்பயணங்கள் கிடைத்தபோது மறுக்காமல் ஏற்றுக் கொண்டதின் வழியாகப் பெரும் பத்திரிகைக்குள் சிறுபத்திரிகை மனோபாவம் நுழைந்து தன்னடையாளத்தைக் கைவிட்டது. இடைநிலை இதழ்களின் முன்னோடியாகக் கருதப்படும் கோமலின் சுபமங்களாவின் வெற்றியும் இதிலொரு பங்கு வகித்தது. அதன் தொடர்ச்சியில் குங்குமம், விகடன் குமும இதழ்களுக்குள் சிறுபத்திரிகையாளர்கள் ஆசிரியர் குழுவினராகப் பங்கேற்றனர். தரப்படும் விருதுகள் சிறுபத்திரிகை எழுத்துக்கான அங்கீகாரம் என்ற நினைத்த எழுத்தாளர்கள் அதன் தொடர்ச்சியில் அங்கேயே தங்க ஆரம்பித்துவிட்டனர்.

இதன் தொடர்ச்சியில் சிந்தனை மாற்றம் நடக்குமா என்று கேட்டால் இந்தக் காலகட்டத்துக்கான சிந்தனையைத் தேடும் ஒரு பயணம் என்றுதான் இதனை வருணிப்பேன். நவீனத்துவக் காலகட்டத்தின் சிந்தனையில் ஏதோவொரு போதாமை இருக்கிறது் அதனை இட்டு நிரப்பும் சிந்தனைகளைத் தேடும் பயணமாக இந்தக் கலப்பை, குழப்பைச் சொல்லலாம். பிறகு தெளிவு பிறக்கலாம். கிடைக்காமலும் போகலாம்.

**ஜோர்ஜ்**: இரண்டாயிரம் ஆண்டின் பின்னால், சமூக வலைத்தளங்களின் வருகை, அதற்கு சற்று முந்திய இணைய வருகை என்பன எழுத்தை அச்சிலிருந்து திரைக்கு மாற்றி விட்டன. இலக்கிப்பிரசுரங்களுக்கான வாயிற் காப்போர்களுக்கான தேவை இல்லாமல் நேரடியாகவே வாசகர்களை அணுகக் கூடிய வசதிகள் வந்து, விலை கொடுத்து வாங்கி வாசிக்க வேண்டிய தேவை இல்லாமல், வாசகப் பரப்பும் அதிகரித்திருக்கிறது.

இலக்கிய வெளி ஒரு குறிப்பிட்டவர்களின் கைகளுக்குள் இருந்த நிலைமை மாறி, niche என்கிற குறுகிய எண்ணிக்கையைக் கொண்ட ஆர்வலர் தொகுதிக்குள் திருப்தியடைகிற வழியைக் கொண்டு வந்திருக்கிறது.

இப்போது அதையும் கடந்து அடுத்த கட்டத்திற்கு வந்திருக்கிறோம். செயற்கை நுண்ணறிவு திரைக்கதை வசனங்களை எழுதுகிறது. ஒரு எழுத்தாளரின் எழுத்து நடையைக் கற்றுக் கொண்டு அந்த நடையில் இன்னொரு படைப்பை வெறும் அறிவுறுத்தல்களோடு மட்டும் படைக்கும் அளவுக்கு வந்திருக்கிறது.

எதிர்காலத்தை எதிர்வு கூறுவது சாத்தியமில்லை என்கிற அளவுக்கு கண்ணுக்கு முன்னாலேயே மாற்றங்கள்நிகழ்ந்தபடி இருக்கின்றன. தலைமுறை மாற்றங்கள் அதை விட வேகமாக நிகழ்கின்றன.

தமிழினி 2100 எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? கருத்துப் பரிமாற்றங்கள், சமூகத்தின் சிந்தனை மாற்றங்கள் எவ்வாறானதாக இருக்கக் கூடும் என்று ஊகிக்கிறீர்கள்? எனக்கென்னவோ, அப்போதும் அங்கீகாரம், விருது பற்றிய ஏக்கங்கள், பொருமல்கள், பொறாமை, அவதூறு என்று இலக்கிய உலகம் வழமையானதாகத் தான் இருக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. அப்போதும் இதே சிந்தனைக்கு ள்ளேயே சிறைப்பட்டிருக்கும் என்று நினைக்கிறீர்களா? அல்லது இதையெல்லாம் மீறி சிந்தனை வளர்ச்சி இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

**அ.ராமசாமி**: முந்தைய இரண்டு கேள்விகளின் தொடர்ச்சியாகவே இதனைப் பார்க்கிறேன். அவற்றுக்குச் சொன்ன பதில்களின் தொடர்ச்சியாகச் சிலவற்றைச் சொல்கிறேன். தமிழினி 2000 இல் ஓரளவு ஏற்புத்தன்மையுடம் முரண்பட்டவர்களும் மேடையேறினார்கள். ஆனால் தமிழினி

*2100 என்றொரு பேருரு நிகழ்ச்சிக்கு வாய்ப்பில்லை. என்னென்ன முரண்பாடுகள் உள்ளன என்பதைக் கணிக்க முடியாத நிலையில் எப்படியான மேடையைக் கட்டியெழுப்புவது என்பதைத் தீர்மானிக்க முடியாது. தேசக்கோடுகள் அழிந்து கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தின் நீட்சியாக ஆங்காங்கே சின்னச்சின்ன 2100 கள் நடக்கும். அதன் சாராம்சத்தை, ஊடாட்டத்தை ஏதாவது கொள்கையற்ற அமைப்பொன்று தொகுத்து வைக்கும். பேரலகுகளின் மிதப்பாக, காட்சிகளாக, வண்ணக்கோலங்களாக அமையும் 2100 களைப் பார்க்க நாம் இருக்கப்போவதில்லை. நீங்கள் சொன்னது போல, அப்போதும் அங்கீகாரம், விருது பற்றிய ஏக்கங்கள், பொருமல்கள், பொறாமை, அவதூறு என்று இலக்கிய உலகம் வழமையானதாகத் தான் இருக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. அதன் உணர்ச்சி வெளிப்பாடுகளின் இயல்பு இப்படி இருக்காது என்று மட்டும் என்னால் சொல்லமுடியும். இப்படிச் சொன்ன எல்லாவற்றிலும் நானும் இருக்கிறேன். நான் இதற்கு வெளியே இருப்பவனாக நினைப்பதில்லை.*

**கற்சுறா**: ரொரண்டோவிலிருந்து வெளிவரும் காலம் பத்திரிகையை வெட்டிவேலு என்ற ஒருவர் தனது கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக பி.எச்.டி ஆய்விற்கு எடுத்துச் செய்திருப்பதாகக் குறிபிட்டீர்கள்? அந்தத் தெரிவு எப்படி நடந்தது? ஆய்வின் முடிவுவரை நீங்களும் இணைந்திருக்கிறீர்கள். மேலே நீங்கள் உரையாடியது போல் ghost writer இன் வழி வரும் ஒரு சஞ்சிகை அது என்பதே என் கணிப்பு. வெட்டிவேல் அவர்களுக்கு புலம்பெயர் சஞ்சிகைகளின் தொடக்கங்களும் அதன் செயற்பாடுகளும் தெரிந்திருந்ததா? இதற்குப் பின்னால் என்னதான் புரிதல் இருந்தது?

**அ.ராமசாமி**: வெட்டிவேலுவின் ஆய்வுக்காலம் முழுவதும் நான் இருந்தேன் என்று சொல்ல முடியாது. ஆரம்பத்தில் உதவி

**2100 களைப் பார்க்க நாம் இருக்கப்போவதில்லை. நீங்கள் சொன்னது போல, அப்போதும் அங்கீகாரம், விருது பற்றிய ஏக்கங்கள், பொருமல்கள், பொறாமை, அவதூறு என்று இலக்கிய உலகம் வழமையானதாகத் தான் இருக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. அதன் உணர்ச்சி வெளிப்பாடுகளின் இயல்பு இப்படி இருக்காது என்று மட்டும் என்னால் சொல்லமுடியும்.**

செய்தவனாக இருந்தேன். ஆய்வைத் தொடங்குவதற்கு உதவினேன். உலகம் முழுவதும் ஆய்வுப்பட்டங்கள் செய்வதற்குப் பல்கலைக்கழகங்களில் கறாரான விதிகள் இருக்கின்றன. அதே நேரம் விதிவிலக்குகளும் அளிக்கப்படுகின்றன. அடிப்படைத் தகுதி உள்ள அவருக்கு விதிவிலக்களித்து ஆய்வு செய்ய உதவினேன். அறுபதைத்தாண்டிய இலங்கைத் தமிழர் ஒருவருக்கு எங்கள் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறையில் பகுதி நேர ஆய்வாளராக முனைவர் பட்டம் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர் பெறும் பட்டத்தை வேலை வாய்ப்புக்குரியதாகப் பயன்படுத்தக்கூடாது மதிப்புக்குரிய பட்டமாக வைத்துக்கொள்ளலாம் என்ற கட்டுப்பாட்டுடன் அந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அதே நிலையைச் சொல்லி வெட்டிவேலுவுக்கும் அனுமதி பெற்றேன். இப்படி அனுமதிப்பதைப் பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பார்வையாகவும், வருமானம் பெறும் ஒன்றாகவும் கருதி அனுமதிப்பார்கள். வெளிநாட்டு மாணவர்கள் செலுத்தும் கட்டணம் உள்நாட்டு மாணவர்களின் கட்டணம் போல் பலமடங்கு அதிகம். அத்தோடு வெளிநாட்டு மாணவர்களுக்கும் கல்வி தருகிறோம் என்று காட்டிக்கொள்ளலாம். அதையே நிர்வாகத்திடம் சொன்னேன். இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழ்நாட்டுத்தமிழ் மனம் காட்டும் இரக்கப்பார்வையும் அதில் சேர்ந்திருந்தது.

இந்தியப் பல்கலைக் கழகங்களின் நடைமுறைகளையும் விதிகளையும் விதிவிலக்குகளையும் சொன்னேன் நடைமுறைகளை விளக்கிச் சொன்னேன். திரும்பிப்போனார். திரும்பவும் வந்தபோது நண்பரும் ‘கவியுமான சேரன் அவருக்கு உதவினால் மகிழ்ச்சி’ என்றார். காலம் செல்வமும் அவரது ஆர்வம் பற்றிசொன்னார். வந்தவருடன் ஆய்வு நோக்கில் உரையாடியபோது கல்விப்புலத்தைச் சேர்ந்தவரல்ல என்று தெரிந்தது. ஆனால் ஈழத்தமிழ் இலக்கியத்தின் போக்குகளை வாசித்திருந்தார் குறிப்பாகக் கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்களின் நூல்களை வாசித்தவராக, பார்வைகளைப் புரிந்தவராக அறிய முடிந்தது. அத்தோடு நண்பர்கள் சேரனும் செல்வமும் சொன்னதும் சேர்ந்துகொண்டது. அவர்கள் சொன்ன பிறகுதான் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறும் அலுவல்ரீதியான வேலைகளைச் செய்தேன்.

அனுமதிக்கலாம் என்ற நிலையில் ஆய்வுப்பட்டம் சேர்வதற்குச் செய்யவேண்டிய விண்ணப்பித்தல், தடையில்லாச்சான்று பெறுதல், பட்டங்களை இணை நிறுத்தும் சான்றுகளைப் பெறுதல், நுழைவுத்தேர்வு எழுதுதல் என வேகம் காட்டினார். 70 வயதை நெருங்கும் ஒருவரிடம் வெளிப்பட்ட அந்த ஆர்வம் பிடித்திருந்தது. எல்லாம் முடிந்து வரும்போது எனக்கு 59 வயதைத் தாண்டிவிட்டது. கடைசி ஆண்டில் புதிதாக ஒருவரை முனைவர் பட்ட ஆய்வாளராகப் பதிவுசெய்துகொள்ள முடியாது என்பதால் எனக்கடுத்துத் துறையின் தலைவராக வர இருந்த பேரா.ஞா.ஸ்டீபனிடம் இணைத்துக் கொள்ளச் சொன்னேன். அவரும் ஏற்றுக்கொண்டார். அவர்களின் உரையாடல் வழிதான் ‘காலம்’ இதழ் குறித்து ஆய்வு செய்யும் முடிவு எட்டப்பட்டது. ஆனாலும் என்னோடும் பேசுவார். ஆனால் எப்படி அந்த ஆய்வேடு உருவாக்கப்பட்டது பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டது, பெறப்பட்டது என்பதில் எனக்குப் பங்கில்லை.






அ.விஜயன்

# மருதப்பு என்கிற தச்சுத் தொழிலாளி

தச்சுத் தொழில் செய்பவர் என்று நான் முதன் முதலில் கண்ட நபர் முதலாம் யூனிற்றைச் சேர்ந்த 'தவுசன் திறி' சின்னத்துரை. அதன் பின்னர் அறிந்த நபர்கள் மூன்றாம் யூனிற் நல்லையா மற்றும் ராசையா. மல்லாவிச் சந்தியை அண்டிய பகுதியில் வந்து மல்லாவிக் குளக் காட்டுப் பகுதியில் குடியேறியவர் மருதப்பு. காங்கேசர் கடையின் பின்பக்கத்தில் இருந்த காட்டுப் பகுதியில் முதன் முதலில் ஒரு காணி பிடித்து ஓலை வீடு போட்டு குடியேறியவர்தான் மருதப்பு.

மருதப்பு அண்ணையின் பூர்வீகம் நெடுந்தீவு. அவரது மனைவி புங்குடுதீவைச் சேர்ந்தவர் என்றே எனக்கு ஞாபகம். அங்கு குடியேறியபின் அவர்களின் பிள்ளைகள். மல்லாவியர் ஆகினர்.

மருதப்பு இயல்பிலேயே அமைதியான சுபாவம் உள்ளவர். தனது உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைத்தால் போதும் என நினைப்பவர். மருதப்பு அண்ணையின் பிரதான தொழிலாக முதலில் இருந்தது மல்லாவிக் கொலனி வீட்டுடன் சேர்த்து அல்லது வீட்டுக்குப் புறம்பாக மண் சுவர் வைத்த சிறிய குசினிகளுக்கு கோப்பிசம் போடுவதுமாத்திரம்தான்.

1975இன் பின்பான காலத்தில் அவர் மல்லாவியில் குடியேறியதால் எந்தவொரு தச்சு வேலை என்றாலும் மக்கள் அவரை நாடுவது வழக்கம். எதைக் கேட்டாலும் ஏலாது, மாட்டன் என்று அவர் கூறுவதில்லை. மருதப்பு அண்ணையின் பிள்ளைகள் சிறுவர்களாக இருந்ததால் அவரது தொழிலுக்கு உதவியாக வேறு யாரையாவது அழைத்துச்





செல்வார். ஒரு கைவாள், உளிகள், சீவுளிக்கூடு, துளையிடும் கருவி என ஒரு பெரிய தொழிற்சாலை ஆயுதங்களே ஒரு யூறியாப் பைக்குள் சுற்றப்பட்டிருக்கும். கைவாளின் ஒரு பகுதியும், துளையிடும் கருவியின் கயிறு இழுக்கும் தடியும் அந்தப் பைக்கு வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். அதைச் சைக்கிள் கரியலில் கட்டிக் கொண்டு புறப்படுவார்.

1980களின் ஆரம்பத்தில் அவரது உதவியாளராக நானும் கடமையாற்றியிருக்கிறேன். மல்லாவி நகரப் பகுதி, துணுக்காய் எனப் பல இடங்களிலும் அவருடன் போய் வேலை செய்திருக்கிறேன். பிழை விட்டால்கூடக் கடிந்து கொள்ளவோ ஆத்திரப்பட்டுப் பேசவோ மாட்டார்.

அவருக்கு உதவியாள் ஒன்று தேவைப்படுவது அவர் செய்யப்போகும் வேலையைப் பொறுத்திருக்கும். கூரை வேலை, கதவு, நிலை, யன்னல் வேலைகளுக்கு மரம், தடி, சீற் என்பவற்றைத் தூக்கிக் கொடுப்பது, வாள் இழுப்பது, சீவுளிக்கூடு இழுப்பது என அந்த வேலைகள் இருக்கும்.

தச்சு வேலைக்குக் கேத்திர கணித அறிவும், எண் கணித அறிவும் அவசியம். மரம், பலகைகளைத் தெரிவு செய்வது, அதிகம் கழிவு போகாது மரத்தைத் திட்டமிட்டுத் துண்டாடுவது எனப் பல நுட்பங்களை அவரிடமிருந்து கற்க முடிந்தது. பாடசாலையில் படித்த எனது கணித அறிவுக்கு எட்டாத பல விடயங்களை மருதப்பு அண்ணையிடம் கற்றுக்கொண்டேன். சதுர அடிக் கணக்கு, 12" × 12" அங்குலம் ஒரு சதுர அடி எனக் கற்ற எனக்கு 6" × 6" அங்குலம் அரைச் சதுர அடி என நினைத்தது தவறு என்பதை மருதப்பு அண்ணைதான் சொல்லித் தந்தார். 6"×6" கால் சதுர அடி என்றும், 12" × 6" தான் அரைச்சதுர அடி என்றும் கற்றுக்கொண்டேன்.

எனது குடும்ப வறுமை காரணமாகப் பல்வேறு தொழில்களைப் பலருடனும் செய்திருக்கிறேன். அவற்றைச் சம்பளத்துக்காக வேண்டா வெறுப்பாக ஒருபோதும் செய்ததில்லை. அந்தத் தொழில்களிலுள்ள நுட்பங்களை அவதானித்து அதை ஒரு படிப்பினையாகக் கற்றிருக்கிறேன். அப்படிப் பார்த்தால் மருதப்பு அண்ணைக்குத் தச்சுத் தொழில் மாத்திரம்தான் தெரியும். ஆனால் எனக்கு அதைவிடப் பல தொழில்கள் பற்றி அறியக்கூடிய வாய்ப்பிருந்தது.

காட்டில் பல்வேறு வகையான மரங்கள் இருப்பதை நான் அறிந்திருந்தபோதிலும் எந்த மரம் வைரமானது, எந்த மரம் சோத்தியானது, எந்த மரத்தை எந்தத் தேவைக்குப் பயன்படுத்துவது ஆகிய விடயங்களை மருதப்பு அண்ணையின் மூலமே அறிந்துகொண்டேன். அந்த அனுபவம் இன்றுவரை எனக்கு உதவுகிறது. மரங்கள் விடயத்திலும் தச்சுத் தொழிலின் நுணுக்கத்தைத் தெரிந்து கொள்வதற்கும் எனக்கு ஆசானாக இருந்தவர் மருதப்பு அண்ணையே.

### உதயா மரத் தளபாடத் தொழிற்சாலை

1970களின் பிற்பகுதியில் உதயா மரத்தளபாடத் தொழிற்சாலை என்ற பெயரில் மரத்தளபாடங்களைத் தயாரித்து விற்கும் ஒரு காட்சியறை மல்லாவியில் இருந்தது என்றால் அதை யாரும் நம்ப மாட்டார்கள்.

மருதப்பு அண்ணையின் மனைவியின் தம்பியாரான தங்கவடிவேல் அந்த மரத்தளபாடத் தொழிற்சாலையை நடத்தினார்.

பூராசா அண்ணையின் காணிக்குள் மிகப் பிரமாண்டமான ஓலைக் கொட்டில் ஒன்று போடப்பட்டு (கிடுகு மேய்ச்சல்) மிக விசாலமான முறையில் அந்த மரத்தளபாடத் தொழிற்சாலை அமைக்கப்பட்டிருந்தது. பத்துப் பேருக்கு மேல் தொழிலாளர்கள் அங்கு பணிபுரிந்தார்கள்.

மேசை, கதிரை, கட்டில், சுவரில் உடுப்புக் கொழுவும் கொடுக்கிகள், ஸ்கிறீன்கள், உடுப்புக் கொழுவும் தாங்கிகள், தற்போதுள்ள சோபா செற்றுக்குப் பதிலான நான்கு பின்னல் கதிரைகள் சோடி இருக்கை ஒன்று நடுவில் வைக்கும் ரீப்போ எனப்படும் பலகை ஸ்ரூல் என அவை தயாரிக்கப்பட்டன. இந்தக் கதிரைகளை வாங்குவதில் மல்லாவி மக்கள் ஆர்வம் காட்டினார்கள். எமக்குத் தேவையான வடிவத்தில் எந்தவொரு பொருளையும் சொல்லிச் செய்யக்கூடிய வாய்ப்பு அங்கிருந்தது. குழந்தைகளை நடக்கப் பயன்படுத்தும் கைவண்டில், இருந்தவாறு ஆடும் குதிரை ஆகிய பல வகையான பொருட்களை அங்கு காட்சிக்கு வைத்திருப்பார்கள்.

நான் எப்போதும் பள்ளிக்கூடம் விட்டு வரும்போது அங்கு புதிதாக என்ன தளபாடங்கள் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன அல்லது செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை விநோதமாகப் பார்ப்பதுண்டு. பல்வேறு வடிவங்களில் பல்வேறு கைவண்ணங்களில் முதிரை, பாலை, ஏனைய மரங்கள் எனப் பாவித்து அவை செய்யப்பட்டிருக்கும். வேப்ப மரத்தில் செய்யப்பட்டவை குறைவாகவே இருந்தன. கருங்காலித் தடிகளால் செய்யப்பட்ட அலங்காரங்கள் மிகவும் அழகாக இருந்தன. மாலை வேளையில் அவை செய்யப்படும் விதங்கள், உளி தீட்டுவது, வாளுக்கு அரத்தால் கூர் தீட்டுவது போன்ற பல நாம் அறியாத விடயங்களை அவர்கள் செய்யும்போது ஆர்வமாகப் பார்ப்பதுண்டு.

அந்த மரத்தளபாடத் தொழிற்சாலையில் இன்னோர் அதிசயமான விடயமும் இருந்தது. மிகப் பெரிய மரத்தின் பட்டையை மரவள்ளிக் கிழங்குத் தோல் உரிப்பதுபோல மிக நுணுக்கமாக மிதித்து அதை நிலத்தில் போட்டுப் பாரம் வைத்துக் காய வைத்து அதை ஒரு பக்கச் சுவர்போல அந்த மரத்தளபாடத் தொழிற்சாலையில் தொங்க விட்டிருந்தார்கள். அதைப் பார்த்துநான்பிரமிப்புஅடைவதுண்டு.

உதயா மரத்தளபாடத் தொழிற்சாலையிலேயே வாடகைக்கு விடப்படும் ஒலிபெருக்கித் தொகுதியையும் தங்கவடிவேல் அண்ணை வைத்திருந்தார். அப்போதைய கோவில் திருவிழாக்கள் திருமணங்கள் ஆகிய நிகழ்வுகளில் தங்கவடிவேலுவின் ஒலிபெருக்கிகள் பாடின.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த அந்த மரத்தளபாடத் தொழிற்சாலை ஒரு நாள் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகியது. ஓலைக் கூரை, ஏனைய மரத்தளபாடங்கள், பலகைகள் என எல்லாமே ஒரு கோடை காலத்தில் எரிந்து சாம்பலாகின. அந்தக் காலத்தில் மல்லாவியில் ஏற்பட்ட மிகப் பெரிய தீ அனர்த்தம் அதுதான்.

அந்தப் பெருந்தீயைக் கிணற்றில் நீர் அள்ளி ஊற்றி அணைக்கமுடியாத கையறு நிலை அங்கிருந்தவர்களுக்கு ஏற்பட்டது. அன்று நான் பள்ளிக்கூடம் விட்டு வந்தபோது ஒரே புகை மண்டலமாக அந்தப் பெரிய தொழிற்சாலை எரிந்து



தொங்கிக் கொண்டிருந்தது. கூரை மரங்கள் தாறு மாறாகத் தொங்கின. எங்கும் சாம்பலும் புகையும்.

பூராசா அண்ணை, தங்கவடிவேல் மற்றும் பலர் கூடிநின்று தீப்பரவலுக்கான சாத்தியப்பாடுகள் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். நான் சிறுவனாக இருந்ததால் அதற்கான மூல காரணங்கள் பற்றி விளங்கிக் கொள்ளும்நிலையில்இருக்கவில்லை.

அந்தப் பெரிய தீ அனர்த்தத்தில் நான் தினமும் பார்த்துப் பிரமிப்பு அடையும் பெரிய பாய் போன்ற மரப்பட்டையும் எரிந்து அடையாளமில்லாமல் போய்விட்டதை எண்ணித் துக்கப்பட்டேன். உதயா மரத்தளபாடத் தொழிற்சாலை எரிந்து போனாலும் அங்கு தளபாடங்களை வாங்கிய மக்கள் அந்தத் தொழிற்சாலையை மறந்திருக்க மாட்டார்கள். பல ஆண்டுகள் கழிந்துள்ள இன்றைய நிலையில் உதயா மரத்தளபாடத் தொழிற்சாலை போன்ற ஒரு தொழில் நிறுவனம் மல்லாவியில் இல்லை. அ





# தொலைந்த புதிரின் தொலையாத தொடர்பு

பூங்கோதை

சுட்டெரிக்கும் வெயிலில் கீரிமலையை எல்லோரும் வந்தடைந்த போது சூரியன் வானத்தில் உச்சியிலிருந்து சிரித்துக் கொண்டிருந்தான். செருப்போடு கூட அந்த வெண்மணலில் நடக்கவே முடியாதென்கின்ற நிலையில் எல்லோரும் ஒரு பெரும் பூவரசம் மரத்தின் கீழ் யோசித்தபடி நின்றிருந்தார்கள். ஆனால் இதமான கடற்காற்று அந்த வெயிலைச் சட்டை செய்யாமல் அவர்களை வருடிச் சென்றது. கடல் மட்டும் எந்தச் சலனமும் இன்றி ஆழமான நீல வர்ணத்தைப் பல பரிமாணங்களில் தூரிகை ஒன்றால் இழுத்து விட்டது போல் இருந்தபடியே அலைகளைக் கரையை நோக்கி அனுப்பிக் கொண்டிருந்தது.

ஆதி அதன் அழகில் சொக்கிப் போன வேளையில் தான் எதேச்சையாக மெலனி ஏதோ ஒரு வரைபடத்தைக் கையில் வைத்துப் பார்ப்பது அவன் கவனத்தை ஈர்த்தது.

இந்த வெயில் உனக்கு அதிகமாக இருக்கிறதா? ஆதி ஆதங்கத்துடன் மெலனியைப் பார்த்தான்.

'இல்லையே, இந்தக் கடற்காற்றும், அதில் கலந்து வரும் உப்பின் வாசனையும், நீல வானமும் எனக்கு சொர்க்கமாக இருக்கிறது. நான் கடல் வரை நடந்து போய், கால்களை நனைத்து வரப்போகிறேன்.'

மெலனி மெதுவாகக் கூறினாலும் அவள் பார்வையில் வழமைக்கு மீறித் தெரிந்த பரபரப்பை ஆதி அவதானிக்கத் தவறவில்லை.

கடந்த சில வருடங்களில் அவர்கள் இருவரும் வேறு சில நெருங்கிய நட்புகளுடன் சேர்ந்து ஒரு குழுவாக ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் போய் வந்திருந்ததால் ஆதிக்கு மெலனியின் பழக்கவழக்கங்கள் எல்லாம் அத்துப்படியாகியிருந்தது. ஆனால் அவளுக்கு ஒரு ஆசிய நாட்டிற்கு வருவது இதுவே முதற் தடவையாக இருந்தது. அவன் மட்டும் தெற்காசிய நாடுகளை ஒரு வருடமாக சுற்றி அலைந்து, ஒரு சந்நியாசி கோலத்தில் பிரித்தானியாவிற்கு வந்து சேர்ந்த அனுபவத்தைக் கொண்டிருந்தான். ஆகையால் அவள் தனக்கு இந்த வெப்பநிலை பெரிதாக ஒன்றும் செய்யவில்லை என்றது அவனுக்கு சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அவர்களுக்குள் இருந்த தோழமை வருடங்கள் உருண்டோடியதில் நெருக்கமாகி இருந்தது. இம்முறை பயணத்தில் அவர்கள் இருவரும் தோழமைக்கு மேலாக நெருக்கமாகி காதலில் கசிந்துருகிக் கொண்டிருந்தார்கள். கடந்த இரண்டு வருடங்களாக மிக இயல்பாக காதல் அவர்களுக்குள் ஊடுருவி இருந்தது.

மெலனியும் ஆதியும் பாடசாலையில் படித்த காலப் பகுதியில் இருந்தே அவர்களுக்கிடையே இருந்த நட்புகளின் மூலம் பழக்கமானவர்கள். ஒரே பாடசாலையில் படித்தவர்கள் அல்ல எனினும் நட்புகள் வட்டத்தில் நிகழ்ந்த நல்லதும் கெட்டதுமான நிகழ்வுகளில் எல்லாம் இருவரும் பங்கு பற்றியிருந்தார்கள். அப்படிப் பார்க்கப் போனால் இருவருக்கும் ஏறத்தாழ பத்து வருட தோழமை இருந்தது.

இருவருமே பிரித்தானி யாவில் பிறந்து வளர்ந்திருந்தாலும் மெலனியின் தாய் தந்தை ஆங்கிலேயர்களாகவும் இருந்தனர். ஆதியின் பெற்றோர் இருவருமே ஈழத்தைச் சேர்ந்தவர்கள். இந்த வித்தியாசங்கள் எதுவும் அவர்களுக்கிடையில் இருந்த புரிதலையோ அல்லது நட்பாகத்



துளிர்த்த காதலையோ தடுக்கவில்லை. இம்முறை ஆதி தான் சிறு வயதில் அடிக்கடி தன் பெற்றோர்களுடன் போய் வந்த அவர்களின் தாய் நாடான ஈழத்தை நோக்கிய பயண ஒழுங்கை மேற்கொண்ட போது, மெலனியும் அக்குழுவில் இணைந்து கொண்டாள்.

இப்போது அவர்கள் குழுவில் இருந்த ஏனைய மூவரும் ஆதியோடு இணைந்து கடலை நோக்கி நடந்து வரத் தொடங்கிய போது, மெலனி ஆசை தீரக் கடலில் கால் நனைத்து விளையாடி, திரும்பவும் அவர்கள் இளைப்பாறிய மரத்தின் நிழலை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவள் கையில் அதே வரைபடத்தைச் சுருட்டி வைத்திருந்தாள்.

'ஆதி, இங்கே பார், நான் கட்டாயம் இந்த இடங்களைப் பார்க்கப் போகவேண்டும். எல்லோருமாகப் போகலாமா? தயவு செய்து மறுக்காதே.'

மெலனி தன் வரைபடத்தில் உள்ள சில இடங்களில் தன் பேனாவின் மூலம் சிறு சிவப்பு புள்ளிகளைக் குறித்து வைத்திருந்தாள். ஆதி அவளை வினோதமாகப் பார்த்தான். அவர்கள் ஏற்கனவே திட்டமிட்ட பயணத்திற்கு அனைவரது விருப்பங்களும் சம்மதமும் பெறப்பட்ட நிலையில், திடீரென அவளது இக்கோரிக்கை ஏன் என்பது ஆதிக்குப் புரியவில்லை. இருந்தாலும் மெலனியைத் தெரிந்தவர்களுக்கு அவள் இப்படித் தேவையில்லாமல் திட்டமிட்ட செயற்பாடுகளை மீறி எதுவும் செய்ய மாட்டாள் என்பது தெரிந்திருந்ததால், நேரமும் ஒத்துழைக்க அவர்கள் அனைவரும் அவள் விருப்பத்தை நிறைவேற்ற விழைந்தனர்.

'வரைபடத்தை தா, நாமும் ஒருமுறை சரி பார்த்துக் கொள்ள வேண்டும்.' ஆதி கேட்ட போது அவள் மறுக்காது அவ்வரைபடத்தை எல்லோருக்கும் தெரியும் படி வைத்துக் கொண்டாள்.

'காங்கேசன்துறை, பலாலி...' ஆதி அவள் குறித்து வைத்திருந்த பெயர்களைச் சத்தமாக வாசித்தான்.

'எனக்கேதோ இந்த இடங்களைப் பார்க்க வேண்டும் என்ற அவா திடீரென இங்கு இந்தக் கடற்கரைக்கு வந்த பின் தான் தோன்றியது. எனக்கும் அதற்கான விளக்கத்தைச் சொல்லத் தெரியவில்லை. என் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு உங்கள் அனைவருக்கும் நான் நன்றி சொல்கிறேன்.' அவள் வழமையான பணிவுடன் சொல்லிக் கொண்டாள்.

அவர்களை இடத்திற்கு இடம்

ஏற்றிச் செல்வதற்கு வாகனமும், எப்போதும் சிரித்த முகத்துடன் ஒரு சாரதியும் இருந்தது அவர்கள் பயணத்தை இலகுவாக்கியது. வாகனம் கீரிமலையில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்தது. காங்கேசன்துறையில் தான் பல ஆச்சர்யங்கள் அவர்களுக்குக் காத்திருந்தன.

'நான் இந்த இடத்திற்கு முன்பும் ஒரு முறை வந்தது போல் உணர்கிறேன்.' மெலனி பரவசத்துடன் கூறிய போது ஆதி அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அவர்கள் அன்றைய மதிய உணவை அங்கிருந்த ஒரு சிறந்த உணவகத்தில் முடித்துக் கொண்ட போது, அந்த இடத்தை நன்கு தெரிந்த அவர்களது சாரதியோடு மெலனி கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டேயிருந்தது ஆதிக்கும் மற்றவர்களுக்கும் பெரும் ஆச்சர்யமாகத் தோன்றியது. புன்னகைத்த படி, அதிகம் பேசாமல் இருக்கும் மெலனிக்கு இன்று என்ன வந்தது என்பதை எல்லோரும் தமக்குள் கேட்டுக் கொண்டார்கள்.

'இதில் இருந்த தொன்மையான கட்டடத்திற்கு என்னாயிற்று?' மெலனி அவர்களது சாரதியைக் கேட்ட போது அவர்கள் சாரதியும் திகைத்துத் தான் போனார்.

அவள் விசாரித்த அந்தக் கட்டடம் பல ஆண்டுகளாகக் கவனிப்பாரற்று இயற்கை அழிவுகளில் அவ்வப்போது சிக்குண்டு உருக்குலைந்து போனதில், சில வருடங்களுக்கு முன்னர் தான் அதை அரசு முற்றாக அங்கிருந்து அகற்றி விட்டிருந்தது.

'நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன, நல்லது தான். இம்மக்களை நான் நேசிக்கிறேன்.' மெலனி அவ்வப்போது தன் மன ஓட்டத்தை வெளியே கேட்கும்படி பேசிக் கொண்ட போது ஆதிக்கு ஒருவித பயம் தொற்றிக் கொண்டது.

'மெலனி, நீ இலங்கைக்கு வருவது இது தான் முதல் தடவை என்பதை மறந்து போகாதே!' ஆதி நகைச்சுவையாகப் பேசி நிலைமையை சாதாரணமாக்க முயன்றான்.

'இல்லையே, நான் முன்பும் இங்கு வாழ்ந்திருக்கலாம் அல்லவா?' அவள் அவன் காதில் கிசு கிசுத்த போது அவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

பலாலி விமான நிலையத்தை சுற்றியிருந்த பகுதிகளையும் அவர்கள் சுற்றிப் பார்த்த போதும் அவளது கேள்விகளும் அவதானிப்புகளும் அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கத் தவறவில்லை.

மெலனியின் கோரிக்கைக்குச் செவி சாய்த்து அவள் இணைந்து வந்த குழு அன்று இரவு பலாலிக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே ஒரு தங்குமிடத்தைக் கண்டு பிடித்து அன்றைய இரவில் அங்கு தூங்கி எழுந்தார்கள் அவளும் அன்று இருட்டிப்போனதன் பின்னும் கூட பல இடங்களையும், குடிமனைகளையும் தன் விருப்பதிற்கேற்ப சுற்றிப் பார்த்து, நிறைய புகைப்படங்களும் காணொளிகளும் எடுத்துக் கொண்டாள். அதன் பின்னரே அவள் சற்றே அமைதியானாள் எனலாம். மறுநாள் காலையில் அங்கிருந்து பிரிய மனமின்றி, அம்மண்ணை முத்தமிட்டபடி அவள் அவர்களது பயணக் குழுவோடு தாம் போக வேண்டிய அடுத்த இடத்திற்கு பயணித்தாள்.

அதன் பின்னர் மெலனி அச்சம்பவம் குறித்து எதுவும் பேசினால் இல்லை. ஆனால் வழமையான புன்னகை அவள்முகத்தில் குடி கொண்டு அவள் அழகை மேலும் பிரகாசிக்கப் பண்ணியிருந்தது ஆதியை ஆசுவாசப் படுத்தியது.

***

இரண்டாம் உலகப் போரின் போது பிரித்தானிய அரச விமானப்படை இலங்கையின் வடக்கே காங்கேசன்துறைக்கு அருகிலுள்ள பலாலியில் *359* ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு விமானநிலையத்தை அமைத்தது. அதனைச் சுற்றிவர பல இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டன.

இங்கு தான் பிரித்தானிவிலிருந்து வந்திறங்கிய அலன் வில்லியம் *1944* ஆம் ஆண்டு ஆவணி மாதம் *20* வயதாக இருந்தபோது, இலங்கை இராணுவ மருத்துவப் படையின் துணை அதிகாரியாகப் பதவியில் அமர்த்தப் பட்டார்.

அவரது இராணுவ முகாம் காங்கேசன்துறைக்கும் பலாலிக்கும் இடையே அமைந்திருந்தது. குளிர் பிரதேசத்திலிருந்து வந்த அலன் வில்லியம் விரைவில் அங்கிருந்த வெப்ப நிலைக்கு ஈடு கொடுத்துக் கொண்டார். அங்கிருந்த வாழ்வியல் அவருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

தன் கடமை நேரம் தவிர்ந்த பொழுதுகளில் அலன் தான் வாழ்ந்த நகரின் அழகை விபரித்துக் கவிதைகளும், கதைகளும், பல குறிப்புகளும் எழுதத் தொடங்கினார். அவற்றைக் கடிதங்களாக அவரது பெற்றோர்களுக்கும், நட்புகளுக்கும் அனுப்பி வைத்தார். தனிமையில் இருந்த அவரது அகவுணர்வுகளின் வெளிப் பாடுகளாக அவை அமைந்திருந்தன.

அத்தோடு அவர் உள்ளூர் மக்களுக்கு இலவசமாக ஆங்கிலத்தையும் வெளி உலக நடப்புகளையும் கற்பித்தார். தானும் ஓரளவு தமிழ் பேசக் கற்றுக் கொண்டார். அதன் மூலம் அவருக்கும் அக்கிராமத்தின் குடியியல் சார்ந்த விபரங்கள் தெரிய வந்தன. தன்னால் முடிந்தவரையில் அக்கிராமத்துப் பெண்களுக்கும் சிறு கைத்தொழில்களுக்கான பாதைகளைக் காட்டினார். அவர் அங்கு வாழ்ந்த அந்தக் குறுகிய காலப் பகுதியில் அப்பகுதி மக்கள் அவரோடு அன்பாகப் பழகத் தொடங்கியிருந்தனர். அவர்களது பயம் கணிசமாகக் குறைந்து போயிருந்தது.

'காங்கேசன்துறையில் புறநகரின் இயற்கைத் துறைமுகம், கோட்டை, இடைக்கால கட்டிடக்கலை, கீரிமலை நீரூற்றுகள் மற்றும் கலங்கரை விளக்கம் ஆகியவை பிரசித்தி பெற்றவை. காங்கேசன்துறை கடற்கரையானது வட மாகாணத்தின் முதல் இரண்டு சிறந்த கடற்கரைகளில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. பனை மரங்கள் சூழ குளிர்ந்த நீரைக் கொண்ட மணற்பாங்கான இக்கடற்கரை இயற்கை எழில் மிகுந்தது.' என்பது போன்ற குறிப்புகள் அவரது

நாட்குறிப்பில் இடம் பெற்றன.

இரண்டு ஆண்டுகள் இரண்டு மாதங்கள் வரை அலன் அங்கு பணியாற்றினார். அவர் புரட்டாதி மாதம் 1946 இல் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டபோது அவர் கண்கள் கலங்கின. அந்தக் குறுகிய காலப் பகுதியில் அவர் அந்த மண்ணையும் மக்களையும் மிகவும் நேசித்தார். தான் மீண்டும் அங்கு வந்து இம்மக்களைச் சந்திப்பேன் என தனக்குள் ஒரு சபதம் எடுத்துக் கொண்டார். அக்காலப் பகுதியில் அவருக்கு பல சிறந்த நட்புகளும் உருவாகியிருந்தன.

தன் சேமிப்பையெல்லாம் அக்கிராமத்தில் இருந்த ஒரு சிறு பாடசாலைக்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டு, அங்கிருந்த நினைவுகளோடு அலன் புறப்பட்ட போது அக்கிராமத்து மக்கள் பலர் அவருடைய கருணையின் நிமித்தம் அவர் தமக்கு ஈந்த நன்கொடையில் ஒரு சிறு பகுதியை ஒரு ரூபாய்த் தாளாக அவருக்கு வற்புறுத்திக் கொடுத்தனர். 1946 ம் ஆண்டில் ஒரு ரூபாய் என்பது பெரும் வருமானமாக அவர்களுக்கிருந்த காலம். ஆனால் அலன் அதை எடுத்து வந்து இங்கிலாந்தில் என்ன செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்க்காத அவர்கள் வெகுளித் தனத்தை அவர் இரசித்தார். அதை ஒரு பொக்கிஷம் போலத் தன்னோடு இங்கிலாந்திற்கு எடுத்துப் போயிருந்தார்.

தான் மீண்டும் அவர்களை வந்து சந்திக்க முயற்சிப்பேன் எனக் கூறி பிரியா விடை பெற்றார்.

இங்கிலாந்து வந்த பின்னர் தான் கடமையில் இருந்த இடத்தை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் பலவிதமான இடையூறுகளால் அவருக்கு நிறைவேற்ற முடியாமல் போனது. தாயின் இறப்பு, தந்தையின் நோய்மை, காதலியின் காத்திருப்பு, பொருளாதாரச் சிக்கல்கள் என எல்லோர் வாழ்விலும் வரும் பல பிரச்சனைகளுக்கு அவரும் முகம் கொடுத்ததில் அவருக்கான ஆசாபாசங்கள் ஆற்றில் அடித்துப் போகும் சிறு இலை போல மறைந்து போயிற்று.

ஆனால் அலன் தன்னோடு எடுத்து வந்திருந்த ஒரு ரூபாயைத் தன் நினைவுகளோடு எழுத்தில் பதிவு செய்தார். தான் கடமையில் இருந்த இராணுவ முகாமின் பெயர், ஆண்டு, அவருக்கான பிரத்தியேகமான அடையாள எண், அவருடைய இராணுவத் தர வரிசையின் பெயர் போன்றவற்றோடு மிகப் பத்திரமாக பாதுகாத்துக் கொண்டார்.

காலங்கள் உருண்டன. அவருக்கென ஒரு மகனும் பிறந்தான். அவருடைய மகனுக்கு பல தடவைகள் தன் கனவுலகைப் பற்றி சிலாகித்துக் கொள்ளுவார். மகனுக்கு பதினைந்து வயதாகிய போது அவர் நோய் வாய்ப்பட்டதில் தன்னுடைய சேமிப்புகள் அனைத்தையும் அவன் பெயருக்கு எழுதும் போது, அந்த பொக்கிஷமான ஒரு ரூபாய்த் தாளானது மிக உன்னதமான ஒரு இடத்தில் வைத்திருக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு மகனிடம் கையளிக்கப்பட்டது.

தன் தந்தை மேல் மிகுந்த பாசம் கொண்ட அவரது தனயன், அவர் இறந்து போவதற்கு முன்னரே அதை அவரது கையெழுத்தோடு சட்டம் போட்ட ஒரு கண்ணாடிப் பேழையில் வைத்துப் பாதுகாத்தான்.

***

2023 ம் ஆண்டில் ஆதியும் மெலனியும் தாம் இணைந்த பயணக் குழுவோடு இலங்கை உட்பட பல தென்கிழக்காசிய நாடுகள் எல்லாம் சுற்றிச் சுழன்று களைத்து மீண்டும் இங்கிலாந்து வந்து சேர்ந்த போது அவர்களுக்கிடையேயான காதல் பெரும் புரிதலோடு இன்னும் இறுகிப் போயிருந்தது.

ஆதி மெதுவாகத் தன் பெற்றோரிடம் தன் காதல் குறித்துக் கூறிய போது அவர்கள் எந்த விதமான மறுப்பும் தெரிவிக்காது தம் சம்மதத்தைத் தெரிவித்தனர். அதே போலவே மெலனியின் பெற்றோருக்கும் அவள் விருப்பமே தமதுமாகிறது எனத் தெரிவித்து விட்டதில் இதோ அவர்கள் வாழ்வின் நீண்ட பாதையில் சேர்ந்து நடக்கத் தொடங்கி விட்டனர்.

ஆடம்பரம் எதுவுமின்றி இரண்டு வீட்டார்களும் அந்நிகழ்வைக் கொண்டாடியபோது, இணையர்களுக்காக அவர்களது பெற்றோர்கள் சிறிய பரிசுப் பொருட்களை அன்பின் நிமித்தம் கொடுத்தனர். அவ்வேளையில் தான் மெலனியின் தந்தை ஆதியின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டார்.

'ஆதி உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும். உங்கள் இருவருக்கும் எனது வாழ்வின் பொக்கிஷம் ஒன்றைத் தரப் போகிறேன், அதை நீங்கள் இருவரும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.' நீண்ட பீடிகையுடன் மெலனியின் தந்தை அரம்பித்தார்.

'நான் இதுவரை என் மனைவியைத் தவிர வேறு யாருக்கும் இது குறித்துப் பேசியதில்லை. மெலனிக்குக் கூட இது குறித்து நான் கூறியதில்லை. நேரம் வரும் போது அது பற்றிப் பேசலாம் என இருந்து விட்டேன்.

எல்லோரும் அவர் என்ன சொல்லப் போகிறார் என அவரையே ஆவலோடு பார்த்தனர். அவர் தன் தந்தை குறித்து, அவரது கனவு குறித்து பேசத் தொடங்கினார். அதன் நீட்சியாக அவர் கைகளில் அழகான தாளில் சுற்றப்பட்ட ஒரு பரிசுப் பொருள் அமர்ந்திருந்தது.

'இதைக் கவனமாகத் திறந்து பாருங்கள். இது ஏறத்தாழ எண்பது வருடங்களுக்கு முந்தையது.'

ஆதி அதை அவரிடமிருந்து மெதுவாக வாங்கித் தாளை நீக்கி உள்ளே என்ன தான் இருக்கிறது எனப் பார்த்தான். அங்கே அழகான கண்ணாடிப் பேழையில் சுற்றப்பட்டு சிலோன் என எழுதப்பட்ட ஒரு ரூபாய்த் தாள் ஒன்று அவனைப் பார்த்துப் புன்னகைத்தது.

•••

'1940 களில் அப்பாவின் பெருங்கனவு சிலோன். இன்று இத்தனை வருடங்கள் கடந்து இது சிலோன் குடும்பம் ஒன்றிற்குத் திரும்புகிறது. எங்கோ ஒரு தொடர்பு எமக்குள் இருந்திருக்கிறது. அப்பாவின் ஆசீர்வாதமாக ஏற்றுக் கொள்ளுங்கள்.' மெலனியின் தந்தை அவள் தாத்தாவின் பொக்கிஷத்தை அவர்கள் இருவரிடமும் கையளித்தார்.

அ

எங்கே போய் முட்ட?

# செத்தும் கொடை கொடுத்த சீதக்காதி விஜயகாந்த்!

ஜோர்ஜ் இ.

சாகித்திய அக்கடமி விருதுகள் அறிவிப்பு முன்னரேயே கசிந்திருக்கிறது. தேவி பாரதிக்கு விருது கொடுக்கப்பட்டது என்று தகவல் வர, உடனடியாக வாழ்த்துச் சொன்னோர், வழமை போல பொறாமை கொண்டு அவதூறு செய்வோர் என இலக்கிய உலகத்திற்கு இதுவும் 'ஒரு இன்னொரு நாளே!'.

அமெரிக்க சினிமா அக்கடமி விருதுகள் மாதிரி, சினிமா உலகத்திற்குள் வாக்கெடுப்பு நடத்தி, அதை நடுநிலை நிறுவனம் மேற்பார்வை செய்து, வெற்றியாளர்கள் பெயர் இரகசியமாக வைக்கப்பட்டு, மேடையில் வைத்து, போட்டியாளர்கள் இதயம் துடிப்பதை தொலைக்காட்சியில் காட்டி, பெயரை அறிவித்து, அவர்களின் முகபாவனையையும் காட்டுவார்கள்.

விருது என்பதன் உச்சமும் நீதியானதும் அதுவே என்ற நினைப்பு உலகம் முழுவதும் இருக்கிறது.

இதற்குள் அதற்கும் அக்கடமி விருது என்று பெயர். எனவே, சாகித்திய அக்கடமி என்றதுமே அந்த பந்தாக்கள் தான் நினைவுக்கு வரும்.

ஒரிஜினல் விருதுக்கே எத்தனை கோல்மால்கள், ஜில்மால்கள் நடந்து கிடைக்கின்றன என்பது பற்றி எழுதித்தான் இருக்கிறோம். அதைக் கிடைக்கச் செய்வதற்காக, நிர்வாணச் சக்கரவர்த்தி ஹார்வி வைன்ஸ்டைன் அதற்குச் செய்த திருவிளையாடல்கள் பற்றி எல்லாம் விலாவாரியாக அபத்தத்தில் எழுதியும் இருக்கிறேன்.

ஆனாலும், வழமை போல இந்த விருதுகள் எல்லாம் திறமைக்குக் கொடுக்கப்படுகின்றன என்று நம்புவோர் இருக்கத் தான் செய்கிறார்கள்...

உலகம் தட்டையானது என்று நம்புவோர் இன்னமும் இருப்பது போல!

தமிழ் இலக்கிய உலகத்தில், விருது கிடைத்தவரை எனது நண்பர் என்று சொல்லி, அவரது வெற்றியில் குளிர் காய்வார்கள். பகிரங்கமாக வாழ்த்துச் சொல்வார்கள். (உள்ளூர மனம் புழுங்கியபடி!)

அல்லது அவருக்கு கொடுத்திருக்கவே கூடாது என்று பகிரங்கமாகவே அவதூறு செய்வார்கள்.

இப்போது பாப்பையாவுக்கு விகடன் விருது கொடுத்தது பற்றிய ஆட்சேபத்தையும் வாசித்தேன். பாவம் மனிதர், சாலமோன் பெயரை வைத்திருந்தாலும், நீதி கிடைக்க மாட்டாது போல.

சரி, பொங்கல் தான் பொங்குறீங்க! காலம் சஞ்சிகைக்கும் விகடன் 'சிறந்த புலன் பெயர் சஞ்சிகை' விருது கொடுத்தது தானே? அப்போ என்ன புக்கையா சாப்பிட்டுட்டு இருந்தீங்க?

தமிழில் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற விருதை கடவுளால் கூட கொடுக்கக் முடியாது.

கிடைக்காத போது 'விருதின் மரணம்', 'தற்கொடை' என்றெல்லாம் கதை நீளும். விருது கொடுக்கிறவருக்குக் கூட, தனக்கு வேறு யாரும் விருது கொடுக்காவிட்டாலும் கோபம் வருகிறது.

விருதுகள் பற்றி விமர்சிக்கும் எவருமே எனக்குத் தந்தால் மூஞ்சியில் தூக்கி வீசுவேன் என்று ஒருபோதுமே சொன்னதில்லை.

விருதுகள் பற்றிய சொல்வதற்கு எதுவுமே இல்லை என்ற அளவுக்கு சொல்லப்பட வேண்டியது எல்லாம் ஆதாரங்களோடும் தர்க்கங்களோடும் அபத்ததிலும் சொல்லியாயிற்று.

இருந்தாலும், தனக்குத் தரப்பட்டால் அது தகுதிக்குத் தரப்பட்டதாகவும், மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் அது பெரும் அநீதியாகவும் தான் இந்த இலக்கிய உலகில் கருதப்படுகிறது.

இதற்குள் பணமுடிப்பு வேறு! வாணீர் ஊற்றாமல் என்ன செய்யும்?

இந்தப் பட்டியல்கள் எல்லாம் நெடும் பட்டியல்களில் ஆரம்பிக்கின்றன. அவை சில நேரம் அனுப்பப்படுகின்றவற்றுக்குள்ளேயே முடங்கி விடலாம். அல்லது தாங்களாகவே தேடவும் கூடும். தேடலும் தெரிந்தவைகளுக்குள் தானே முடியும்? கண் முன்னால் கடை விரிக்கிறவர்களுக்குள் தானே தெரியவும் முடியும்? கண்ணில் படாதவற்றை எப்படித் தெரிந்திருப்பது? அதற்குத் தேடல் வேண்டுமே?

தேடல் இருந்திருந்தால், ஏற்கனவே அறிவு வளர்ச்சியும் பகுத்தறிவும் வந்திருக்குமே?

அதற்கான தெரிவாளர் குழுவும் நண்பர்கள், முகாம்கள், பதிப்பகங்கள், சாதி, மதம் என்று எத்தனையோ வடிகட்டல்களில் பின் தான் அந்தப் பட்டியல்களை

முடிவாக்கும். எழுத்தின் எல்லா வகைகளும் துறைகளும் கணக்கெடுக்கப் படுவதும் இல்லை. புனைவுகளுக்குள் தான் பெரும்பாலும் தெரிவு சுற்றும்.

பின்னர் குறும்பட்டியல் தெரிவுக் குழுக்களும் மனுநீதி கண்ட சோழர்களையும், சாலமோன்களையும் கொண்டவை தானே?

அங்கேயும் வெட்டிக் கழிக்கப்பட மீண்டும் அதே காரணங்களும் நியாயங்களும்.

தேவையானால் மேலதிகமாக, வயது... செத்துப் போக முன்னால் கொடுத்து விடுவோம். அடுத்த முறை மற்றவரை யோசிக்கலாம்... போன்ற காரணங்கள் மேலதிகமாக இருக்கக் கூடும்.

இந்த முறை ஆர்வக்கோளாறு யாரோ தேவி பாரதிக்கு காதில் போடப்போய், அவரும் மகிழ்ச்சி தாளாது பகிர்ந்திருக்கலாம் என்றே வாசிப்பதில் இருந்து அறியக் கூடியதாக இருந்தது. பெரும்பாலும் அந்த வெற்றிக்கான காரணம் தான் தான் என்று சொல்லி உரிமை கோர முற்பட்டிருக்கலாம்.

இந்த (அ)நியாயம் பற்றிக் கருத்துச் சொன்ன சோ தர்மனை சங்கியாக்கியிருந்தார்கள்.

அவதூறின் இறுதி முடிவு அது தானே?

தற்போதைய நிலையில்!

பரவாயில்லை. துரோகி யாவதை விட, சங்கியாவது பரவாயில்லை. உயிராவது மிஞ்சும். யாழ்ப்பாணமாக இருந்தால், மின் கம்பத்தில் தொங்க வேண்டியிருந்திருக்கும்.

சங்கி என்பது கூட அங்கே color-coded.

இலக்கிய சோ தர்மன் என்ன வண்ண சங்கி என்பது எனக்குத் தெரியாது. மனுஷ் முதலான மேதகுக்கள் முதல், செக்கன்ட் லெப்னன்ட்கள் வரை, கருத்துச் சொல்லியிருந்தார்கள்.

ஒகே! அறச்சீற்றம் கொண்டிருந்தார்கள்.

பிறகு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு வந்தது.

எல்லாம் சுபம்!

இனி மண்டையை மோதிப் பயனில்லை என்பது தெரிந்திருக்கும்.

தலையிருக்கும் வரைக்கும் தலையிடி இருக்கத் தான் செய்யும்.

இலக்கிய உலகம் இருக்கும் வரைக்கும், விருதுக்கான குடுமிப்பிடிச் சண்டை இருக்கத்தான் செய்யும்.

எந்தச் செலவும் இல்லாமல் இதற்கான தீர்வை நானும் தான் முன்வைத்திருக்கிறேன். யாரும் கேட்பதாக இல்லை.

Quantitative easing.

முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை. எல்லோரும் சமம் என்ற ஜனநாயகமும் காப்பாற்றப்படும்.

No one is left behind.

கனடாவில் ஊடகங்கள் முதல் வீடு விற்பனை, காப்புறுதி முகவர் நிறுவனங்கள் எல்லாம் அதைத் தான் செய்கின்றன.

எந்த எழுத்தாளருமே எந்தத் தயக்கமும் இன்றி, தன்னை award-winning author என்று அழைத்துக் கொள்ளலாம். வெளியிடும் புத்தகங்களில்கூட உத்தியோகபூர்வமாகப் போட்டுக் கொள்ளலாம்.

தனியே துறைக்கு என்று கூடத் தேவையில்லை.

சினிமாப் பாடல்களைத் தொகுத்து பழைய பாடல்கள், பிற்காலப் பழைய பாடல்கள், முற்காலப் பழைய பாடல்கள், இடைக்காலப் புதிய பாடல்கள், பழங்காலப் புதிய பாடல்கள் என்று எல்லாம் யூடியூப் விடுகிறவர்கள் மாதிரி, ஆளுக்கொரு வகையைக் கூட உருவாக்கி விருது கொடுக்கலாம்.

அச்சில் வந்த அபுனைவு, வார இதழில் வந்த கவிதை, காலாண்டிதழில் வந்த சிறப்புக்கட்டுரை, பேஸ்புக்கில் வந்த பிற்காலப் புனைவு, வலைத்தளத்தில் வந்த விமர்சனம் என்றெல்லாம் ஆளுக்கொரு வகையறாவை உருவாக்கி அச்சடித்துக் கொடுக்கவேண்டியது தான்.

அதற்கு விருதுவிழா நிகழ்ச்சி, வடை, வாய்ப்பன் வைபவம், பிரேம் போடுதல் செலவு கூடத் தேவையில்லை. அதையெல்லாம் வாங்குறவங்களே பாத்துப்பாங்க!

அச்சடிக்கிற காசைக் கேட்டாலும், கேட்டதுக்கு மேலேயே போட்டும் கொடுப்பாங்க!

நிர்வாண ஊரில் கோவணம் கட்டிறவன் மடையன் என்பது போல, ஒரு புத்திசாலி சொன்னா யாரும் கேட்கவே மாட்டேங்கிறாங்க.

இந்தாங்கப்பா, சொல்லியிட்டேன். பிறகு, இப்படி ஆலோசனை சொல்கிற எனக்கும் 'வாழ்நாள் சாதனை' விருது அது இதென்று எல்லாம் வரக் கூடாது.

ஆமா, சொல்லிப்புட்டேன்.

பணமுடிச்சு என்றால் மட்டும்...!

•••

விஜயகாந்த் காலமாகி விட்டார். அமெரிக்காவிலிருந்து வந்த எம்.ஜி. ஆர் மாதிரி, vegetative state இல் இருந்தவரைக் கொண்டு வந்து, கையைத் தூக்கி அசைக்க வைத்து கேலிக்கூத்து பண்ணியிருந்தார்கள். பாவம் மனிதர், போய்ச் சேர்ந்து விட்டார்.

அவரை வைத்து அரசியல் செய்ய முயன்ற மனைவி, இறுதிச் சடங்கிலும் கூச்சமில்லாமல் அதைச் செய்தார். பிரேமதாசாவின் இறுதிச் சடங்கில் உரையாற்ற நின்ற மனைவியின் ஞாபகம் வந்தது.

நல்ல காலம், தர்மபத்தினி விரதனாக, ராதிகாவைத் தோழியாகக் கூடத் தொடராத பண்பு அவரை இறுதியில் மானத்தோடு போய்ச்சேர வைத்திருக்கிறது. இல்லாவிட்டால், unauthorized remake ஒன்றை நேரிலும், இன்னொரு 'இருவரை' திரையிலும் பார்க்க நேர்ந்திருக்கும்.

அந்தக் குடுமிப்பிடிச் சண்டையை நேரில் பார்க்க முடியாவிட்டாலும், பேஸ்புக்கில் பார்க்க முடிகிறது. அவர் நல்லவர் என்றும் இல்லை, அவர் நல்லவரே இல்லை என்று இன்னொரு முகாமும் நடந்தும் கூத்தை அவர் பார்க்காமலேயே போய்ச் சேர்ந்தது நல்லது.

அவர் சாப்பாடு போட்டார் என்று ஒரு புறம், அவர் ஒழுங்கா கூலி கொடுத்ததில்லை என்று ஒரு புறம். அவர் ஊழை விழிகள் நடித்தார் என்று ஒருபுறம், அவர்தானே சின்னக்கவுண்டர் நடிச்சாரு என்று

மறுபுறம்.
மறத்தமிழர், இல்லை, தெலுங்கர்!

விஜய்காந்த் பற்றிய விமர்சனங்களில் அதிகமானவை திமுக சார்பானவர்களால் தான் இருந்ததாக கண்ணில் பட்டது. கருணாநிதியின் மீண்டும் முதல்வர் கனவு முயற்சிக்கு வாக்கைப் பிரித்த கூட்டணிக்கு தலைவராக இருந்த கோபம் தீரவில்லை. அதனால், விஜயகாந்த் குறித்த எந்தப் பாராட்டுதல்களையும் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவர் சோறு போட்டார் என்பது கூட விமர்சனத்திற்குள்ளானது. விஜய காந்த் சோறு போட்டாரா? சேறு பூசினாரா? என்ன நோக்கத்தோடு செய்தார்? அதெல்லாம் இருக்கட்டும்.

தன்னுடைய சொந்தப் பணத்தில் தானே அதையெல்லாம் செய்தார்?

கருணாநிதி, அவரது குடும்பத்தினர் பல கொள்கைகளை அறிமுகப்படுத்தி நன்மை செய்தார்கள் என்பது உண்மை தான். ஆனால், அவர்கள் தர்மம் செய்தார்கள் என்று எங்கேயும் கண்டதில்லையே!?

திமுகவில் இருந்த நகைச்சுவை நடிகர் எஸ்.எஸ். சந்திரன் கூட, கருணாநிதி தன் சொந்தப் பணத்தில் தொண்டனுக்கு எதுவும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டியதாக வாசித்திருக்கிறேன்.

எம்.ஜி.ஆர், விஜயகாந்த் எல்லாம் சொந்தப் பணத்தில் தர்மம் செய்தார்கள் என்பது பொதுவெளியில் மனதில் பதிந்திருக்கும் அளவுக்கு அவர்கள் செய்திருக்கிறார்கள்.

கருணாநிதி குடும்பம் பற்றிய பொதுவெளிச் சிந்தனை அவ்வாறானது இல்லையே, அதைத் தானே பாஜக அரசியலில் துரும்பாகவும், வருமான வரி, ஊழல் மிரட்டல் கருவியாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

விஜயகாந்த் தான் போய் விட்டார்.

எதற்கு இந்தப் பதட்டம் எல்லாம்?

மடியில் கனம் இருந்தால் பயம் இருக்கத் தான் செய்யும்?

பேஸ்புக் விமர்சனங்களைப் பார்த்த படம் பார்க்க நினைக்கிறவனின் கதி தான்...
பேஸ்புக் அஞ்சலிகளைப் பார்த்து ஒரு மனிதனை மதிப்பீடு செய்கிறவனின் கதையும்.

அடே, இருக்கிறவனை நிம்மதியாக இருக்க விடாவிட்டாலும், செத்தவனை நிம்மதியாகப் போய்ச் சேர விடுங்கடா!

பேஸ்புக் யுகத்தில் மனிதன் நிம்மதியாகக் கூடச் சாக முடியவில்லை.

இருக்கிறவனும் நிம்மதியாக இருக்க முடியாதபடிக்கு, இவர்களுக்கு தற்போது அகப்பட்டிருப்பது வடிவேலு!

எமலோகத்தில் இருக்கிற சித்திரகுப்தன் கூட விஜயகாந்தை இப்படி வதை செய்திருக்க மாட்டான்.

இதற்குள்...

விஜயகாந்த் நல்லவரா? கெட்டவரா? ங்கிற முடிவுக்கு வர முடியாம திணறிட்டு இருக்கிறேன்.

இதுக்குள்ள பதினைந்து நிமிடத்திற்கு ஒரு தடவை...
விஜயகாந்த் படங்களில் இங்க்மர் பெர்க்மானின் சாயல், நவசினிமா ஹீரோயிசத்தில் எம்.ஜி.ஆரை விஞ்சியவரா? கொஞ்சியவரா? ன்னு, புத்திசீவி போஸ்ட் போடுற மார்க்சிய, சேயிச ஒலக சினிமா விமர்சகர்களை என்ன செய்யலாம், பிரண்ட்ஸ்!?

என்னவோ, எதுவோ...

பேஸ்புக்கில் மனுஷ்ய புத்திரனின் ‘உன்னை யாரும் அணைத்துக் கொள்ள வில்லையா? துன்பத்திலிருந்து மீட்ட விஜயகாந்த் எனக்கு செத்தும் கொடை கொடுத்த சீதக்காதி தான்!

•••

தேசிய திமுக தலைவர் மாதிரி, தேசிக்காய் தலையரும் போய்ச் சேர்ந்தாலும், அயோக்கியர்கள், கோமாளிகளை விட்டுப் போனாலும், காமெடிப் பீஸ்களையும் விட்டுப் போகத் தவறவில்லை.

ஒரு பக்கம்
சேரமான் துவாரகாவோட,
மற்றப் பக்கம்
ஞானதாஸ் காசிநாதர்
கில்மிஷாவோட!

இங்கால இன்னொரு புறத்தில
சர்வதேச தமிழர் பேரவை!
அங்கால 58 புலன் பெயர் தமிழர் அமைப்புகள்!

பத்தாக்குறைக்கு...
சிறிதரன், சுமந்திரன் வேற!

அதுக்குள்ள...
இடைக்குள்ள கிடைக்கிற
இடைவெளிக்குள்ள
சைக்கிள் ஓட்டுற
தையிட்டிப் போராளி
கஜேந்திரகுமார்!

இப்ப ஜனாதிபதி வேட்பாளர்
விக்கி ஐயா!

பிறகு எங்கட
பேஸ்புக் மறவர் படை!

ஒரு துவக்கோட
ஒரு தேசிக்காய் தலையர் வந்தா...

எல்லாம் சொன்னது கேட்கும்...
வாயைப் பொத்திக் கொண்டு!

வைரவர்களுக்கு நாய் வாய்ச்ச மாதிரி
நாய்களுக்கும் வைரவர்கள் வாய்ச்சிருக்கிறார்கள்.

நம்புங்கள் நாளை தமிழீழம் மலரும்!

அடே, இத்தனை நாளாய்
இருந்த மாதிரியே...
நாங்கள் துரோகிகளாகவே இருந்திட்டுப் போறம்.

இப்ப நீங்கள்
ஆள் மாறி மாறி துரோகி எண்டா...

யாழ்ப்பாணத்தில இருக்கிற
மின்கம்பங்கள் பத்தாது.

பிறகு எப்பிடியடா
தேசிக்காய் திரும்பி வந்து
எங்களுக்கு மண்டையில போடுறது?

# வாசிப்பும் யோசிப்பும்



## வ.ந.கிரிதரன்

**சங்கச் செய்யுள்**

**நண்டுவிடு தூது.**

சங்க காலத்துச் செய்யுள்கள் எப்பொழுதுமே என்னைப் பிரமிப்பில் ஆழ்த்துபவை. ஆறுதலாக அவற்றை அவ்வப்போது வாசித்து அனுபவிப்பதில் எனக்குப் பெரு விருப்புண்டு. பொதுவாக அவை என்னைக் கவர்வதன் காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்⁰ அவற்றில் காணப்படும் வளம் நிறைந்த சொற்செறிவு, கூர்ந்த நோக்கு மிக்க இயற்கை மீதான அவதானிப்பு, படைப்பாற்றல், கற்பனைச் சிறப்பு, மற்றும் அன்றைய கால கட்டச் சமுதாய அமைப்பு பற்றிய தகவல்கள். அண்மையில் வாசித்த சங்ககாலச் செய்யுளொன்று வாசித்தபொழுது என்னை மிகவும் கவர்ந்தது. அதன் மீதான யோசிப்பிண் விளைவுகளைச் சிறிது பகிர்ந்துகொள்ள விழைந்ததின் விளைவே இச்சிந்தனைக்குறிப்புகள். இந்தச் செய்யுளினை இயற்றியிருப்பவர் மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார். திணை⁰ நெய்தல். தன் காதலுக்குரிய தலைவனை நீண்ட காலமாகக் காணாத தலைவி, அவனுடன் திரிந்த இடங்களையெல்லாம் சென்று பார்த்து வருந்துகிறாள். அவனைக் காணாததால் ஏற்பட்ட துயர் அவளை வருத்துகிறது. தன் துயரை அவள் தன் காதலனுக்குத் தெரியப்படுத்துவதற்காக அவள் தெரிவு செய்த உயிரினம் ஆச்சரியத்தை விளைவிக்கிறது. நளன் தமயந்திக்கு அன்னத்தைத் தூது விட்டதை நாம் படித்திருக்கின்றோம். வெண் முகிலைத்தூதுவிட்ட தலைவிமாரைப் பார்த்திருக்கின்றோம். ஆனால் யாராவது நண்டினைத் தூது விட்டிருக்கின்றார்களா? அது பற்றிக் கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா? இந்தச் செய்யுளில் வரும் தலைவி அதனைத்தான் செய்திருக்கின்றாள். ஆம், நண்டினைத் தூது விடுகின்றாள்.



'கானலும் கழறாது கழியும் கூறாது

தேனிமிர் நறுமலர் புன்னையும் மொழியாது

ஒருநின் அல்லது பிறிதுயாது இலனே

இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்

கமழ்இதழ் நாற்றம் அமிழ்துனென நசைஇத்

தண்தாது ஊதிய வண்டினம் களிசிறந்து,

பறைஇய தளரும் துறைவனை, நீயே,

சொல்லல் வேண்டுமால் அலவ! பல்கால்

கைதையம் படுசினை எவ்வமொடு அசாஅம்

கடற்சிறு காக்கை காமர் பெடையோடு

**கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்**

**வெள்இறாக் கனவும் நள்ளென் யாமத்து**

**'நின்னுறு விழுமம் களைந்தோள்**

**தன்னுறு விழுமம் நீந்துமோ!' எனவே!**

இந்தக் கவிதையினை விளங்குவதற்கு இதற்கு ஏற்கனவே எழுதப்பட்ட உரைகளை ஒருமுறை வாசிக்கலாம். இச்செய்யுள் மீதான வாசிப்பினை அதுவே மிகவும் இலகுவாக்கும். அல்லாவிடில் இச்செய்யுள் கூறும் பொருளினைச் சரியாக அறிவது அவ்வளவு இலகுவாக இருக்கப் போவதில்லை. சங்கச்செய்யுள்களை அறிவதற்குத் தடையாக இருப்பவை அவற்றில் பாவிக்கப்பட்ட சொற்கள். அடுத்தது அதிகமாகப் பாவிக்கப்பட்ட தொகைச்சொற்கள். பல பாவிக்கப்பட்ட சொற்கள் இன்றைய காலகட்டத்தில் வேறான அர்த்தத்தில் பாவிக்கப்படலாம். தொகைச்சொற்களை விரித்துப் பார்க்கும்போது அவற்றுக்குப்பல்வேறு வகைகளில் பொருள்கொள்ளச் சாத்தியங்களிருக்கலாம்.

உதாரணமாக மேலுள்ள செய்யுளிலிலுள்ள 'கமழிதழ் நாற்றம்' என்னும் சொற்களைப் பார்ப்போம். இன்று நாம் நாற்றம் என்னும் சொல்லை அருவருப்பான துர் வாசனையை விபரிக்கப் பயன்படுத்துவோம். அந்த அர்த்தத்தில் நீங்கள் இந்தச் செய்யுளினை அணுகுவீர்களால் அதோகதிதான். பிழையான அர்த்தத்தையே நீங்கள் அடைவீர்கள். ஏனெனில் மேற்படி செய்யுளில் மணங்கமழும் நெய்தல் பூக்களின் நறுமணத்தை அமிழ்தமாகக் கருதி வண்டினங்கள் விருப்புடன் அவற்றை நாடிச் செல்வதற்கே இங்கு நாற்றம் என்னும் சொல் உரையாசிரியரின் கருத்துப்படி பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இன்னுமொரு இடத்தில் 'பறை இய தளரும் துறைவனை' என்று குறிப்பிடப் படுகிறது. பறை என்றால் நாம் அறிந்தது அது ஒரு தோற்கருவி. பெயர்ச்சொல். வினைச்சொல்லாகப் பாவிக்கும்போது பறைசாற்றினார் (பலருக்கும் அறிவித்தார் என்னும் பொருளில்) என்று கூறுவதும் எமக்குப் புரியும். பேச்சு வழக்கில் பறைந்தான் என்றும் பாவிப்பதுண்டு. அந்த அர்த்தத்தில் நாம் இங்குள்ள 'பறை இய தளரும் துறைவனை' என்னும் சொற்றொடரினை அணுகினால் தவறான அர்த்தத்தையே அடைவோம். நெய்தல் பூக்களின் நறுமணத்தால் அவற்றை நாடிய வண்டினங்கள் அப்பூக்களிலிருந்த பூந்தாதினை உண்ட களிவெறியில் பறப்பதற்கும் இயலாத நிலையில் தளர்ந்து கிடக்குமாம். அத்தகைய துறைக்கு உரியவனான தலைவனே அவன். இதனைத்தான் அச்சொற்றொடர் குறிப்பிடுகிறது. 'பறை இய' என்பது இங்கு பறத்தலைக் குறிக்கப் பயன்பட்டிருக்கின்றது. உரையாசிரியர்களின் கருத்தும் இதுவே.

மேலும் 'தண்தாது ஊதிய வண்டினம்' என்று வரும் சொற்றொடரினைக் கவனியுங்கள். இங்கு வரும் ஊதிய என்னும் பெயர் எச்சம் என்ன அர்த்தத்தில் வருகிறதென்று நீங்கள் கருதுகின்றீர்கள்? ஊதிய என்றால் வாயைக் குவித்து ஒலி எழுப்பிய என்றுதான் நாம் அர்த்தம்கொள்வோம். ஆனால் அந்த அர்த்தத்தில் அந்தச் சொல் இங்கு பாவிக்கப்படவில்லை. பூந்தாதினை உண்ட என்னும் அர்த்தத்தில் ஊதிய என்னும் சொல் இங்கு பாவிக்கப்பட்டுள்ளது. மேலும் இன்னுமோரிடத்தில் 'கோட்டு மீன் வழங்கும்' என்றொரு சொற்றொடர் வருகின்றது. இதற்கு உரையாசிரியர் புலியூர்க் கேசிகன் சுறா மீன் என்று பொருள் கொள்கின்றார். உண்மையில் ஏற்கனவே பல தமிழறிஞர்களால் இச்செய்யுள்களுக்கு உரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றை மிகவும் எளிமையாக கூறும் வகையிலான தெளிவுரைகளையே புலியூர்க் கேசிகன் எழுதியிருக்கின்றதாக நூலின் முகவுரையில் குறிப்பிட்டிருக்கின்றார். ஏனைய தமிழ் அறிஞர்களின் வழியொட்டி அவரும் இவ்விதமே பொருள்கொள்வதாகக் கருதலாம். 'வாட்சுறா வழங்கும் வளைமேய்' (குறுவழுதியாரின் செய்யுளொன்றில்) என்று சுறா என்றே பாவிக்கப்பட்ட செய்யுள்களுமுள்ளன. இந்நிலையில் கோட்டு மீன் ஏன் சுறாவைக் குறிப்பிட வேண்டும் என நீங்கள் வாதாடினால் அதுவொரு நல்லதொரு தர்க்கமாக இருக்கும். மேலும் பல செய்யுள்களை ஆராய்ந்து கோட்டு மீன் சுறா மீன் அல்ல என்று கூட நீங்கள் நிரூபிக்கலாம். சாத்தியங்களுள்ளன.

'அது சரி மேலுள்ள செய்யுள் நண்டு விடும் தூதினைக் குறிப்பிடுவதாகக் குறிப்பிடுகின்றீர்களே. நண்டு என்ற சொல்லினையே இந்தச் செய்யுளில் காணவில்லையே' என்று நீங்கள் கேட்பது என காதுகளில் விழுகின்றது. 'தண்தாது ஊதிய வண்டினம் களிசிறந்து, பறைஇய தளரும் துறைவனை, நீயே, சொல்லல் வேண்டுமால் - அலவ' என்று வரும் சொற்றொடரில் வரும் அலவ என்னும் சொல்லினைக் கவனியுங்கள். அலவனென்றால் உரையாசியர்களின் கூற்றுப்படி அது நண்டினையே குறிக்கின்றது. ஆக இந்தச் செய்யுளிலும் தலைவி 'நீயே சொல்லல் வேண்டுமால் அலவ' என்று கூறுவதன் மூலம், தன் துயரினைத் தலைவனுக்குத் தெரியப்படுத்துவதற்கு நண்டினைத் தூது விடுகின்றாள்.

மேலுள்ள செய்யுளில் கவிஞர் மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் 'தலைவி யாமப்பொழுதில் தலைவனைச் சந்தித்துத் தலைவனின் காம நோயினைத் தணித்தவள். இன்று அவன் பிரிவால், நினைவால் வாடுகின்றாள். அத்துயரினைத் தலைவனிடம் சென்று கூறும்படி நண்டினை வேண்டுகின்றாள்' என்ற கருத்துப்பட செய்யுளினை படைத்து இருக்கின்றார். நள்ளிரவைப் பற்றிக் கூறவந்த கவிஞர் அந்தயாமப்பொழுது எவ்விதம் இருக்குமென்று வர்ணிப்பதிலிருக்கிறது அவரது இயற்கை மீதான கூர்ந்த கவனிப்பு.

'கைதையம் படுசினை எவ்வமொடு அசாஅம்

கடற்சிறு காக்கை காமர் பெடையோடு

கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்

வெள்இறாக் கனவும் நள்ளென் யாமத்து‘

தாழை மரத்தின் தாழ்ந்த கிளைகளில் (கைதை - தாழைப் படுசினை - தாழ்ந்த கிளை) தம் விருப்பத்துக்குரிய பெடைகளோடு நள்ளிரவில் சுறாக்கள் மலிந்த ஆனால் வேட்டையாடுதலற்ற இடத்திலுள்ள வெண் இறால்களைப் பற்றிய கனவுகளில் ஆழ்ந்திருக்குமாம். அவ்விதமான நள்யாமத்துப் பொழுதுகளில் முன்பு தலைவி தலைவனை இரவில் சந்தித்து அவனது காம நோயினைத் தீர்த்து வைத்தவளாம். எப்படியெல்லாம் கவிஞர் இயற்கையை அவதானித்து தலைவியின் நிலையுடன் சம்பந்தப்படுத்தி அவளது நிலையினை வெளிப்படுத்துகின்றார்.


செய்யுளின் இறுதியில் வரும் கீழுள்ள வரிகளைக் கவனியுங்கள்

‘நின்னுறு விழுமம் களைந்தோள்

தன்னுறு விழுமம் நீந்துமோ‘

தலைவன் உற்ற காம நோயென்னும் துயரினைக் களைந்தவள் தலைவி. இன்று அவள் அவனது பிரிவால் அடையும் துயரினையும் நீந்திக் கடப்பாளோ? என்பதுதான் பொருள். இங்கு வரும் விழுமம் இன்று நாம் பாவிக்கும் விழுமங்கள் அல்லது விழுமியங்கள் அல்ல. துயரினையே இச்செய்யுளில் வரும் விழுமம் குறிக்கும். சங்கத்துச் செய்யுள்களை வாசிப்பதும் ,யோசிப்பதும் வாசிப்பை யாசிக்கும் நெஞ்சங்களுக்கொரு வரப்பிரசாதம்தான்.






***


**கவிஞர் கந்தவனத்துக்கு அகவை தொண்ணூறு!**

என் எழுத்துலக அனுபவத்தில் என் வாசிப்பனுபவத்துடன் பின்னிப்பிணைந்த இலங்கை எழுத்தாளர்களில் ஒருவர் கவிஞர் கந்தவனம். வெற்றிமணி சிறுவர் சஞ்சிகையில் நான் எழுதத்தொடங்கிய என் பால்ய பருவத்தில் அச்சஞ்சிகை மூலம் அறிமுகமானவர். பின்னர் எப்பொழுதும் இவரது படைப்பையோ அல்லது இவர் பற்றிய செய்தியையோ ஏதாவதொரு பத்திரிகையிலோ அல்லது சஞ்சிகையிலோ பார்த்து இருக்கின்றேன். வாசித்துமிருக்கின்றேன்.

இலங்கையில் இருந்தபோதும், போர்ச்சூழலால் இடம் பெயர்ந்து புகலிடம் நாடிக் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த போதும் இவர் தொடர்ந்து அயராமல் எழுதிக் கொண்டேயிருந்தார். இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்டேயிருந்தார். கவியரங்குகள் பலவற்றில் கலந்துகொண்டும், தலைமையேற்று நடத்தியுமிருப்பதால் இவரைப்பற்றிக் குறிப்பிடுகையில் ‘கவியரங்குக்கோர் கந்தவனம்‘ என்றும் அழைப்பார்கள். அயராது இலக்கிய உலகில் இயங்கிக்கொண்டிருந்த கவிஞர் தனது தொண்ணூறாவது வயதினைப் பூர்த்தி செய்த நிலையில், உடல் நலப்பாதிப்பால் வீட்டிலேயே சிறிதுகாலமாக இருந்து வருகின்றார். விரைவில் பூரண நலத்துடன் அவர் மீண்டெழ வேண்டுகின்றேன்.

அவரது ‘கவிதை மரபு‘ நூல், காந்தளகம் பதிப்பகத்தால் 2005இல் வெளியிடப்பட்ட நூல், மரபுக்கவிதை பற்றி அறியும் ஆவல் மிக்க எவருக்கும் உறுதுணையாக விளங்குமொரு வழிகாட்டி. அந்நூலை நூலகம் இணையத்தளத்தில் , அல்லது பதிவிறக்கி வாசிக்க முடியும்

இவரது கவிதைகளில் எனக்கு மிகவும் படித்த கவிதைகளாகக் ‘கீரிமலையினிலே‘, ‘பாடு மனமே பாடு‘ ஆகியவற்றைக் குறிப்பிடுவேன். யாழ் இலக்கிய வட்டம் அக்கவிதையையும் உள்ளடக்கிக் ‘கீரிமலையினிலே‘ என்னுமொரு தொகுப்பையும் (!969) வெளியிட்டுள்ளது. கவிஞர் கீரிமலை பற்றிய தன் எண்ணங்களைக் கவிதைகளாக்கியிருக்கின்றார். அக்கவிதைகளின் தொகுப்பே ‘கீரிமலையினிலே‘ கவிதைத் தொகுப்பு. இந்நூலுக்கான பதிப்புரையில் இதனையொரு காவியம் என்பார் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை. நூலுக்கு நல்லதோர்



அணிந்துரையினை எழுத்தாளர் சு.வே (சு.வேலுப்பிள்ளை) எழுதியிருக்கின்றார்.

கீரிமலையும் ,அதன் கேணியும் இலங்கைத் தமிழர்களின் வாழ்வுடன் பின்னிப்பிணைந்தவை. இக்கவிதை உணர்வுகள் கவிஞர் கந்தவனத்தின் உணர்வுகள் மட்டுமல்ல உங்கள் உணர்வுகளும்தாம்.

**'கீரிமலையினிலெ**
**நலந்தருங்**
**கேணி யருகினிலே**
**மாரி மழையதனால்**
**மலர்ந்தெழும்**
**மண்ணினைப் போலவுள்ளம் :**

**பூரித்து நிற்கையிலே**
**நினைவுகள்**
**பூத்துக் குலுங்கையிலே**
**தூரத் தொடர்ந்துசென்றேன்**
**சூழல் கடந்துநின்றேன்.'**

இவ்விதம் கீரிமலைக் கேணியருகில் கவிஞர் அதன் அழகில், அது பற்றிய நினைவுகளில் மெய்ம்மறந்து நிற்கிறார். இவ்விதம் தன்னை மறந்து நிற்கும் கவிஞர் ஈற்றில்

'கீரி மலையினிலே : நலந்தரும்
கேணி யருகினிலே
ஊருறங் கும்இருட்டில் : இருப்பதை
உற்றுணர்ந் தேயெழுந்தேன்'

என்று நனவுலகுக்கு மீள்கின்றார். இடைப்பட்ட பொழுதில் அவர் சிந்தையில் படந்த கீரிமலை பற்றிய உணர்வுகள், எண்ணங்களே 'கீரிமலையினிலே' காப்பியம்.

கவிஞர் கந்தவனத்தின் இன்னுமொரு முக்கியமான கவிதைத்தொகுப்பு 'பாடு மனமே' நுணாவிலூர்த் தமிழ் மன்ற வெளியீடு (1972). கவிஞரின் இருபது கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்புக்கு நல்லதோர் அணிந்துரையினை எழுதியிருக்கின்றார் பேராசிரியர் சு. வித்தியானந்தன். நூலுக்கு அழகிய அட்டையினை வரைந்திருக்கின்றார் ஓவியர் செள. (செளந்தரராஜன்). தொகுப்புக் கவிதைகளுக்கும் சித்திரங்கள் வரைந்திருக்கின்றார்.

கவிஞரின் மற்றுமொரு முக்கிய தொகுப்பு 'மணிக்கவிகள்' தாயகம் (கனடா) பத்திரிகை. சஞ்சிகையில் வெளியான இருவரிக் கவிதைகளின் தொகுப்பு. கவிஞரின் மணிவிழாக்குழு வெளியிட்ட தொகுப்பு (1994).

இந்நூலிலுள்ள கவித்துளிகள் சில

விரிவெளி யாண்டு வீரம் பேசிய
அரசியல் தானும் ஆட்டம் காணும்.

பதவியில் உயர்ந்தோர் பாடுவர் வாழ்த்துப்
பதவியை இழந்தால் ஓடுவர் பார்த்து.

வெட்ட வெட்டத் தழைக்கும் புல்லு
குட்டக் குட்டக் குனிவர் புல்லர்.

'ஒன்று பட்டாக் உண்டு வாழ்வு'
என்ற வாழ்வை இன்னும் காணோம்.

பிரச்சனை தீர்க்கும் பெருந்திற னில்லாப்
புரட்சிப் பேச்சுப் புளுகர் ஒழிக.

அலுவல் முடிக்க அடிக்கடி வருவார்
அலுவல் முடிந்த பின் அடிக்கவும் வருவார்.

நானே சொன்னேன் நானே செய்தேன்
நானே என்பார் நாளை நில்லார்.

ஊறு காய்க்கு நாவூ றல்போல்
ஊறும் நட்புக் குள்ளம் ஊறும்.

***

**அ.ந.கந்தசாமியின் 'மனக்கண்' நாவலும், 'குருட்டு வாழ்க்கை சிறுகதையும் சோபாகிளிஸ்ஸின் எடிப்பஸ் நாடகமும்!**

அண்மையில் செங்கை ஆழியான் தொகுத்திருந்த ஈழகேசரிச் சிறுகதைத்தொகுப்பில்எழுத்தாளர் அ.ந.கந்தசாமியின் ஆரம்பகாலச் சிறுகதையொன்றினை வாசிக்கும்



சந்தர்ப்பம்ஏற்பட்டது. அதன்தலைப்பு 'குருட்டு வாழ்க்கை' இதனைப்பற்றி முன்பும் அறிந்திருக்கின்றேன். ஆனால் வாசித்திருக்கவில்லை. இப்பொழுதுதான் முழுமையாக வாசிக்கக் கிடைத்தது. இது வெளிவந்தது ஈழகேசரியின் 17.05.1942 பதிப்பில். அ.ந.க பிறந்தது ஆகஸ்ட் 8, 1924. அதன் படி இச்சிறுகதை வெளியானபோது அ.ந.க.வுக்கு வயது பதினெட்டு. தொகுப்பிலுள்ள அ.ந.க பற்றிய குறிப்பில் அ.ந.க.வின் முதலாவது சிறுகதை அவரது பதினேழாவது வயதில் ஈழகேசரியில் வெளியானதென்றும், சிப்பி என்னும் புனை பெயரில் எழுதிய பகல் வெள்ளி என்னும் சிறுகதை 1941இல் பிரசுரமானதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சிறுகதை வெளியானபோது அ.ந.க. வின் வயது 17 என்பதால் அதுவே அவரது பிரசுரமான முதலாவது சிறுகதையாகவுமிருக்கக் கூடும். (அ.ந.க ஈழகேசரியின் மாணவர் பகுதியில் நிறைய எழுதியுள்ளார். அவைதாம் அவரது பிரசுரமான எழுத்துகள். அப்பகுதியிலும் அவரது சிறுகதையொன்று வெளியாகியுள்ளது. அது அவர் மாணவராக இருந்த சமயம் எழுதிய சிறுகதை).

இச்சிறுகதையின் கதைச்சுருக்கம் வருமாறு... கதைசொல்லியான ராமலிங்கம் நண்பன் சேகரனைப் பலவருடங்களுக்குப் பின்னர் சந்திக்கின்றான். அப்பொழுது அவன் குருடாகவிருக்கின்றான். அவன் தன் வாழ்வின் கதையைக் கூறுகின்றான். அப்பொழுது அவன் தான் இரு தடவைகள் குருடானதாகக் குறிப்பிடுகின்றான். அவன் செல்வந்தர் வீட்டுப்பிள்ளை. அவனது பாடசாலைக்கு அண்மையிலிருந்த பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த அட்வகேட் ஒருவரின் மகளான ராஜம்மாவை அவன் காதலிக்கின்றான். இதனை அவன் நண்பனான ராமலிங்கத்திடம் கூடக் கூறவில்லை. பின்னர் படிப்பு முடிந்து கிராமத்துக்குத் திரும்பியதும் பெற்றோரிடம் இது பற்றிக் கூறுகின்றான். அச்சமயம்

ஊரில் பரவிய அம்மை சேகரனுக்கும் தொற்றி விடுகின்றது. அதனால் அவன் கண்பார்வை போய்விடுகின்றது. கண் பார்வை போய்விட்ட சேகரனுக்கு ராஜம்மாவைப் பெண் கொடுக்க அவளது பெற்றோர் மறுத்துவிடுகின்றனர். இதனைக் கேள்விப்பட்ட சேகரன் மனமொடிந்து விடுகின்றான். அவனது பெற்றோரோ அவனுக்கு இன்னுமொரு பெண்ண மணம் முடிக்க முயற்சி செய்கின்றனர். சேகரனோ அதற்குச் சம்மதிக்கவில்லை. இதனால் ராஜம்மாவின் பெற்றோர் சம்மதித்து விட்டதாகப் பொய் கூறி இன்னுமொரு பெண்ணை அவனுக்கு மணம் செய்து வைக்கின்றனர். அந்தப்பெண்ணும் அவனது மனக்கண்ணாக விளங்கி அவனுடன் அன்பாக வாழ்ந்து வருகின்றாள்.

இவ்விதம் வாழ்க்கை சென்று கொண்டிருக்கையில் சேகரனின் நண்பன் வரதன் புகழ்பெற்ற ருஷ்ய கண் வைத்தியர் ஒருவர் பற்றிக் கூறுகின்றான். அவரது உதவியால் சேகரனுக்குக் கண்பார்வை வந்துவிடுகின்றது. ஆனால் பார்வை வந்ததும் தான் அதுவரை ராஜம்மா என்று நம்பிய மனைவி அவளல்ல என்ற உண்மை தெரிகின்றது. குருடனாக இருந்தபோது அன்பு மனைவியுடன் இன்பமாக வாழ்ந்ததைப்போல் பார்வை வந்ததும் அவனால் வாழ முடியவில்லை. அதன் காரணமாகவே தன் கண்களைக் குருடாக்கி மீண்டும் அவளுடன் வாழ்கின்றான். இதுதான் கதைச்சுருக்கம். இது அ.ந.க.வின் ஆரம்பகாலச் சிறுகதை. வயதுக்குரிய உணர்வுகளை வெளிப்படுத்தும் சிறுகதை.

அ.ந.க.வின் புகழ்பெற்ற நாவலான 'மனக்கண்' நாவலைப்படித்த எவரும் இச்சிறுகதையைப் படித்ததும் ஒன்றினை மிகவும் தெளிவாக உணர்வார்கள். இச்சிறுகதையையே விரித்து மனக்கண் என்னும் நாவலாக அ.ந.க எழுதியிருக்கின்றார் என்பதுவே அப்புரிதல். மனக்கண்ணில் இரண்டாவது தடவையாகப் பார்வையினை இழந்த நாயகனுக்கு மூன்றாம் தடவை பார்வை கிடைக்கின்றது. அது அவனது தந்தையின் தியாகத்தால் அவனுக்குக் கிடைக்கின்றது. தன் கண்களை அவனுக்கு வழங்கி அவர் இறந்து விடுகின்றார். இது சிறுகதையில் இல்லாதது.

மனக்கண் நாவலின் கதைச்சுருக்கமென்ன?

நாவல் கூறும் கதை இதுதான்: ஸ்ரீதர் இலங்கையின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான சிவநேசர், பாக்கியம் தம்பதியினரின் ஒரே மகன். கொழும்பில் அவர்களுக்குச் சொந்தமான 'கிஷ்கிந்தா' மாளிகையில் தங்கி, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவன். அவனது அறை நண்பனாகத் தங்கியிருப்பவன் சுரேஷ். 'கொழும்புப் பல்கலைகழகத்தில் மருத்துவ பீடத்தில் படிப்பவன். சுரேஷின் படிப்புக்கு உதவி செய்பவர் அவனது மாமா. இதற்குக் காரணம் தனது மகளை 'டாக்டர்' சுரேஷுக்கு மணமுடித்து வைப்பதென்ற எண்ணம்தான். இதற்கிடையில் நாடகங்களில் நடிப்பதில் ஆர்வமுள்ள ஸ்ரீதர்க்கும் அவனுடன் கல்வி பயிலும் சக மாணவியான பத்மாவுக்குமிடையில் காதல் ஏற்படுகிறது. பத்மா மிகவும் அழகானவள். அவளது தந்தையான பரமானந்தரும் வாத்தியாரே.

பத்மாவுக்கும், ஸ்ரீதர்க்குமிடையில் காதல் முகிழ்க்கிறது. ஏற்கனவே அவன் பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சார்ந்தவென்பதால் அவனுடன் பழகுவதற்கே சக மாணவர்கள் தயக்கம் கொள்வார்கள். இந்நிலையில் சாதாரண ஆசிரியர் ஒருவரின் மகளான பத்மாவை மணப்பதற்கு முடிவு செய்கின்றான் ஸ்ரீதர். தான் மிகவும் புகழ்பெற்ற தமிழ்க்குடும்பத்தைச் சேர்ந்தவென்று கூறி விட்டால் எங்கே பத்மா தன்னை நிராகரித்து விடுவாளோ என்று பயந்த ஸ்ரீதர் தன் குடும்பப்பெருமையினை மறைத்து அவளுடன் பழகுகின்றான். இதற்கிடையில் ஸ்ரீதரின் கிராமத்தில் வசிக்கும் தங்மணி என்பவள் பத்மாவும், ஸ்ரீதரும் காதலர்களாகத் திரிவதைக் கண்டு பொறாமை கொண்டு சிவநேசருக்கு ஒரு




மொட்டைக் கடிதமொன்றினை எழுதி விடுகின்றாள்.

ஸ்ரீதரின் தந்தையான சிவநேசரோ சாதி, அந்தஸ்து பார்க்கும் மனிதர். தன் அந்தஸ்துக்குகந்த மணப்பெண்ணாக தன்னையொத்த பணக்காரரான கந்தப்பரின் மகளான டாக்டர் அமுதாவை ஸ்ரீதருக்குக் கட்டி வைக்கத்திட்டமிடுகின்றார். ஊர் வரும் ஸ்ரீதருக்கு திடீரென்றேற்பட்ட கண் நோய் காரணமாக இரு கண்களின் பார்வையும் போய் விடுகின்றது. அவனது பார்வை போய் விட்டதையறிந்த அம்பலவாணர் தன் மகளை ஸ்ரீதருக்குக் கொடுப்பது என்றிருந்த முடிவினை மாற்றி விடுகின்றார். ஏற்கனவே தனக்கு ஸ்ரீதர் பொய் கூறிவிட்டதால் சிறிது ஆத்திரமுற்றிருந்த பத்மாவும் அவனை நிராகரித்து, கட்டழகான கமலநாதன் என்பவனைத் திருமணம் செய்ய விரும்புகின்றாள்.

இதற்கிடையில் இரு கண்களினதும் பார்வையை இழந்த ஸ்ரீதர் பத்மாவை நினைத்து ஏங்கி, வருந்துகின்றான். மகனின் வேதனையைத் தாங்காத சிவநேசரின் மனம் மாறுகின்றது. பத்மாவின் வீட்டுக்குச் செல்லும் சிவநேசரிடம் குருடான ஸ்ரீதரை மணமுடித்துத் தனது வாழ்க்கையைச் சிதைக்க முடியாதென்று கூறி

அவரை மறுத்துத் திருப்பி அனுப்பி விடுகின்றாள் பத்மா. பத்மாவின் பதிலினைக் கூறினால் ஸ்ரீதர் மிகவும் மனம் வருந்துவானெயென்று நினைத்து என்ன செய்வதென்று யோசிக்கின்றார். இதற்கிடையில் கிளார்க்கர் நன்னித்தம்பியாயின் மகளான சுசீலா ஸ்ரீதரின் நிலையினை உணர்ந்து அவனைத் திருமணம் செய்வதற்கும், பத்மாவின் மேல் கொண்ட காதலால் துயரத்திலாழ்ந்திருக்கும் ஸ்ரீதர் முன் பத்மாவாக நடிப்பதற்கும் சம்மதிக்கின்றாள். அவளை உண்மையாகவே பத்மாவாகக் கருதிவிடும் ஸ்ரீதருக்கும், சுசீலாவுக்குமிடையில் தோன்றிய உறவின் விளைவினால் அவர்களுக்கு ஆண்குழந்தையொன்றும் பிறந்து விடுகின்றது. முரளி என்பது அவன் பெயர்.

இதற்கிடையில் கண் வைத்திய நிபுணரொருவரின் உதவியால் பார்வையைபெறும் ஸ்ரீதர் தனக்கு நேர்ந்த ஆள்மாறாட்ட அனுபவத்தைக் கண்டு, தான் வெறுக்கும் சுசீலாவுடன் தொடர்ந்தும் வாழ்வேண்டுமென்றால் தன் பார்வை இருக்கும் மட்டும் அது முடியாது என்று 'தன் கண்களைக் குத்தி மீண்டும் அந்தகனாகி விடுகின்றான். ஆரம்பத்தில் சுசீலவை வெறுக்கும் ஸ்ரீதர் பின்னர் உண்மை நிலை அறிந்து, பத்மா குருடனான தன்னை மணமுடிக்க மறுத்ததையும், அவளிடம் மகனை மணக்கும்படி கேட்டு அவமானப்பட்ட தன் பெற்றோருக்கேற்பட்ட அனுபவத்தையும் அறிந்து அவளை விரும்பத் தொடங்குகின்றான். சிவநேசரோ இறுதியில் தன்னை அழித்துத் தன் கண்களை அந்தகனான மகனுக்கு வழங்கி அவனுக்குப் புது வாழ்வினைக் கொடுக்கின்றார்.

### சோபாகிளிஸ்ஸுன் எடிப்பஸ் நாடகப்பாதிப்பு!

மனக்கண்ணில் சோபாகிளிஸ்ஸின் எடிப்பஸ் நாடகம் பற்றியும் வருகின்றது.

ஸ்ரீதர் திறமையான ஓவியன், அத்துடன் நல்லதோர் நடிகனுமாவான். புகழ்பெற்ற கிரேக்க நாடகாசிரியனான சோபாகிளிஸ்ஸுன் புகழ்பெற்ற நாடகமான எடிப்பஸ் நாடகத்தைத் தமிழில் எழுதி, எடிப்பஸ் பாத்திரத்திலும் மிகவும் சிறப்பாக நடிக்கின்றான். நாடகத்தில் வரும் எடிப்பஸ் தந்தையென்று தெரியாது தந்தையைக் கொன்று, தாயென்று தெரியாது அவளையும் மணந்து பிள்ளைகளையும் பெற்றுக்கொள்கின்றான். பின் உண்மை தெரிய வரவே தன் கண்களைக் குத்தித் தன்னைக் குருடாக்கிக் கொள்கின்றான். இந்த நாடகம் முதலில் கொழும்பு பல்கலைக் கழகத்திலும், இரண்டாவது தடவை யாழ் இந்துக் கல்லூரியிலும் நடைபெறுவதாகச் சம்பவங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. சோபாகிளிஸின் எடிப்பஸ் நாடகத்தின் மூலம் அ.ந.க நாவலின் நாயகனான ஸ்ரீதருக்கு ஏற்படவிருக்கும் நிலையினைக் குறிப்பாகக் கூறி விடுகின்றாரென்றுதான் கூற வேண்டும். எடிப்பஸ் போலவே ஸ்ரீ தரும் இழந்த பார்வை பெற்றதும், தனக்குத் தன் காதலியென்ற பெயரில் இன்னொருத்தியைக் கட்டி வைத்துள்ளார்கள் என்பதை அறிந்து, தன்னிரு கண்களையும் குத்தி மீண்டும் குருடனாகி விடுகின்றான். எடிப்பஸ் நாடகத்துக்கும், மனக்கண் நாவலுக்குமிடையிலுள்ள முக்கியமான ஒற்றுமை ஆள் மாறாட்டத்தின் விளைவாகவே இருவரும் தம் கண்களைக் குத்திக் குருடாகி விடுகின்றார்கள் என்பதுதான். எடிப்பஸ்ஸுக்கும் தன் தந்தை, தாய் யார் என்ற உண்மை நிலை தெரியாத நிலையில் அவனை மீறிச் சம்பவங்கள் நிகழ்ந்து விடுகின்றன. ஸ்ரீதரின் வாழ்விலும் அவன் குருடனாகிய நிலையில் அவன் அறியாத நிலையில் அவன் வாழ்விலும் ஆள் மாறாட்டம் நிகழ்ந்து சுசீலாவைப் பத்மா என்று கூறி அவனுக்குத் திருமணம் செய்து வைத்து விடுகின்றார்கள்.

குருட்டு வாழ்க்கை, மனக்கண், எடிப்பஸ் இவற்றிலுள்ள முக்கியமான ஒற்றுமை கதை நாயகன் தன் பார்வையைத் தானே கெடுத்துக் குருடாகி விடுவதுதான். இவற்றைப் பார்க்கும்போது எனக்கு அ.ந.க.வை மேற்படி எடிப்பஸ் நாடகம் நிறையவே பாதித்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. மிகவும் இள வயதிலேயே அவரது தீவிர வாசிப்பு காரணமாக அவர் பல மேனாட்டு இலக்கிய நூல்களைப் படித்திருக்கின்றார். அவற்றில் ஒன்றுதான் சோபாகிளிஸின் புகழ்பெற்ற நாவலான எடிப்பஸ் நாடகமும். அதில் வரும் குருடனாகும் சம்பவம் அவர் மனத்தில் ஏற்படுத்திய பாதிப்பின் விளைவாக அவர் உருவாக்கிய கற்பனைச் சித்திரங்களே மேற்படி குருட்டு வாழ்க்கை சிறுகதையும், மனக்கண் நாவலும் என்றும் தோன்றுகின்றது.

### நினைவு கூர்வோம்

### நவீன வானியற்பியலின் தந்தை ஆல்பேர்ட் ஐன்ஸ்டைன்!

அறிவியல் அறிஞர் ஆல்பேர்ட் ஐன்ஸ்டைன் நவீன வானியற்பியலின் தந்தை. இவரது சிறப்பு மற்றும் பொதுச் சார்பியற் தத்துவக் கோட்பாடுகள் அதுவரை நிலவி வந்த இப்பிரபஞ்சம் பற்றி நிலவி வந்த அறிவியற் கோட்பாடுகளை ஆட்டங்காண வைத்தவை. வானியற்பியல் மற்றும் குவாண்டம் இயற்பியல் ஆகிய துறைகளில் இவரது பங்களிப்பு மகத்தானது. இக்கோட்பாடுகள் நவீன பௌதிகத்தைத் தாங்கிப்பிடிக்கும் தூண்கள்.


இவரை நான் முதன் முதலில் அறிந்துகொண்டது என் பால்ய பருவத்தில். ஆனால் அப்போது இவரது சாரபியற் கோட்பாடுகளை அறிந்துகொள்ளவில்லை. அவற்றைப் புரியும் வயதுமில்லை. அப்பருவத்தில் அப்பா ஒரு ஒட்டுப்புத்தகம் (Scrap Book) எனக்குத் தயாரித்துத் தந்திருந்தார். அவற்றில் உலகின் முக்கியமான ஆளுமைகள் சிலரின் புகைப்படங்கள், முக்கிய இடங்கள் என்று பல புகைப்படங்களிருந்தன. அவற்றிலொன்று ஆல்பேர்ட் ஐன்ஸ்டைனின் புகைப்படம். நினைவில் நிற்கும் இன்னுமொரு புகைப்படம் யப்பானின் பாதாள இரயில் (Subway)

நிலையப்புகைப்படம்.

பின்னர் இவரது புகழ்பெற்ற சக்திக்கும் பொருளுக்கும் இடையிலான தொடர்பினை விளக்கும் ($E=mc^2$) சூத்திரத்தை என் பதின்ம வயதுகளில் யாழ் பொதுசன நூலகத்திலிருந்து பெற்ற அறிவியல் நூல்களிலொன்றான 'பௌதிகத்தின் வரலாறு' (ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட நூல்) என்னும் நூலின் மூலம் அறிந்து கொண்டேன்.

பின்னர் என் இளமைப்பருவத்தில் வானியற்பியல் பற்றிய பல ஆங்கில நூல்களை வாசிக்கத் தொடங்கியபோது இவரது சார்பியற் தத்துவம் கோட்பாடுகள் கூறும் வெளி, நேரம், புவியீர்ப்பு பற்றிய விளக்கங்களை அறிந்து பிரமிப்படைந்தேன். அன்றிலிருந்து என் அபிமானத்துக்குரிய முதலிடத்திலிருக்கும் அறிவியல் அறிஞராக இவர் மாறினார்.

மானுட இருப்பின் உறைவிடமாக விளங்கும் பிரமாண்டமான, விரியுமிந்தப் பிரபஞ்சம் பற்றிய, அணுச்சக்தி பற்றிய கோட்பாடுகளுக்காக இவரை நினைவு கூர்வோம். அறிவியலுடன் நின்று விடாமல், தனது சமூக,அரசியல் சிந்தனைகளையும் அவ்வப்போது வெளிப்படுத்தியவர் ஆல்பேர்ட் ஐன்ஸ்டைன். அதற்காகவும் அவரை நினைவு கூர்வோம்.•••



**என் பார்வையில்**
**வரதன் கிருஷ்ணாவின்**
**'வெந்து தணியாத பூமி'**

நண்பர் எல்லாளன் தந்திருந்த நூல்களிலொன்று 'சமாதானத்திற்கான ஸ்ரீலங்கா சார்புக் கனேடியர்கள்' அமைப்பு வெளியிட்டிருந்த மலையகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளரும், முன்னாட் விடுதலைப் போராளியுமான வரதன் கிருஷ்ணா எழுதிய 'வெந்து தணியாத பூமி' என்னும் சிறு நூல். இந் நூலை வாசித்தபோது ஒன்று புரிந்தது. இது தொட்டிருக்கும் விடயம் தற்போதுள்ள சூழலில் மிகவும் முக்கியமானதொன்று. இது ஆற்றியிருக்கும் பணியும் முக்கியமானது. காலத்தின் தேவை.




நூலாசிரியரான வரதன் கிருஷ்ணாவின் இயற்பெயர் ஆறுமுகம் வரதராஜா. புசல்லாவைத் தேயிலைத் தோட்டமொன்றில் பிறந்து வளர்ந்தவர். சிந்தாமணி, தினகரன், வீரகேசரி, சுடர் ஒளி, உதயன் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர். பாலகுமார் தலைமையிலான ஈரோஸ் அமைப்பில் இணைந்து இயங்கியவர். பாலகுமார் இவருக்கு வரதன் என்று பெயர்

வைத்தார். ஈரோஸ் அமைப்பின் மூத்த போராளிகளில் ஒருவரான கிருஷ்ணா அவர்களின் பெயரை, அவரது மறைவுக்குப் பின்னர் தன் பெயரான வரதனுடன் இணைத்துக் கொண்டார். அதன் காரணமாகவே வரதன் கிருஷ்ணா என்று அழைக்கப்படத்தொடங்கியவர்.

இச்சிறு நூல் விரிவான ஆய்வு நூலல்ல. ஆனால் இத்துறையில் ஆய்வினை மேற்கொள்ள விரும்பும் எவரும் படிக்க வேண்டிய நூல்களிலொன்று. கூடவே மலையக மக்களின் உரிமைப்போராட்ட வரலாற்றை, இலங்கைத் தமிழர்களின் உரிமைப்போராட்ட வரலாற்றில் மலையக மக்களின் பங்களிப்பைச் சுட்டிக்காட்டும் நூல் என்ற வகையிலும் முக்கியமானது.

பொதுவாக மலையகத்தமிழ் மக்களின் அரசியலைத் தனியாக வைத்துப்பார்ப்பதும், அது மலையக அரசியல்வாதிகளால் முன்னெடுக்கப்படும் ஒன்று என்று கருதுவதும் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழர்களின் சிந்தனைப்போக்கு. ஆனால் இந்நூலினை வாசிக்கும் எவரும் அச்சிந்தனையிலிருந்து நிச்சயம் விடுபடுவர். எவ்வளவு தூரம் மலையகத்தமிழ் மக்கள் இலங்கைத் தமிழர்களின் போராட்டத்தில் தம் பங்களிப்பை ஆற்றியிருக்கின்றார்கள் என்பதை இந்நூல் தெளிவாகப் புரிய வைத்திருக்கின்றது. நாடு சுதந்திரமடைந்திருந்த போது வாக்குரிமை, பிரசாவுரிமை பெற்றிருந்த மலையகத்தமிழர்களின் அவ்வுரிமைகள் நாட்டின் முதற் பிரதமரான டீ.எஸ்.சேனநாயக்க அரசால் பறிக்கப்பட்டது. ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் துணை நின்றது. சூழ்நிலை இவ்விதமிருந்தும் மலையகத்தமிழ் மக்கள் இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்திருக்கின்றார்கள். அது முக்கியமாக நினைவு கூரப்பட வேண்டியதொன்று.

இச்சிறு நூல் பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்துகிறது. அதன் காரணமாகப் பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் மிக்க தகவல்களைத் தருகின்றது. அவற்றில் முக்கியமானவற்றைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1.மலையகத்தமிழ் மக்களின் அசியல் வரலாற்றை, அரசியல் கட்சிகளின் பரிணாம வரிலாற்றை வெளிப்படுத்துகிறது. இலங்கை இந்திய காங்கிரஸ். அதிலிருந்து உருவான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசியக் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தந்தை செல்வா ஆரம்பித்த கட்சியும் தோல்வியில் முடிந்த அதன் வரலாறும் பற்றிய தகவல்கள்.

2. இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கும், மலையகத் தமிழர்களுக்குக் கட்டடக் கலைஞர் டேவிட் ஐயா , மருத்துவர் இராசசுந்தரத்துடன் இணைந்து உருவாக்கிய 'காந்தியம்' அமைப்பின் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள்.

3. இலங்கைத் தமிழர் விடுதலைக்காக ஆயுதமேந்திய ஈரோஸ், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் ஆயுதப் போராட்டச் செயற்பாடுகள், மற்றும் இந்திய சமாதானப்படையினரின் காலத்தில் அவற்றின் ஆயுதத்துடன் கூடிய அரசியற் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள்.

4. ஈரோஸ் அமைப்பின் மலையகத்தில் நிகழ்த்தப்பட்ட ஆயுதரீதியிலான தாக்குதல் முயற்சிகள் பற்றிய தகவல்கள்.

5. ஈரோஸ் அமைப்பில் இணைந்த மலையக இளைஞர்களின் இலங்கை, இந்தியாவில் ஆயுதப்பயிற்சிச் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள்.

6. ஆரம்பத்தில் முதலாளிகளும், செல்வம் மிக்க வர்க்கத்தினரின் கைகளில் எடுக்கப்பட்ட மலையகத்தமிழ் மக்களின் அரசியல் மற்றும் கலை,இலக்கியச் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள்.

7. ஸ்ரீமா அம்மையாரின் காலத்தில் திட்டமிட்டு உரிமைகள் பறிக்கப்பட்ட மலையகத்தமிழர்களின் நிலை, காணிச்சுவீகரிப்பு (அவரின் உறவினரின் நலன்களை முன்னிட்டு) செயற்பாடுகள், எதிர்த்துப்போராடிய, பலியாகிய மலையக மக்கள் பற்றிய தகவல்கள், மற்றும் காலத்துக்காலம் இவ்விதமாகப் போராடியவர்கள், போராட்டச் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள்.

8. சண்முகதாசன் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட முரண்பாடுகள் அடிப்படையில், இந்திய நக்சலைட் பாணியில் உருவாகிய மலையக மக்களின் ஆயுதப்போராட்ட அமைப்பான 'கீழைக்காற்று இயக்கம்' பற்றியும், அதன் முடிவு பற்றியுமான தகவல்கள்.

9. தென்னிலங்கைச் சிறைகளில் வைக்கப்பட்ட மலையகத்தமிழ் இளைஞர்கள் பற்றிய தகவல்கள். சிறைக்கைதிகள் மீது புரியப்பட்ட வன்முறைகள் பற்றிய தகவல்கள்.

இவ்விதம் கூறிக்கொண்டே செல்லலாம். இவ்விதம் மலையகத்தமிழ் மக்களின் சமூக, அரசியல் மற்றும் கலையிலக்கியச் செயற்பாடுகளைப்பதிவு செய்யும் நூலில் அவை மேலோட்டமாகத் தகவல்களாகத்தாம் பதிவு செய்யப்பட்டுள்ளன. விரிவான ஆவுகளின் அடிப்படையில் அவை பதிவு செய்யப்படாவிட்டாலும் , ஒரு காலகட்டத்தில் இவ்விதமான போராட்ட நடவடிக்கைகளில் செயற்பட்ட ஒருவரின் வாக்குமூலம் என்னும் அடிப்படையில் இந்நூலுக்கு முக்கியத்துவமுண்டு. இவற்றின் அடிப்படையில் விரிவான ஆய்வு நூலொன்று எழுதவதற்கான தேவையினை இச்சிறுநூல் வலியுறுத்தி நிற்பதுடன் , ஆரம்பித்து வைத்திருக்கின்றதென்றும் கூறலாம்.


அதே சமயம் சில விடயங்களைச் சுட்டிக்காட்டவும் வேண்டும். வெண் சுவரில் கரும் புள்ளியென இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலொன்று என் கவனத்தை ஈர்த்தது. அது இந்நூலின் பக்கம் 40இல் வெளியாகியுள்ளது.

'காந்தியம் உருவாகக் காரணகர்த்தாவாக இருந்தவர் வைத்தியர் ராஜசுந்தரம்'

இது தவறான கூற்று. காந்தியச் சிந்தனைகள் கட்டடக்கலைஞர் டேவிட் ஐயாவுக்கு அறுபதுகளிலேயே இருந்தது. அதற்காகவே அவர் நாவலர் பண்ணையை வாங்கி வைத்திருந்தார். அதுவே எழுபதுகளில் காந்தியப் பண்ணைகலிலொன்றாக உருவெடுத்தது. அதனால்தான் காந்தியம் என்னும் பெயர் அமைப்புக்குச் சூட்டப்பட்டது. நூலிலுள்ள இக்கூற்றிலுள்ள முக்கியமான தவறு டேவிட் ஐயாவின் பெயரைக்குறிப்பிடாமல் மறைத்திருப்பது. டேவிட் ஐயாவுடன் இணைந்து வைத்தியர் காந்திய அமைப்பில் இயங்கினார் என்றால் அது பொருத்தமான கூற்றாகவிருந்திருக்குமென்பது என் அபிப்பிராயம்.

இத்தருணத்தில் இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மலையகத்தைச் சேராத தமிழ் எழுத்தாளர்கள் பலர் குறிப்பாக எழுத்தாளர்களான நந்தி, புலோலியூர் சதாசிவம், ஞானம் சஞ்சிகையின் ஆசிரியரான தி.ஞானசேகரன், இலங்கை முற்போக்கு இலக்கிய முன்னோடிகளிலொருவரான அறிஞர் அ.ந.கந்தசாமி, அ.செ. முருகானந்தன் போன்றோர் தமது படைப்புகள் மூலம் மலையக இலக்கியத்துக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளனர். அவற்றையும் நினைவு கூர்ந்திட வேண்டும். கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியரும் , எழுத்தாளருமான அந்தனி ஜீவா அவர்கள் தனது அ.ந.க பற்றிய, தினகரனில் வெளியான ‘சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன்‘ தொடரில் பின்வருமாறு குறிப்ப்பிடுவார்:

‘கம்யூனிஸ்ட கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றிய காலத்தில் அ.ந.கந்தசாமி தொழிற்சங்க இயக்கங்களில் பெரும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். மலையகத்தின் எல்பிட்டி என்னுமிடத்தில் சிலகாலம் தோட்டத் தொழிலாளர்கள் பிரதிநிதியாகக் கடமையாற்றினார். உழைப்பையே நம்பி வாழும் தோட்டத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டித் தீவிரமாக உழைத்தார். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டார். அ.ந.கந்தசாமி மலைநாட்டு உழைக்கும் தொழிலாளர்கள் மீது எப்பெளழுதும் பெருமதிப்பு வைத்திருந்தார். தொழிலாளர்களின் உரிமைப் போராட்டத்தில் முன்னின்று உழைத்துள்ளார். அவர்களின் உரிமைக்காகத் தோட்ட நிர்வாகத்தினரிடம் நியாயம் கோரியுள்ளார்.... . ‘இனிமேல் தான் நான் நாவல் துறையில் அதிக அக்கறை காட்டப் போகின்றேன்‘ எனக் குறிப்பிட்டார். மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிகழ்சிகளை வைத்து ‘களனி வெள்ளம்‘ என்ற நாவலை எழுதிக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். ‘களனி வெள்ளத்திற்கு‘ முன்னால் கால வெள்ளம் அவரை அடித்துச் சென்று விட்டது. ‘நாவல் துறையில் காட்டப்போகும் அதே அக்கறையை உங்கள் உடல் நிலை பற்றியும் காட்டுங்கள்‘ என்றேன். கடும் நோயின் பாதிப்புக்கிடையில் அ.ந.க கணிசமான அளவு எழுதியது வியப்புக்குரியது..... தொழிலாளியாக வாழ்ந்த அவரது சொந்த அனுபவமே, அவரது கதைகளுக்கு உயிரூட்டிற்று என்று விமர்சகர்கள் கூறுவது போல் தொழிற்சங்கவாதியாகச் சிலகாலம் இருந்த அ.ந.க. தோட்டத் தொழிலாளர்களுடன் இரண்டறக் கலந்து அவர்களின் துன்ப, துயர்களை உணர்ந்ததால்,




தோட்டத் துரைமார்களின் அதிகாரங்களை நேரில் கண்டதால் அவைகளைத் தமது சிறுகதைகளில் தத்ரூபமாகச் சிருஷ்ட்டித்தார் என்றே கூறவேண்டும்.‘

அ.ந.கந்தசாமியின் ‘நாயினுங் கடையர்‘ அவர் காலப் படைப்பாளி அ.செ.முருகானந்தனின் ‘காளி முத்துவின் பிரஜா உரிமை‘ , அ.ந.க கவீந்திரன் என்னும் பெயரில் கே. கணேஷ், கே.ராமநாதன் வெளியிட்ட ‘பாரதி‘ சஞ்சிகையில் எழுதிய ‘தேயிலைத் தோட்டத்திலே..‘ போன்ற கவிதைகள் முக்கியமானவை. இதுபோல் மலையகப்படைப்பாளிகள் பலர் குறிப்பாகத் தெளிவத்தை ஜோசப், ‘கொழுந்து அந்தனி ஜீவா, ‘நந்தலாலா ஜோதிகுமார், திறனாய்வாளர் மு. நித்தியானந்தன் போன்றோர் ஆற்றிய பங்களிப்புகள், தீர்த்தக்கரை போன்ற சஞ்சிகைகள் ஆற்றிய பங்களிப்புகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கலாம். எதிர்காலததில் இத்துறையில் நூல்கள் எழுத விரும்புவோர் இவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டியதன் அவசியம் காரணமாக இவற்றை இங்கு குறிப்பிட்டேன்.

மொத்தத்தில் வரதன் கிருஷ்ணாவின் ‘வெந்து தணியாத பூமி‘ இன்னும் வெந்து தணியாத பூமியாக‘க் கிடக்கும் மலையகத்தின் ஆணி வேர்களான மலையகத்தமிழ் மக்களின் வரலாற்றைப்பதிவு செய்யும் முக்கியமானதொரு நூல்.

***

**நூல் அறிமுகம் பறவைகள்! எழுதியவர்**

**மறவன்புலவு க.சச்சிதானந்தன்.**

அண்மையில் நான் வாசித்த ‘பறவைகள்‘ பற்றிய புத்தகம் என்னை மிகவும் கவர்ந்த புத்தகங்களில் ஒன்றாக மாறிவிட்டது. வெறும் தகவல்களை உள்ளடக்கியதோர் அறிவியற் நூலாக அமையாமல், இலக்கியத்தரமுள்ள, நெஞ்சை ஈர்க்கும் சுவையான மொழியில் எழுதப்பட்ட கட்டுரைகளை நூலாக அமைந்துள்ளது.. இயற்கையின் வனப்பை மண் வாசனையுடன் விளக்கும்

வகையிலான மொழிநடையில் எழுதப்பட்டுள்ளதால் , வாசிப்பவர் எவரையும் முதல் வாசிப்பிலேயே கவர்ந்துவிடும். வாசகரும் எழுத்தில் விரியும் இயற்கையெழிலில் மூழ்கி விடுவார்.

பறவைகளைப்பற்றி 23 கட்டுரைகளை உள்ளடக்கிய தொகுப்பில் போதுமான அளவுக்கு பறவைகள், அவற்றின் கூடுகளை வெளிப்படுத்தும் சித்திரங்களும் இடம் பெற்றுள்ளன. அழகான , கண்ணைக்கவரும் ஓவியங்கள். நூலை காந்தளகம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

முதலில் அட்டையைப் பார்த்ததும் சிறுவர்களுக்கான பறவைகளைப்பற்றிய கவிதைகளை உள்ளடக்கிய நூலோ என்று ஒரு கணம் நினைத்து விட்டேன். ஆனால் பிரித்துப் பார்த்தபோதுதான் நூலின் அருமை, பெருமையெல்லாம் நன்கு விளங்கியது.

இந்த சிறப்பான பறவைகள் பற்றிய அறிவியல் நூலை வெளியிட்ட பதிப்பகம் 'காந்தளகம்' (1980)

பறவைகள் நூலை எழுதியவர் யார் தெரியுமா? மறவன்புலவு க.சச்சிதானந்தன் அவர்களே. ஆரம்பத்தில் எழுத்தாளர் பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்களே எழுதியதாக எண்ணி விட்டேன். நூலகம் தளத்தில் க.சச்சிதானந்தன் என்னும் பிரிவில் இந்நூல் உள்ளதால் அவ்விதமே நம்பி விட்டேன். மேலும் மறவன்புலவு க. சச்சிதானந்தன் என்றுதான் அவர் எழுதுவது வழக்கம். இதில் க. சச்சிதானந்தன் என்றே அட்டையில்



பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதாலும் அவ்விதமே நம்பி விட்டேன். இருந்தாலும் நூல் முன்னுரையில் நூலாசிரியர் ஐக்கியநாடுகள் திட்டத்தில் வேலை செய்தவராகக் குறிப்பிடப்பட்டிருந்த போது கவனித்திருக்க வேண்டும். அப்போதும் பண்டிதர் க. சச்சிதானந்தன் வானவியல் துறையில் ஆர்வமுள்ளவராகவும், யாழ் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக் கட்டுரை அத்துறையில் சமர்பித்தவராகவும் வாசித்திருந்ததால் அவரே எழுதியதாக எண்ணி விட்டேன். மேலும் இருவரது பெயர்களும்,மே கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் என்றிருப்பதும் தவறான புரிதலுக்குக் காரணம்.

பறவைகள் நூலிலுள்ள கட்டுரைகள்ஃ

1. வரப்பெல்லாம் நாரைகள்
2. உள்ளத்தின் உணர்வில் புள்ளினங்கள்
3. சைபீரியா முதல் வேடந்தாங்கல் வரை
4. சிலம்பு பூண் காதை
5. மணம் மலிந்த நன்மாதம்
6. காதற் கோலங்கள் கவர்ச்சிப் பாலங்கள்
7. தூக்கணாங் குருவி கூடு
8. முட்டையா கோழியா முதல் வந்தது
9. மாரியில் மகப்பேறு மனைகள்
10. இயல்புகள் ஏழின் இணைவு
11. ஆலோலம் பாடும் வாலைக்கும-ரி
12. மாடு மேய்ச்சான் கொக்கு
13. புள்ளினங்கள் ஆள் - புலங்கள்
14. பறக்க வேண்டும் இறக்கை
15. தென்திசை ஆடி வடதிசை ஏகி
16. அறிவியல் திறமை அளவிடல் புலமை
17. விருந்துச் செய்திதரும் காகம்
18. காற்று வாழ்வுக்கு ஏற்ற மாற்றங்கள்
19. எச்சம் தரும் பொருள் மிச்சம்
20.ஊடற்கண் அன்றிக் கூடக் கூவுவாய்
21. பஃறுளி ஆறு பன்மலை அடுக்கம்
22. காலத்தின் சுவடு கல் நண்டு
23. இதுதான் எங்கள் உலகம்

'வரப்பெல்லாம் நாரைகள்என்னும் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.

'மீட்டர் வரை உயரப் பறக்கும். படைவீரரின் ஒழுங்குடன் பறக்கும். நெருங்கிப் பறக்கும். மீண் டும் வேறொரு வரப்பில் வந்து அமரும். மறவன்புலவுக் குளங்கள் மாரியில் நீரால் நிறையும். கோடையில் நீர் வற்றும் பொருக்கு வெடிக்கும். மாரிக் குளத்தின் கட்டுகளில் நாரை கள் அமரும். நாரையின் கால்கள் நீண்டவை. குளத்து நீருக்குள்ளும் வயலின் வெள்ளத்துள்ளும் நாரைகள் நிற்கும். மீன் வரும்வரை காத்திருக் கும். விதைத்த எல்லா வயல்களிலும் நெற்பயிர் வளர்வதில்லை. சில வயல்களில் அழிவதும் உண்டு. அந்த வயல்களில் நாரைகள் நிறைந்திருக்கும். காலெட்டும் நீரில் அவை காத்திருக்கும் மீனுக்கு.

சத்திமுற்றம் தமிழ்நாட்டில் ஓர் ஊர். அங் கேயும் குளம் உண்டு. அங்கே தமிழ்ப் புலவர் ஒருவர் அந்த ஊர்ப் பெயருடையவர் சத்திமுற்றப் புலவர். 'நாராய் நாராய்' எனத் தொடங் கும் பாடலை எழுதியுள்ளார். தனிப்பாடல் திரட் டில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது. சிவந்த நீண்ட கால்கள் பனங்கிழங்கு பிளந்தது போன்ற அலகு கூர்மையான அலகு இவை கொண்ட நாரைகள் வாடைக் காற்றுடன் வடக்கில் இருந்து வருவதையும் பின்னர் சில மாதங்கள் கழியத் தெற்கில் இருந்து வடக்கு நோக்கிச் செல்வதையும் இப் புலவர் கண்டுள்ளார்.

சத்தி முற்றப்புலவர் மதுரைக்குச் சென்றூர், பாண்டிய மன்னனிடம் பரிசுபெற விழைந்தார். பாண்டியனின் முன் கவியாத்தார். நாரைகளின் இடம் பெயர் பாங்கினைக் கவிதையில் கூறினர். தெற்கேயுள்ள கன்னியா குமரிக்கு நீராடச் செல்கின்றன. மீண்டும் வடக்கே செல்கின்றன எனக் கூறினர். கார்த்திகையிலும் மார்கழியிலும் வாடைக் காற்றின் வேகத்துடன் நாரைகள் அழுக்கணவன் கள், நீர்க்காகங்கள், கொக்குகள், பல இனப் பறவைகள் தெற்கு நோக்கிப் பறக்கின்றன. '


'பறவைகள்' நூல் நூலகம் தளத்திலுள்ளது. நூலகத்தின் இணைய முகவரிஃ www/noolaham/

org

•••

**அண்டனூர் சுராவின் 'தீவாந்தரம்'**

தமிழில் வரலாற்றுப் புனைவுகள் என்றதும் எமக்கு நினைவுக்கு வருபவர்கள் கல்கி, சாண்டில்யன், ஜெகசிற்பியன், அகிலன், நா.பார்த்தசாரதி மற்றும் இவர்களையொட்டிக் கற்பனாவாதப் புனைவுகளாக வரலாற்றுப் புனைவுகளை எழுதியவர்கள். இவை பூரணமான வரலாற்றுப் புனைவுகள் அல்ல. வரலாற்றுச் சம்பவங்களை, ஆளுமைகளை உள்வாங்கிப் பின்னப்பட்ட, வெகுசன வாசகர்களின் உள்ளங்களைக் கவர்ந்திடப் பின்னப்பட்ட கற்பனாவாதப் புனைவுகள். இவற்றிலிருந்து சிறிது வேறுபட்டது பிரபஞ்சனின் 'வானம் வசப்படும்', 'மானுடம் வெல்லும்' போன்ற நாவல்கள். மிக அதிக அளவில் கிடைக்கப்பெற்ற வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் ஒரு காலகட்டத் சேர்ந்த சாதாரண மானுடர்களின் வாழ்வை வைத்துப் பின்னப்பட்ட புனைவுகள் அவை. இவ்வகையில் ஆட்சியாளர்கள், அவர்கள் வரலாறுகளைத் தவிர்த்துச் சாதாரண மானுடர்களின் வாழ்வை விபரிக்கும் மிகச்சிறந்த வரலாற்று நாவலொன்று பல நூ ற்றாண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்டுள்ளது. அதுதான் இளங்கோவடிகளின் 'சிலப்பதிகாரம்' அக்காலத்திலிருந்த நாவலையொத்த வடிவமாகக் காப்பியத்தைக் கூறலாம். எனவே காப்பியமாகச் சிலப்பதிகாரம் உருவாக்கப்பட்டது. அக்காப்பியம் அக்கால மாந்தர் வரலாற்றை, நிலவிய சமூக அமைப்பை, இருந்த நகர அமைப்பை, இருந்த ஆட்சி அமைப்பை, நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகளை, தொழிற் பிரிவுகளை எனப் பலவற்றைப்பற்றிய தகவல்களைத் தருகின்றது. சிலப்பதிகாரத்தை ஒட்டி சங்ககால மானுடர் வாழ்வை மையமாக வைத்து எழுத்தாளர் நா.பார்த்தசாரதி வெகுசன வாசகர்களுக்காகச் சிறந்தொரு கற்பனாவாத வரலாற்றுப் படைப்பாக




'மணிபல்லவம்' என்னுமொரு நாவலைத் தந்துள்ளார். நான் வாசித்த வரலாற்று நாவல்கள் பற்றிய நினைவுகளெல்லாம் சிந்தையிலோடி மறைந்தன எழுத்தாளர் அண்டனூர் சுராவின் அண்மைக்கால நாவலான, 'சந்தியாப்' பதிப்பக வெளியீடாக வெளியான 'தீவாந்தரம்'நாவலை வாசித்தபோது.

எழுத்தாளர் அண்டனூர் சுரா அண்மைக்கால எழுத்தாளர்களில் தன் படைப்புகள் மூலம், அவற்றுக்குக் கிடைத்த விருதுகள் மூலம் நன்கறியப்பட்ட எழுத்தாளர்களில் ஒருவராக இருப்பவர். கதை, கட்டுரை, நாவல் என்று இவரது இலக்கியப்பங்களிப்பு பரந்து பட்டது. மேலோட்டமாக எழுதிக் குவிப்பவர்களி லொருவரல்லர். ஆழ்ந்து சிந்தித்து, ஆழமாகத் தகவல்களைத்திரட்டி எழுதுபவர்களில் ஒருவர். எழுத்தாளர் நாஞ்சில் நாடன் இவரைபற்றி இவரது முத்தன் பள்ளம் நாவலுக்கான அணிந்துரையில் 'அழகிய பெரியவன், எம்.கோபாலகிருஷ்ணன், கண்மணி குணசேகரன், சு.வேணுகோபால், கீரனூர் ஜாகிர்ராஜா, வா.மு. கோமு, செல்லமுத்து குப்புசாமி எனும் நீளும் தீவிர நாவலாசிரியர் வரிசையில் மற்றுமோர் படைப்பாளி என்று.' என்று குறிப்பிட்டிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. 'தீவாந்தரம்' நாவலை வாசித்தபோது இச்சிந்தனை மேலும் உறுதிப்பட்டது.

'தீவாந்தரம்' சிறந்ததொரு வரலாற்று நாவல். இதுவொரு கற்பனாவாத வரலாற்றுப் புனைவு அல்ல. அண்மைக்கால உண்மை வரலாற்றை, குறிப்பாக ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த காலகட்ட வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்வுகளையொட்டி எழுதப்பட்ட நாவல். பாரதத்தின் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளையொட்டி எழுத்தாள ர.சு.நல்லபெருமாள் 'கல்லுக்குள் ஈரம்' நாவல் எழுதியுள்ளார். எழுத்தாளர் மாலனும் 'ஜன கண மண' நாவல் எழுதியுள்ளார். மேலும் பலரும் எழுதியுள்ளார்கள். அவ்வகையில் எழுத்தாளர் அண்டனூ ர் சுராவின் 'தீவாந்தரம்'நாவலும் பாரதத்தின் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளை ஒட்டிப் படைக்கப்பட்ட நாவல்களிலொன்று.

"தீவாந்தரம்' விரிந்த , பன்னூறு பக்கங்களைக்கொண்ட நாவலல்ல. 215 பக்கங்களைக்கொண்ட கைக்கடக்கமானதொரு நாவல். பல கைக்கடக்க நாவல்களை உலக இலக்கியத்தில் காணலாம். ஏர்னஸ்ட் ஹெமிங்வேயின் 'கடலும் கிழவனும்', ஸ்டீன்பெக்கின் 'முத்து' ஆகியவை சிறந்த உதாரணங்கள். ஒரு நாவலின் வெற்றியை அதன் பக்கங்களின் அளவு தீர்மானிப்பதில்லை. பாத்திரப்படைப்பு, உரையாடல், மொழிநடை எனப் பல காரணிகளே அதன் சிறப்பை அல்லது தரத்தைத் தீர்மானிக்கின்றன. இவற்றின் அடிப்படையில் பார்த்தால் 'தீவாந்தரம்' நாவலை அணுகுவோமாயின் இதன் இடத்தை அல்லது தரத்தை நிர்ணயிக்க முடியும்.

சிறந்ததொரு வரலாற்று நாவலின் வெற்றியானது சரித்திரச் சம்பவங்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்துத்தருவதல்ல. மாறாக வாசகர்களை அச்சரித்திரச் சம்பவங்கள் நடைபெற்ற காலகட்டத்துக்கு, இடத்துக்கு அழைத்துச் செல்வதாக இருக்க வேண்டும். அதனை நாவலாசிரியர்

எவ்விதம் சாதிக்கின்றார்? வரலாற்றுப் புனைவொன்றில் பாத்திரப் படைப்புகளூடு, அப்படைப்புகளின் உரையாடல்களூடு, சம்பவங்களூடு , இவற்றை வெளிப்படுத்தும் மொழி நடையினூடு நாவலாசிரியரொருவர் வாசகர்களை அக்காலகட்டத்துக்குக் காவிச்செல்கின்றார். அக்காலகட்ட மாந்தர்கள் தம் எண்ணங்களூடு ,உணர்வுகளூடு அக்காலகட்டச் சமுதாய அமைப்பினை அறிய வைக்கின்றார். இவற்றின் அடிப்படையில் அண்டனூர் சுராவின் ‘தீவாந்தரம்‘,நாவலை அணுகினேன்.

நாவல் ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்த இந்தியாவில் நிகழ்ந்த பிரதானமான வரலாற்று நிகழ்வுகள் சிலவற்றையொட்டிப் பின்னப்பட்டுள்ளது. ‘கப்பலோட்டிய தமிழன்‘ என்று நாமனைவரும் அறிந்த சுதந்திரப்போராட்ட வீரரும், எழுத்தாளரும், மனித உரிமைகளுக்காகப் பாடுபட்ட வக்கீலும், வர்த்தகருமான வ.உ.சி (வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரப்பிள்ளை), சுதந்திரப்போராட்ட வீரரான சுப்பிரமணியம் சிவா ஆகியோருக்கு முறையே நீதிபதி பின்ஹே என்னும் ஆங்கிலேயரால் அளிக்கப்பட்ட 40 வருட ‘தீவாந்தரம்‘ சிறைத்தண்டனை மற்றும் பத்தாண்டு தீவாந்தரச் சிறைத்தண்டனைத் தீர்ப்புகள் பற்றிப் பேசுகின்றது. சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணியம் சிவாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்புப் பற்றிப் பேசுகின்றது. அவற்றுக்கான இந்திய நீதிபதியான சங்கரன் நாயரின் தடையுத்தரவு பற்றிப் பேசுகின்றது. நீதிபதி பின்ஹேயைக் காப்பதற்காக நீதிபதி பின்ஹேயின் நெருங்கிய நண்பரும், ஆங்கிலேயருமான மில்லர் வ.உ.சி, சுப்பிரமணியம் சிவா ஆகியோர் மீதான தண்டனைகளை ஏற்று, அவற்றுக்கான காலத்தைக் குறைத்துத் தீர்ப்பு வழங்கியதைப் பற்றிப் பேசுகின்றது. வ.உ.சி, சுப்பிரமணியம் சிவா ஆகியோரின் கைதுகளைத் தொடர்ந்து திருநெல்வேலியில் ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்கள். அவற்றின் காரணமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான உதவிக் கலக்டர் ஆஷின் துப்பாக்கிச் சூடு, அதன் விளைவாக ஏற்பட்ட மரணங்கள், குறிப்பாகச் பதின்ம வயதுச் சிறுவனான சுசீந்திரனின் மரணம் பற்றிய நீதிமன்ற விசாரணைகளைப்பற்றிப் பேசுகின்றது.

இவற்றைப்பேசும் நாவல் சாட்சிகளின் நீதிமன்ற சாட்சியங்களூடு எம்மை அக்காலகட்டத்துக்கே காவிச் செல்கின்றது. அடக்குமுறைகளை நியாயப்படுத்தும் ஆங்கிலேய அரச அதிகாரிகளின் எண்ணங்கள் அவர்கள் உணர்வுகள், சாட்சியங்களூடு வெளிப்படுகின்றன. உதாரணமாக நீதிபதி பின்ஹே., மில்லர் ஆகியோர் தம் தீர்ப்புகளை எழுதுவதற்கு முன்னர் பல்வேறு வழிகளில் சிந்திக்கின்றார்கள். அவை அவர்களின் பாரபட்சத் தீர்ப்புகளுக்கான காரணங்களை வெளிப்படுத்துகின்றன. ஆங்கிலேயர் களுக்கு எதிரான வழக்குகளை ஆங்கிலேயர்களே விசாரிக்க வேண்டுமென்ற நடைமுறை எழுதப்படாத சட்டமாக இருந்தது. அந்நடைமுறைபற்றி நாவல் பேசுகிறது்

“பிரிட்டிஷார் குற்ற வழக்குகளைப் பிரிட்டிஷாரே விசாரிக்க வேண்டும், என்பது எழுதப்படாத சட்டமாக இருந்துவந்தது. பிரிட்டிஷார் மதத்தா ல் உயர்ந்தவர்கள். இந்தியர்கள் ஜாதியால் தாழ்ந்தவர்கள். உயர்ந்தோரின் வழக்குகளைத் தாழ்ந்தவர்கள் விசாரிக்க உரிமையில்லை, என்பதாக பிரிட்டிஷார்கள் தனக்குத் தானே எழுதப்படா சட்டம் வகுத்துக்கொண்டிருந்தார்கள். ‘ (பக்கம் 31)

அந்நடைமுறை நீக்கப்பட்டதன் காரணமாகத்தான் இந்தியரான சங்கரன் நாயருக்கு மேற்படி வழக்கினை விசாரிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. ஆனால் அவரது நீதிபதி பின்ஹேயின் தீர்ப்புக்கான தடையுத்தரவைத் தலைமை நீதிபதி நீதிபதி ஆல்பர்ட் ஒயிட் ஏற்கவில்லை. அத்தடையுத்தரவு ஆங்கிலேயருக்கு எதிராக இருந்ததால் அவரால் அதனை ஏற்க முடியவில்லை. அதனாலேயே மேன்முறையீட்டினை விசாரிக்கும் சந்தர்ப்பம் நீதிபதி மில்லருக்குக் கிடைத்தது.

இவ்விதமான வரலாற்றுப் பின்னணியில் விரியும் நாவலை எவ்விதம் வாசகர்கள் புரிந்து கொள்கின்றார்கள்? அங்குதான் நாவலாசிரியரின் கற்பனைத்திறன் அல்லது படைப்புத்திறன் வெளிப்படுகின்றது. சாமியாரான சகஜானந்தா மற்றும் ராமையா ஆகியோரின் உரையாடல்களூடு மேற்படி வரலாற்றுச் சம்பவங்கள் பற்றிய விமர்சனங்களை வெளிப் படுத்துகின்றார் நாவலாசிரியர் அண்டனூர் சுரா. இப்பாத்திரங்களை எவ்விதம் நாவலாசிரியர் படைத்திருக்கின்றார் என்பது ஆய்வுக்குரியது. அதே சமயம் நாவலாசிரியரின் படைப்புத் திறனையும் வெளிப்படுத்துவது. சாமியாரான சகஜானந்தாவின் ரிஷி மூலம் முக்கியமானது. அவர் வ.உ. சியின் பிரசுரங்களை அச்சடிக்கும் அச்சகத்தில் பிழை, திருத்தம் செய்பவராகப் பணியாற்றியவர். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர். ராமையாவோ அந்தகர். வித்தியாசமான பாத்திரங்கள். அவர்களுக்கிடையில் நடைபெறும் உரையால் அப்பிரதேசத்து மக்களின் பேச்சு மொழியில் அமைந்துள்ளது. இதனைச் சிறப்பாகவே அண்டனூர் நாவலில் கொண்டு வந்திருக்கின்றார். அது நாவலாசிரியரின் திறமையின் வெளிப்பாடு.

தாழ்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த சாமியார் சகஜானந்தா, தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த தாசில்தார் பஞ்சமன் போன்ற பாத்திரங்கள் நாவலின் இன்னுமொரு பிரதான அம்சத்தை வெளிப்படுத்துகின்றது. அது வர்ண வேறுபாடுகளின் அடிப்படையில் மக்களின் தொழிற் பிரிவுகளை வைத்திருக்கும் இந்திய சமுதாய அமைப்பின் மீதான கடுமையான விமர்சனமாகும். நாவல் முழுவதும் தீண்டாமை பற்றிய விமர்சனம் ஒலிக்கின்றது. ஒரு காலகட்ட அந்நியரின் அடக்குமுறையினை, பாரபட்ச நீதியினை விமர்சிக்கும் நாவல் கூடவே இந்திய சமூக அமைப்பின் சீர்கேட்டினையும்

கடுமையாக விமர்சிக்கின்றது. இவற்றைத் திட்டமிட்டுச் சிறப்பாகப் படைக்கப்பட்ட பாத்திரங்களூடு, பாவிக்கப்படும் உரையாடல்களூடு, நிகழ்வுகளூடு நாவலாசிரியர் வெளிப்படுத்தி இருக்கின்றார். இதனால் ஆங்கிலேயரின் அடக்கு முறைக்குள்ளும் ,இந்தியர்களின் வர்ணாசிர சமூக அடக்குமுறைகளுக்குள்ளும் சிக்கியிருந்த ஒரு காலகட்டத்துக்கே வாசகர்களை அழைத்து செல்கின்றார் நாவலாசிரியர் அண்டனூர் சுரா. அவ்வகையில் சிறந்ததொரு வரலாற்று நாவலொன்றினைத் தந்துள்ளார் நாவலாசிரியர் அண்டனூர் சுரா.

ஒட்டுமொத்தமாக நாவலை அணுகுகையில் இந்நாவல் முக்கியமான ஈரம்சங்களைக் கடுமையாக விமர்சிக்கின்றது. ஒன்று ஆங்கிலேயரின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவின் மீதான அடக்குமுறை. விதேசிகளின் ஆதிக்கத்தில் இருக்கும் சுதேசிகளுக்கு நீதி கூட மறுக்கப்படுகின்றது. அமைதியாகக் கூடி எதிர்ப்புக்குரலெழுப்பிய இந்திய மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட அடக்குமுறை காரணமாக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. நீதி மறுக்கப்பட்டுச் சிறையில் வ.உ.சி, சுப்பிரமணியம் சிவா ஆகியோர் அடைக்கப்படுகின்றனர். ஆங்கிலேயரின் அடக்குமுறையினை விபரிக்கும் நாவல் சாதிபிரிவுகளால் கட்டமைக்கப் பட்டுள்ள இந்திய வர்ணாசிரம சமுதாய அமைப்பையும் கடுமையாக விமர்சிக்கின்றது. அத்துடன் விதேசிகளான ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்களுக்கிடையில் நிலவிய சமூக ஏற்றத்தாழ்வுகளும் நாவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. நாவலின் பிரதான அம்சங்களாக இவையே அமைந்துள்ளன. இவற்றை வெளிப்படுத்தும் வகையில் நல்லதொரு வரலாற்று நாவலைப் படைத்துள்ளார் எழுத்தாளர் அண்டனூர் சுரா.

***

**இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களும், அவர்கள்தம் இலக்கியக் கோட்பாடுகளும்,**

**சுபைர் இளங்கீரன் தொகுத்துள்ள 'தேசிய இலக்கியமும், மரபுப்போராட்டமும்' என்னும் நூல் பற்றியுமான பதிவு!.**

இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றைப்பொறுத்தவரையில் முக்கியமான காலகட்டங்களாக 'மறுமலர்ச்சி'க் காலகட்டத்தையும், 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கக்' காலகட்டத்தையும் குறிப்பிடலாம். இலங்கை மண்ணுக்கேயுரியமண்வாசனைமிக்க தனித்துவம் மிக்க எழுத்துகளைப் படைக்க வேண்டுமென்று 'மறுமலர்ச்சிக்' குழு வழிவந்த இளைஞர்கள் எண்ணினார்கள். ஆனால் அந்நோக்கமே 'தேசிய இலக்கியம்' என்னும் கோட்பாடாக வளர்த்தெடுக்கப்பட்டது. அதனைச் செய்தவர்கள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் அமைப்பின் வழிச் செயற்பட்ட எழுத்தாளர்கள், திறனாய்வாளர்கள். தேசிய இலக்கியம் பற்றிய புரிதலுக்காக எழுத்தாளர் இளங்கீரனின் 'மரகதசம்' சஞ்சிகையில் 'தேசிய இலக்கியம்' பற்றி 'மரகதம் ' சஞ்சிகையில் வெளியான பேராசிரியர் க. கைலாசபதி, ஏ.ஜே.கனகரட்னா, அ.ந.கந்தசாமி ஆகியோர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை.

இதனைத்தொடர்ந்து தினகரன் பத்திரிகையில் மரபினைப் பேணிய பண்டிதர்களுக்கும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களுக்குமிடையில் தலையெடுத்த 'மரபு' பற்றிய விவாதமும் முக்கியமானது. இரு சாராரும் தினகரன் பத்திரிகையில் நடாத்திய விவாதம் இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமானதொரு நிகழ்வு.

'மரகதம்' சஞ்சிகையில் வெளியான 'தேசிய இலக்கியம்' பற்றிய கட்டுரைகளையும், தினகரன் பத்திரிகையில் நிகழ்ந்த மரபு பற்றிய விவாதக் கட்டுரைகள் சிலவற்றையும், வேறு சில கட்டுரைகளையும் தொகுப்பாக்கி வெளியிட்டிருக்கின்றனர் 'சவுத் ஏசியன் புக்ஸ்' (சென்னை) பதிப்பகத்தினர். தொகுத்தவர் எழுத்தாளர் சுபைர் இளங்கீரன். மிகவும் முக்கியமான தொகுப்பு.

இத்தொகுப்பில் 'மரகதம்' சஞ்சிகையில் வெளியான 'தேசிய இலக்கியம்' பற்றிய கட்டுரைகளை எழுதியவர்கள்:

1. தேசிய இலக்கியம் என்றால் என்ன? - பேராசிரியர் க.கைலாசபதி (மரகதம் 1961).

2. தேசிய இலக்கியம் -சில சிந்தனைகள் - ஏ.ஜே.கனகரத்தினா (மரகதம் செப்டம்பர் 1961)

3. தேசிய இலக்கியம் - அ.ந.கந்தசாமி (மரகதம் அக்டோபர் 1961)

இதுபற்றி மேற்படி நூலுக்கான முன்னுரையில் இளங்கீரன் அவர்கள் பின்வருமாறு கூறுவார்:

'1954இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நிறுவப்பட்டது. அது நடத்திய இலக்கிய இயக்கத்தினூடாக ஈழத்து எழுத்தாளர் மத்தியிலும் , ஈழத்துப் படைப்பிலக்கியம் சம்பந்தமாகவும் விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டது. எனவே ஈழத்தின் படைப்பிலக்கியம் தமிழ் என்னும் பொதுப்பரப்புக்குள் அடங்கும் அதே வேளையில், அதன் தனித்துவத்தைக் காட்டவும் அத்தனித்துவத்தை நமது மக்கள் இனங்கண்டு அதன் மீது தமது இலக்கிய உணர்வைப் பதிய வைக்கவும் , நேசிக்கவும், யதார்த்தவாதக் கோட்பாட்டை எளிதில் புரிந்துகொள்ளவும் அதற்குத் 'தேசியம்' என்னும் சொற் பிரயோகம் தேவையாகவிருந்தது. எனவே இ.மு.எ.ச தனது முதலாவது மாநாட்டில் முன்வைத்த ஜனநாயக யதார்த்தவாதக் கோட்பாட்டை அடியொட்டி இரண்டரை வருடங்களுக்குப் பிறகு 1960 இல் 'தேசிய இலக்கிய'த்தைப் பிரகடனம் செய்தது. இதனைத்தொடர்ந்து தேசிய இலக்கியம் பற்றிய விளக்கத்தை அளிக்க வேண்டியிருந்தது.

1961இல் வெளியான எனது கலை இலக்கிய சஞ்சிகையான ‘மரகதம்‘ இப்பணியை ஏற்றது. அதில் முதல் இதழில் பேராசிரியர் கைலாசபதி ‘தேசிய இலக்கியம்‘ பற்றிய தனது முதலாவது கட்டுரையை எழுதினார். அதனை அடுத்து இரண்டாவது மூன்றாவது கட்டுரைகளாக ஏ. ஜே.கனகரத்தினா, அ.ந.கந்தசாமி ஆகியோர் எழுதியதை மரகதம் வெளியிட்டது. ‘

தேசிய இலக்கிய பற்றிய விழிப்புணர்வைப் பொறுத்துக் கொள்ளாத பழமைவாதிகள் மத்தியில் இதற்குக்கடுமையான எதிர்ப்பு எழுந்தது. அதுபற்றியும் மேற்படி முன்னுரையில் இளங்கீரன் பின்வருமாறு கூறுவார்°

‘.. இலக்கிய உலகில் அரசோச்சிக் கொண்டிருந்த செல்வாக்கை இழந்திருந்த இலக்கிய சனாதனிகள் படைப்பிலக்கியவாதிகள் மீது கடும் தாக்குதலை நடாத்தினார்கள். கண்டனக்கணைகளை வீசினர். போதிய கல்வியறிவும் படிப்பும் இல்லாதவர்கள், தமிழ் மரபு தெரியாதவர்கள் மரபை மீறி எழுதும் மட்டமான எழுத்தாளர்கள். இவர்களின் இலக்கியம் இழிசனர் இலக்கியம் என்றெல்லாம் வசைபாடினர். இதனைத்தொடர்ந்து மரபுப்போராட்டம் தொடங்கியது. 1962 ஜனவரில் தினகரனில் ‘தற்காலத் தமிழ் இலக்கியம் தமிழ் மரபுக்குப் புறம்பானதா?‘ என்னும், விவாதக்கட்டுரைகள் வெளியாயின. மரபுவாதிகள் தரப்பில் கலாநிதி ஆ. சதாசிவம், பண்டிதர் இளமுருகனார், பண்டிதர் வ.நடராஜன் போன்றோரும், எழுத்தாளர் தரப்பில் பேராசிரியர் சிவத்தம்பி, அ.ந. கந்தசாமி, இளங்கீரன் போன்றோரும் கட்டுரைகள் எழுதினர். இறுதியில் படைப்பிலக்கியவாதிகள் சார்பில் விவாதம் முடிவுற்றது. மேற்கூறிய விவாதத்தில் நானும், அ.ந.க.வும் எழுதிய கட்டுரைகள் இந்நூலில் உள்ளன.‘

அக்கட்டுரைகள் விபரங்கள் வருமாறு°

1. ‘ஈழத்து சிருஷ்டி இலக்கியத்துக்கு குழி தோண்டும் முயற்சி‘ - அ.ந. கந்தசாமி (தினகரன் 2.1.1962)




2. மாறுதல் பெறுவதே மரபு - சுபைர் இளங்கீரன் (தினகரன் 1962 ஜனவரி 19,21,23 - 25)

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு பற்றி, இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் திறனாய்வு முயற்சிகள் பற்றி எழுத முனைவோர் முதலில் இது போன்ற நூல்களை வாசிக்க வேண்டும். காய்தல் உவத்தலினிறி எழுதப் பழகிக்கொள்ள வேண்டும். இளந்தலைமுறையினர் இலங்கைத்தமிழ் இலக்கியத்தின் கடந்த கால வரலாற்றினை அறிந்துகொள்ள இது போன்ற நூல்களைத் தேடியெடுத்து வாசிக்க வேண்டும். இவ்வகையில் சுபைர் இளங்கீரன் தொகுத்துள்ள ‘தேசிய இலக்கியமும், மரபுப்போராட்டமும்‘ என்னும் நூல் முக்கியத்துவம் வாய்ந்தது. இது போன்ற நூல்கள் இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றில் திறனாய்வுத்துறையில் பங்களிப்புச் செய்த இலக்கிய ஆளுமைகள் பற்றி அறிய உதவுகின்றன என்பதாலும் முக்கியமானவை. உண்மையில் இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களின் பங்களிப்பானது நன்றியுடன் விதந்தோதப்பட வேண்டியது. முதன் முதலாக மக்களுக்காக இலக்கியம் படைத்தார்கள் அவர்கள். மக்கள் வாழும் சூழலின் சமூக, அரசியல் மற்றும் பொருளியல் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி அவர்கள் சிந்தித்தார்கள். ‘தேசிய இலக்கியம்‘ பற்றிய கோட்பாடு பற்றி விவாதித்தார்கள். அதனைத் தமிழ் இலக்கியத்தில் உள்வாங்கி வளப்படுத்தினார்கள். மரபுக்கெதிராகத் தர்க்கரீதியாக வாதங்களை முன்வைத்து மரபினை மீறினார்கள். பன்னாட்டு இலக்கிய முயற்சிகளை, கோட்பாடுகளை, கருத்துகளையெல்லாம் தமிழுக்குக் கொண்டுவந்தார்கள். இவ்விதமான காரணங்களினால் அவர்கள் முன்னெடுத்த முற்போக்கு இலக்கியமானது பெருமைப்படத்தக்க பங்களிப்பினை ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கியுள்ளது. காத்திரமான வரலாற்றுப்பங்களிப்பு அது.

***

### மறக்க முடியாத ‘வெற்றிமணி‘

இலங்கையில் வெளிவந்த ‘வெற்றிமணி‘ சிறுவர் சஞ்சிகைக்கு முக்கியமானதோர் இடம் இலங்கைத் தமிழ் இலக்கியத்திலுண்டு. தமிழகத்தில் வெளியான ‘கண்ணன்‘ சிறுவர் இதழ் எவ்விதம் எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியதோ அவ்விதமே ‘வெற்றிமணி‘ சஞ்சிகையும் பலரை உருவாக்கியுள்ளது.

வெற்றிமணியின் ‘பாலர் பக்கத்தில்‘ இளம் எழுத்தாளர்கள் பலர் தமது ஆரம்பகாலப்படைப்புகளை (கட்டுரை, சிறுகதை, விமர்சனம், நாடகம் , உருவகக் கதை போன்ற படைப்புகளை) எழுதியுள்ளார்கள். கிழக்கு மாகாணம், மலையகத்தில் இருந்தெல்லாம் இளம் எழுத்தாளர்கள் பலர் எழுதியுள்ளார்கள். முஸ்லீம் இளம் எழுத்தாளர்கள் பலரின் படைப்புகள் பலவற்றை ‘வெற்றிமணி‘ இதழ் தாங்கி வெளியாகியுள்ளது. ‘கவிதை‘ அரங்கம்‘ பகுதியிலும் பலர் இவ்விதமே எழுதியுள்ளார்கள். இலங்கையின் பிரபல எழுத்தாளர்களான திக்குவல்லை கமல், காரை செ. சுந்தரம்பிள்ளை, சாரதா, கவிஞர் புதுவை இரத்தினதுரை, கோப்பாய் சிவம் எனப்பலர் ‘வெற்றிமணி‘

சஞ்சிகையில் சிறுவர் பாடல்களை எழுதியுள்ளார்கள்.

ஏழாம் வகுப்பு மாணவனான எனது குட்டிக்கதையொன்றும், பொங்கல் பற்றிய கட்டுரையொன்றும், கவிதையொன்றும் 'வெற்றிமணி' சிறுவர் சஞ்சிகையில் வெளியாகியுள்ளன. கவிஞர் வி. கந்தவனம், இரசிகமணி கனக செந்திநாதன் , த.அரியரத்தினம், ஏ.ரி.பொன்னுத்துரை, மு.க. சுப்பிரமணியம் போன்றொர் தொடர்ச்சியாக 'வெற்றிமணி'யில் எழுதி வந்துள்ளார்கள். குறமகளின் சிறுவர் சிறுகதையொன்றினையும் ஓரிதழில் காண முடிந்தது.

அவ்வயதில் வவுனியா மகா வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்தேன். விடுமுறைகளில் யாழ்ப்பாணத்துக்குச் செல்லுகையிலெல்லாம் யாழ் நகரிலிலிருந்த 'அன்பு புத்தகசாலை'க்குச் சென்று 'வெற்றிமணி'யை வாங்குவதுண்டு. 'அன்பு புத்தகசாலை' எழுத்தாளர் செங்கை ஆழியானின் அண்ணரான எழுத்தாளர் 'புதுமைலோலன்' அவர்களுடையது. அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த இளைஞரொருவர் எப்பொழுதும் சஞ்சிகைகள், நூல்கள் வாங்க அங்கு செல்லும்போதெல்லாம் அன்புடன் வரவேற்றுதவுவார். பின்னர் யாழ் இந்துக்கல்லூரியில் என் கல்வி தொடர்ந்த என் பதின்ம வயதுக் காலகட்டத்திலும் அங்கு செல்வதுண்டு. அங்குதான் செங்கையாழியானின் முதலாவது நாவலான 'நந்திக்கடல்' சரித்திர நாவலினை வாங்கியதுண்டு. மார்க்சிம் கார்க்கியின் புகழ்பெற்ற நாவலான 'தாய்' (தொ.மு.சி. ரகுநாதன் மொழிபெயர்த்தது) நாவலை அவ்விளைஞரே எனக்கு வழங்கியவர்.

அறிஞர் அண்ணாவின் மறைவின் போது அவரது புகைப்படத்தை அட்டையிலிட்டு 'வெற்றிமணி' சஞ்சிகை அஞ்சலி செய்ததையும் அறிய முடிகின்றது.


'வெற்றிமணி டாணெனவே விண்முட்ட ஒலித்திடுவாய்.

நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்'

என்னும் தாரகமந்திரத்துடன், குரும்பசிட்டி மு.க சுப்பிரமணியத்தைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'வெற்றிமணி' சஞ்சிகையின் பழைய இதழ்கள் என்னை அக்காலத்துக்கே இழுத்துச் சென்றுவிட்டன.

'நூலகம்' தளத்திலுள்ள வெற்றிமணி இதழ்கள் பல ஐம்பதுகள், அறுபதுகள் மற்றும் எழுபதுகளில் வெளியானவை. ஆரம்ப இதழ்கள் ஐம்பதுகளில் வெளியானவை வித்துவான் மு. கந்தையா, எம்.எம்.பாரிஸ், ஏ. கே.சாமி ஆசிரியராகக்கொண்டு நாவலப்பிட்டியிலிருந்து வெளியாகியுள்ளதை அறிய முடிகின்றது. பின்னர் முல்லைத்தீவிலிருந்து வெற்றிமணி வெளியாகியுள்ளது. அதன் பின்னரே யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகியுள்ளது.

விக்கிபீடியா வெறறிமணியைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது: 'வெற்றிமணி என்பது இலங்கையில் 1950 முதல் ஏறத்தாழ 30 ஆண்டுகளாக வெளிவந்த ஒரு சிறுவர் இதழ் ஆகும். இவ்விதழ் மு. க.சுப்பிரமணியம் என்பவரால் 1950 ஆம் ஆண்டில் நாவலப்பிட்டியில் இருந்து வெளியானது. வெற்றிமணி சிறுவர் இதழ் 1950 முதல் மலையக நகரான நாவலப்பிட்டியில் ஆசிரியராகப் பணியாற்றிய மு. க.சுப்பிரமணியம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.



1958 முதல் க. வே. மகேந்திரன் என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பூண்டுலோயாவில் இருந்து வெளிவந்தது. பின்னர் பொ. இராசரத்தினம் என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு முல்லைத்தீவு, தண்ணீரூற்று என்ற கிராமத்தில் இருந்து சக்தி அச்சகம் என்ற சொந்த அச்சகத்தில் இருந்து வெளிவந்தது. 1968 ஆம் ஆண்டில் மு. க. சுப்பிரமணியம் குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலய அதிபராக பதவி உயர்வு பெற்று சென்ற பின்னர், சக்தி அச்சகம் யாழ்ப்பாணம், யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரான்லி வீதிக்கு இடம் மாறியது. வெற்றிமணி பத்திரிகையும் யாழ்நகரில் இருந்து வெளிவரத் தொடங்கியது. இறுதியாக, சக்தி அச்சகம் 1972 இல் சுன்னாகத்திற்கு இடம் மாறியதை அடுத்து 1979 வரை அங்கிருந்து வெளிவந்தது. மு. க. சுப்பிரமணியம் 1980 இல் காலமானதை அடுத்து வெற்றிமணியும் நின்று போனது.'

'இவ்விதழ் மு. க. சுப்பிரமணியம் என்பவரால் 1950 ஆம் ஆண்டில் நாவலப்பிட்டியில் இருந்து வெளியானது' என விக்கிபீடியா கூறுகின்றது. ஆனால் நூலகம் தளத்திலுள்ள வெற்றிமணியின் ஆரம்பகால இதழ்களின் ஆசிரியர்களாக வித்துவான் மு. கந்தையா, எம்.எம்.பாரிஸ், ஏ.கே. சாமி ஆகியோரின் பெயர்களையே அறிய முடிகின்றது. 'வெற்றிமணி' சஞ்சிகை பற்றிய விரிவான ஆய்வின் தேவையை இத்தகவல்கள் வேண்டி நிற்கின்றன.

இவையெல்லாம் அண்மையில் 'நூலகம்' தளத்தில் 'வெற்றிமணி' சஞ்சிகையின் பல இதழ்களைக் கண்டபோது நினைவுக்கு வந்தன. அவற்றில் சிலவற்றை மேய்ந்து பார்த்தபோதுதான் 'வெற்றிமணி' சஞ்சிகையின் சிறப்பான பங்களிப்பு புரிந்தது. 'வெற்றிமணி' பற்றி விரிவானதொரு கட்டுரை பின்னர் எழுதவேண்டுமென்றி எண்ணிக் கொண்டேன். 'வெற்றிமணி' இதழ்கள் பலவற்றை 'நூலகம்' தளத்தில் வாசிக்கலாம்.

அதிகாரம் 05



# ‘ஒரு ஏதோ..!’

அங்கும் இங்கும், எங்கும்
ஒரு நீள் கதை

இங்கு...

‘இவனுக்கு‘ எப்படி கனகச்சிதமாக, அறிய அரிதான விவகாரங்கள் பற்றி தகவல் கிடைக்கிறதென்பதை ‘இவண்‘ அறிய முடியாதுதான். ‘ஒரு ஏதோ‘ புதிர் வகைமில் இவனாகிய குட்டி ஓலா, கிணிசு தகவல்களையும் உதட்டொழுகும் சுவாரஸ்ய புதினங்களையும் அறிந்து விடுவான் அறுவான் அறுவானாகிலும் நல்லறுவான்தான். எப்படி இதை நிகழ்த்துகிறான், என்பது, புதிர்ப்புதினமாகவே, எப்போதும் இருக்கும்.

இவன்,: குட்டி ஓலா, இவணது இன்னொரு வெடிவால் ஆவான். குட்டி விலா, குட்டிப்பீலா வரிசையில் மூன்றாமவன். மூவருமே ‘ஏதோ ஒரு‘ வகையில் படு(ஊ) சுவாரஸ்ய நரம்புகளை படு சிக்கல் பிணைச்சல்களாக உடம்பு பூரா கொண்டவர்கள்தான்.

சிறினோ சிறி சிறிசு

'One is better than the other two' என்பதபோல், One 'kuddy...(1…) is more interesting than the other two kuddies...(2...& 3…)'. என்பதுபோல், குழறுபடியாக, One is 'worse' than the other two என்பதும் ஆக இயலும்.

ஏதோவொரு விதத்தில், அல்லது இன்னொரு பரிபூர்ண வகையில் சொல்வதாயின், எல்லா வகையிலும், அடிப்படைப் பாங்கில், இந்த விலா.பீலா.ஒலா என்கிற 'குட்டி' மும்மூர்த்திகளிடையிலும் பாரித்த ஒற்றுமை இருக்கிறதென்றால், அதுண்மைதான். அந்த ஐக்கியத்தின் காரணன், இவண் தான். வெருளித்தனம் சற்றேயாவது கொண்ட வெடிவால்கள் மூபேரும் இவணுடனான சேர்க்கைக்காலப் போக்கில் சற்றிலும் மேலான அளவுக்கு விபரமடைந்து விடுகிறார்கள். இது ஒருவகை கொடுத்தல் - வாங்கல்தான். வீங்கலும்.

'ஃபோனில் கதைச்சேன்,' என்றான் குட்டி ஒலா.

'ஓஹ்ஓ;.!! உனக்கெப்படி நம்பர் கிடைச்சுது..??!' என்று திடுமென பெருத்த ஆச்சர்யமானான் இவண்.

'யாரின் நம்பர்..?'

'அவளின்ரை தான்.'

'அவவின்ரை நம்பர் எனக்கெங்கை கிடைச்சுது..?! என்ரையெல்லோ அவவுக்கு கிடைச்சு, அவதான் எனக்கு call எடுத்தா..!!'

'எப்படி உன்ரை நம்பர் அம்பிகைக்கு கிடைச்சுது..??!!'

'அதெனக்கு தெரியாது. உங்களோடை கதைக்க அலைஞ்சபோது, என்னை நினையாப் பிரகாரயாய் பிடிச்சிருக்கலாம்.' 'தன்னுடன் கதைக்க அலைந்தபோது' என்பதில் இவண் திடுமென துணுக்குற்றான். 'இதென்ன புதிய அதிர்வுத் தலைப்பாரம்?' என்று எண்ணத் தலைப்பட்டபோதும், அது ஏதோ ஒரு பாரமற்ற, இலவம் பஞ்சளவே கனமான, சௌகரிய உணர்வாகவே மறவதாரம் கொண்டதே நிஜமென உணர்ந்தான்.

மறந்தது அல்லது மறக்க முக்கியது அல்லது உண்மையில், மறக்கவே முயலவில்லை,- அல்லதின்னும், மறக்க முக்கியும் மறக்க முடியவில்லை, என்ற எதில்,- அம்பிகையுடனான பிணைப்பு இருந்ததென்பது பற்றி இவண் அறிந்திருக்கவில்லை, என்பது இவணுக்கு தெரிந்திருக்கவில்லை. இதொரு வகை புதிர் உணர்வு என்பதிலும், இதொரு உவகை உணர்வு என்பதாயே இருந்தது.

'உங்கடை நம்பரை அவசரமாக தரச்சொல்லிக் கேட்டா. உங்களிட்டை கேட்டிட்டு தாறதாய்ச் சொன்னேன். குடுக்கட்டே..??'

இவண், ஒரு வினாடியும் வினைக்கெடவில்லை.

'குடு,' என்றான். அப்போ, அது நிச்சயமாக உவகை உணர்வுதான் புதிர் உணர்வு அல்ல;!!!

***

'அங்கு'

தானாமூனா என்கிற தக்ஷ்ஸமுத்து, ஊரில் ரொம்ப இறுக்கமான ஆஸாமியென, பெயர் எடுத்தவர். இந்த இறுக்கமென்பதற்கு பற்பல வியாக்கியானங்கள் உள. கறார்ப்போக்கு, முரட்டுத்தனம், பொதுவாய் எதற்கும் கிறுங்காமை, அதீத கர்வம், சாதிக்கனம் என இதற்கு அர்த்தங்கள் போடலாம். தக்ஷ்ஸமுத்து, செங்குப்பு ஐயாவின் மகன் அம்பிகையின் தகப்பன்காரன். அதென்னவோ பொருந்திப்போயிற்று. புராணங்களின் விபரமேதுமேயின்றி பெயர் சூட்டுகிறபோது, பெயர்களின் உறவுப்பிணைச்சல் கணக்காய், எண்ணாப்பிரகாரமாய் பொருந்துவது படாச்சர்யந்தான்.

இந்த இவணின் கதையின் தொடரும் 'அதிகாரங்களுக்கும்' அதி 'காரங்களுக்கும்', இன்னொரு வகைக்கு, அதியதி இனிமைகளுக்கும் இந்த புராண 'வியளங்கள்' தேவையற்றவை யெனினும், தேவை கருதி, தேவையானவை. தக்ஷ்ஸன் ப்ரம்மாவின் பிரஜாபதிப்பிள்ளைகளில் ஒருவன். சக்திப்பரையின் ஒருரு அம்பிகை,- தக்ஷ்ஸனின் மகள். ஆதலின், மும்மூர்த்திகளின் ஒருருவான,- படைப்புக்கடவுளின் பேர்த்தியாகிப் போனாள், அம்பிகை. அது வேறு அம்பிகை இது வேறம்பிகை. ஆனால், அந்த தக்ஷ்ஸன் மாதிரி, இந்த தக்ஷ்ஸனிடமும் ஆயிரம் குழறுபடிகள் இருக்கவே செய்தன. ஆனாலென்ன,- இந்த 'தானாவை' நெற்றிக் கண்ணிலிருந்தோ உடலில் பூத்த ஆயிரம் வியர்வை முத்துக்களிலிருந்தோ வீரபத்ரர்களைப் பிறப்பித்து, வதஞ்செய்ய முடியாது, பரமேஸ்வரனால். தவிரவும், அந்த 'தானா' மாதிரி, ஆட்டுக்கடாவாக

விஷயம் ஒரு கணக்கில் பாரதூரமாயிருப்பதாய் தோற்றினும் இலகோவிலகு ஆனது. அம்பிகைக்கு யாரோவோ, யாரோ அம்பிகைக்கோ கண் எறிவதாக, யாரோ அல்லது யாரோவோ தக்ஷ்ஸமுத்துவிடம் உருட்டியிருக்க வேண்டும். ஆச்சர்யகரமாக, உருட்டியது கொடிச்சிவாலிக்கிழவி அல்ல.

இன்னும் ஆச்சர்யமான விவகாரம், அது இன்னொரு கொடிச்சிவாலிக்கிழவி என்பதாம். இது;: கொடிச்சிவாலிக்கிழவி 2. மாகியப்பிட்டி கொ.வா.கி. ஆவளைப்பிள்ளையார் உறையும் ஊர் கொ.. வா.கிழவி , இலக்கம்: 01 வேறு. இது வேறு. ஊரூரெல்லாம் கொடிச்சிவாலிக் கிழவிகள்

'உழவென்று' உளவே உள்ர்.

அவதாரமெடுத்து, எந்த வீர, அவீர பத்திரர்களிடமும் உயிர்ப் பிச்சைக்காய் கெஞ்சத் தேவையில்லை.

அந்தப்பரமேஸ்வரன் வேறு. இந்த தக்ஷ்ஸனுடன் உறவில் வரவிருக்கிற பரமேஸ்வரன்-வரன் வேறு.

த.முத்துவின் 'இறுக்கங்களுள்' நம்பிக்கையீனமும் ஒன்று. அதை முழுமையாய் அவநம்பிக்கை என்று சொல்லிவிட முடியாது. நம்பிக்கையீனமும் அவநம்பிக்கையும் ஒத்தில்லாமலும் போகலாம். அப்படி, ஒருவேளை ஒக்கின், தானாமூனாவின் தன் மகள் அம்பிகை மேலில்லாத நம்பிக்கையை அவநம்பிக்கை, எனலாந்தான்.

விஷயம் ஒரு கணக்கில் பாரதூரமாயிருப்பதாய் தோற்றினும் இலகோவிலகு ஆனது. அம்பிகைக்கு யாரோவோ, யாரோ அம்பிகைக்கோ கண் எறிவதாக, யாரோ அல்லது யாரோவோ தக்ஷ்ஸமுத்துவிடம் உருட்டியிருக்க வேண்டும். ஆச்சர்யகரமாக, உருட்டியது கொடிச்சிவாலிக்கிழவி அல்ல. இன்னும் ஆச்சர்யமான விவகாரம், அது இன்னொரு கொடிச்சிவாலிக்கிழவி என்பதாம். இது,- கொடிச்சிவாலிக்கிழவி 2. மாகியப்பிட்டி கொ.வா.கி. ஆவளைப்பிள்ளையார் உறையும் ஊர் கொ..வா.கிழவி , இலக்கம்-01 வேறு. இது வேறு. ஊரூரெல்லாம் கொடிச்சிவாலிக் கிழவிகள் 'உழவென்று' உளவே உளர்.

தக்ஷ்ஸணமுத்துவுக்கு மண்டை எரிந்தது. முன்னரும், இவனுடன் அம்பிகை 'றாட்டிய' கதை, செம்மையாகப் பறைவதாக இருந்தால், அம்பிகையுடன் இவன் றாட்டியசங்கதி, கொண்டோடிச்சுப்பி° '1' மூலம் பிரசித்தம். இனியும் விட முடியாது;!!!

வாஸ்தவத்தில், அம்பிகை, பிற்பாடு யாருடனும் றாட்டுப்படவேயில்லை.

அதுண்மை.

பனை மரத்தின் கீழிருந்து பால்தான் பருகினாள். நாயும் வர, உறியும் அறுந்து விழுந்தது. ஆனால், கொடிச்சிவாலிக்கிழவி-'இலக்கம் இரண்டு',- உறியிலிருந்து விழுந்துடைந்த முட்டி தயிரை நக்கியதா அல்லது, உறிப் பறியிலிருந்த செத்தலிக்கருவாட்டை நன்னியதாவென்று, கடைசிவரை யாருமே அறியவில்லை.

எதெப்படியாயினும், தானாமூனா, நிலபரம் சறுக்கமுன் சுடுபுடுவென்று காரிய விவகாரத்தில் முந்தினார்.

தக்ஷ்ஸமுத்துவிற்கு மிக நெருக்கமான நண்பனொருவனுக்கு பரமேஸ்வரன் என்கிற இள மகனொருவன் இருந்தான் 'அங்கு'.

'அங்கு' என்பது 'இங்கு' ஆகும்.

***

'இங்கு'

இங்கு, பலரது உண்மை வாழ்வு பற்றி ஏதும் தெரியாது. அது இங்கேயே கூடத் தெரியாது. பரமேஸ்வரனது பற்றியும் பெரிதாய் தெரியாது. 'இங்கு'ள்ள பலர், 'அங்கு' விலாவும் விழாவும் காட்டும்போது, அது,- புஜ பல பராக்கிரமமற்ற 'விலா'வாகவும் உழுத்துப் பொதிந்த, எப்பொறியிலும் பொறியும் சப்பற விழாவாகவுமே இருப்பது சகஜத்திலும் சகலதுமான வழமை. 'ஆனையெடா குதிரையெடா' என்று, கஜ-துரத கதை அளக்கிறபோது, பல் சந்தர்ப்பங்களில் அது பூனை-எலியளவும் தேறாது. இருவேறு பிரபஞ்சங்களின் வேறுபாடு பிரபஞ்சங்களது விஸ்தீரணத்திலும் பெரிதாக இருக்கிற மாதிரியே அது. பரமேஸ்வரனைப்பற்றியும், இன்னும் பிறஇங்கத்தையபலரைப்பற்றியும் ஊர் புளுகிற்று. உச்சத்திலும் உச்சி அது. சிலவேளைகளில் புராணப்புளுகையே சிலம்பமாய் சிதறடித்து, வென்றுவிடும். எட்டு நாகங்களையும் எட்டு யானைகளையும் தாங்கும் ஒரு அத்த்த்த்திப்பெரு ப்ரம்ம்ம்மாண்டமான கூர்ம. ஆமையைத் தாங்கும் ஆதாரசக்தி தாங்கும் அண்டகடாகம் என்கிற பேரண்டக் கதையே தோற்று விடும்.

பரமேசு என்கிற பரமேஸ்வரன் கணிசமான அளவு சொத்து வைத்திருந்தான். அது எவ்வகைப்பாட்டிலும் கண்ணியமாக சம்பாதித்ததன்று. ஆட்களை, அரசை ஏய்த்துச் சேர்த்த மோஸ மோசடி கருவூலந்தான். இவ்விவகாரங்கள், அதன் நுட்பமான திருகுதாள நுண்ணூழல்கள் பற்றி நிறைய்ய்ய உண்டு. அதைப்பறையத் துவங்கின் பெரு மலைபோல் குவிந்து விடும். பாதாள அடியிலேயே பெருங் கருங்கோறை போட்டு, அதனூடு பாய்ந்து, பாவி, சொர்க்கத்தின் வாசலில் கூட படியேறக்கூடிய பணம்,- எவ்வாறு வந்ததென்றெல்லாம் வழமையாக வினாக்கள் எழுவதில்லை. இருக்கிறது தானே அது° பணம். பிறகென்ன கேள்வி..?! பிறகேன். பிறகெப்படி கேள்வி;.??!!

பரமேசு கொஞ்சம் குழப்படிக் காரன்தான். சிலவேளைகளில் இந்த கொஞ்சம், பஞ்சமில்லாமல் உச்சுச்சத்துக்கும் போகும். கொஞ்சம் கூடுதலாக தண்ணி போடுவான். கொஞ்சம் கஞ்சா

வாஸ்தவத்தில், அம்பிகை, பிற்பாடு யாருடனும் றாட்டுப்படவேயில்லை.

அதுண்மை.

பனை மரத்தின் கீழிருந்து பால்தான் பருகினாள். நாயும் வர, உறியும் அறுந்து விழுந்தது. ஆனால், கொடிச்சிவாலிக்கிழவி: 'இலக்கம் இரண்டு',: உறியிலிருந்து விழுந்துடைந்த முட்டி தயிரை நக்கியதா அல்லது, உறிப் பறியிலிருந்த செத்தலிக்கருவாட்டை நன்னியதாவென்று, கடைசிவரை யாருமே அறியவில்லை.

புகைப்பான். கொஞ்சம் ஸ்திரீலோல விவகாரமும் இருக்கலாம் (?) போல். ஆனால், விசித்திரகரமாக, இதனுண்மை,-பொய் பற்றி செம்மையாய்த் தெரியாது. இதனுள் கிரஹிக்க முடியாத சூக்ஷ்ஸூமம் ஒன்று கூட இருக்கக்கூடும். அதை, அவன்கூட கிரஹித்தானா, என்பதும் தெரியாது அவனுக்கும். மனதில் உள்ளது போல சூதும் உண்டு. ஆனால், அவன் வெளியில் சாது. இதன் பொருட்டு, வாது செய்யத் தயங்குவதால், அதன் வழி வரும் வேதனை கொஞ்சம் குறைவுதான்.

'பரமேசுவிற்கு ரொம்பவும் ஆத்தலான வாழ்க்கை,' என்றுதான் நண்பர்கள் புரிந்து கொண்டார்கள். அவன் அப்படிப் புரியவில்லை. எல்லா நேரமும் 'ஆத்தல் எடுக்க', அதுசார் இளைப்பு தவிர்க்க முடியாமையான சாதாரண வாழ் நியமங்கூட குறையாகப் பட்டது. இயல்பான சுழற்சியின் படியான பண வரத்தின் தேக்கம், ஏமாற்று வழிகளின் வழி வரக்கூடிய தொடரபாயம், ஏலவே ஏறுப்பட்ட எதிரிகளிடமிருந்து வரக்கூடிய நெருக்குவாரம் என்ற பல இடுக்கண் கோலங்கள், விஷச்சர்ப்ப விஷச்சரமாலையாய் மென்னியை உன்னின.

திருமணம் செய்யத் தீர்மானித்தான்.

***

'அங்கு'

பெரீய்ய்ய்ய தண்டு, தளபாடங்களுடன்தான் அங்கு போய் இறங்கினான் பரமேஸ்வரன். எல்லாமே பெரீய்ய்ய்யதாகவே இருந்தது. எல்லாம் பெரீய்ய்ய்யதாகவே இருப்பதானது, பெரீய்ய்ய்ய பெருமையை கண்டிப்பாகக் கொண்டு வரும். தக்ஷ்ஸமுத்துவுக்கும் அவரது நண்பரான பரமேசுவின் தகப்பனுக்கும் பெரு பெருமையைக் கொண்டு வந்தது. செழிப்பான பையன் வந்திருக்கிறான். அங்கத்தைய பெரு பெருமைக்குரிய நாட்டில் செந்தளிர்ப்பாய் குடை குத்தியிருக்கிறான். அரக்க முடியாத அமர்க்கள வாழ்வு போகிறது. பிறகென்ன...??!! செங்குப்பு ஐயாவும் நுண்மையாய் மண மக்காள் குறிப்புப்பார்த்து பதினாறும் 'வள்ளீசாய்' பொருந்துவதாகவே பச்சை விளக்கு காட்டியிருந்தார். அவர் பதினேழாவது பொருத்தத்தைப் பார்க்கவில்லை. அது அத்த்த்தியதி முக்கியமானதாக இருந்தும் எல்லோருமே தவற விடுவதுதான் வழக்கம். ஏனென்றுதான் தெரியாது. பதினேழு பிழைத்தால், யாவும் பரநாஸம்.

முன்னர் போலல்ல இப்போ. முன்னர்தான் முன்னேற்றமாக இருந்ததென்ற பொய்யுரை போக, முன்னர்போல எதையும் எவருமே செய்வதில்லை. கல்யாணச்சடங்கு உட்பட.

முன்னரெல்லாம் வசதி படைத்தவர்களின் திருமணச் சம்பிரதாயங்கள் நீட்டலான துல்லியங்களுடன் பழஞ்சேர்க்கை பின்னியிருக்க, விஷய விபர தொகைப்புடன் இருப்பது போல இப்போதில்லை. மலாய் மொழிச் சொல்லிலிருந்து தமிழ் தத்தெடுத்த 'தாம்பூலம்' சேர்த்தியான நிச்சய தாம்பூலம், கன்னிக்கால்.பந்தக்கால் நடுகை, பொன்னுருக்கு, நவதானிய மூலிகா பாத்திரமெல்லாம் மறையத் தொடங்கினாலும் பெரு எடுப்புக்கள் கங்கு கரையின்றி பிரவஹிக்கவே செய்கின்றன.

பரமேசுவின் திருமண விழாவிற்கு பிரமாண்டமான மண்டபம் ஒன்றை வாடகைக்கு எடுத்து கங்கு கரையில்லா 'பிரவாஹம் 'பொங்கி-முங்கி, உடைக்க-படைக்கப்பட்டது. வண்ணக்கோலச் சோடனை, தங்க ஆபரண ஜொலிப்பு, சுவைப்பூரிப்பு விருந்துணவு அட்டஹாசம், நிறைய விருந்தின வாழ்த்துவோர் என விழா பிரமாண்டித்திருந்தது. எல்லா விருந்தினரும் வாழ்த்துவோர் என்றுமில்லை.

குரோதம் கொடியது.

வாழ்த்தி 'வாழாமல் விட்டதுண்டு', உண்டு என்பதுபோல், வாழ்த்தாவிட்டு வாழாமல் விட்டதில்லை, என்பதும் நிஜமாதலால், வாழ்த்தா விருந்தினரையிட்டு சோலியில்லை. வாழ்த்திலும் பார்க்க, மொய்யை எழுதி.பணம்-பரிசைத் தந்து போவதே மேல், போல்.

கெட்டி மேளம் மொக்கி, அட்சதை ஏறிய, ஐயர், 'மாங்கல்யம் தந்துநாநேம மம ஜீவனஹேதுநா கண்டே பத்தாமி ஸுபகே ஸஸ்ஜிவரதசதம்,' என்று புரியாப்பாஷையில் மந்திரம் உரைத்து, அம்பிகையின் கழுத்தில் பரமேசு ஈசான திசையைப்பார்த்து தாலி கட்டியபோதும், அவளிடம் எவருமே, என்றுமே 'உனக்கு பரமேஸ்வரனை மணமுடிக்க இஸ்டமா..??' என்று கேட்கவில்லை.

•••

'இங்கு'

பதட்டத்துடன் தான் telephone ஐப்பார்த்தான். மறு தொங்கலில் யார் என்பது தெரிந்து விட்டது. எடுக்காமல் விடலாம். ஆனால், எடுக்காமல் எப்படி விட;.??!!

தூக்கினான்.

'Hello…'

'ஹலோ;.!!' ஒரு குறு மௌனம். மறு முனையில் எழுந்த பதட்டத்தை இத்தொங்கலிலே இவனால் உணர முடிந்தது.

அம்பிகை;.!!!!

இப்போது இவனிலும் பதட்டம் தொற்றிக் கொண்டது.

திடுமென்று, இந்த தொலைபேசி இணைப்பில் இன்னொரு குரல் புகுந்து கொண்டது.

யாரது;.??!!

'அட;, கோதாரி விழுவானே; அங்கைதான் அந்தப்பெட்டையை வெள்ளவாய்க்கால் இறக்கம், மதவடி, தேர் முட்டியடி கள்ள அறையெண்டு கெடுத்ததும் காணாமல், இஞ்சை கலியாணங்கட்டி வந்தாப்பிறகும் கெடுக்க வெளிக்கிட்டியோடா;???!!!'

கொடிச்சிவாலிக்கிழவி- '1';.!!!!!

'அதிகாரம் நான்கில்' சொன்னது போல், கொடிச்சிவாலிக்கிழவி செத்து பற்பல வருஷங்கள்.

(இன்னும் வர உண்டு.) அ

# ‘சிதைப்பு’

## ‘குவாக்... குவாக்... குவாக்.!

அதிகாரம்
07

‘அவ’தாரன்: கொல்...! விடாதே;.! எதிரியைக் கொல்! நீ கொல்வது தர்மத்துக்காக அல்ல அஉனக்காக. உன் மக்களுக்காக.

‘அவ’தாரா: குவாக்..!! குவாக்..!! குவாக்..!! என் மக்களுக்காக நான் கொல்வது சரியென்றால், அவர்களும் தமக்காக,- என்னை, எம்மை கொல்லலாந்தானே.

‘அவ’தாரன்: இல்லை.

அவ’தாரா:எப்படி;??!!

‘அவ’தாரன்:: உன் கொலையும் அவர்களது கொலையும் சமமல்ல. ஏனெனில், நீயும் அவர்களும் சமமல்ல.

அவ’தாரா: இதென்ன..?? உலகில் சகல மனிதரும் சமமாக படைக்கப்படவில்லையா;??!! அப்படித்தானே காலாகாலமாய் சொல்லப்படுகிறது.

‘அவ’தாரன்: இல்லையே. அப்படி பொய் சொல்லித்தானே மக்களை ஏய்க்கலாம். அதிகாரத்தில் குந்தலாம்.

அவ’தாரா:சரி. சமமல்ல. நான் கொல்கிறேன். உன்னைக் கொள்கிறேன்;!!!

‘அவ’தாரன்:: என்னையா..??!! ஐயோ;!!!! ஏன்;.??!!

அவ’தாரா: நீ எனக்கு சமமல்ல;.!!!!!

# “RUIN”

## [Or, Quack..!!Quack..!!Quack..!!]

### Chapter: 07

- Incarnation force: kill!! don't let it go!!
  kill the enemy!!
  your killing is not for dharma!
  it's for you; for your people!
- Anti-duck: Quack/!! Quack/!! Quack/!
  If my killing is right. Since i's for me and for my people. Then. They could kill me and us too.
  Couldn't they??
- Incarnation force:No!
- Anti-duck: How…??
- Incarnation force: Your killing is not equal to their killing since you and they are not equal!
- Anti-duck: what is this…?? Ain't all humans created equally?
  That's how it's said time and time again!!
- Incarnation force: not really.
  that's how to cheat people by lying, to sit on the authority.
- Anti-duck: Ok. not equal. I kill. I kill you!
- Incarnation force: Me…?? Oh, my, why…???
- Anti-duck: you are not equal to me!

# மூன்றாம் விதி



நவமகன்

'ஆண்டவனே எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?' எனத் தனக்குள்ளேயே கேட்டு ஆண்டவனை நொந்தவாறு கவலை தோய்ந்த முகத்தை தொங்கப் போட்டபடியே ஒஸ்லோவின் புறநகர்ப்பகுதியில் அமைந்திருந்த மாளிகை போன்றதொரு வீட்டினுள்ளே பளபளப்பான படுக்கையறையில் உயர்த்தவும், தாழ்த்தவும், சரிக்கவுமென ரிமோட் கொன்ரோலில் இயங்கக்கூடிய மிகப் பெறுமதிவாய்ந்த ஸ்பிரிங் ஏயார் சொகுசு மெத்தையில் குந்தியிருந்து யோசித்துக் குழம்பினார் குமாரவேலர்.

இலங்கைத் தீவுக்குள்ளேயே இருந்த சின்னஞ் சிறியதொரு தீவின் பனங்காட்டு மூலையில் பனையோலைக் கூரையும், தென்னோலை தட்டிகளுமாயான மண் குடிசையினுள் மண்ணெண்ணெய் விளக்கனைத்த இருளோடு சாணிபோட்டு மொழுகிய மண் தரையில் விரித்த ஓலைப் பாயில் தந்தையும், தாயும் கலந்த கலவியில் தந்தையின் பல லட்சம் விந்தணுக்கள் தாயின் கருமுட்டைக்குள் நுழைய முற்பட்ட வேளையில் இயற்கையாகவே பெண்ணுறுப்பில் இருக்கக்கூடிய ஒருவிதமான விஷத்தன்மை வாய்ந்த அமிலத்தால் முக்கால்வாசி விந்தணுக்கள் அழிந்துபோக, மீதமிருந்த ஆரோக்கியமான விந்தணுக்கள் அத்தகைய விஷத்தன்மை வாய்ந்த

அமிலத்தை எதிர்த்துப் போராடிக் கருமுட்டையை அடையும் பயணத்தைத் தொடர்ந்தவேளையில், மீண்டும் பெண்ணுறுப்பில் இருக்கக்கூடிய சளி போன்ற திரவம் விந்தணுக்களைத் தடுத்தபோது எதிர்ப்புத் திறனற்ற விந்தணுக்கள் அழிந்துபோக, மீதமிருந்த குறைந்த அளவிலான விந்தணுக்களும் பெலோப்பியன் குழாயினால் தடுக்கப்பட அந்தத் தடையையும் மீறி ஒரேயொரு ஆரோக்கியமான விந்தணு மட்டும் வெற்றிகரமாகத் தாயின் கருமுட்டையினுள் நுழைந்து கருவுறுதலை தொடங்கியதன் விளைவாக ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி நாற்பத்தொன்பதில் மானிடப் பிறப்பெய்து இப் பூமியில் வந்து விழுந்தவர் தான் இந்தக் குமாரவேலர்.

முப்பத்தேழு வருடங்களைக் கடத்திவிட்ட இந்த நோர்வே வாழ்வில் சின்னச் சின்ன சோதனைக் காலங்களைக் கடக்கின்ற போதெல்லாம் இப்படித்தான் ஆண்டவனைக் கூப்பி ட்டு மனம் நொந்து குழம்பிப்போவார்.

மிக இளவயதிலேயே காதல் திருமணம் செய்துகொண்டு தன் கிராமத்திலேயே வாழ்ந்தவர், முப்பத்தேழாவது வயதில் மூன்று பிள்ளைகளையும், மனைவியையும் யாழில் விட்டுவிட்டு தன்னந்தனியே ஒரு அகதியாக நோர்வேயில் வந்திறங்கியபோதுங் கூட பிரிவுத் துயரையும், கடுங்குளிரையும் தாங்க முடியாமல் இப்படித்தான் ஆண்டவனைக் கூப்பிட்டுவைத்துக் குழம்பியழுதார்.

பிள்ளைகளுக்கு பதினெட்டு வயதாவதற்குள் ஸ்பொன்சர் விசாவை அனுப்பி இங்கு கூப்பிட்டுவிட வேண்டும் என்பதற்காக கடினமான வேலைகளைச் செய்து களைத்து விழுந்தபோதெல்லாமும் கூட இப்படித்தான் குழம்பினார்.

பின்பு நோர்வே வந்த பிள்ளைகள் தான் ஆசைப்பட்ட மாதிரியே டாக்டராகவும் இஞ்சினியராகவும் வரவில்லையே என்றபோதும், ஊரிலிருந்து மாப்பிள்ளை எடுக்கவேண்டும் என்ற தனது விருப்பத்திற்கு மாறாக மூத்த மகள் பிடிவாதமாய் நின்றபோதும்,



இளைய மகள் பாதியிலேயே படிப்பை நிறுத்திக்கொண்டபோதும், கடைசியாக ஊரில் இருக்கும் தன் தங்கையின் மகளைக் கட்டுவதற்கு கடைசி மகன் மறுத்தபோதுமென எல்லா இக்கட்டான கால கட்டங்களிலும் இப்படித்தான் யோசித்துக் கவலையில் குழம்பினார்.

இப்படியான கவலைகளில் மூழ்கிப்போய் இருந்தவரை ஒருமுறை மாரடைப்புக் கூட தாக்கியது. அதிலிருந்து தப்பி மீண்டு வந்தபோதுங்கூட, ‘ஆண்டவனே எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?’ என்றுதான் கேட்டார்.

ஆனால், இப்போதவர் எழுபத்திநான்கு வயதில் சொகுசு மெத்தையில் குந்தியிருந்து அதே புராணத்தைப் பாடிக் குழம்பிக் கொண்டிருப்பது பேரப்பிள்ளைகளை நினைத்துத்தான். மூன்று பிள்ளைகளும் நல்ல வேலை, நல்ல வீடு வளவு, விலையுயர்ந்த கார், நினைத்த நேரம் நினைத்த நாட்டுக்குப் பயணமென்று எல்லா வசதிகளுடனும் எந்தவிதமான குறைகளும் இன்றிச் சந்தோசமாகத்தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். குமாரவேலர் பிள்ளைகளிடம் எதிர்பார்த்து ஏமாந்துபோனதைக்கூட பேரப்பிள்ளைகள் நிவர்த்தி செய்தும் விட்டார்கள். மூத்த மகளின் மூத்தவள் டாக்டர் படிப்பை முடித்துவிட்டாள். இளைய மகளின் மூத்தவன் இஞ்சினியர் ஆகிவிட்டான். மற்றைய பேரப்பிள்ளைகளும் நல்ல படிப்புகள் படித்துக்கொண்டிருகின்றார்கள். ஆனாலும் பேரப்பிள்ளைகள் தமிழ்ப் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் மதிக்கவில்லை, காக்கவில்லை என்ற ஏக்கமும், கவலையுந்தான் இப்போதைய அவருடைய யோசனைகளுக்கும், குழப்பங் களிற்கும் காரணிகளாயிருந்தன.

‘என்னப்பா, கட்டிலை விட்டிறங்கி முகத்தைக் கழுவுங்கோவன் ரீ போட்டுத்தாறன்’ என்றபடி வந்து நின்றார் அவரது மனைவி. அவவுக்கும் இத்தகைய கவலைகள் இருந்தாலும், இவரளவுக்கு இல்லைத்தான்.

‘இவள் மூத்தவளின்ர விதுஷாவுக்கு என்னவாம் பிளான்? தாய், தகப்பனும் கலியாணத்தைக் கட்டி வைக்காமல் இப்படியே விடப் போகினமாமே?’ மண்டைக்குள் நெளிந்து கொண்டிருந்த கேள்விப் புழுக்களில் ஒன்றைத் தூக்கி வெளியே போட்டார் குமாரவேலர்.

‘இங்க பிறந்து வளர்ந்ததுகள் இங்கத்தைய வாழ்க்கையைத் தானேயப்பா வாழுங்கள். அதுக்குத் தாய், தகப்பன் தான் என்ன செய்ய முடியும்?’

‘சரி, வெள்ளைக்காரனோட வாழச் சம்மதிச்சவை அதைக் கட்டியாவது வைக்கலாம் தானே.

அத விட்டுப்போட்டு கண்டறியாத சம்பூரும், கத்தரிக்காயும்' என்றார் எரிச்சலுடன்.

'ஏனப்பா கல்யாணம் கட்டாமல் சேர்ந்து வாழுறது இங்க வழமைதானே, இதென்ன எங்கட நாடும் எங்கட காலமுமே?' எனப் புறுபுறுத்தபடியே தேநீர் போடப்போனார் மனைவி.

'எல்லாம் நான் செய்த மடத்தனந்தான். இந்த நாட்டுக்கு வந்தேயிருக்கக் கூடாது' எனத் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார் குமாரவேலர். அவருக்கு எல்லாமே தான் நினைத்ததுபோல் நேர்த்தியாக நடக்கவேண்டும். அவருடைய விருப்பத்திற்கேற்ப எதை நினைக்கிறாரோ அதுவேதான் அவருடைய அகராதியில் நேர்த்தியானது.

ஒரு பறவை சிறகு விரித்தால் எட்டக்கூடிய தூரத்தில் தன் குஞ்சுகளை வைத்திருப்பது போலவேதான் குமாரவேலரும் தன் பிள்ளைகளை அக்கம் பக்கமாகவே குடியமர்த்தி வைத்திருந்தார். மூன்று பிள்ளைகள், ஒன்பது பேரப்பிள்ளைகள் என எல்லோரும் உணவுகளோடும், உணர்வுகளோடும் அடிக்கடி வந்து உறவாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். குமாரவேலரையும் மனைவியையும் வெளியே கூட்டிச் சென்று அவர்களின் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்வார்கள். கொண்டாட்ட நாட்களில் அவர்களின் வீடு மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகளால் நிறைந்திருக்கும். அப்போதெல்லாம் இந்த நாட்டில் தான் இல்லாத காலங்களிலும் தன் அடையாளங்களாய்த் திகழக்கூடிய தன் எதிர்காலச் சந்ததியே புடைசூழத் தான் இங்கே ராஜ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதாகத் தனக்குள்ளேயே எண்ணிப் பெருமிதங் கொள்வார். இப் பெருமிதங்களையெல்லாம் தன் நண்பர்களிடத்தில் தம்பட்டமடித்துப் புளுகவும் அவர் தயங்கியதில்லை.

தேசியச் செயற்பாடுகளிலும் முன் நின்று இனப்பற்று, மொழிப்பற்று போன்றவற்றின் அடையாளமாகவும் தன்னைத் தமிழ்ச் சமூகத்துக்குள் நிலைநிறுத்திக் கொண்டார். ஈழவிடுதலைப் போராட்டச் செயற்பாடுகளிலும் புலி ஆதரவு நிலையெடுத்து வேலைகள் செய்ததோடு மட்டுமல்லாமல் பேரப்பிள்ளைகளுக்குத் தமிழையும், தமிழ்ப் பண்பாடுகளையும், கலாச் சாரத்தையும் புகுத்தி விடுவதற்கும் பெரும்பாடுகள் பட்டவருக்கு இப்போது தான் பட்ட பாடுகள் எல்லாமே விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதாகவே தோன்றியது.

இரண்டாயிரத்தி ஒன்பதிற்குப் பிறகு 'அதுகுமொரு நாடே? இனியங்க மனுஷர் போய் வாழமுடியுமே?' என்று கேட்டுக் கொண்டிருந்தவருக்கு இப்போது திடீரென்று அக்கரையே பச்சையாகவும் தெரிந்தது.

பல்லைத் தீட்டி முகத்தைக் கழுவிவிட்டு வந்து சோபாவில் அமர்ந்தவருக்கு தேநீர் வரவில்லை. சமையலறையிலிருந்து மனைவியின் தொலைபேசி உரையாடல் சத்தமே வந்தது. பொறுமை இழந்தவராய் எழுந்து உள்ளே போனவரைக் கண்டதுமே, 'சரி.. சரி.. பிறகு கதைக்கிறன் வை' என்ற மனைவி பதட்டத்துடன் உரையாடலை நிறுத்திக்கொண்டார்.

'என்னது? ஆரு போனில?'

'அவள் சின்னவள் எடுத்தவள்.'

'என்னவாம்?'

'ஒண்டுமில்லச் சும்மாதான் எடுத்தவள்' என்றவாறே தேநீர்க் குவளைகளைத் தூக்கிக்கொண்டு ஹாலுக்குள் வந்த மனைவியின் பின்னாலேயே வந்தார்.

'என்ன, ஒரு மாதிரியா இருக்கிற? என்னவாம் சின்னவள்?' மனைவியின் முகத்தைப் பார்த்தே மனத்தைப் புரிந்து கொண்டவர் விடுவதாயில்லை.

இவருக்கு ஏதோ புரிந்துவிட்டது இனிப் பிடுங்கி எடுக்காமல் விடமாட்டார் என்பதைப் புரிந்துகொண்ட மனைவி, 'சின்னவளின்ர மூத்தவனும்

'அவனுமென்ன வெள்ளைக் காரியையாமே?' சட்டெனக் கேட்டார்.

'இல்லத் தமிழ் தான்' என்றார் மனைவி.

'யாராம் பெட்டை?' என்ற அவரது கேள்விக்கு மனைவி பதில் சொல்லச் சிரமப்பட்டதைக் கவனித்தவரின் முகத்தில் குழப்ப ரேகைகள் படர்ந்தன.

தலையைச் சொறிந்தவாறே 'அதுதானப்பா அவள் உங்களோட கதைக்கப் பயப்பிடுறாள், அவன் பெடியன் புவநேந்திரன்ர பெட்டையையாமெல்லே லவ் பண்ணுறானாம்' என்றார்.

'என்னது! புவநேந்திரத்தின்ர பெட்டையோ? என்ன நீ சொல்லுற?' என உடல் பதறத் திகைத்தவரின் கையிலிருந்த குவளையிலிருந்து பாதித் தேநீர் வெளியே சிந்திப்போக, உடல் தளர்ந்து ஷோபாவில் சாய்ந்தவரின் நினைகளும் சிந்திப் பின்னோக்கி வழிந்தன.

•••

குமாரவேலர் நோர்வே வந்த காலத்தில் அகதி முகாமில் அறிமுகமானவர் தான் புவனேந்திரன். அறிமுகமான அன்றிலிருந்தே கீரிக்கும் பாம்புக்குமான இடைவெளியே இருவருக்குமிருந்தது. அதற்கான காரணம், புவனேந்திரன் புலி அல்லாத மாற்று இயக்கத்திலிருந்து வந்தவராகவும் குமாரவேலர் புலி இயக்க ஆதரவாளராகவும் இருந்ததைத் தவிர வேறு எதுவித தனிப்பட்ட பிரச்சனைகளும் இருக்கவில்லை. புலிகளால் பாதிக்கப்பட்டு வந்த புவனேந்திரனின் புலிகள் மீதான விமர்சனங்களை குமாரவேலரால் தாங்கிக் கொள்ளவே முடிவதில்லை. அதனால் அடிக்கடி இருவருக்குமிடையில் கடுமையான வாக்குவாதங்கள் நிகழும். புவனேந்திரனின் தர்க்கரீதியான கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் திணறிய பொழுதுகளில்கூட குமாரவேலர் ஆண்டவனைக் கூப்பிட்டு வைத்துக் குமுறியதுமுண்டு.

பின்னர் தொண்ணூறுகளின் முற்பகுதியில் ஐரோப்பாவில் வெளிவந்த சஞ்சிகை ஒன்றில் புவனேந்திரன் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அக் கட்டுரையின் மையக்கருவானது. ஈழப்போராட்டத்தின் முடிவில் புலித் தலைமை மக்களையும்

அழிவுக்குற்படுத்திவிட்டு தானும் சரணடைந்து அழிந்துபோகும் என்பதாகவே இருந்தது. சர்ச்சைக்குள்ளான அந்தச் சம்பவமே இருவருக்குமான பகைமையை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றதோடு, தேசியவாதிகள் என்று சொல்லிக்கொள்பவர்களால் மாற்றுக் கருத்தாளர்களுக்குத் தாராளமாக அள்ளி வழங்கப்படும் துரோகிப் பட்டத்தையும் குமாரவேலரால் புவநேந்திரனுக்குத் தாராள மனதோடு வழங்கவும் வைத்தது. அன்றிலிருந்து இன்றுவரை கீரியின் பக்கம் பாம்பும், பாம்பின் பக்கம் கீரியும் தலை காட்டுவதேயில்லை. அப்படியிருக்க இப்போது உறவு முறையில் ஒரு துரோகி தனது குடும்பத்திற்குள் நுழைவதை குமாரவேலரால் ஜீரணிக்கவே முடியவில்லை.

'சரி.. சரி.. இதில இருந்து யோசிச்சு பிறசரை ஏத்தாமல், இண்டைக்கு நல்ல வெய்யிலாயிருக்குது வெளியபோய் ஒரு நடை நடந்திட்டு வாங்க' என்றபடி எழுந்துபோனார் மனைவி.

பென்ஷன் எடுத்தபின் அவருடைய பொழுதுபோக்கு பெரும்பாலும் நடை தான். பொழுதும் போனது மட்டுமல்லாது நல்ல ஆரோக்கியமும் கிடைத்தது. கோடைகாலத்தில் பக்கத்திலிருக்கும் பூங்காவைச் சுற்றி ஒரு நடை போட்டுவிட்டு ஆற அமர புற்தரைகளில் இருந்து புதினம் பார்ப்பதும், குளிர்காலத்தில் பக்கத்திலிருக்கும் சொப்பிங் சென்ரருக்குச் சென்று அங்கு போடப்பட்டிருக்கும் சோபாக்களில் இருந்து போற வாறவர்களைப் புதினம் பார்ப்பதுமாகவே அவருடைய பொழுதுகள் கழிந்து கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே பேத்தியின் விடயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தவரை இப்போது பேரனின் விடயமும் யோசிக்கவைத்ததில் அவருடைய மனம் எதிலுமே ஈடுபாடற்றுக் குழம்பிக் கிடந்தது. இண்டைக்கு இவற்ற புறுபுறுப்பைத் தாங்க முடியாது. ஆண்டவனைக் கூப்பிட்டு வைச்சு அறுக்கப்போறார் என்பதைப் புரிந்துகொண்ட மனைவி, குமாரவேலரை வெளியே தள்ளிக் கதவைப் பூட்டிவிடுவதிலேயே குறியாக இருந்து சாதித்தும்விட்டார்

மனம் போன போக்கில் யோசித்தபடியே கால் போன போக்கில் நடந்து களைத்தவர் வீட்டை வந்தடைந்தபோது மூத்த மகள் வீட்டிலிருந்தாள். தங்கச்சியின் வீட்டுப் பிரச்சனைக்குச் சமாதானம் சொல்லி தங்களிடம் சம்மதம் வாங்கவே அக்காள்காரி வந்திருக்கின்றாள் என்பதை குமாரவேலர் புரிந்து கொண்டார். இப்படித்தான் அக்காளின் மகள் வெள்ளைக்காரனைக் காதலிச்ச பிரச்சனை கிளம்பியபோதும் தங்கச்சிக்காரி அக்காவிற்காக சமாதான தூதுவராக வந்திருந்ததும் ஞாபகத்தில் வந்தது.

மனைவியையும், மகளையும் ஏறெடுத்தும் பாராமல் நேராகச் சமையலறைக்குள் சென்றவர் புகைந்துகொண்டிருந்த நெஞ்சாங்குழிக்குள் குளிர் நீரை ஊற்றித் தணித்தார்.

'அப்பா வாங்கோ, இதில வந்து இருங்கோ. விஷயம் கேள்விப்பட்டீங்க தானே. அதுதான் தங்கச்சி வந்து கதைக்கப் பயத்தில என்னை அனுப்பினவள். பெடியன் அவளைத்தான் கட்டுவன் எண்டு பிடிவாதமா நிக்கிறானாம். அவளும் பாவம் என்னதான் செய்யிறது' என்றாள் மகள் தயங்கியவாறே.

'ஓகோ.. அப்ப எனக்குப் பரம எதிரியான அந்தத் துரோகிக்குச் சம்மந்தி ஆகிறதெண்டு அக்காவும், தங்கச்சியும் முடிவெடுத்திட்டீங்க போல?' வார்த்தைகளில் கோபம் தொனித்தது.

'என்னப்பா செய்யிறது. இது சரிவராதெண்டு ரெண்டு வருசமா பெடியனோட சண்டை பிடிச்சுப் பார்த்துப்போட்டுத்தான் இப்பயவள் எலாக்கடைசியில ஒரு முடிவுக்கு வந்திருக்கிறாள்' என்ற மகளை ஏற இறங்க ஒரு கொதிப்பார்வை பார்த்தார் குமாரவேலர்.

'அப்பா உங்கட மனநிலையும் எங்களுக்கு விளங்காமலில்ல, ஆனால் உங்கட எங்கட காலம் மாதிரி இல்லையே இப்பத்தையக் காலம். அதுதான் ஒண்டும் செய்யயேலாமல் கிடக்குது. புவநேந்திரத்தாற்ர தகப்பனும் இந்தா அந்தாவெண்டு படுக்கையில கிடக்குதாம் அதனாலதான் ஏதும் நடந்தாளுமெண்டு அவசரப்பட்டு வாறமாதமே சின்னதாக் கலியாணத்தை முடிக்கலாமெண்டு யோசிக்கினமாம்' என்றாள்.

'ஓகோ.. அப்ப முடிவெடுத்துப் போட்டுத்தான் இங்க வந்திருக்கிறீங்க, சரி..சரி.. என்னவெண்டான உங்கட இஸ்ரத்துக்குச் செய்யுங்கோ, ஆனாலொண்டு என்னை மட்டும் கல்யாணம் கத்தரிக்காயெண்டு கூப்பிட்டுப்போடாதீங்க' என்றவாறே சட்டெனக் கைகளை விசிறி எழுந்த குமாரவேலர் அறைக்குள் நுழைந்து கதவை அடித்துச் சாத்திக்கொண்டார்.

***

அதிகாலையிலேயே தொலைபேசி மணி ஒலித்தது. குமாரவேலர் எழும்பி எடுக்கப் பஞ்சிப்பட்டவராய் படுக்கையிலேயே கிடந்தார். ஓடிப்போய் ரிசீவரை எடுத்த அவரது மனைவி சில நிமிடங்களிலேயே பரபரத்தபடி மீண்டும் அறைக்குள் ஓடிவந்து, 'அப்பா உங்கட அண்ணாவுக்குக் கடுமையாக்கி வாட்டில வைச்சிருக்கினமாம். மாதவன் தான் இப்ப போன் எடுத்துச் சித்தப்பாவுக்குச் சொல்லச்சொல்லிச் சொன்னவன்' என்றார்.

சட்டென எழுந்து மெத்தையில் குந்திய குமாரவேலர், 'உடன மகனுக்குப் போனடிச்சு கொழும்புக்கு ரிக்கற்றை போடச்சொல்லு. நான் கட்டாயம் போகவேணும் எங்களை வளர்த்து ஆளாக்கின மனுசன்ர முகத்தை கடைசியா ஒருக்காப் பாத்திரவேணும்' எனப் பரபரத்தார்

அதற்கடுத்த நாளே கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய குமாரவேலரை அழைத்துப்போக அண்ணனின் மகன் மாதவன் யாழிலிருந்து வான் பிடித்துக்கொண்டு கொழும்புவரை வந்திருந்தான்.

வானில் ஏறியதுமே 'ஏன் சித்தப்பா இந்தமுறை இப்படியொரு நாடகம் போட்டுக்கொண்டு கிளம்பி

யிருக்கிறீங்க?‘ கேட்டான் மாதவன்.

‘அதப் பிறகு சொல்லுறன். அண்ணர் எப்பிடி இருக்கிறார்?‘

‘அப்பாவுக்கென்ன குறை, அவர் பொல்லுக்கட்டையாட்டம் இருக்கிறார். நீங்கள் தான் அவரைக் கொண்டுபோய் வாட்டில போட்டு விட்டியள். இப்ப நோர்வேயிலயிருந்து அக்காமாரெல்லாம் பெரியப்பாவுக்கு எப்பிடி? பெரியப்பாவுக்கு எப்பிடி? எண்டு ஒரே போனடிச்சபடி‘ என்றான்.

‘சரி..சரி.. கொஞ்ச நாளைக்கு அப்பர் ஆஸ்பத்திரியில எண்ட பொய்யையே அவளவைக்கு சொல்லிக் கொள்ளடாப்பா. நாங்கள் போட்ட நாடகமொண்டும் ஒருத்தருக்கும் தெரியவேண்டாம்‘ என்றவாறே வான் ஓட்டிக்கொண்டிருந்த சாரதியை கடைக் கண்ணால் பார்த்தார் குமாரவேலர்.

‘ஏன் சித்தப்பா?‘

‘அட, அங்கத்தையக் கூத்துகள் ஒண்டும் எனக்கிப்ப சரிப்பட்டு வருகுதில்லையடா தம்பி, அதுதான் ரெண்டு மூண்டு மாசத்துக்கு இங்க நிண்டிற்றுப் போகலாமெண்டு வந்தனான்‘ என்றவர் மீண்டும் சாரதியைப் பார்த்தார். நல்ல உயரமும், மெலிந்த உடலுமாக அறுபது வயது மதிக்கத்தக்க சாரதி நரைத்த தாடியை விரல்களால் கிளறியபடியே குமாரவேலரைப் பார்த்து ஒரு கனிவான புன்னகையை உதிர்த்துவிட்டு வானை ஓட்டுவதிலேயே மிகுந்த கவனமாக இருந்தார்.

ஒரு சிங்களப் பிரதேசத்தில் இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வான் மீண்டும் கிளம்பியபோது, ‘சித்தப்பா எனக்கு நித்திரை வருகுது நீங்கள் முன்னால வந்து சுப்பு அண்ணையோட கதைச்சுக்கொண்டு இருங்கோ, நான் பின்னால நீட்டி நிமிர்ந்து படுக்கப்போறன்‘ என்றான் மாதவன்.

முன் சீற்றில் ஏறி அமர்ந்துகொண்ட குமாரவேலர் சாரதியைப் பார்த்துக் கேட்டார், ‘சுப்புவே உங்கட பேர்?‘

‘ஓம் அது பாதிதான். முழுப்பேர் சுப்பிரமணியம்.‘

‘வான் உங்கடையே?‘

‘இல்ல, ஆட்டோதான் என்ர தொழில். இது தெரிஞ்ச பெடியன் ஒருத்தன்ர வான். அவனுக்கு இங்கால இடங்கள் தெரியாது. கொழும்பு ஓட்டங்கள் வந்தால் நான்தான் ஓடிக்குடுக்குறனான்‘ என்றவாறே ஒரு பீடியைக் கையிலெடுத்த சுப்பு, அதனைக் காட்டி ‘உங்களுக்கேதும் பிரச்சனை இல்லையே?‘ எனக் கேட்டார்.

‘சீச்சீ.. நீ பத்து‘ என்றவாறே தனது பயணப் பையைத் திறந்து சில குளிசைகளைக் கையிலெடுத்தவர், ‘நீரும் ஏதும் குளிசைகள் பாவிக்கிறனீரே?‘ எனக் கேட்டார்.

பீடிக்குள் இருந்த புகையை உறுஞ்சி இழுத்தபடியே ‘இல்லை‘ என்பதுபோல் தலையசைத்தார் சுப்பு.

‘குடுத்து வைச்சனீர், என்னைப் பாரும் சுகருக்கு ஒண்டு. குலஸ்ரோலுக்கு ஒண்டு பிறசருக்கு ஒண்டெண்டு எத்தினை போடவேண்டிக்கிடக்கு‘ என்றவர், ‘ஏன்தான் இன்னும் என்னைப்போட்டு ஆண்டவன் சோதிக்கிறானோ தெரியாது‘ என்ற அவரது தாரக மந்திரத்தையும் உச்சரிக்க மறக்கவில்லை.

அப்போது குமாரவேலரை ஏற இறங்க ஒரு பார்வை பார்த்த சுப்புவிடம் ‘அப்ப நீங்களும் எங்கட ஊர்க்காரரே?‘ எனக் கேட்டார்.

‘இல்லை அண்ணே, சொந்த ஊர் பலாலி. இப்ப உங்கட அண்ண வீட்டுக்குப் பக்கத்திலதான் இருக்கிறம்.‘

‘அட, அப்ப நீரும் புலம்பெயர்ந்த ஆள்த்தான். உள் நாட்டுக்கையே.‘

‘ம்.. பெரிய வீடு வளவுகள், தோட்டந்தொரவுகள் எண்டு நல்ல வசதியாத்தான் வாழ்ந்தனாங்கள். எங்கட இடங்களையெல்லாம் ஆமி பிடிச்சதோட எல்லாத்தையும் விட்டுப்போட்டு ஊரூராய் அலைஞ்சு வன்னிவரைக்கும் போய்வந்த எங்களுக்கிப்ப உங்கட ஊர்தான் தஞ்சம்.‘

‘குடும்பத்தோடையே?‘ சாரதி நித்திரையானாலும் என்ற பயத்தில் குமாரவேலர் கதை கொடுக்க ஆரம்பித்திருந்தார்.

‘ஓ.. எல்லாம் இருந்ததுதான் ஒரு காலத்தில. இப்பவொரு மருமகளோடையும் ரெண்டு பேரப் பிள்ளை களோடையுந்தான் இருக்கிறன்.‘

‘அப்ப மனிசி, பிள்ளைகள்?‘

‘எல்லாம் விட்டிற்றுப் போயிற்றுதுகள்.‘

‘அடடே அப்பிடியே! எனக்குந்தான் எல்லாம் இருந்தும் நானுமிப்ப விட்டிற்றுத்தான் வந்திருக்கிறன் கோபத்தில.‘

‘எனக்குந் தான் அண்ணை கோபம், விட்டிற்றுப் போயிற்றுதுகள் எண்டதில.‘

‘சரி..சரி.. விடு, கோபம் அடங்கத் திரும்பி வருவினம். நானும் என்ர கோபம் அடங்கத் திரும்பிப் போகத்தானே போறன்‘ என்று குமாரவேலர் சொன்னபோது, இருண்டுகிடந்த வானத்தை அண்ணார்ந்து பார்த்தபடியே யன்னற் கண்ணாடியைக் கீழிறக்கி உலர்ந்த காற்றை உள்ளிழுத்து நீண்டதொரு பெருமூச்சை விட்டார் சுப்பு.

‘ச்ச.. இங்கயுள்ள சனங்கள் நினைக்கிறமாதிரி வெளிநாட்டு வாழ்க்கையொண்டும் சொர்க்கமில்லைத் தம்பி, அங்கயும் போராடித்தான் வாழவேணும்.‘

‘அங்க போராடினால் வாழலாமல்லே.‘ என்ற சுப்பு மீண்டுமொரு முறை பெருமூச்செறிந்தார். அந்த வார்த்தைகளின் கனதியைப் புரிந்துகொள்ளாத குமாரவேலர் ஆண்டவன்தன்னையேசோதிப்பதாக வழிநெடுகத் தன் சுயபுராணத்தையே பாடிக்கொண்டு வந்தார். அவருடைய கவலைகளையும் அதற்கான காரணிகளையும் அறிந்துகொண்ட சுப்புவின் மனம் குமாரவேலருடைய குணவியல்புகளை எடை போட்டனவேயன்றி அவருக்காக எள்ளளவும் இரங்கவில்லை.

யாழ்ப்பாணத்தை வந்தடைந்த போது எல்லோர் வீட்டுச் சேவல்களும் செட்டைகளை அடித்துக் கூவ ஆரம்பித்திருந்தன. சுப்பு வானைவிட்டு இறங்கும்போதுதான் அவரது இடது காலின் முழங்காலுக்குக் கீழான பகுதி பிளாஸ்ரிக்கினால் ஆனதாக இருந்ததைக் கண்ட குமாரவேலர், ‘காலுக்கு என்ன தம்பி நடந்தது! கண்ணிவெடியே?‘ என்று பரிதாபப் பார்வையோடு கேட்டார்.

‘இல்லை அண்ணே இது செல் அடியில போனது.‘

‘அட! இந்தக் காலோட வாகனத்தை ஓட்டச் சிரமமாய் இல்லையே?‘

‘இந்தக் காலைப் பற்றி எனக்கு நினைப்புவாறதே தெருநாய்கள் என்னைக் கலைக்கிறபோது மட்டுந் தானண்ணே.‘

‘ஏன்! உனக்கிந்தக் காலை இழந்ததைப்பற்றிக் கவலையே இல்லையா?‘

‘இதென்ன பெரிசே? இதைவிட முக்கியமானதையெல்லாம் இழந்தாச்சண்ணே‘ என்றபடியே சுப்பு பெட்டிகளை இறக்கிவைத்துவிட்டுப் புறப்படும்போது, ‘தம்பி எனக்கு அடிக்கடி ஆட்டோ தேவைப்படும் உம்மட போன் நம்பரைத் தந்திட்டுப்போம்‘ என்று கேட்டு வாங்கிக்கொண்டார் குமாரவேலர்.

•••

இண்டைக்கு நவம்பர் இருபத்தாறல்லே அப்பவொரு கொண்டாட்டம் கொண்டாடத்தான் வேணும். என்ற எண்ணத்துடன் டியூட்டி பிறியில் வாங்கிவந்த ஷிவாஸ் ரேகல் போத்தலைத் திறந்து பாற் போச்சியினுள் பாலை வார்க்கும் ஒரு தாயின் பக்குவத்துடன் கட்டைக் கிளாஸ் ஒன்றினுள் விஸ்கியை வார்த்துக்கொண்டிருந்தபோது வாட்சப்பில் வந்த மனைவி, ‘எப்பிடியப்பா, அண்ணைக்கு இப்ப சுகமே? கலியாணத்துக்கு இன்னும் ரெண்டு கிழமைதான் கிடக்குது, அதுக்கிடையில வந்திருவீங்கதானே?‘ என்று கேட்டார்.

‘இல்ல, அண்ணையின்ர நிலைமை சொல்ல முடியாமலிருக்குது. கலியாணத் துக்கு முன்னம் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ தெரியாது நீங்கள் ஒண்டுக்கும் என்னை எதிபார்க்காதீங்க‘ எனக் குமாரவேலர் பேச்சை நிறுத்திக்கொண்டபோது, அடி வளவுப் பனையிலிருந்து சின்னான் இறக்கிவைத்து விட்டுப்போன ஒரு முட்டி தனிப்பனைக் கள்ளை மண்டிவிட்டு பட்டப்பகலிலேயே கால் கைகளை உதறியெறிந்து குறட்டைவிட்டபடி மல்லாக்கப்படுத்திருந்தார் அண்ணர்.



மனைவி பிள்ளைகளை நினைத்தபடியே ஒரு பெக்கை உள்ளே இறக்கிய குமாரவேலர், ‘என்னை யாரெண்டு நினைச்சியள்‘ என்று மனதுக்குள் கறுவியபடியே மீசையை முறுக்கி விட்டுக்கொண்டார். உள்ளே போன இரண்டாவது பெக் கொத்துரொட்டி கேட்டது. உடனேயே அலைபேசியை எடுத்தவர் சுப்புவுடன் தொடர்பு கொண்ட சில நிமிடங்களிலேயே கொத்துரொட்டிப் பார்சல்களும் கோலாப் போத்திலுமாய் வந்து நின்றது சுப்புவின் ஆட்டோ.

சுப்புவைக் கண்டதும் எழுந்துபோய் இன்னுமொரு கட்டைக் கிளாசை எடுத்துவந்த குமாரவேலர், ‘வாடா தம்பி வா.. இந்தா எடு‘ என்றபடி விஸ்கிப் போத்தலைக் காட்டினார்.

‘இல்லையண்ணே, ஆட்டோ வில வந்தனான். குடிச்சும் கனகாலமாச்சு வேண்டாம்‘ என்று நெளிந்தார் சுப்பு.

‘அட இருண்டிப்போச்சல்லே, இனியெங்க ஓட்டம் வரப்போகுது. வா.. வா.. வந்து அடி‘ என்று அடம்பிடித்தார் குமாரவேலர்.

அவரது அன்புத் தொல்லையை அவமதிக்கவும் மனமின்றி அரைமனதோடு குந்திய சுப்புவின் முன்னால் அரைக் கிளாஸ் விஸ்கியை வார்த்துவைத்தார் குமாரவேலர்.

‘மாதவன் தம்பி இல்லையே?‘ கேட்டார் சுப்பு.

‘அவனெங்க வீட்டில நிக்கிறான். அதோட நாளைக்கு மாவீரர் தினமல்லே அதுதான் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தச் சோடிக்கவெண்டு பெடியளோட போயிற்றான். அண்ணர் இருக்கும் வரைக்குத்தான் இவற்ற ஆட்டமிங்க. அதுக்குப்பிறகு கனடாவில உள்ள சகோதரங்கள் இவரை அங்க எடுத்துப்டே பாடுங்கள். சரி.. சரி கதையை விட்டுப்போட்டு நீ அடி‘ எனக் கிளாசைக் கையில் எடுத்துக்கொடுத்தார்.

வாங்கிய கிளாசிலிருந்து ஒரு மிடறு விஸ்கியைப் பருகிய சுப்பு பீடியை எடுத்து வாயில் வைத்துத் தீயை மூட்டியபோது சட்டென

எழுந்து உள்ளே சென்ற குமாரவேலர் இரண்டு கொத்துரொட்டிப் பார்சல்களுடன் வந்தார்.

'இந்தா.. இது உன்ர வீடு மாதிரி வெக்கப்படாமல் சாப்பிடு' என்றவாறே ஒன்றைச் சுப்புவின் முன் வைத்துவிட்டு மற்றையதைப் பிரித்து தன் முன்னால் வைத்துக்கொண்டார்.

'ஐயோ.. எனக்கு வேண்டாமண்ணே. நீங்க சாப்பிடுங்க.' மீண்டும் நெளிந்தார்.

'அடேயப்பா உனக்கும் சேர்த்துத்தானே நாலு கொத்துக்குச் சொன்னனான்' என்றவாறே கொத்துரொட்டியை அள்ளி வாயில் திணித்த குமாரவேலர், 'ச்செ என்னயிருந்தாலும் வெளிநாடுகளில எங்கட ஆக்கள் போடுற கொத்தை அடிக்க ஏலாது. இங்கயென்ன வெறும் எலும்பைத்தானே போட்டுக் கொத்தியிருக்கிறாங்கள்' என்றார்.

கொத்துரொட்டிப் பார்சலை ஆவலுடன் பிரித்த சுப்பு அதே வேகத்தில் அதனை மூடியும் வைத்துவிட்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டு விஸ்கியை எடுத்துப் பருகினார்.

'ஏன் மூடிவைக்கிற எடுத்துச் சாப்பிடன்.'

'இல்லையண்ணே, எனக்குப் பேரப்பிள்ளைகளின்ர ஞாபகம் வந்திற்றுது. இனியிது என்ர வயித்துக்க இறங்காது. அதுகளுக்குக் கொண்டேக் குடுத்திற்று வரட்டே?' கேட்டவாறே தட்டுத்தடுமாறி எழுந்தார் சுப்பு.

'அட, இருந்து சாப்பிடு. அங்கயும் ரெண்டு கிடக்குது அண்ணர் எழும்பியினிச் சாப்பிடுவாரோ தெரியாது. மாதவனும் வெளிய சாப்பிட்டுப்போட்டு வந்தாலும் வருவான். அதில ஒண்டைப் போகைக்க கொண்டுபோகலாம் இரு.'

'இல்லையண்ணே, பிறகு நான் போறதுக்கிடையில அதுகள் படுத்தாலும் படுத்திருங்கள் நான் கொண்டேக் குடுத்திற்று வாறன்' என்றவாறே ஆட்டோவை நோக்கிப்போனவர், அதன் சீற்றின் பின் பக்கத்திலிருந்து நீளமான கம்பு ஒன்றை எடுத்து இடது பக்கத்துப் பிளாஸ்ரிக் காலுக்கு இணையாக ஊன்றிக்கொண்டார்.

'அப்பயென்ன நடந்தே போகப்போற?'

'ஓமண்ணே, தண்ணியப் போட்டால் நான் ஆட்டோவை எடுக்கமாட்டன். நடக்கக் கூடாதது ஏதும் நடந்துபோச்செண்டால் என்ர பேரப்பிள்ளைகளை யார் பார்க்கிறது? அதுகளை ஆளாக்குற வரைக்கும் நானும் ஆஸ்பத்திரிப் பக்கம் போயிரக்கூடாது. என்ர ஆட்டோவும் கராச்சிப் பக்கம் போயிரக்கூடாது. நாலாவது ஒழுங்கைதானே, இந்தா வாறன்' என்றவாறே தெருவில் இறங்கி நடக்கலானார்.

தெரு நாய்களின் குரைப்பைக் கேட்டதும் முற்றத்தில் கிடந்த வீட்டு நாயும் சண்டித்தனத்தைக் காட்டியதில் திடுக்கிட்டுக் கண் விழித்த அண்ணர் தலையைத் தூக்கி 'இவன் பெடியன் இன்னும் வரயில்லையே?' என்று கேட்டார்.

'இல்லையண்ணே, அவன் வாறநேரம் வரட்டும். கொத்துரொட்டி இருக்கு எடுத்துச் சாப்பிடுங்கோ.'

'சாச்ச.. அதெல்லாம் இரவில செமிக்காது. மத்தியானத்தான் இடியப்பமும் சொதியும் கிடக்குது அதுபோதும் எனக்கு' என்றவர் மீண்டும் புரண்டு படுத்தார்.

தூரத்தில் கேட்ட தெருநாய்களின் சத்தம் மெல்ல மெல்ல அதிகமாகி வீட்டின் கேற்றுவரை நெருங்கிக் கொண்டிருந்தது. 'அடீக்.. அடீக்..' எனக் கம்பை விசுக்கி விசுக்கி நாய்களை விரட்டியபடியே காலை இழுத்து இழுத்து உள்ளே வந்தார் சுப்பு.

வந்து குந்திய சுப்பு விஸ்கிக் கிளாசை எடுத்து அண்ணாந்து கவிழ்த்து ஊற்றியபோது கடல் போல் காட்சியளித்த நட்சத்திரங்களற்ற வானம் நந்திக்கடலையே அவருக்கு ஞாபகப்படுத்தியது. தலை கிறுகிறுக்க பிடரியில் கைவைத்தபடியே கண்களை இறுக மூடிக்கொண்டார்.

'என்ன யோசிச்சுக்கொண்டு இருக்கிறீர்? இந்தா அடியும்' என்ற குமாரவேலர் சுப்புவின் கிளாசை விஸ்கியால் நிறைத்துவிட்டவாறே தனது சோகப் புலம்பல்களை ஆரம்பித்திருந்தார். கதைகளைச் சொன்னபடியும் கேட்டபடியுமாய் முக்காற் போத்தல் விஸ்கியை காலி செய்திருந்தார்கள்.

வார்த்தைகளைக் கொட்ட நினைப்பவர்களுக்கு காதுகள் கிடைப்பது அரிது. கிடைத்த சந்தர்ப்பத்தைக் குமாரவேலர் சரியாகப் பயன்படுத்திக்கொண்டார். மனித மனங்களை வாசிக்க நினைப்பவர்களுக்கு திறந்த மனங்கள் கிடைப்பதும் அரிது. சுப்புவும் சுவாரஸ்யமாக வாசித்துக் கொண்டிருந்தார்.

'அதுசரி, செய்தி அறிஞ்சியே? நாளைக்குத் தலைவற்ற மகளல்லோ வெளியவந்து உரையாற்றப்போறாவாம்' என்று குஷியான மனநிலையோடு குமாரவேலர் கேட்டதுமே, சட்டெனச் சுப்புவின் முகம் மாறிப்போனது. மீசை முடியைப் பிடித்து வேட்டைப் பற்களால் கடித்துத் துப்பியபடியே கவிழ்ந்த தலையை இடமும் வலமுமாக ஆட்டிக்கொண்டார்.

'அட நீயிதை நம்பயில்லைப் போலயிருக்கு? வவுனியாவில முன்னாள் போராளிகள் பிரஸ்மீட்டிங் வைச்சே சொல்லிப்போட்டாங்கள். நீயென்ன?' சுப்புவின் கவிழ்ந்த தலையை போதையேறிச் சிவந்த கண்களால் உற்றுப் பார்த்தபடியே கேட்டார் குமாரவேலர்.

'அண்ணே கனவுலகத்தில வாழுறவங்களுக்கு நிஜவுலகம் தெரியாது. நிஜவுலகத்தில வாழுறவங்களுக்கு கனவுலகத்தைப் பற்றிக் கவலையில்ல.'

'அட தம்பி! நீயெந்த உலகத்திலயடா இருக்கிற? நெடுமாறன், காசி ஆனந்தன் ஆக்கள் சொன்னதொண்டும் உனக்குத் தெரியாதே? இருந்து பார், தலைவர் வரத்தான்போறார் அடுத்தகட்டப் போராட்டம் வெடிக்கத்தான்போகுது' என வெடித்துச் சொன்னார் குமாரவேலர்.

'அடுத்தகட்டப் போராட்டம் வெடிக்கத்தான்போகுது' என்ற வார்த்தைகளைக் கேட்டதுமே மண்டைக்குள் ஆயிரம் தொன் வெடிமருந்துகள் வெடித்துச் சிதறியதுபோல் உணர்ச்சிகளால் உந்தப்பட்டு எழுந்த சுப்பு 'போராட்டமும் 'ண்டையும்' என்றபடி பொத்திப் பிடித்திருந்த

விஸ்கிக் கிளாசை ஓங்கித் தரையில் அடித்துவிட்டு காலை இழுத்து இழுத்துத் தள்ளாடியபடியே கேற்றைத் திறந்துகொண்டு வெளியேறிப் போனார்.

'சலீர்' என்ற சத்தங்கேட்டுத் திடுக்கிட்டு எழுந்த அண்ணர், 'என்னடா நடந்தது?' என்று குமாரவேலரைப் பார்த்துக் கேட்டார்.

'ஒண்டுமில்லயண்ண, அவனுக்கு நல்லா ஏறிட்டுது. தலைவர் வருவார் அடுத்தகட்டப் போராட்டம் வெடிக்கும் எண்டு சொன்னதுக்கு இப்பிடிச் செய்துபோட்டுப் போறான். வரட்டும், நாளைக்கு இருக்கு அவருக்கு' எனப் பற்களை நறுமியபடி தலையை மேலுங் கீழுமாக ஆட்டினார் குமாரவேலர்.

'அடேய் உனக்கென்ன பைத்தியமே! யாரோட என்னத்தைக் கதைக்கிறதெண்டு தெரியாதே? மனிசி பிள்ளையள், பேரப்பிள்ளையள், மருமக்களெண்டு குடும்பத்தில பத்துப்பேரை இந்தப் போராட்டத்துக்குப் பலி கொடுத்துப்போட்டு நிக்கிற மனுசனிட்டப் போய் திரும்பவும் போராட்டம் கீராட்டமெண்டு விசர்க்கதை கதைச்சு உங்கட வெளிநாட்டுக் கொழுப்பைக் காட்டினால் அவனுக்குக் கொதி வராதே?' சினத்தோடு கேட்டார் அண்ணர்.

'என்னண்ண சொல்லுற! உண்மையாவே?'

'ஓமடா, கடைசிச் சண்டை வரைக்கும் வன்னிக்கதான் இருந்ததுகள். முள்ளிவாய்க்காலை நோக்கி இடம்பெயர்ந்து போகைக்க ரைக்டர் பெட்டிக்க விழுந்த செல் குடும்பத்தோட எல்லாற்ற உயிரையும் கொண்டுபோயிற்றுது. ரைக்டரை ஓட்டிக்கொண்டிருந்த சுப்பு மட்டுந்தான் காயங்களோட தப்பியிருக்கிறான். ரெண்டாவதுமகன் இயக்கத்தில இருந்ததால முதல்நாளே குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு முள்ளிவாய்க்காலுக்க போயிற்றான். ஆனாலும் அவனுமங்க வீரச்சாவுதான். இப்ப இவன் சுப்பு காயங்களோட தப்பி வந்த ரெண்டாவது மருமகளுக்காகவும் பேரப்பிள்ளைகளுக்காகவுந்தானே ஒத்தக் காலோட உயிரைப் பிடிச்சுக்கொண்டு நிக்கிறான். இது தெரியாமல் நீதான் ஏதோ வெளிநாட்டுக்குப் போனதால உன்ர எதிகாலச் சந்ததி கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் இழந்து போச்செண்டு சோகப்பாட்டுப் பாடிக்கொண்டு திரியிற. ஆனால், இவனிங்க வெளிநாட்டுக்குப் போகாததாலதான் தன்ர சந்ததியையே இழந்துபோய் நிக்கிறான் தெரியுமே? உனக்கொண்டு சொல்லட்டே 'எல்லாச் செயலுக்குமே ஒரு எதிர்த் தாக்கம் இருக்கத்தான் செய்யும்.' இது விளங்காட்டி இப்பிடித்தான் உன்னை மாதிரி நிம்மதியான வாழ்க்கையைக்கூட நிம்மதி இல்லாமற்தான் வாழவேண்டிவரும்' என ஆக்ரோஷமாக நீட்டி முழங்கி முடித்துக்கொண்டார் அண்ணர்.

சுப்புவின் சோகக் கதையை அறிந்த குமாரவேலர் தன்னுடையதே சோகமெனச் சொல்லி சுப்புவிடம் புலப்பியதை நினைத்து வெட்கப்பட்டார். தனது எதிர்காலச் சந்ததியின் நிம்மதியான பாதுகாப்பான வாழ்வை ஒருகணம் நினைத்துப்பார்த்தவர், வாழ்வில் முதல் முறையாக 'ஆண்டவனே உனக்கு நன்றியப்பா' என மனதுக்குள் சொன்னபடியே நெகிழ்ந்துபோன இதயத்துடன் கட்டிலிற்போய் விழுந்தார்.

பூசையறையில் அண்ணர் மணியடித்துத் தேவாரம் பாடிய சத்தம் கேட்டுக் கண் விழித்த குமாரவேலர் அலைபேசியை எடுத்து நேரத்தைப் பார்த்து நோர்வே நேரத்தைக் கணித்துக்கொண்டார். அங்கு சாமம் என்பதை புரிந்துகொண்டவர் எழும்ப மனமின்றிப் படுத்திருந்தார்.

கேற்றை இடித்துத் திறந்து கொண்டுவரும் மாட்டைப்போல மோட்டார்ச் சைக்கிளொன்று முற்றத்தில் வந்து நின்றது. 'யாரடா அது?' என்று கேட்டபடியே அண்ணர் இறங்கி முற்றத்துக்குப்போனார்.

'ஐயா நான் மாதவன்ர ப்ரெண்ட். கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில வைச்சு மாதவனை ஆமி பிடிச்சுக்கொண்டு போயிற்றுது' என்றான் கலவரமான முகத்துடன்.

'என்னடா தம்பி சொல்லுற! ஏனடாப்பு பிடிச்சுக்கொண்டு போனவங்கள்?' பதட்டத்துடன் கேட்டார்.

'மாதவன் தலைவற்ர படம் போட்ட ரீசேர்ட்டை போட்டிருந்ததால பிடிச்சுக்கொண்டு போயிட்டாங்கள். அவனை வெளிய எடுக்கிற அலுவலைப் பார்க்கச்சொல்லத்தான் வந்தனான்' என்று கூறிவிட்டு வந்தவன் மோட்டார்ச் சைக்கிளைக் கிளப்பிக்கொண்டு பறந்தான். எல்லாவற்றையும் காதில் வாங்கியபடியே உள்ளே படுத்திருந்த குமாரவேலர் எழுந்து வெளியே வந்தார்.

'என்னண்ண செய்யிறது இப்ப?' கேட்டுவிட்டு பேயறைந்தது போல் நின்றார்.

'அவனைக் கொழும்புக்குக் கிழும்புக்கு கொண்டு போறதுக்கிடையில வெளிய எடுக்கவேணும்' என்றவாறே அவசரத்துடன் உள்ளே சென்ற அண்ணர் அலைபேசியை எடுத்து, 'தம்பி, நான் மாதவன்ர அப்பா கதைக்கிறன் அவசரமா நானொருக்கால் 'சிறிதர்' தியேட்டருக்குப் போகவேணும் ஆட்டோ வருமா?' எனக் கேட்டார். அதனையும் காதில் வாங்கிய குமாரவேலருக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

'தலைவரின் மகள் வரப்போறார்' என்று பிரஸ் மீட்டிங் வைத்துச் சொன்னவர்களை ஒன்றுமே செய்யாத இராணுவம் ஒரு ரீசேர்ட்டை போட்டதற்காக கைது செய்திருக்கும் அரசியலை நினைக்கக் குமாரவேலருக்கு குழப்பமாகவும் இருந்தது.

சற்றுநேரத்தில் வந்த ஆட்டோவில் ஏறிப் பறந்தார் அண்ணர். அக்கணமே நேரத்தைக் கூடக் கணக்கிலெடுக்காமல் அலைபேசியைக் கையிலெடுத்த குமாரவேலர் மகனுக்கு அழைப்பெடுத்து, 'தம்பி கலியாணத்துக்கு ஒரு கிழமைக்கு முன்னமே நான் அங்க நிக்கிறமாதிரி உடனடியா ரிக்கற்றைப்போட்டு அனுப்பிவிடு' என்று கூறிவிட்டு அலைபேசியோடு மனதையும் அமைதிப்படுத்திக் கொண்டார்.

# தோல்வியிலிருந்து பாடம் கற்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்



1952 ஆம் ஆண்டில் 'கிழக்கிலங்கை மக்களின் நிலங்களை சிங்களவர்கள் ஆக்கிரமிக்கின்றார்கள்' என்னும் அறிவிப்புடனும் 'மலையக மக்களின் வாக்குரிமைப்பறிப்பை ஆதரித்த பொன்னம்பலத்தின் துரோகத்தினாலேயே புதிய கட்சி தொடங்கினேன்' என்னும் கோசத்துடனும் 'சமஷ்டியே' தீர்வு என்று தேர்தலில் இறங்கிய செல்வநாயகத்தை யாழ்ப்பாணத்தை விட்டு துரத்தியடிக்காத குறையாக படுதோல்வியைக் கொடுத்தனர் வடமாகாண மக்கள்.

மலையக மக்களின் வாக்குரிமைப் பிரச்சனைகள் மீதும் கிழக்கிலங்கை மக்களது குடியேற்றப் பிரச்சனை மீதும் எவ்வளவு தூரத்திற்கு யாழ்ப்பாண சமூகம் அக்கறை காட்டியதென்கின்ற வேதனைக்குரிய செய்தியே இத்தோல்வி மூலம் வெளியானது. அரசியல் விழிப்புணர்வு கொண்ட ஒரு கல்விச் சமூகமாக சிலாகிக்கப்படும் போதும் தங்களது சுயநலன்களுக்கு அப்பால் வேறு எதனையிட்டும், யாரையிட்டும் (அவர்கள் தமிழர்களாய் இருந்த போதிலும் கூட) அக்கறை கொள்ள மறுக்கின்ற அலட்சியப் போக்கினையுடைய யாழ்ப்பாணத்தின் சுயரூபம் இத்தேர்தலில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்ற பெரும் தலைவர்களையே தோற்கடித்த போது அப்பட்டமானது. இத்தேர்தலில் கோப்பாய் தொகுதியில் இருந்து கு.வன்னியசிங்கம் என்ற ஒரேயொரு வேட்பாளரைத் தவிர வடமாகாணத்தில் இருந்து போட்டியிட்ட அனைத்து தமிழரசுக்கட்சி வேட்பாளர்களும் முகத்தில் கரி பூசப்பட்டனர். இதனை ஆராய்ந்து பார்க்குமிடத்து தமிழின ஐக்கியம், தமிழ்த் தேசியம், தமிழ் உணர்வு என்கின்ற இன ஒருமைப்பாட்டுக்கான அறைகூவல்கள் அனைத்தையும் நிராகரிக்கக் கூடிய பலமான கருத்து நிலையொன்று யாழ்ப்பாணத்தில் நிலை பெற்றிருந்தமையை அவதானிக்க முடிகின்றது.

தமிழரசுக் கட்சி வடகிழக்கில் பிரசன்னமாவதற்கு முன்னர் அகில இலங்கை தமிழ்த் தேசியக் காங்கிரஸ் எவ்வித காரணகாரியமின்றி முன்வைத்த 'தமிழீழம்' எனும் வெற்றுக் கோசத்தை ஆதரித்த யாழ்ப்பாண மக்கள் ஏன் கிழக்கிலங்கையினதும் மலையக மக்களினதும் பிரச்சனைகளுடனும் அதற்கான தீர்வுகளுடனும் அரசியல் அரங்குக்கு வந்ததாக சொன்ன தமிழரசுக்கட்சிக்கு தங்கள் ஆதரவை நல்கவில்லை?

பாகிஸ்தான் போன்ற பிரிவினை போன்று தமிழீழத்தை பெற்றுத் தருவேன் என்றும் தமிழர்களின் 'முகமட் ஜின்னா' தானே என்றும் பொருத்தமற்ற வெற்றுக் கூச்சல்களை பரப்பிய தலைமைகளை எப்படி தொடர்ந்தும் வடமாகாண மக்கள் ஆதரித்தார்கள்?

அதுவரை காலமும் பொன்.இராமநாதனும்,மகாதேவாவும், ஜீ.ஜீ.பொன்னம்பலமும் நிறைவேற்றி வந்த யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்தினரது அபிலாசைகளை மட்டுமே காத்துக் கொள்ளும் அரசியல்தான் அவர்களது விருப்பமாயிருந்ததா? மலையக மக்களுக்கு எதிரான ஏகாதிபத்திய அரசியலுக்கு துணை போகின்ற அரசியலைத்தான் யாழ்ப்பாண மக்களும் விரும்பினரா?

எது எப்படியோ தமிழரசுக்கட்சியினர் தாங்கள்

முகம் கொடுத்த முதலாவது தேர்தலிலேயே படுதோல்வி கண்டமையானது அவர்களது கொள்கை கோட்பாடுகள் மாற்றம் காணவேண்டிய நிலைக்கு அல்லது வேறுவடிவம் எடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதை அவர்களுக்கு உணர்த்தியது.

*1952*இன் இத்தேர்தல் தோல்வியானது 'தமிழர் நலன் என்பது யாழ்ப்பாணத்து நலன்களில் மையங்கொள்ள வேண்டிய பிரச்சினை களுக்கும் கோரிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது' என்னும் சூட்சுமத்தை செல்வ நாயகத்துக்கு கற்றுத்தந்து. அத்தோடு 'அளவுக்கு மிஞ்சிய வகையிலும் தீவிரத் தன்மையுடனும் இன உணர்வுகளை கிளறிவிடக்கூடிய வெற்றுப் பேச்சுகளும் (பொன்னம்பலம் பாணியில்) தேர்தல் அரசியலுக்கு அவசியமானவை என்கின்ற பாடங்களையும் தமிழரசுக் கட்சியினருக்கு சொல்லிக் கொடுத்தது.

இதன் காரணமாக தமிழரசுக்கட்சியும் தாம் கடந்து வந்த அதாவது தமிழ் காங்கிரஸ் வளர்த்துவந்த யாழ் மையவாதச் சேற்றிலிருந்து மீளமுடியாத நிலையில் புதிய மொந்தையில் பழைய கள்ளுடன் *1956*ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சி தனது இரண்டாவது தேர்தலை நோக்கி பயணிக்கத் தொடங்கியது. அதற்கு வாய்ப்பாக தென்னிலங்கையில் உருவாகிய புதிய கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் அமைந்தன.

*1951*ஆம் ஆண்டு தென்னிலங்கையில் அதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வந்த 'சிங்கள மகாசபை' எனும் அமைப்பின் வெளியேற்றம் நிகழ்ந்தது. இந்த வெளியேற்றம் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியாக அரசியலில் பரிணமித்தது. இந்தக்கட்சியானது முன்னிறுத்திய மொழிக்கொள்கை தமிழரசுக் கட்சியினருக்கு தேர்தலுக்கான வாய்ப்பான துருப்புச் சீட்டாக அமைந்தது. குறித்த மொழிக்கொள்கை, அதன் காரணமாக தொடர்ந்து வந்த காலங்களில் அமுலாகிய அரச கரும மொழிச்சட்டம், போன்றவற்றுக்கான பின்புலங்களை அறிந்து கொள்ள 'சுயபாஷைகளுக்கான இயக்கம்' பற்றிய வரலாற்றுப்பார்வைகளையும் அதைக் குறித்து கிழக்குத் தலைமைகளும் வடக்குத் தலைமைகளும் கொண்டிருந்த



வெவ்வேறுபட்ட அணுகு முறைகளையும் அறிந்து கொள்வது அவசியமானதாகும்.

## சுயபாஷைகளுக்கான இயக்கம்

இருபதாம் நூற்றாண்டில் தொடக்கத்திலிருந்து ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இலங்கையில் அதிகமான நிர்வாக உத்தியோகங்களை இலங்கையரிடமே கையளித்த பின்னரும் கூட ஆங்கில அறிவுபெற்ற மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவர்களிடம் மட்டுமே அவ்வுத்தியோகங்கள் முடக்கப் பட்டிருந்ததன. இந்நிலை தொடரக் காரணம் ஆங்கிலமே அரசகரும மொழியாக தொடர்ந்தும் இருந்து வந்தமையாகும். இந்நிலைமையானது தமிழ்மொழி பேசும் பகுதிகளுக்கும் சிங்கள மொழிபேசும் பகுதிகளுக்கும் பொதுவான தொன்றாகவே காணப்பட்டது. எனவே சுயபாஷைகளான தமிழ் சிங்களம் போன்ற மொழிகளை மட்டுமே அறிந்திருக்கக்கூடிய ஏழை விவசாய மீன்பிடி போன்ற தொழிலாள வர்க்கத்தினருக்கு இவ்வுத்தியோகங்கள் சென்றடையும் வாய்ப்பு கிட்டியிருக்கவில்லை. ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்கக்கூடிய குடும்பப்பின்னணி கொண்டவர்களிடமே மீண்டும் மீண்டும் அவ்வுத்தியோகங்கள் சென்றடைந்து கொண்டிருந்தன.

இந்நிலைமையை மாற்றி அமைக்க இந்நாட்டின் சுதேச மக்கள் பேசுகின்ற சுய பாஷைகளுக்கு அரச அந்தஸ்து கோருகின்ற குரல்கள் சமூகத்தின் கீழ்தட்டு மக்களிடம் இருந்து ஒலிக்கத்தொடங்கின. இதன்காரணமாக ஆங்கிலத்தை அரசமொழி ஸ்தானத்தில் இருந்து நீக்கி சிங்கள-தமிழ் மொழிகளை அரசமொழிகளாக மாற்ற வேண்டும் என்கின்ற இயக்கம் தென்னிலங்கையில் *1920* களிலேயே ஆரம்பித்து விட்டது.

இந்நிலையில் ஈழத்தமிழர் வரலாற்றில் *1924*ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து தோன்றிய ஒரு சிறு ஒளிக்கீற்றான யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் பற்றிய தகவல்களை பதிவு செய்வது அவசியமாகும். இந்த யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என்னும் அமைப்பினர் மிக முற்போக்கான சிந்தனைக் குழாமினர் ஆகும். இதன்காரணமாக முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்கூட இந்த அமைப்பினருடன் இணைந்து பணியாற்ற முன்வந்திருந்தார்.

இவர்களது முக்கிய கோரிக்கைகளாக இலங்கைக்கான பூரண சுதந்திரம்,சாதியொழிப்பு, இருமொழிக் கொள்கை போன்றவை அமைந்திருந்தன. ஆனால் இவர்களது செயற்பாடுகளைத் தொடரமுடியாது அழித்தொழிப்பதில் யாழ் மேட்டுக்குடி பரம்பரை யாதிக்கவாதிகள் வெற்றிபெற்று விட்டனர்.

அதனால் தென்னிலங்கையில் சுயபாஷைகளுக்கான கோரிக்கை வலுப்பெற்றமை போல தமிழ் மொழி பேசப்படுகின்ற வடக்கு,கிழக்குப் பகுதிகளில் அதிக கவனம் பெறவில்லை என்பதே உண்மையாகும்.

காரணம் வடகிழக்கின் அதிகார சக்திகளாக அந்த மக்களின் பெயரில் அரசியல் ஆதிக்கத்தை தக்கவைத்திருந்த கூட்டம் இந்த சுயபாஷை கோரிக்கைகளை ஒரு இயக்கமாக வளர்ப்பதை விரும்பியிருக்கவில்லை. புறநடையாக

மட்டக்களப்பு பிரதிநிதிகளாய் இருந்த ஒருசிலரும் யாழ்ப்பாணத்தில் இருந்த இளைஞர் காங்கிரஸ் எனப்பட்ட அமைப்புமே இந்த சுயபாஷை இயக்கத்தில் அக்கறை கொண்டு செயற்பட்டிருந்தனர். ஆனாலும் அரசியல் அதிகாரம் கொண்ட யாழ்ப்பாணத்தில் இருந்த மேல்தட்டு வர்க்கத்தினர் அதனை அனுமதிக்கவில்லை. இதன் காரணமாகவே சிங்களப் பகுதிகளில் உருவாகி வந்த சுயபாஷைக்குரிய இயக்கத்தினருடன் இணைந்து தமிழ் சிங்களம் ஆகிய மொழிகளுக்கான அரச அந்தஸ்துக் கோரும் தேசம் பரந்த ஒருமித்ததொரு திட்டத்தினை முன்வைக்கும் சாத்தியங்கள் அற்றுப்போயின. ஆனபோதும் சிங்களப்பகுதிகளில் மெது மெதுவாக கிளைவிட்ட இந்த சுயபாஷை இயக்கத்தினரின் செயற்பாடுகள் காலப்போக்கில் வளர்ச்சியுற்றன.

தொடக்கத்தில் அரசசபையில் 1932 இல் ஜீ.கே.டபிள்யு.பெரேரா என்பவர் மூலம் அரசசபை விவாதங்கள் சிங்களம் தமிழ் மொழிகளில் இடம்பெறவேண்டும் எனும் பிரேரணை பலமானதொரு கோரிக்கையாக முன்வைக்கப்பட்டது. அதேபோன்று அரச அலுவலகங்களிலும் 'சுயபாஷைகள்' (சிங்களம் மட்டும் அல்ல என்பதைக் கவனிக்க) உபயோகிக்கப்படவேண்டும் எனும் பிரேரணைகளும் இருவருடங்களின் பின்னர் அவரால் மீண்டும் கொண்டுவரப்பட்டது. ஆனாலும் அக்கோரிக்கைகள் போதிய ஆதரவின்மை காரணமாக கிடப்பிலே போடப்பட்டன.

ஆனாலும் இந்த சுயபாஷைகளுக்கான கோரிக்கையின் அவசியத்தை உணர்ந்த மட்டக்களப்பு எஸ்.ஓ.கனகரெட்ணம் அவர்கள் 1937 ஆம் ஆண்டில் 'தமிழ் பாடசாலைகளில் சிங்களமும் சிங்களப் பாடசாலைகளில் தமிழும் கட்டாய பாடங்களாக கற்பிக்கப்பட வேண்டும்' என்கின்ற ஆலோசனையை முன்வைக்கும் பிரேரணை ஒன்றை அரசாங்க சபையில் கொண்டு வந்தார். இதனை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசும் ஆசிரியர் சங்கமும் ஆதரவளித்து வரவேற்றன. ஆனால் கிறிஸ்தவப் பாதிரியான பீற்றர்பிள்ளை கடுமையாக இத்திட்டத்தை எதிர்த்து விளக்கமளித்தார். இதன்காரணமாகவும் அரசாங்க சபையில் போதிய ஆதரவின்றியும் எஸ்.ஓ.கனகரெட்ணம் அவர்களின் மொழிகளுக்கிடையே பரஸ்பர உறவைப் பேணும் நன்நோக்கம் கொண்ட இத்திட்டமும் கைகூடாமற் போயிற்று.

1943ஆம் ஆண்டு அவ்வேளை புதிய அங்கத்தவராய் அரசாங்க சபைக்குள் நுழைந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் கூட இந்த சுயபாஷை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். அதன்காரணமாக 'சிங்களம்' அரச கருமமொழியாக இருக்க வேண்டும் எனும் பிரேரணையை அரசசபையில் அவர் கொண்டு வந்தார். அவ்வேளைகளில் அரச நிர்வாகத்தில் சுயபாஷைக்கான அவசியத்தை வரவேற்றுப் பேசிய நல்லையா அவர்கள் சிங்களம் மட்டுமல்ல தமிழுக்கும் அரச மொழி அந்தஸ்து வழங்கப்படுவதன் அவசியத்தையும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு குறிப்புணர்த்தி உரையாற்றினார். அது மட்டுமன்றி மட்டக்களப்பு நல்லையாதான் முதன்முதலாக சுதேசமொழி மசோதாவில் சிங்களம் என்று வருகின்ற இடங்களில் எல்லாம் சிங்களமும் தமிழும் என்று மாற்றத்தை கோரி தனிநபர் மசோதாவை முன்வைத்து அதற்கான நியாயங்களையும் விரிவான உதாரணங்களையும் அடங்கிய உரையொன்றை நிகழ்த்தியவராகும். (1944,மே 24-கன்சாட் பக்கம் 758,759) நல்லையாவின் தமிழ் மொழிக்கான அந்த உரிமைக் கோரிக்கையின் நியாயத்தன்மையை ஆர்.எஸ்.எஸ்.குணவர்த்தன என்கின்ற சிங்கள உறுப்பினர் ஆமோதித்து உரையாற்றினார்.

இவ்வேளையில் டபிள்யு. டபிள்யு.கன்னங்கரா,லங்கா சம சமாஜக் கட்சியின் பிபிலைத் தொகுதி பிரதிநிதியான வி.தஹநாயக்கா, நியமன உறுப்பினரான டி.பி.ஜாயா, போன்ற மூவினத்தைச் சேர்ந்த தலைவர்களும் சுயபாசைகளை அரச கருமமொழியாக்குவதில் அக்கறைகாட்டி அரசசபையில் உரையாற்றினர். அதன்பொருட்டு சுயபாஷைகள் என்பது தமிழும் சிங்களமும் என்பதை ஜீ.கே.டபிள்யு. பெரேரா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்கா போன்ற தலைவர்கள் மிக சுலபமாக ஏற்றுக்கொண்டனர்.

இந்த செய்திகள் கூட தமிழ் மக்களிடையே மிகக் கவனமாக இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்துள்ளது. ஆனால் இவற்றையெல்லாம் முழுமையாக எதிர்த்து யாழ்ப்பாண அடிப்படைவாதத்தின் பிரதிநிதியான ஜீ.ஜீ.பொன்னம்பலம் அரசசபையில் உரையாற்றினார் என்பதுதான் மிகக்கேவலமானது. 'ஆங்கில மொழியையே இருசமூகங் களுக்கும் பொது மொழியாக கொள்ள வேண்டும்' என மேனிலை வர்க்கம் சார்ந்த தனது கோரிக்கையை முன்வைத்து அவர் வாதிட்டார்.

பெருந் தலைவர், தமிழ்காங்கிரஸ், தமிழீழம், என்று புரளிகளைக் கிளப்பி தமிழ் மக்களின் தலைவனாக தன்னைக் கட்டிக்கொண்ட வந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆங்கிலத்தைக் காப்பதற்காக சுயபாஷைகளை அரச கரும மொழிகளாக்கும் முயற்சிகளை எதிர்த்தமை எப்படிப்பட்ட துரோகம்? இந்த துரோகத்தின் பின்னால் மறைந்திருந்த சக்திகள் யார்? யாழ்ப்பாண உயர்வர்க்கத்தினுடைய ஆங்கில ஆதிக்கம் இலங்கை எங்கும் தக்கவைக்கப்படவேண்டும் என்பதற்காகவே 'ஆங்கிலம் மட்டும்' என்கின்ற மொழிக்கொள்கையில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றவர்கள் விடாபிடியாக நின்றனர்என்பதுதான் உண்மையாகும்.

இதுபோன்ற ஆங்கில பிடியில் இருந்து மாறவிரும்பாத தமிழ்காங்கிரஸ் போன்ற கட்சிகளின் வெகுஜன விரோதப் போக்குகளே காலப்போக்கில் தென்னிலங்கையில் சுடர்விட்ட சுயபாஷைகளுக்கான இயக்கத்தை தமிழை விடுத்து தனிச்சிங்களத்துக்கான இயக்கமாக குறுக்கிவிடும் வாய்ப்புகளை வழங்கியது எனலாம். அ




# போங்கோ! போங்கோ! உங்கள் பொன்னான கள்ள வாக்குகளை...

சமூக வலைத்தளங்களில் எப்போதுமே கண்டிருப்போம். யாரோ எவரோ பகிர்ந்திருப்பார்கள். தங்கள் வயதுக்கு மீறிய திறமையைக் காட்டும் குழந்தைகள், சிறுவர்கள் பற்றிய காணொளித் துண்டுகள். தனியாகவோ, போட்டி நிகழ்ச்சிகளிலோ தோன்றி அசத்துவார்கள். பிரமித்துப் போவோம். அது யாம் பெற்ற இன்பமாகி விடும்.

அந்தக் குழந்தைகள் யார்? அவர்கள் என்ன இனத்தவர்கள்? என்ன மொழி பேசுவார்கள்? என்பதெல்லாம் எங்களுக்கு சில நேரங்களில் அனாவசியமானவையாக இருக்கும். அந்தத் திறமை மட்டுமே எங்களை மெய்சிலிர்க்கச் செய்து விடும்.

போட்டி நிகழ்ச்சி என்றால், அதில் வழமையாக வெல்வதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளவர்கள் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறவர்களை விட, underdog என்று ஆங்கிலத்தில் சொல்கிற, சந்தர்ப்பம் கிடைக்க சாத்தியமில்லாத திறமைசாலிகளை எங்களை அறியாமலேயே ஆதரிக்கவும் ஆரம்பிக்கக் கூடும்.

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி



அதற்கான உளவியல் பின்னணி தனி.

எங்களால் முடியாமல் போன, அல்லது நாங்கள் கனவு காண்கிற திறமையோடு சிறுவயதினர் அர்ப்பணிப்புடன் பயிற்சிகள் செய்து போட்டிக்கு வரும்போது, எங்களை அறியாமலேயே ஈர்க்கப்படுகிறோம். அவர்களின் வெற்றியை விரும்புகிறோம்.

இந்தப் பிரமிப்பு ஒரு universal இயல்பு. மனிதர்களைப் பிரிக்கும் வேறுபாடுகள் எல்லாம் கடந்தது.

தமிழகத்தில் ஒரு தொலைக் காட்சியில் இசைப்போட்டி நிகழ்ச்சி.

ஒரு திறமையுள்ள இலங்கைத் தமிழ்ப் பெண் கலந்து கொள்கிறார். அவரது திறமையால் நாங்கள் ஆகர்ஷிக்கப்படுகிறோம். 'எங்கட பிள்ளை, திறமைசாலி, வெற்றி பெற வேண்டும்' என்று விரும்புகிறோம். பிறந்த நாள் முதலாக கலைகளில் பயின்று தேர்ந்தவர்கள் நிறைந்த ஒரு இடத்தில், அதற்கான சந்தர்ப்பங்கள் குறைந்த இடத்திலிருந்து போட்டிக்குச் செல்கிறார், வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு.

இதையெல்லாம் கடந்து, அவரும் வெற்றி பெறுகிறார்.

வழமையில் இவ்வாறான வெற்றிகள், கலை சார்ந்தோ, விளையாட்டுச் சார்ந்தோ இருந்தால், அரசியல்வாதிகள், ஆட்சியில் இருப்போரும் இல்லாதோரும், அந்த வெற்றியில் தங்களையும் தொடுத்துக் குளிர் காய்வது எல்லோரும் பார்ப்பதே.

சமூகமாக ஒன்றிணைந் திருப்போர் இந்த வெற்றிகளை தங்கள் சமூகத்தின் வெற்றியாகக் கொண்டாடுவது கூட வழமையானது தான். விளையாட்டுகளின் போது, இது வெறியாகக் கூட வடிவம் எடுக்கிறது. சொந்த ஊராக இருந்தால் என்ன? நாடாக இருந்தால் என்ன?

ஆனால், இந்த வெற்றியால் எழும் தற்போது எழுந்திருக்கும் மகிழ்ச்சி ஆரவாரங்கள் இந்த வகை எதிலும் அடங்காததாக இருக்கிறது.

இதை ஒரு இனத்தின் வெற்றியாக, சமூகத்தின் வெற்றியாகக் கொண்டாடி, சமூக வலைத்தளங்களில் நடைபெறும் இந்த ஆரவாரங்களின் பின்னால் உள்ள உளவியல், கலாசார, அரசியல் பின்னணிகள் தான் என்ன?

தமிழர்களுக்கு என்று ஒரு தனியான வியாதி உண்டு. எங்காவது ஒரு தமிழன் எதையாவது செய்து விட்டால், 'தமிழேன்டா!' என்று பெருமை கொள்வது. 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த மொழி' என்பது மேடைப் பேச்சாளர் கைதட்டல் வாங்க அவிழ்த்து விட்டது என்றாலும், அதை ஒரு விஞ்ஞான உண்மையாக நம்புகிற சமூகம் இது.

போய்ச் சேர்ந்த நாடுகளில் நாசாவை நடுங்க வைக்கும் வில்லேஜ் விஞ்ஞானியாக இருந்தால் என்ன? வார்டு கவுன்சிலராக வந்தால் என்ன? வேட்டியோடு விமானம் ஓட்டினால் தான் என்ன?

தமிழனுக்கு, 'உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த' 'தமிழேன்டா!' தான். உலகம் திரும்பிப் பார்த்ததற்கான எந்த ஆதாரங்களும் உலகத்தில் எங்கேயும் திரும்பித் திரும்பித் தேடினாலும் கிடைக்காது. ஆனால், தமிழனுக்கு அது கணநேர உச்ச இன்பம்! அந்த இன்பத்தைத் தனக்குத் தானே வழங்கிக் கொண்டிருப்பான்.

உண்மையிலேயே எத்தனையோ தமிழர்கள் சர்வதேச அளவில் பெரும் சாதனைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவை எதுபற்றியும் இவர்களுக்குத் தெரியாது. இவர்களுக்கு பேஸ்புக்கிலும் யூடியூபிலும் வருகிற மேதாவிகள் சொன்னால் தான் இதெல்லாம் தெரியவரும். அந்த மேதாவிகளுக்கும் விகடன், குமுதம், விஜய் டிவியில் வந்தால் மட்டும் தான் எதுவும் தெரியும்.

அல்லது பயில்வான் சொல்லியிருக்க வேண்டும்.

பேஸ்புக்கில் வந்தால் உண்மையாகத் தானே இருக்க வேண்டும். சீமான் கூட மூக்கை நோண்டி, மீசையைத் தடவுவார். புஹா...ஹா!

இது தான் இவர்களின் 'உலகம்!'.

சர்வதேச அளவில் சாதனை படைக்கும் எவரும் தங்களை 'தமிழேன்டா!' என்று பெருமைப்பட்டதாகக் காணவில்லை. (சினிமா என்பதால் மட்டும் ஏ.ஆர்.ரஹ்மான்!)

அவர்கள் தங்களை மனிதர்களாக, உலகப் பிரஜைகளாகத் தான் அடையாளம் காட்டுகிறார்கள். தமிழ் மொழி என்பதற்குள் தங்களைக் குறுக்கிக் கொள்வதில்லை. அவர்கள் படைக்கின்ற, பேசுகின்ற, தீர்வு காண்கிறவை கூட முழு உலகத்திற்கும் ஆனவை.

உலகில் புராதன காலங்களில் நாகரிகத்தின் உச்சங்களைக் கண்ட இனங்கள் இருக்கின்றன. இன்று அவை அடையாளம் இழந்தோ, பழைய பெருமைகளை இழந்து நொந்து போய் இருந்தாலும், அவை எவையும் தமிழர்கள் போல, குத்தி முறிவதைக் காண்பது அபூர்வம். தங்கள் பழம் பெருமையைப் பேசிக் காலத்தைப் போக்குவதோ, 'நாங்கள் தான் உலகத்திற்கே பாடம் கற்பித்தவர்கள்' என்றோ வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதில்லை.

இன்றைக்கும் பிரமிப்பு ஊட்டும் பிரமிட்டு எகிப்தியர்கள், மாயர்கள், கிரேக்கர்களின் இன்றைய நிலை என்ன?

அவர்களுக்கு இன்றைய உலகின் பிரச்சனைகள் அதிகம். அவற்றை எதிர்நோக்க வேண்டிய தலையிடிகள் அதிகம்.

ஆனால், தமிழர்களுக்கு மட்டும் 'எங்களை ஒருத்தனும் கணக்கெடுக்கிறான் இல்லை' என்ற ஆதங்கம். சரி, யாருமே எங்கள் பெருமையைச் சொல்லாவிட்டால் என்ன? நாங்களே சொல்லிக்குவோம் என்று எதற்கெடுத்தாலும், 'தமிழன் பெருமை' பேசிப் பேசிக் காலத்தைக் கழிப்பதே தொழிலாகி விட்டது. 'நமது முன்னோர்கள்

ஒன்றும் முட்டாள்கள் அல்ல' என்று, உலகத்தை நம்ப வைக்க முடியாவிட்டாலும், தனக்குத் தானே சொல்லித் தன்னை நம்ப வைக்க வேண்டியிருக்கிறது.

மற்ற புராதன நாகரிகங்களின் பெருமையைப் பற்றி மேற்குலகில் சொல்லப்படுவது போல, தமிழ் நாகரிகம் புகழ்ந்தேத்தப்படுவதில்லை.

இந்தப் பெருமைகளை எல்லாம் அன்னியர்கள் ஏதோ பொறாமையால் சொல்ல மறுக்கிறார்கள் என்பதால், 'வேட்டி கட்டி விமானம் ஓட்டிய' பெருமையை நாங்களாவது கொண்டாடித் தான் ஆக வேண்டும்.

இது தமிழரின் மரபணுவுக்குள் உள்ள மரபுப் பிரச்சனை. அந்த 'தமிழேன்டா!'க்குள் உள்ள 'தேவன்டா, கவுண்டன்டா! சத்திரியன்டா!' கோளாறுகள் இப்போதைக்கு வேண்டாம்.

இதற்குள் இந்தத் தமிழரை எல்லாம் விட, உலகத்திலே உள்ள எல்லா இனங்களுக்கும் மேலாக நாகரீகம் அடைந்த, முன் தோன்றிய மூத்த குரங்கு யாழ்ப்பாணியாக இருக்கும்போது, அது அடையும் பெருமை சொல்லி மாளுமோ?

ஏன் மற்றத் தமிழர்கள் எல்லாம் தமிழர்கள் என்ற இனமாகப் பெருமை கொள்ளும் போது, யாழ்ப்பாணிக்கு மட்டும் அது அரசியலாகி விடுகிறது? ஏன் இவர்களுக்கு மட்டும் இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவது கூட ஒரு போராட்ட வடிவமாகி விடுகிறது?

அதில் பங்குபற்றுகிறவர்கள் எல்லாம் மண்ணின் பிரதிநிதியாகவும், மண்ணை மீட்டுத் தரவேண்டிய தற்கொலைப் போராளியாகவும் மாற வேண்டியிருக்கிறது?

சர்வதேசம் தன்னுடைய ஒவ்வொரு நகர்வையும் உற்றுப்பார்த்தபடி இருக்கிறது என்று கதை சொல்லும் யாழ்ப்பாணி, கனடாவில் வீதியை மறித்து கொடி பிடித்தும், ஆயிரம் கார் பவனி வந்தும் கவன ஈர்ப்பு நடத்துவதில் உள்ள முரண்பாட்டையோ, பயன்பாட்டையோ நீங்கள் கேள்வி கேட்க முடியாது.

இன்னொரு தடவை துரோகி ஆக்கப்படுவதில் உங்களுக்கு ஆர்வம் இருந்தால் ஒழிய!

தங்களுடைய போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதற்கான ஒரு தளமாக இந்த மேடையைப் பயன்படுத்த வேண்டும் என்று துடிக்கின்ற யாழ்ப்பாணித் தமிழ்த் தேசிய உணர்வாளர்களுடன் இன்றைக்கும் நீங்கள் பகுத்தறிவு விவாதங்கள் செய்ய முடியாது. வாயைத் திறந்தால் மண்டையில் போடுகிறவர் மண்டையைப் போட்டாலும்!

இது இன்று நேற்றல்ல. இது ஒரு நீண்ட கால சமூக மனநோய்.

பி.பி.சி இந்த நூற்றாண்டின் சிறந்த பாடல் என்று ஒரு போட்டி நடத்துகிறது. இணையம் மூலமான வாக்களிப்பு.

எங்களுடைய விடுதலைப் பாடல் தான் முதலாவதாக வர வேண்டும் என்று முழுச் சமூகமுமே களமிறங்குகிறது. கனடிய வானொலிகளில் 'போங்கோ, போங்கோ, போய் வோட் போடுங்கோ!' என்று உசுப்பேத்துகிறார்கள்.

வானொலியிலேயே 'அண்ணை நான் பதினைந்து வோட் போட்டிட்டன்' என்று பெருமையோடு நேயர் ஒருவர் வானலையில் புல்லரிக்கிறார்.

அந்தப் பாடல் முதலாவதாக வந்தது பற்றி இந்தச் சமூகம் கொண்ட பெருமை சொல்லில் அடங்காது.

போட்டது கள்ள வோட்! சுய இன்ப உச்சத்தின் அளவு சொல்லி மாளாது.

உலகத்துக்கு வேறு எந்தத் தெரிவும் இல்லை. திரும்பிப் பார்த்தே ஆக வேண்டும்!

பிறகு அதே மாதிரித்தான், நாடு கடந்த அரசாங்கம் எனப்படும் ஒன்றுக்கு, 'உலகத்திற்குக் காட்ட வேண்டும்' எண்டு, அதே வானொலிகள், அதே கள்ள வோட்டுக்கள். 'போங்கோ, போங்கோ! உங்கள் பொன்னான வாக்குகளை அள்ளிப் போடுங்கோ!'

99.9 சத வீதம் தமிழர்கள் தனிநாடு கிடைக்க வேண்டும் என்று வாக்களித்தார்கள். ஏனடா அந்த .1 வீதத்தை விட்டனீங்கள் என்று கேட்ட போது, 'அப்ப தான் சர்வதேசம் நம்பும்' என்று பதில் வந்தது. சர்வதேசம் நம்பினால், ஐ. நா வந்திறங்கும், தமிழீழம் பெற்றுத் தரும்! இது தான் இந்தச் சமூகத்தின் சிந்தனைத் தெளிவு.

நூறு வீதம் போட்டிருந்தால், உலகம் திரும்பிப் பார்த்தே இருக்காது என்ற இரகசியத்தைத் தெரிந்து வைத்திருக்கும் மகாபுத்திசாலித் தமிழன்.

விஜய் டிவி சுப்பர் சிங்கர் போட்டியில் பங்குபற்றியதைக் கூட, விடுதலைக்கான அர்ப்பணிப்பான பில்டப்பாகக் காட்டிய சமூகம் இது.

அங்கே 'விடை கொடு தாய்நாடே' விடுதலைக் கீதங்களைப் பாடித் தான் போராட்டத்தைச் சர்வதேச மயப்படுத்த வேண்டும் என்று இந்தச் சமூகத்தின் அறிவாளிகள் சிந்தித்தார்கள். பிறகென்ன? 'போங்கோ, போங்கோ, அள்ளிப் போடுங்கோ' தான்.

அதே போல, கள்ள வோட்டுகளையும் அள்ளிப் போட்டார்கள். கையும் மெய்யுமாகப் பிடிபடும் அளவுக்கு!

விஜய் டிவி காலை வாரிய போது, 'விஜய் டிவியைப் பகிஷ்கரிப்போம்' என்ற ஆன்றோர்கள் இந்தச் சமூகத்திற்குள் தான் இருக்கிறார்கள்.

யசூகி அகாசி தங்களுக்குச் சார்பாக நடந்து கொள்ளவில்லை என்று 'ஜப்பானியப் பொருட்களைப் பகிஷ்கரிப்போம்' என்ற விண்ணன்களும் இங்கே ஊருக்குள் தான் இருக்கிறார்கள்.

இந்தச் சமூகம் திறமையை அங்கீகரிக்கிற சமூகமா? என்றால் அதுவும் இல்லை. இதே பிள்ளை டான் டிவியில் பாடிய போது, அதன் திறமையை யாரும் மெச்சியதுமில்லை. வேறு யாரோ அவர்களுடைய திறமையை அங்கீகரிக்கும்போது மட்டும்தான் அவர்களுடைய திறமை இவர்களுக்குத் தெரிகிறது. அந்த

அங்கீகாரத்தில் போராட்டத்தின் குளிர்காய்ச்சலை போக்கலாம் என்ற நினைப்பு வருகிறது.

தமிழ்நாட்டில் சினிமா மூலமான பிரபலமாக இருந்தால் போதும், கை கொடுக்க வரிசையில் நின்று பணம் செலுத்தும் இந்தச் சமூகத்திற்கு, அதே திறமைசாலிகள் தங்களுக்குள் செய்யும் எந்த முயற்சியையும் பணம் கொடுத்து வளர்த்து விடும் மனநிலை இருக்காது. ‘இவன், இவள் பெரிய ஆளாய் விடுவான், விடுவாள்’ என்ற பொறாமை இருக்கும்.

இந்தச் சமூகத்தில் இருக்கும் எந்தத் திறமைசாலியையும் இந்தச் சமூகம் ஒரு புகழ் பெற்றவராக ஆக்கியிருக்கிறதா? யாழ்ப்பாணி களுக்குள் இந்த அளவுக்கு கொண்டாடப்படும் எந்தத் திறமை சாலியையாவது கண்டிருக்கிறீர்களா?

அந்தத் திறமைசாலி ‘எங்கட ஆக்களோ?’ என்பது முதல், புலிவாலில் தொங்கியிருக்கிறாரா? என்பது வரைக்குமான அளவீடுகளாலேயே அந்தத் திறமைகள் அளக்கப்படுகின்றன.

இசை, திரைப்படம், எழுத்து என எந்தக் கலையிலும் உள்ள திறமைசாலிகளை ஆதரிக்க வேண்டும் என்று இந்தச் சமூகம் என்றைக்காவது நினைத்திருக்கிறதா? தமிழ்நாட்டுச் சினிமாவின் அடிமட்டப் பிரபலங்களுக்கு இருக்கும் மரியாதை கூட, இந்தச் சமூகத்தில் உண்மையான திறமைசாலிகளுக்கு இல்லை.

இந்த முட்டாள்களின் மனநிலையைத் தெரிந்து கொண்டவர்களுக்கு, இவர்களைக் கறக்கவும் முடிகிறது. கூட்டணிக்கு எதிராக தேர்தலில் நின்ற குமார் பொன்னம்பலம் கடைசி நேரத்தில் ‘நானும் தமிழீழம் தான்’ என்றது போல, நாங்களும் போராளிகள் தான் என்பது போல, அவர்களும் வாக்குகளுக்காக வேடம் போடுகிறார்கள். நடிக்கிறார்கள்.

இம்முறை வெற்றி பெற்ற பெண், போட்டியில் கலந்து கொண்டபோது, ‘சிறிலங்காவில் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருக்கிறேன்’ என்று சொல்லி, வெற்றியின் முடிவில் ‘எம் மண்ணுக்கும் மண்ணுக்காக உயிர் துறந்த எம் மறவர்களுக்கும் இந்த வெற்றியைச் சமர்ப்பிக்கிறேன்’ என்றிருக்கிறார். சங்கீதத்தில் உள்ள திறமைக்கும், அந்த திறமையால் கிடைத்த வெற்றிக்கும், மண்ணுக்கும் மறவர்களுக்கும் என்ன சம்பந்தம்?

ஆனால், இதையெல்லாம் சொல்லாவிட்டால் இதே சமூகம் அந்தப் பெண்ணை எந்தக் கூச்சமும் இல்லாமல் திட்டித் தீர்த்திருக்கும். அதனால் அப்படிச் சொல்லித் தான் ஆக வேண்டும். அப்படிச் சொன்னால் தான் வோட்டு (கள்ள!) போடுவார்கள். இந்த வெற்றியால் இந்த மண்ணுக்கோ, இந்த மக்களுக்கோ ஏதாவது பயன் வந்திருக்குமா? நிச்சயமாக எந்த வழியிலும் இல்லை.

பேஸ்புக்கில் ‘ஆனையிறவு அடிச்ச’, ‘கோட்டையில கொடி நாட்டிய’ ‘ராஜீவை, கதிர்காமரைப் போட்ட’ கொண்டாட்டம் மாதிரிக் கொண்டாட வேண்டியது தான்!

நம்புங்கள், நாளை தமிழீழம் மலரும்! இந்தச் சமூகம் புனிதப் போராட்டம் என்று ஏதோ ஒன்றை நம்பியிருந்திருக்கிறது. அந்தப் போராட்டம் கண் முன்னாலேயே ஒரு கோமாளிக் கூத்தாக முடிந்து போயிருக்கிறது.

ஆனால், அதை நம்பிய தங்கள் முட்டாள்தனத்தை இந்தச் சமூகத்தினால் ஜீரணிக்க முடியவில்லை. ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவ்வாறு ஏற்றுக் கொள்வதாயின், தன்னுடைய முட்டாள்தனத்தையும் ஏற்றுக் கொண்டதாக முடிந்து விடும்.

இதனால் தான் இன்றைக்கும் தலைவர் வருவார், தேசத்தின் புதல்வி வருகிறார் என்று கதை விடவும், அதை நம்புவது போலவும் நடிக்க வேண்டி இருக்கிறது.

முள்ளிவாய்க்காலில் புலிகள் கவ்விய மண்ணை விட, யாழ்ப்பாணிகள் வாங்கிய அடி பலமானது. அதனால் ஏற்பட்ட வெட்கம் சொல்லி மாளாதது.

அதிலும் அந்தத் தோல்விக்கு இந்தியாவைக் குற்றம் சொல்கிற யாழ்ப்பாணிகளுக்கு, தன் தேசத்தின் புதல்வி ஒருவர் அதே இந்தியாவில் விடுதலை கீதம் பாடி, வெற்றி பெறுவது என்பது, இந்தியாவின் மூக்கை உடைத்து, மண் மீட்டது மாதிரி, தன்னுடைய மீசையில் முள்ளிவாய்க்கால் மண் படவில்லை என்று பெருமைப்பட வைக்கக் கூடிய ஒன்று.

‘உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை விரட்டியடித்தோம்’ என்று பீற்றிக் கொண்ட பின்னால், தம்மாத்துண்டு இலங்கை இராணுவத்திடம் இருந்து தங்களைக் காப்பாற்றவில்லை என்று தான் விரட்டிய இந்தியா மேலும், மீண்ட இராணுவத்தை வரவேற்கப் போகாத கருணாநிதி மேலும் கோபம் கொண்டிருக்கும் சமூகம் இது.

இது இதை போராட்ட வெற்றியாகத் தான் கொண்டாட வேண்டும்.

இது தான் இதன் பின்னால் இருக்கிற உளவியல். அரசியல்.

கொஞ்ச நாளைக்கு முன்னால் இப்படி தமிழ்நாட்டில் போய் பிக் பொஸ்ஸில் வெற்றி பெற முனைந்த பெண்ணுக்கு கலாசாரக் காவலர்கள் செய்தது என்பது எல்லாருக்கும் தெரிந்தது தான்.

நாளைக்கு இதே பிள்ளைக்கு இந்திய சினிமாவில் பாடச் சந்தர்ப்பம் கிடைத்து, தனது விருப்பத்திற்கேற்ப உடையணியவோ, ஒரு துணையைத் தேடிக்கொள்ளவோ விரும்பினால் கூட, இந்தக் கலாசாரக் காவலர்கள் இதே பிள்ளையை எந்தக் கூச்சமும் இல்லாமல் காறித் துப்புவார்கள்.

இவர்கள் தங்கள் போராட்டம் பற்றிக் கொண்டிருக்கின்ற ஏதோ ஒரு கருத்துக்கு முரண்பாடாக வாய் தவறி எதைச் சொன்னாலும், துரோகியாக்கி விரட்டியடிக்கக் கூடிய சமூகம் தான் இது.

கருத்துச் சுதந்திரம்? அதெல்லாம் இந்த இனத்திற்கு உரிய விழுமியம் இல்லை.

திடீரென்று உலகப் புகழ் பெற்ற பாடலைக் பாடிய சிங்களப் பெண்ணை ஜனாதிபதி



முதலானோர் வாழ்த்தி, வீடு கூட வழங்கினார்களே. அதைப் போல இந்தப் பிள்ளைக்கு இந்த சிங்கள இனவாத அரசு கொடுக்குமா? என்று கூட இந்த தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் கத்துவார்கள்.

ஆனால், தற்செயலாக இலங்கை ஜனாதிபதி இந்தப் பிள்ளையின் குடும்பத்தை அழைத்து ஒரு வீட்டைக் கொடுக்க நேர்ந்தால், அந்தோ கதி தான். இதே பிள்ளையை ‘வீட்டுக்காக இனத்தை விற்றவர்’ என்று இதே கூட்டம் தூற்றும்.

இனி அந்தப் பிள்ளையைக் கனடிய மாவீரர் தினத்திற்கு வரவழைத்துப் பணம் பண்ண முடியும் என்றால், அதைச் செய்வதற்கும் அயோக்கியர்கள் இங்கே தயாராக இருக்கிறார்கள்.

அருளரின் மகள் கூட தன்னை ஒரு இனவிடுதலைப் போராளி மாதிரி, ‘தான் ஒருவர் தான் இந்த இனத்திற்காகப் போராடுகிறவர்’ என்ற மாதிரிக் கருத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் இப்போது எங்கே என்பதும் தெரியாது. அவரைக் காணவில்லையே என்று இந்தச் சமூகம் கவலைப்பட்டதும் கிடையாது.

அவரது பிரபலம் உலகளவில் இருந்தபோது, இந்தச் சமூகத்திற்குக் கிளுகிளுப்பாக இருந்தது. அவ்வளவு தான்.

அப்படி இன்றைக்கு பூப்புநீராட்டு மாதிரி, தேரிலும் பல்லக்கிலும் சுமக்கிற இந்தச் சமூகம் காறித் துப்ப அதற்கு நேரமும் எடுக்காது. கூச்சமும் இருக்காது.

இது தான் இந்தச் சமூகம்! யுத்தம் முடிந்த கையோடு கனடியத் தேர்தலில், தமிழர்களுக்குச் சம்பந்தமில்லாத கொள்கைகள் கொண்ட கனடியக் கட்சிச் சார்பாக, களமிறக்கி கள்ள வோட்டுப் போட்டு, பெண் ஒருவரைப் பாராளுமன்றம் அனுப்பினார்கள். கனடியப் பாராளுமன்றத்தில் தமிழில் பேசினார் என்று வரலாற்றுப் பெருமிதம் அடைந்தார்கள்.

வெற்றி பெற வைத்த spin doctors ‘நம்புங்கள் நாளை தமிழீழம் மலரும்’ என்று உருட்டினார்கள்.

அதே பெண்ணை வெற்றி பெற வைத்தோம் என்று உரிமை கோரியவர்களே அவரால் ஒதுக்கி ஓரம் கட்டப்பட்டு, கடைசியில் அந்தப் பெண்ணும் இதே தமிழர்களால் துரோகி ஆக்கப்பட்டு ஒதுக்கப்பட்டும் விட்டார். இன்றைக்கு இந்தச் சமூகத்தில் அவர் வேண்டாத விருந்தாளியாக மறக்கப்பட்டே விட்டார்.

இது தான் இந்த யாழ்ப்பாணிச் சமூகம். இதனிடம் இருந்து அறிவுபூர்வமாக எதையும் எதிர்பார்ப்பது என்பது தான் முட்டாள்தனமான விடயம்.

‘நானே எழுபத்தைஞ்சு கள்ள வோட்டுப் போட்டனான்’ என்ற பகிரங்கமாகப் பெருமையோடு சொன்ன அரசியல்வாதி தான் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் பதவிக்குப் போட்டியிடுகிறார். இந்த யாழ்ப்பாணிகளுக்குத் தலைமை தாங்கப் போகிறார்.

ஆகவே, நீங்களும் ‘போங்கோ, போங்கோ... உங்கள் பொன்னான வாக்குகளை அண்ணனுக்கும் அள்ளிப் போடுங்கோ!’.

இருந்தாலும், 99.9 வீதத்தோட நிப்பாட்டியிடுங்கோ! விசயம் தெரியாமல் நூறு வீதம் போட்டிடாதையுங்கோ!

பிறகு சர்வதேசம் கள்ள வோட்டு எண்டு நம்ப மாட்டுது! விஜய் டிவியை பகிஷ்கரிச்ச மாதிரி, சர்வதேசத்தையும் பகிஷ்கரிக்க முடியாது.


‘யாழ்ப்பாணிடா! படிச்ச மண்டைக்காய்கள்டா!’.

அ











# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
## என்ற வார்த்தையைத்

# தேடுங்கள்...
# கண்டடைவீர்கள்!

# அவதூற்றுக்கண்




## ஒரு ‘சரக்கு இல்லாத’

# வியாபாரி

தனிமனித உறவுகள், நட்புகளுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள், விமர்சனங்கள், அவதூறுகள் பற்றிய ஒழுக்கவிதிகள் ஒருபுறம் இருக்கட்டும்.

ஒரு பொதுவெளியில் அறியப்பட்ட ஒருவர் மீதான பகிரங்க விமர்சனத்தின் எல்லை என்ன? எங்கே அது தனிமனிதத் தாக்குதல் ஆகிறது? எங்கே அது அவதூறு ஆகிறது?

இதன் எல்லைக்கோடுகள் குறித்த ஒழுக்கவிதிக் கையேடு என்று எதுவும் இல்லை.

ஆனால், அவதூறு என்பதில் எல்லாருக்குமான ஒரு தெளிவு இருக்கக் கூடும். தனக்குப் பொய் என்று தெரிந்த ஒன்றை உண்மை போலச் சொல்லுவது அவதூறு.

Plain and simple.

இதைக் கூசாமல், கண்களை நேரே பார்த்துக் கூடச் சொல்கிற வித்தகர்களை எனக்கு நேரில் தெரியும். என்னைப் பற்றியும், என் இயல்புகளையும் தெரிந்து கொண்டே, தன்னை நியாயப்படுத்துவதற்காக என்னைப் பற்றிப் பொய் சொல்கிறவர்களை இன்று வரைக்கும் கண்டு கொண்டு தான் இருக்கிறேன்.

அடுத்து, தனக்கு ஏற்கனவே தெரிந்தோ, ஏற்றுக் கொண்டோ உறவாடிய பின்னால், கசந்து விடும்போது மட்டும், அதைக் காரணமாகக் குற்றம் சாட்டுவது கூட என்னைப் பொறுத்தவரைக்கும் அவதூறு தான். புலிகள் தங்கள் இயக்கத்தில் இருந்து விலகியோர், விலக்கப்பட்டோர் குறித்துச் சொல்கிறவற்றை அதற்குள் அடக்கலாம்.

இந்த இரண்டையும் விட, எதிராளியை மடக்க வேண்டும், தோற்கடிக்க வேண்டும், அவமானப்படுத்திப் பின்வாங்க வைக்க வேண்டும் என்பதற்காக, பேசப்படுகின்ற விடயத்திற்குச் சம்பந்தமில்லாதவற்றை, சம்பந்தம் இல்லாதவர்களை இழுத்து வந்து அவமானப்படுத்தி, தன்னை நியாயப்படுத்த முனைகிற எதுவும் அவதூறுகளுக்குள் வரும் என்று நம்புகிறேன்.

பத்திரிகை நடத்திய காலத்தில் பல அயோக்கியர்கள் பற்றி எழுதியிருக்கிறேன். அவர்கள் மீதான என்னுடைய கோபம் முழுவதும் இந்தச் சமூகத்தை அவர்கள் ஏமாற்றுவது பற்றியதாகத் தான் இருந்ததே ஒழிய, தனிப்பட்ட கோப தாபங்களுக்கான பழிதீர்த்தலாக இருந்ததில்லை. புலிகளின் பெயரால் திருடியவர்கள், அவர்களுக்கு தெரிந்து கொண்டே, தங்கள் பிழைப்புக்காக முண்டு கொடுத்த ஊடகக்காரர்கள், புலிகளின் கொலைகளை நியாயப்படுத்தியவர்கள் மீதான விமர்சனம் எல்லாம், அவர்கள் மீது தனிப்பட்ட காரணங்களுக்காக எழுதப்பட்டவை அல்ல. ஒரு கொலைகாரக் கும்பல் ஒரு சமூகத்தைச் சீரழிப்பதற்கு தெரிந்து கொண்டு உடந்தையாக இருப்பவர்கள் மீதான விமர்சனங்கள் தான் அவை.

என்னோடு இருந்தவர்கள் தங்கள் எதிர்பார்ப்புகள் எல்லாம் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்த போது, என்னை விட்டுப் போய் அவதூறு எழுதியிருக்கிறார்கள். அப்போது கூட 'நண்பர்களிடம் இருந்து காத்துக் கொள்ளும் இறைவா, ஏனெனில் என் எதிரிகளிடமிருந்து என்னைக் காத்துக் கொள்ள எனக்குத் தெரியும்' என்று எழுதியிருக்கிறேன்.

எல்லை மீறிப் பொறுத்துக் கொள்ள முடியாமல் போனபோது, அவர்கள் பற்றியெல்லாம், அவர்கள் வெட்கப்படும் அளவுக்குக் கிண்டல் பண்ணியிருக்கிறேன். தர்க்கரீதியாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன்.

ஒருபோதும், அவர்கள் என்னை விட்டுப் போய் விட்டார்கள் என்பதற்காக முந்தி விழுந்து என்னை நியாயப்படுத்த ஒருபோதும் முயன்றதில்லை. அத்துடன், அவர்களை எதிர்ப்பதற்காக அவர்களின் எதிரிகளோடு எல்லாம் ஓடிப் போய் உறவாடுவதில்லை. அவர்கள் என்னிடம் சொன்ன எதையும் ஓடிப் போய் சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லி ஆட்சேர்ப்பதில்லை.

எனக்கு உதவ வந்தவர்கள், தங்கள் நோக்கங்கள் நிறைவேறாமல், என்னைப் பற்றிக் குறை சொல்லித் திரிந்த போது கூட, 'எங்களுக்குள் நட்பு இருந்தது, நான் எப்படிக் குறை சொல்வது?' என்றுதான் சொன்னேன். ஆனால், அவர்கள் பொய் அவதூறுகளைச் சொல்லும்போது மட்டும், என்னைப் பற்றிய தப்பபிப்பிராயங்கள் வரக் கூடாது என்பதற்காக என்னுடைய பக்க நியாயத்தைச் சொன்னேன்.

இப்போது பேஸ்புக் தடுத்தாட்கொள்ளல் போல, அவர்களுடனான உறவுகளைத் துண்டித்துக் கொண்டு விடுவேன். அதன் பின்னால், அவர்களோடு சிரித்து நடிக்க என்னால் முடிவதில்லை.

ஆனால், இவர்களில் பலரின் குற்ற உணர்வு இவர்களை மௌனமாகக் கடந்து போக விடுவதில்லை. ஏதோ வழியில் தங்களை குற்றமற்றவர்களாக நியாயப்படுத்த முனைகிறார்கள். அதற்கான வழி, அவதூறு தான்.

என்னவோ, நான் நண்பர்கள் பற்றி நண்பர்களிடம் முறையிடுவதில்லை, குறை சொல்வதில்லை. நண்பர்கள் பற்றிக் குறை சொல்வதாயின் அவர்களிடமே நேரில் சொல்வேன். வேறு யாரிடமோ சொல்லப் போனால் ஒன்றில் அது திரிக்கப்பட்டு, உப்புப் புளி சேர்க்கப்பட்டு, நான் கருதாத, சொல்லாத வேறு வடிவத்தில் போய்ச் சேரும்.

அல்லது இவர்கள் என்னோடு கோபித்துக் கொள்ளும்போது, முதல் வேலையாக அவருக்குப் போன் அடித்து, 'உவர் முந்தி உன்னைப் பற்றி இப்படிச் சொன்னவர்' என்று ஆதரவுக்கு ஆள் தேடுவார்கள்.

பல விடயங்களை அவதானித்து மனதில் இருத்திக் கொள்வேன். மனைவியிடம் மட்டும் அதைப் பற்றிச் சொல்வேன். அவர்களுடன் நெருக்கம் மாதிரி எல்லாம் நடிக்காமல், சற்றே தூர இருந்து கொள்வேன்.

மற்றும்படி, புறணி பேசாமல், வதந்திகள், அவதூறுகள் கதைக்காமல், காண்கிற இடங்களில் நாகரீகமாகவும் இங்கிதமாகவும் நடந்து கொள்வது அனாவசியத்

தலையிடிகளைத் தவிர்க்க உதவும்.

ஆனால், வஞ்சமில்லாமல் நண்பர்கள் குழாம் யாரைப் பற்றியாவது பேசும்போது, அதைப் பற்றி அக்கறைப்படாதது போல, காதை எறிந்து விட்டு கேட்டுக் கொண்டிருப்பேன். சந்தேகத்திற்கு ஏற்படாதபடிக்கு கேள்விகளை எறிந்து, வேண்டிய மேலதிக தகவல்களைப் பெற்றும் கொள்வேன்.

மற்றும்படி கதை அறிய வேண்டும் என்பதில் நான் எந்த ஆர்வமும் காட்டுவதில்லை இதனால், பல கிசுகிசுக்கள் என் காதுக்கு எட்டுவதும் இல்லை. பின்னர் கேள்விப்படும்போது, ‘ஓகோ! அப்படியா?’ தான்.

அதைப் போல, யாராவது எவரைப் பற்றியும் எனக்குக் குறை சொன்னாலும், அதைப் பற்றி நீதி கேட்கப் போவதுமில்லை. அதை வைத்து அவர்களை மதிப்பிடுவதும் இல்லை. இரண்டு பக்கத்துக் கதைகளைக் கேட்காமல் நான் பெரும்பாலும் முடிவுகள் எடுப்பதில்லை. அத்தோடு அந்தக் கதைகளை நான் யாருக்கும் சொல்வதுமில்லை.

என்னுடைய இந்த இயல்புகளைத் தெரிந்து கொண்டதால், என்னை நம்பிப் பலரும் பலர் பற்றியுமான கருத்துக்களையும் குறைகளையும் பகிர்ந்து கொள்வார்கள். என்னை நம்பிச் சொல்லப்பட்ட அந்த விடயங்களை, அவர்கள் என்னோடு கோபித்துக் கொள்ள நேர்ந்தாலும், நான் ஓடிப் போய் சொல்லி, என்னை நியாயப்படுத்தி ஆள் சேர்ப்பதில்லை. குறைந்த பட்சம், அவர்களோடு நட்பாக இருந்த காலத்தில் அந்த நட்புக்கு நேர்மையாக நான் இருந்ததற்கான மதிப்பை நான் கொடுப்பேன்.

ஆனால்... அவர்கள் என்னோடு கோபித்துக் கொண்டு, என்னைப் பற்றிய பொய் அவதூறுகளைச் சொல்லும்போது மட்டும், கடித்துத் துப்ப வேண்டி நேர்ந்து விடுகிறது.

எனக்கே வெட்கமாக இருக்கும். ஆனால், என்னைப் பற்றிய பொய் அவதூறுகளை உண்மை என்று நம்பி என்னைப் பற்றி யாரும் எனக்குத் தெரியாமல் தவறான அபிப்பிராயங்களை வைத்திருப்பதை நான் பெரிதும் விரும்புவதில்லை. காரணம், அதை எல்லாம் அறியாமல் நான் உண்மையைப் பேசிக் கொண்டிருக்க, அதைக் கேட்பவர்கள், ‘நீயென்ன திறமோ?’ என்று உள்ளுக்குள் நினைக்கக் கூடும் என்பது.

இப்போது கூட, இதைச் சொல்வது குறித்து எனக்கு வெட்கமாகத் தான் இருக்கிறது. நான் பொருட்படுத்தாத ஒருவர் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. நண்பர்களின் ஈனத்தனங்கள் குறித்தே அடுத்தவர்களுக்குச் சொல்லாத எனக்கு, பொதுவெளியில் இதைச் சொல்வது என்பது கூச்சமாகத் தான் இருக்கிறது.

சில நேரங்களில் சில மனிதர்களின் அற்பத்தனங்களையும் சொல்ல வேண்டித்தான் இருக்கிறது. அதுகூடச் சம்பந்தப்பட்டவை மட்டும் தான். என்னை நியாயப்படுத்துவதற்காக அல்ல. சொல்லப்படுகிறவர் குறித்த முழுமையான உண்மையைப் புரிந்து கொள்ள!

என்ன செய்வது?
காலத்தின் நிர்ப்பந்தம்!
சொல்லியாக வேண்டியிருக்கிறது...
கூச்சத்துடனும் வெட்கத்துடனும்!

# அவதூற்றுக் கண்!

## சரக்கு இல்லாத வியாபாரி

பல வருடங்களுக்கு முன்னால், ஒரு நாள் அதிகாலை வேலைக்குப் போவதற்காகப் புறப்பட்டு, வாசலில் நின்ற காரைத் திறக்கிறேன். கார் முன்கண்ணாடியில், மழை வழிப்பானின் கீழே ஒரு வெள்ளைக் கடதாசித் துண்டு ஒன்று இருந்தது.

ஆச்சரியமாக இருந்தது. எடுத்துப் பிரித்துப் பார்த்தேன்.

என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மித்திரன் அண்ணன் எழுதிய கடிதம் ஒன்று.

‘ஜோர்ஜ், நான் ஏதும் பிழை விட்டிருந்தா, என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ!’.

இதென்னடா, புதுத் தலையிடி!?

அதற்குக் ‘கொஞ்ச நாளைக்கு’ முன்னர், புலிகளுக்கு மனித உயிர்கள் மீது எந்த மதிப்பும் இல்லாதது பற்றி எழுதியிருந்தேன்.

சமாதான காலம். புலிகள் ஆயுதத்தோடு நடமாடக்கூடாது என்ற ஒப்பந்தம். யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள தீவுப்பகுதியில், புலிகளின் வள்ளம் ஒன்றை, சமாதான ஒப்பந்தத்தை அமுலாக்கும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் நடுக்கடலில் தடுத்து சோதிக்கிறார்கள்.

வள்ளத்துக்குள் இருந்த புலிகள், பலகைகளால் மறைத்து ஆணி அடித்து, துப்பாக்கிகளை மறைத்து வைத்திருந்ததை கண்காணிப்பாளர்கள் கண்டு கொள்கிறார்கள்.

கையும் களவுமாகப் பிடிபட்ட புலிகள் வன்னிக்கு வோக்கி டோக்கியில் தொடர்பு கொள்கிறார்கள். அங்கிருந்து தமிழ்ச்செல்வன் அவர்களைத் தற்கொலை செய்து கொள்ளும்படி கட்டளையிடுகிறார். அவர்கள் வள்ளத்தில் பெட்ரோலை ஊற்றி தீ வைக்க, கண்காணிப்பாளர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றக் கடலில் குதிக்க வேண்டியிருக்கிறது.

வள்ளத்தில் இருந்த புலிகள் நெருப்பில் எரிந்து தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.

கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரை, அவர்கள் பெரும்பாலும் புலிகளுக்குச் சார்பானவர்களாகத் தான் இருந்தார்கள். அவர்கள் இந்தப் புலிகளை சிறைக்கு எல்லாம்

ஜோர்ஜ் இ.

கொண்டு போகப் போவதில்லை. ஆயுதங்களைப் பறிமுதல் செய்து விட்டு, விடுவித்திருப்பார்கள். அல்லது புலிகளிடம் கையளித்திருப்பார்கள்.

சமாதான ஒப்பந்த நேரம். ஒப்பந்தத்தை மீறி ஆயுதங்களோடு நடமாடுகிறார்கள் என்பதை விட, அதில் இருந்த இரண்டு உயிர்களை எந்தத் தேவையும் இல்லாமல் எரிந்து தற்கொலை செய்யும்படி எந்த மனிதாபிமானம் உள்ள மனிதனுக்கு மனம் வரும்... குரூர மனம் படைத்த புலிகளைத் தவிர?

புலிகளைப் பொறுத்தவரைக்கும் போராளிகள் என்பவர்கள் இப்படி பலிகொடுப்பதற்கான பலிக்கடாக்கள் மட்டுமே! அவர்களின் உயிருக்கு எந்த மதிப்பும் இருந்ததில்லை. Disposable.

அந்தச் சிந்தனை போராளிகளோடு மட்டும் முடிந்ததுமில்லை. பொதுமக்கள், செஞ்சோலைச் சிறார்கள், தங்களோடு இருந்த கத்தோலிக்க குருவானவர்கள் என்றெல்லாம் அவர்களின் மரணத்தில் பயன்பெற முடிந்தால், அவர்களைக் கொலை செய்யவும் பலி கொடுக்கவும் புலிகள் தயங்கியதில்லை.

கடைசி யுத்த நேரத்தில், காயமடைந்த போராளிகளை, பின்வாங்கும்போது கொண்டு திரிய முடியாது என்பதற்காக, பஸ் ஒன்றில் வைத்துக் குண்டு வைத்துத் தகர்த்த கதை கூட உண்டு.

இதைப் பற்றி தாயகம் இணையத் தளத்தில் எழுதியிருந்தேன். அதை வாசித்து என்னோடு தொடர்பு கொண்ட, இங்கு அரசியல், கலை, இலக்கிய வட்டங்களில் எல்லாராலும் அறியப்பட்ட மித்திரன் அண்ணன், அது நடந்த காலம் பற்றி என்னோடு உரையாடியிருந்தார்.

நான் 'கொஞ்சக் காலத்திற்கு முன்' என்றதை, 'அது நடந்து கனநாளல்லோ? ஜோர்ஜ்' என்பது தான் மித்திரன் அண்ணையின் அறச்சீற்றம்!

அவர் உரையாடிய விடயத்தை இன்னொரு தடவை எழுதியபோது, அவரையும் குறிப்பிட்டு 'மித்திரர் ஒருவர் அது பற்றிச் சொல்லியிருந்தார்.' என்று எழுதியிருந்தேன்.

**யாராவது யாரைப் பற்றியும் எழுதியிருந்தால், அவர்களின் கண்ணில் அதைப் பட வைத்து, அவர்களுக்கு இடையில் பிரச்சனையை உருவாக்கும் நோக்கத்தோடு, தான் அதில் நேரடியாக ஈடுபடாமல், இப்படியான சரியான கொண்டோடியைத் தெரிவு செய்து பிடித்து, இரு தரப்பினருக்கும் கொழுவலை பெருப்பித்து விட்டு, தான் இரண்டு பேருக்கும் நல்லவராக நடித்துக் கொண்டிருப்பது!**

என்னுடைய குறும்பு மித்திரன் அண்ணைக்கும், எங்களைத் தெரிந்தவர்களுக்கும் மட்டும் புரியும் என்று!

அதற்கும் இந்தத் துண்டுக் கடிதத்திற்கும் என்ன சம்பந்தம்?

இதை வாசித்த 'காலம் செல்வம்', உடனடியாகவே இந்தக் கதையை கொண்டோடக் கூடிய ஒருவரைத் தெரிவு செய்து, 'ஜோர்ஜ் மித்திரனை அடிச்சிருக்கு!' என்று சொல்லியிருக்கிறார். அந்தக் கொண்டோடியும் அதை வாசிக்காமலேயே, கேள்விச் செவியனாக உடனடியாகவே மித்திரன் அண்ணைக்கு போன் அடித்து, 'ஜோர்ஜ் உங்களைக் கடிச்சிருக்காம்!' என்று சொல்லியிருக்கிறார்.

அதைக் கேட்ட மித்திரன் அண்ணன், தன்னை நான் ஏதோ கேவலப்படுத்தி விட்டேன் என்று நினைத்துத் தான் இந்தக் கடிதத்தை எழுதி, ஓடோடி என் வீட்டுக்கு வந்து, என் கார்க் கண்ணாடியில் செருகிப் போய் இருக்கிறார்.

அவரைச் சமாதானப்படுத்த நான் கண்காணிப்பாளர்கள் இல்லாமலேயே அவலப்பட வேண்டியிருந்தது.

காலம் செல்வம் என்று இன்றைக்கு அறியப்பட்டிருக்கும் செல்வம் அந்தக் காலம் தொட்டுச் செய்து வரும் இலக்கிய சேவை இது தான்.

யாராவது யாரைப் பற்றியும் எழுதியிருந்தால், அவர்களின் கண்ணில் அதைப் பட வைத்து, அவர்களுக்கு இடையில் பிரச்சனையை உருவாக்கும் நோக்கத்தோடு, தான் அதில் நேரடியாக ஈடுபடாமல், இப்படியான சரியான கொண்டோடியைத் தெரிவு செய்து பிடித்து, இரு தரப்பினருக்கும் கொழுவலை பெருப்பித்து விட்டு, தான் இரண்டு பேருக்கும் நல்லவராக நடித்துக் கொண்டிருப்பது!

எங்காவது பார்ட்டிகளில் இல்லாதவர்களைப் பற்றி யாராவது கதைத்தால், அந்தக் கதையை அவருக்குச் சொல்லிக் கோள் மூட்டி அவர்களுக்கு நம்பத் தகுந்தவர் மாதிரி நடித்துக் கொள்வது!

செல்வத்தை அறிந்த ஆரம்ப காலத்தில், இங்கே எங்கள் அரசியல், கலை, இலக்கிய நண்பர்கள் பெரும்பாலும் யாரோ ஒருவர் வீட்டில் அடிக்கடி சனி இரவுகளில் சந்தித்துக் கொள்வார்கள். பெரும்பாலும் தண்ணீர்ப் பார்ட்டியும், இலக்கிய சர்ச்சையும், அந்த வாரம் வெளிவந்த தாயகம் விமர்சனக் கூட்டமுமாகத் தான் அது இருக்கும்.

இருந்தாலும், இந்த நண்பர்களுக்குள் குழுக்களும், மனஸ்தாபங்களும் இருக்கும். போன தடவை வெறியில் 'அரசியல் கருத்து முரண்பாடுகள்' ஏற்பட்டால், சிலர் இந்த முறை அழைக்கப்படாமல் விடப்படுவார்கள்.

எனக்குச் செல்வத்தின் இந்த அண்டல் திருவிளையாடல்கள் எல்லாம் அப்போது தெரிந்திருக்கவில்லை.

சனிக்கிழமை நண்பகலுக்குப் பின் அல்லது ஞாயிறு காலையில், செல்வத்திடம் இருந்து போன் வரும். 'இஞ்சேருங்கோ, இண்டைக்கு பாபு வீட்டில பார்ட்டியாம். அவற்றை வீடு எங்க இருக்குங்கோ?' என்று கேட்பார்.

செல்வத்திற்கு பாபுவின் வீடு தெரியாமல்இருக்கும் என்பதுமில்லை. விருந்துக்கு அழைத்தவர் எங்கே விருந்து என்பதைச் சொல்லாமலா இருந்திருப்பார்? அதற்கு பாபுவிடம் கேட்க வேண்டிய கேள்வியை ஏன் என்னிடம் கேட்கிறார் என்று நான்

சந்தேகப்படுவதுமில்லை. இதில் உள்ள நரித்தனத்தை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு எனக்கு அவ்வாறான இயல்புகளும் இல்லை.

இல்லாது போனால், ஞாயிறு காலையில் வரும் போன் அழைப்பில், ‘எங்க நேற்று பாபு வீட்ட பார்ட்டியில உங்களைக் காணேலை?’.

இதெல்லாம் உங்களிடம் இருந்து தகவலைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ, அல்லது நீங்கள் அழைக்கப்படவில்லை என்பதில் உள்ள அக்கறையோ இல்லை.

உங்களுக்குள் பிரச்சனையை மூட்டி விடுவது தான் செல்வத்தின் நோக்கமாக இருக்கும். தான் அழைக்கப்பட்டது மட்டுமன்றி, உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதும் உங்களுக்குத் தெரிய வேண்டும்.

இதைத் தெரிந்து கொண்டால், என்னை அழைக்காததற்காக நான் பாபு மீது கோபித்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தவிர செல்வத்தின் நோக்கம் வேறு எதுவாக இருக்கும்?

பின்பு தான் தெரிந்தது, செல்வம் இந்த விளையாட்டை என்னோடு மட்டும் நிகழ்த்துவது இல்லை என்பது. இங்கு எல்லாரோடும் தான் இதைச் செய்து கொண்டிருந்திருக்கிறார் என்பது மற்ற நண்பர்களோடு கதைக்கும் போது தான் எனக்கு ஓடி வெளித்தது.

இப்படி, தான் எல்லோருக்கும் நல்லவனாக நடித்துக் கொண்டு, எல்லாருக்கும் இடையில் கோள் மூட்டி, கோபதாபங்களை உருவாக்கி பிரச்சனைகளை பெருப்பிக்கிற மனிதனாகத் தான் செல்வம் இங்கே இலக்கியம் செய்து கொண்டிருந்தார்.

கடந்த மாதம் என்னுடைய அண்ணன், கத்தோலிக்க அருட்தந்தையாக இருப்பவர், என்னைப் பார்க்க கனடா வந்திருந்தார்.

மன்னார் கத்தோலிக்க ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை சிறுவயதிலிருந்தே என்னில் மிகவும் அன்பு பூண்டவர். அவர் எங்கள் ஊர்க் கோயிலில் பங்குத்தந்தையாக இருந்தபோது, சிறுவயதில் அவரின் செல்லப்பிள்ளையாக இருந்தேன்.

**அப்போது சொல்வேன், ‘செல்வம் பற்றிய என்னுடைய கருத்தை நான் இரண்டே இரண்டு பேரிடம் தான் சொல்லியிருக்கிறேன், ஒரு நாளைக்கு எங்களோடு அவர்களும் இருக்கும்போது, உங்களுக்கு நான் சொல்லுவேன்’ என்பேன்.**

எங்கள் குடும்பத்தினருக்கு நிறைய உதவிகள் அவர் செய்திருக்கிறார்.

அவர் என்னைத் தெரிந்த அதே வயதில் இருந்த என் மகனைக் கூட்டிக் கொண்டு, அவர் இங்கே வந்த போது போய் சந்தித்திருந்தேன்.

அவர் தன்னைப் பற்றி நான் ஏதோ எழுதியதாக கோபம் கொண்டிருந்தார் என்று என் அண்ணன் எனக்குச் சொல்லியிருந்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

இராணுவம் மடு ஆலயப் பகுதியைக் கைப்பற்ற வந்த போது, அவர் மடுமாதா சுரூபத்தைக் கொண்டு விடத்தல்தீவுப் பக்கம் வந்தபோது, புலி ஆதரவாளர்களால் புகழப்பட்டிருந்தார். பின்னர் அவர் திரும்பவும் மடுமாதா சுரூபத்தை இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த கோயிலுக்குக் கொண்டு சென்ற போது, அதே புலிகளால் துரோகி ஆக்கப்பட்டிருந்தார்.

புலி வால்களின் இந்தச் செயல் பற்றி எழுதியிருக்கிறேன். ஆனால் ஆயரைப் பற்றி கேவலமாக எதையும் எழுதவில்லை. என் மீது அன்பு பூண்டவர் பற்றி நான் எதை எழுத முடியும்?

ஆனால், அவர் அவ்வாறு நினைத்ததற்கான காரணத்தை ஊகித்தால், அது நிச்சயம் என் எழுத்துக்களை அக்கறையாக வாசிக்கிற செல்வத்தின் வேலையாகத் தான் இருக்க முடியும் என்பதை அனுமானிக்க முடிந்தது.

இங்கே இருக்கிற, ஆயருக்கு நன்கு தெரிந்த ஒருவர் மூலமாகத் தான் செல்வம் போட்டுக் கொடுத்திருக்க முடியும். மற்றும்படி வேறு எந்த வழியிலும் ஆயருக்கு இப்படியான ஒரு தகவல் போயிருக்க நியாயமில்லை.

செல்வத்தின் இயல்பே இது தான். சமீபத்தில் கூட, எங்கள் இருவருக்கும் தெரிந்தவர்களிடம் போய், தன்னைப் பற்றி நான் அபத்தத்தில் எழுதியதாகக் கூறி, ‘பாருங்கோ, அவர் ஒரு கத்தோலிக்கராக இருந்து கொண்டு, உப்பிடிச் செய்யிறார்!’ என்று புலம்பியிருக்கிறார்.

அவர்களை எனக்கு எதிராகத் தூண்டி விடக் கூடிய துரும்பு அது தான்!

அபத்தத்தில், கத்தோலிக்கனான செல்வம் பற்றி எழுதிய சாவான பாவத்திற்கு, இந்த உத்தம கத்தோலிக்கன் எந்த ஆயரிடம் போய் பாவசங்கீர்த்தனம் செய்து பாவ மன்னிப்புப் பெற முடியும்?

ஒரு தடவை மேற்படி இலக்கிய நண்பர்கள் சிலர் என்னை ஒரு நாடகம் எழுதித் தரும்படி கேட்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் நாடகக் குழுக்கள் வைத்திருந்த களங் கண்ட வேங்கைகள். வழமை போல, யாழ்ப்பாணிகள் சூனியம் செய்து பேய்களை ஏவி விடுவது போல, புலிகளை ஏவி விடுகிறார்கள், அந்தப் பேய் திரும்பி அவர்களை வந்து அழிக்கும் என்ற சிறுவயதுச் செவிவழிக் கதையை யாழ்ப்பாணியப் பின்னணிகளோடு ‘கில்லி சூனியம்’ என்ற பெயரில் நாடகமாக எழுதியிருந்தேன். அவர்களும், ‘ஜோர்ஜ், நீங்கள் தானே எழுதினனீங்கள்? நீங்களே இயக்குங்கோ!’ என்று அன்புக்கட்டளை இட்டார்கள். முன்பின் அனுபவம் இல்லை. இருந்தாலும் அதற்கென்ன? என்று இயக்கியிருந்தேன். ஏற்கனவே நாடகத்தில் அனுபவம் உள்ளவர்கள். எனக்கு பெரும் சிரமம் எதுவும் வைக்கவில்லை.

கற்சுறாவின் வீட்டில் இந்த நாடகத்தின் பயிற்சி நடக்கும் போது, எங்கள் உரையாடல்களில் செல்வத்தின் பெயரும் எப்போதும் அடிபடும். செல்வம் பற்றிய எல்லாருடைய அபிப்பிராயங்களும் ஒரே மாதிரியானவை தான்.

அப்போது நான் எதுவும் பேசுவதில்லை. கேட்டுக் கொண்டிருப்பேன். சிரிப்பேன். அப்போது சொல்வேன், ‘செல்வம் பற்றிய என்னுடைய கருத்தை நான் இரண்டே இரண்டு பேரிடம்

தான் சொல்லியிருக்கிறேன், ஒரு நாளைக்கு எங்களோடு அவர்களும் இருக்கும்போது, உங்களுக்கு நான் சொல்லுவேன்' என்பேன்.

இலக்கிய நண்பர்கள் வீடுகளில் கூடுகின்ற சந்திப்புகளில் காலம் செல்வம் பற்றிய கதை வரும் போது, எல்லாருக்குமான punching bag ஆகத் தான் செல்வம் இருப்பதுண்டு. செல்வத்தின் குணங்கள், இயல்புகள் எல்லாருக்குமே தெரியும். கனடாவில் இலக்கியம் பற்றிப் பரிச்சயம் உள்ள எவருமே எனக்குத் தெரிந்து செல்வம் பற்றி சிலாகித்துச் சொன்னதை நான் கேட்டதில்லை என்ற அளவுக்கு எனக்கும், என் காதுபடவும் செல்வத்தின் சின்னத்தனமான விடயங்கள் பற்றி சொல்லப்பட்டவைகள் நிறைய உண்டு. ஒரு சிரிப்புக்கும் கேலிக்கும் கிண்டலுக்கும் குற்றச் சாட்டு களுக்கும் உரியவராகத்தான் செல்வம் இங்கே கருதப்படுகிறாரே அன்றி, மதிப்பு, மரியாதைக்குரியவராகவோ, கருத்துக்களுக்காகவோ, நிலைப் பாடுகளுக்காகவோ, ஒரு இலக்கியச் செம்மல் என்று 'அவரைத் தெரியும்' என்று பெருமைப்படுகிற அளவுக்கோ, செல்வம் அறியப்பட்டதில்லை.

செல்வம் பற்றியதெல்லாம், செல்வம் தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதும், செல்வத்தின் கனடியப் பரிசுப் போத்தல், பொருட்களுக்காகவும், போர்த்துகிற துண்டுகளுக்காகவும், முத்து லிங்கத்தின் நெருக்கத்திற்காகவும் அதனால் வரக்கூடிய இயல் விருதுப் புண்ணியத்துக்காகவும் தமிழ்நாட்டார் காட்டுகிற பொய்ப் புகழ்ச்சியும் தான். அதை விட எந்த மரியாதையும் இங்கே கலை, இலக்கிய மட்டங்களுக்கு இருந்ததாக நான் அறிந்ததில்லை.

என்னவோ தெரியவில்லை.

ஆசான் ஜெயமோகன் உட்பட்ட தமிழ்நாட்டின் மிகப் பெரும் இலக்கிய மேதகுக்கள், பெருந்தகைகள் எல்லாம் தங்கள் நண்பராக விளிக்கின்ற, கமலஹாசன் பிக் பொஸ்ஸில் வாசிப்புக்கு பரிந்துரைக்கிற இலக்கியத்தைப் படைத்த செல்வத்தின் தூக்கத்திலும் துன்பம் கொடுக்கிறவனாக நான் ஏன் இருக்கிறேன் என்பது எனக்குப் புரிவதில்லை.

ஆசான் என்னைப் போன்றவர்களை 'அற்பர்கள்' என்னும்போது, ஆசானோடு சரியாசனம் கண்ட செல்வத்திற்கு நான் ஏன் சிம்மசொப்பனமாக இருக்கிறேன்?

அகழ் மின்னிதழுக்கு வழங்கிய பேட்டியின் போது கூட, அகழ் வாசகர்களுக்கு என்னை யார் என்றே தெரியாத நிலையில், அந்தப் பேட்டிக்குச் சம்பந்தமேயில்லாமல் என்னைப் பற்றிச் சொல்லும் அளவுக்கு, என்னுடைய இருப்பு செல்வத்தை இப்போதும் தொந்தரவு செய்து கொண்டு இருக்கிறது. என்னைப் புலிகள் மிரட்டியதால் தான் நான் புலி எதிர்ப்பாளன் ஆனேன் என்று போகிற போக்கில் அடித்து விட்டுப் போக வைத்திருக்கிறது.

புலம் பெயர் இலக்கியத்தின் பிரதிநிதியாக தமிழ்நாட்டு புத்தக விழாவில் உரையாற்றும்போது கூட, அங்கே எவருக்கும் தெரிந்திராத 'அற்பனான' என்னைப் பற்றிச் சொல்லும் அளவுக்கு அபத்தத்தின் வருகை செல்வத்தைப் பீதியில் கலங்க வைத்திருக்கிறது. தாயகம் இதழை ஆரம்பித்த எனக்கு தான் தான் வழிகாட்டி விட்டமாதிரியும், நான் பாதை தவறிய வெள்ளாடு மாதிரியும் கதை அளக்க வைத்திருக்கிறது.

> **ஆசான் ஜெயமோகன் உட்பட்ட தமிழ்நாட்டின் மிகப் பெரும் இலக்கிய மேதகுக்கள், பெருந்தகைகள் எல்லாம் தங்கள் நண்பராக விளிக்கின்ற, கமலஹாசன் பிக் பொஸ்ஸில் வாசிப்புக்கு பரிந்துரைக்கிற இலக்கியத்தைப் படைத்த செல்வத்தின் தூக்கத்திலும் துன்பம் கொடுக்கிறவனாக நான் ஏன் இருக்கிறேன் என்பது எனக்குப் புரிவதில்லை.**
>
> **ஆசான் என்னைப் போன்றவர்களை 'அற்பர்கள்' என்னும்போது, ஆசானோடு சரியாசனம் கண்ட செல்வத்திற்கு நான் ஏன் சிம்மசொப்பனமாக இருக்கிறேன்?**

முப்பது வருடங்களாக இலக்கிய சஞ்சிகை நடத்துகிற ஒருவர், முப்பது வருடங்களுக்கு முன் நின்று போன பத்திரிகையின் ஆசிரியரான நான் தனது இருப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கிறேன் (அல்லது பிழைப்புக்கு கெடுதலாக!) என்று நினைப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

இதற்கெல்லாம் காரணம் இருக்கிறது.

கனடாவில் நான் தாயகம் என்ற பெயரில் வார இதழ் தொடங்கிய கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். முன்பின் அனுபவம் இல்லாமல், இலக்கியத் தொடர்புகள் எதுவும் இல்லாமல், வெறும் வாசிப்பையும் தொழில்நுட்ப அறிவையும் வைத்துக் கொண்டு தன்னந்தனியனாக அந்தப் பத்திரிகையை ஆரம்பித்திருந்தேன்.

அச்சடித்த அந்தப் பத்திரிகையை கடைகளில் விற்பனைக்கு வந்து விட்டு வீட்டே வந்தேன். முதலில் வந்த போன் அழைப்பு தேடகம் என்ற அமைப்பில் இருந்த நண்பரிடம் இருந்து தான்.

வெறும் செய்திகளையும், நான் எழுதிய என்னுடைய ஏடு இட்டோர் இயலையும் மட்டும் கொண்டிருந்த அந்தப் பத்திரிகையை வாசித்து விட்டு, அதனால் ஈர்க்கப்பட்டு, தாங்கள் ஒரு அமைப்பாக இயங்குவதாகவும், என்னைச் சந்திக்க விரும்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

அவர்கள் நான் வசித்த கட்டடத் தொகுதியில் என் வசிப்பிடத்திற்கு அடுத்த கட்டடத்தில் வசித்து வந்தார்கள்.

அவர்களைச் சென்று சந்தித்தேன். மாற்று இயக்கங்களில் சேர்ந்து இயங்கியவர்கள் மட்டுமன்றி, பிரபாகரனோடு நெருக்கமாக பக்கத்தில் இருந்த, புலிகளில் இருந்து விலகியவர்களும் அமைப்பாகச் சேர்ந்து இயங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சஞ்சிகை ஒன்று நடத்தும் ஆர்வத்தோடு இருந்தார்கள். அவர்களுக்கு பின்னர் என் கம்பியூட்டர் மூலமாக அதற்கு உதவியும் செய்திருந்தேன்.

அவர்கள் என்னை என் வீட்டில் சந்தித்து, தாங்கள் எந்த வகையில் உதவி செய்ய முடியும் என்று கேட்ட போது, எனக்கு வினியோகத்திற்கு நீண்ட நேரம் பிடிப்பதால் அதற்கு உதவினால் உதவியாக இருக்கும் என்றிருந்தேன்.

என்னிடம் தாயகம் பிரதிகளை வாங்கிக் கொண்டு போன அவர்கள் தங்களோடு இருந்த ஒருவரைக் கொண்டு, தங்கள் கட்டடத்தின் முன்னால், தமிழ்க் கடைகள் இருந்த தெருப்பகுதிக்கு போவோர், வருவோரான தமிழருக்கு தாயகத்தை விற்றுக் கொண்டிருந்தார்கள்.

நானும் கடைப் பகுதிக்குப் போனபோது, அவர் என்னையும் மறித்து, 'அண்ணை, தமிழ்ப் பேப்பர் ஒண்டு புதிசா வந்திருக்கு, வாங்குங்கோ!' என்றார். வேண்டாம் என்று மறுத்த போது, 'என்னண்ணை, தமிழரா இருந்து கொண்டு வாங்க மாட்டன் எண்டிறியள்?' என்றார்.

நான் சொன்னேன், 'நான் தான் உந்தப் பத்திரிகையின் ஆசிரியர்'.

அடுத்த வந்த தொலைபேசி அழைப்பு, அவர்களுக்கும் அடுத்த கட்டடத்தில் ஜாகை அமைத்து புலிக்குப் பணம் சேர்த்துக் கொண்டிருந்த உண்டியல் போராளிகள் கூட்டத்திடம் இருந்து வந்தது. அமிர்தலிங்கத்தின் கொலையை 'வளர்த்த கடாக்களுக்கே பலிக் கடாவோ!' என்று நான் எழுதியதைப் பார்த்துக் கோபம் கொண்டு, 'நீ என்ன கண்டனியோ?' என்று மிரட்டலாம் என்று அந்த தொலைபேசிப் போராளிகள் நினைத்தார்கள்.

நானோ பயமறியா இளம் கன்று!

பிறகென்ன?
The rest is history!

தேடகம் நண்பர்கள் தாங்களும் சஞ்சிகை நடத்த வேண்டும் என்று விரும்பிய போது, அவர்களுக்கு அது குறித்த அனுபவம் இல்லை என்பதால், ஏற்கனவே பிரான்சில் கவிதைப் புத்தகம் வெளியிட்டவர், மொன்றியலில் சஞ்சிகை நடத்தியவர் என்று கேள்விப்பட்டு, செல்வத்தை இலக்கியப் பொறுப்பாளர் மாதிரி அவர்கள் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

**முப்பது வருடங்களாக இலக்கிய சஞ்சிகை நடத்துகிற ஒருவர், முப்பது வருடங்களுக்கு முன் நின்று போன பத்திரிகையின் ஆசிரியரான நான் தனது இருப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கிறேன் (அல்லது பிழைப்புக்கு கெடுதலாக!) என்று நினைப்பது ஆச்சரியமாக இருக்கிறது.**

அந்த வரலாற்றை செல்வம் அகழ் மின்னிதழுக்கு வழங்கிய பேட்டியில் தன் வாயால் சொல்வதைத் தான் கேட்போமே!?

'அப்போது கனடாவில் தமிழர்கள் குவியும் இடமாக மொன்றியல் என்ற பிரதேசம் இருந்தது. பின்னர் டொரண்டோவாக மாறிப்போனது. எனது மனைவியின் தாயாரும், மூன்று மச்சான்களும் டொரண்டோவில் இருந்தார்கள். நானும், ஜெயகரன், குமார் மூர்த்தி, செழியன் ஆகியோர் டொரண்டோவுக்குச் செல்ல முடிவெடுத்து அங்கே இடம்மாறினோம். ஒரு நாள் ஜெயகரன் என்னைத் தேடிவந்து "இங்கே சும்மா இருக்க முடியாது, ஏதாவது செய்ய வேண்டும். கொஞ்ச நல்ல இளம் பொடியள் இருக்கினம். அவர்களும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நிக்கினம். நீங்களும் வாங்கோ• என்று என்னைக் கூப்பிட்டார். அங்கேதான் இளங்கோ, ராதா, மயில் என்ற நண்பர்களைச் சந்தித்தேன். நல்ல உற்சாகமாய் இருந்தது சந்திப்பு. பின்னர் செழியனையும், குமார் மூர்த்தியையும் அடுத்த கூட்டங்களுக்கு அழைத்துக்கொண்டு சென்றேன்.

ஏதாவது செய்யவேண்டும் என்ற உந்துததில் ஒரு பத்திரிகை தொடங்குங்கள் அண்ணை என்றார்கள். தேடல் என்று நான் பெயர் வைத்தேன். இவங்களுக்கு பத்திரிகை துறை சார்ந்து எல்லாம் தெரியும் என்று நான் நினைத்தேன். ஆனால் ஒருவருக்கும் ஒன்றும் தெரியவில்லை. "எந்த அச்சகத்தில் கொண்டு போய் அடிக்கிறது?• என்று என்னிடமே கேட்டார்கள். தமிழ் எழுத்துக்கள் இல்லை. தமிழ் எழுத்து உள்ள அச்சகங்கள் இல்லை. தட்டச்சு செய்வோம் என்று தீர்மானித்தோம். உடனே காசுகள் போட்டு இந்தியாவிலிருந்து ஒரு கிழமையில் தட்டச்சு இயந்திரம் எடுத்தார்கள். ஆனால் தட்டச்சு செய்யத் தெரியாது. இப்படி நிறைய பிரச்சினைகள். என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருக்கும் அந்த நாட்களில்தான் அமிர்தலிங்கத்தை சுட்டுக் கொன்று விட்டார்கள். பெரிய உணர்ச்சிபூர்வமாகப் போய்விட்டது. பொடியன்கள் பார்த்தாங்கள், இவரை நம்பினால் புத்தகம் வராது என்று ஒரு காரஜை எடுத்து 'தேடகம்' அமைப்பு என்று சொல்லி சில புத்தகங்களைப் போட்டு ஒரு நூலகத்தை திறந்து விட்டார்கள்.

அமிர்தலிங்கம் சுடப்பட்டு விட்டார் என்று அங்கு நடந்த அஞ்சலிக் கூட்டத்திற்கு போனால், விடுதலைப்புலிகள் பெரிய அட்டகாசம் செய்துகொண்டிருந்தார்கள். தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற முக்கியமான இடம் அருகே ஒருவன் தமிழில் அச்சிட்ட பேப்பர்களை விற்றுக்கொண்டு இருந்தான். எமக்கு தமிழ் பேப்பர்களைப் பார்க்க பெரிய ஆச்சரியமாகப் போய்விட்டது. யார் அதனைச் செய்கிறார் என்று கண்டுபிடித்தால் ஜோர்ஜ் என்று தெரிந்தது. அவர் நல்ல கெட்டிக்காரன். பத்திரிகை மீது ஆர்வம் கொண்டவர். முன்னோடி என்று சொல்லலாம். ஜோர்ஜோடு தொடர்பு கொண்டோம். விடுதலைப்புலிகள் தங்களுடைய விடயங்களுக்கு ஜோர்ஜ் உதவுகிறார் இல்லை என்று அவரோடு தொடர்பு கொண்டு தூசணத்தால் பேசியிருக்கிறார்கள். அப்ப தொலைபேசியில் தொடர்பு கொண்டு யாரென்று தெரியாமல் ஏசலாம் தானே. அதனால் நொந்துபோய் கடும் புலி எதிர்ப்பில் அவர் இருந்தார்.'

நாகேஷ் காதலிக்க நேரமில்லை படத்தில் 'கத்தி முனையில் இரத்தம், பசாசு முத்தம்' என்று படம் எடுத்த கதையாக, தட்டச்சு இயந்திரம் வாங்கி சஞ்சிகை ஆரம்பிக்கலாம் என்று தேடகத்தினருக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தவர் தான் செல்வம்.

இதற்குள் நான் மக்கின்ரோஷ் கணினியை வைத்துப் பத்திரிகை விடத் தொடங்கியதும், தேடகம் நண்பர்கள் என்னோடு நெருக்கமானது செல்வத்திற்குப் பிடிக்கவில்லை.

இதற்குள் தேடகத்தில் முக்கியஸ்தராக இருந்தவர் தங்கள் கூட்டங்களில் செல்வத்தைக் கதைக்க விட வேண்டாம், என்னையே கதைக்கும்படி கேட்டிருந்தார்.

என்னுடைய சுதந்திரத் தையும் தனித்துவத்தையும் காத்துக் கொள்வதில் உறுதியாக இருந்ததால், நான் தேடகம் அமைப்பின் உறுப்பினராக விரும்பியதில்லை. அதைப் போல, செல்வம் போன்று ஏற்கனவே இருந்த ஒருவரின் பதவியைத் தட்டிப் பறிப்பதில் எனக்கும் ஆர்வமோ, பண்போ, அதை வைத்துப் பெயர் வாங்க வேண்டிய தேவையோ எனக்கு இருந்ததில்லை.

முழுநேர வேலையுடன் ஒரு வாரப் பத்திரிகையை நடத்தியதால், எனக்கு அவ்வாறு செலவிட நேரமும் இல்லை. இதனால், இந்த வேண்டுதலுக்கு நான் உடன்படவில்லை.

ஆனால், செல்வத்திற்கு அவர்கள் என்னோடு தொடர்பாக இருப்பதும், தன்னை ஒதுக்கி விட்டு, எனக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் உவப்பானதாக இருந்ததில்லை. தன்னை ஒரு இலக்கியம் தெரிந்த மேதாவியாகப் படம் காட்டிக் கொண்டிருந்த செல்வத்திற்கு, என்னுடைய வருகை தனது இருப்புக்கான அச்சுறுத்தல் என்று செல்வம் நினைத்திருக்க வேண்டும்.

நான் துணிச்சலாக அரசியல் பேசுகிறேன், இலக்கியம் பற்றித் தெரிந்திருக்கிறேன் என்பதெல்லாம் 'நசியல்' செல்வம் அடித்து விட்டுக் கொண்டிருந்த 'இலக்கிய' பீலாக்களுக்கு முரணாகவே இருந்தது.

**நான் எழுதிக் கொண்டிருந்த ஏடு இட்டோர் இயலுக்கு இருந்த வரவேற்புக் குறித்து செல்வத்திற்கு இருந்த பொறாமை அதிகம்.**

**அதைப் பற்றி, அதை வாசித்த சகல இலக்கிய, அரசியல் பெருமக்களும் அதைச் சிலாகித்துப் பேசியதைப் பார்த்து, 'அதில் ஏதும் சரக்கு இல்லை, வெறும் வெளிப்பூச்சு விளையாட்டுத் தான்' என்பது போல, மனம் பொறுக்க முடியாத பொறாமையுடன் 'அது பிரசன்டேஷன் நல்லா இருக்கு' என்று நான் இருக்கத் தக்கதாகவே மற்றவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் திரும்பத் திரும்பத் சொல்லிக் கொண்டிருந்தவர் செல்வம்.**

தாயகத்தில் ஒரு தடவை துருக்கிய இயக்குனர் குனே பற்றி எழுதியிருந்தேன். அது பற்றி நான் வாசித்தது இலங்கையில் மித்திரன் பத்திரிகையில். செல்வத்திற்கு ஒரே ஆச்சரியம். 'உங்களுக்கு உதெல்லாம் தெரியும்' என்று பொறாமையோடு எனக்குச் சொல்லியிருந்தார். இன்னொரு தடவை யாரோ இலக்கியர்கள் பற்றி நான் சொன்ன போது, 'உங்களுக்கு கனக்க source களைத் தெரியும்' என்று பொறாமையோடு சொன்னார்.

செல்வம் தன்னுடைய இலக்கியத் தொடர்புகளை 'சோர்ஸ்' என்பதுடன், அவர்களைக் கவனமாகப் பேணிப் பாதுகாத்து வருகிறவர். யாராவது இலக்கியர்களோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்று அவர்களின் தொடர்பு விபரங்களைக் கேட்டால் செல்வம் ஒருபோதும் தருவதேயில்லை. ஏதோ உளவுப் பிரிவின் சோர்ஸ்கள் மாதிரி, அவையெல்லாம் classified information. தான் மட்டுமே அந்தத் தொடர்புகளை வைத்திருக்க வேண்டும், நீங்கள் அந்தத் தொடர்புகளை ஏற்படுத்திப் பெரிய ஆளாகி விடுவீர்கள் என்கிற அளவுக்கு தன்னம்பிக்கை உள்ளவர் அவர்.

இதுவரை நாளும் தான் தான் இலக்கியப் பெருந்தகை என்று பீலா விட்டுக் கொண்டிருந்த செல்வத்திற்கு ஒரு 'சின்னப் பொடியன்' போட்டிக்காரனாக வந்திருப்பது பொறாமையைத் தந்ததில் என்ன ஆச்சரியம்?

அதை விட, நான் எழுதிக் கொண்டிருந்த ஏடு இட்டோர் இயலுக்கு இருந்த வரவேற்புக் குறித்து செல்வத்திற்கு இருந்த பொறாமை அதிகம்.

அதைப் பற்றி, அதை வாசித்த சகல இலக்கிய, அரசியல் பெருமக்களும் அதைச் சிலாகித்துப் பேசியதைப் பார்த்து, 'அதில் ஏதும் சரக்கு இல்லை, வெறும் வெளிப்பூச்சு விளையாட்டுத் தான்' என்பது போல, மனம் பொறுக்க முடியாத பொறாமையுடன் 'அது பிரசன்டேஷன் நல்லா இருக்கு' என்று நான் இருக்கத் தக்கதாகவே மற்றவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் திரும்பத் திரும்பத் சொல்லிக் கொண்டிருந்தவர் செல்வம். அவரைப் போலவே, அவரிடமிருந்து பெற்ற அந்தப் பேரறிவை அவரது தொண்டரடிப் பொடிகள் சிலரும் என் காதுபடச் சொல்லிக் கொண்டிருந்தனர். தாயகம் பற்றிக் கூடிக் கதைத்திருந்தபோது, பொலிட்பீரோ எடுத்த முடிவாக அது இருக்கக் கூடும். (இப்போதைய அபத்தம் ஏடு இட்டோர் இயலையும் 'பிரசண்டேஷன் நல்லாயிருக்கு!' என்று எத்தனை பேருக்குச் சொல்லிக் கொண்டு திரிகிறாரோ? யாருக்குத் தெரியும்?)

செல்வம் காலம் சஞ்சிகையை ஆரம்பித்ததற்கான காரணம் உண்டு. செல்வம் ஏதோ இலக்கிய யாகம் செய்வதற்காகவோ, தமிழ் இலக்கிய உலகின் மேதகுக்களோடு தோள் உரச வேண்டும் என்றோ காலம் இதழை ஆரம்பிக்கும் கனவில் இருந்தவரும் இல்லை.

அப்போது தேடகம் அமைப்புக்குள் செழியன், பா. அ.ஜயகரன் போன்றவர்களும், சிவம் அண்ணை, லோகநாதன் அண்ணை

போன்ற அரசியல் தெரிந்த பெரியவர்களும் இருந்ததால், தேடல் சஞ்சிகையை வெளியிட்ட போது, அதற்கு ஆசிரியர் குழு என்றே குறிப்பிட்டிருந்தார்கள். தன்னுடைய பெயரைத் தான் ஆசிரியராகப் போட வேண்டும் என்று முரண்டு பிடித்துக் கொண்டு, மற்றவர்களின் முதுகில் சவாரி செய்யும் முயற்சி தோற்றுப் போய், அவ்வப்போது நேரம் கிடைக்கும்போதும், இளிச்சவாயர்கள் அகப்படும்போதும் சஞ்சிகை வெளியிட்டு, தன்னையும் ஒரு இலக்கியவாதியாக நிலைநிறுத்திக் கொள்ள காலாண்டிதழாக வெளியிட்டது தான் காலம் சஞ்சிகை.

அப்போது கூட, அவருடைய கனவும் இலட்சியமும் அலை யேசுராசா மாதிரி, ஒரு சஞ்சிகையை வெளியிடுவது மட்டும் தான்.

முப்பது வருட வெளியீட்டுக் காலம் அறுபதாம் இதழை வெளியிடுகிறது. 2017 மார்ச்சில் ஐம்பதாவது இதழ் வெளியிட்ட காலம், 2024 தை மாதம் அறுபதாவது இதழ் வெளியிடுகிறது. எட்டு வருடங்களில் பத்து இதழ்கள் வெளியிடுகிற காலாண்டிதழான காலத்தின் பெருமை குறித்து பூரிக்கின்ற இலக்கிய மேதகுக்களின் திரிகோண கணித அறிவு பற்றி (அதற்கு சம்பந்தமில்லை என்பது இவர்களுக்குப் புரியவா போகிறது?) நினைக்கும்போது, தாயகம் எழுதிய காலத்தில் கியூறியஸ் ஜி பத்தியில் நான் எழுதிய ஜோக் ஒன்று தான் நினைவுக்கு வருகிறது.

அமெரிக்காவில் கணித, விஞ்ஞானம், தொழில்நுட்பத்திற்கு பெயர் போன Massachusetts Institute of Technology யும், மானிடவியலுக்குப் பெயர் போன Harvard University யும் அமைந்திருக்கும் கேம்பிரிட்ஜ் நகரில் உள்ள சுப்பர்மார்க்கட் ஒன்றில், பத்துக்கு உட்பட்ட பொருட்களுக்கு வேகமாகப் பணம் செலுத்தி வெளியேறக் கூடிய வரிசையில், பத்து மேற்பட்ட பொருட்களுடன் நின்ற பல்கலைக்கழக மாணவன் ஒருவனைப் பார்த்து, பக்கத்தில் நின்ற பெண்ணிடம் ஒரு பெண் சொன்னாராம்...

**முப்பது வருட வெளியீட்டுக் காலம் அறுபதாம் இதழை வெளியிடுகிறது. 2017 மார்ச்சில் ஐம்பதாவது இதழ் வெளியிட்ட காலம், 2024 தை மாதம் அறுபதாவது இதழ் வெளியிடுகிறது. எட்டு வருடங்களில் பத்து இதழ்கள் வெளியிடுகிற காலாண்டிதழான காலத்தின் பெருமை குறித்து பூரிக்கின்ற இலக்கிய மேதகுக்களின் திரிகோண கணித அறிவு பற்றி (அதற்கு சம்பந்தமில்லை என்பது இவர்களுக்குப் புரியவா போகிறது?) நினைக்கும்போது,**

Either he is from Harvard who can't count or from MIT who can't read!

(இலக்கிய மேதகுக்கள் புரியாவிட்டாலும், பக்கத்தில் இருக்கிறவர்கள் கேவலமாக நினைக்கக் கூடும் என்பதற்காக தாராளமாகச் சிரிக்கலாம். கிண்டல் பண்ண மாட்டேன்!)

அபத்தம் ஒரு வருடத்தில் பன்னிரண்டு இதழ்கள் வெளியிட்டிருக்கிறது என்பதையும், தன்னடக்கத்துடன் இங்கு சம்பந்தம் எதுவும் இல்லாமல் பதிவு செய்ய விழைகிறேன்.

பாவம் செல்வம், சஞ்சிகை நடத்துவது என்பது எவ்வளவு சவால்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டு வெற்றி காண வேண்டிய விடயம். குடும்ப அழுத்தங்களையும் மீறி சஞ்சிகை நடத்த வேண்டிய கட்டாயம்.

தமிழினி 2000 மாநாட்டுக்குப் போய், அங்கே கனிமொழியோடு செல்பி படம் எடுத்த போது சொன்னாராம்... 'இந்தப் படத்தைப் பார்த்து விட்டு இரண்டு காலம் இதழ் வெளியிட வீட்டில் அனுமதி கிடைக்கும்!'

வெளியில் கிடைக்கும் அங்கீகாரத்தை விட, உள்வீட்டு அனுமதிக்கே இவ்வளவு அல்லல்!

செல்வம் பச்சைத் தண்ணியில் பலகாரம் சுடுவதில் வலுவிண்ணன். இந்தச் சஞ்சிகை வெளியிடுவதற்கான செலவுகளை மற்றவர்களின் தலையில் பொறித்து விடுவதில் கெட்டிக்காரன். இப்போதும் தான் நடத்துகிற இலக்கிய நிகழ்வுகளில் பச்சைத் தண்ணியில் 'பலகாரம் சுட' செல்வம் செய்யும் 'திருக்கீஸ்' விளையாட்டுகள் பற்றி நண்பர்களைக் கேட்டால் சொல்வார்கள்.

ஒருநாள் என் வீட்டில் நடந்த பார்ட்டியின் போது, நண்பர்கள் எல்லோரும் உட்கார்ந்திருக்கிறார்கள். காலம் சென்ற குமார் மூர்த்தியைக் காட்டி, 'இந்தா, குமார் மூர்த்தி, அடுத்த இரண்டு காலத்தையும் தான் செய்யிறன் எண்டு சொல்லியிருக்கிறார்' என்கிறார்.

குமார் மூர்த்தி அண்ணன், பின்னால் நின்று கொண்டிருந்த என்னைத் திரும்பிப் பார்க்கிறார்... 'எப்பவடா நான் சொன்னேனே?' என்று. இப்போதும் அந்தப் பார்வை என் கண் முன்னால் நிற்கிறது.

எனக்குத் தெரிந்து, குமார் மூர்த்தி அண்ணன் பெரிய வேலை செய்து உழைத்தவருமாக இருந்ததில்லை. நோயாளியாக, பெரும் பண நெருக்கடிக்குள் இருந்து மறைந்தவர்.

இப்படி எல்லாருக்கும் முன்னால் சொல்லி இக்கட்டை உருவாக்கி மாட்டி விடுவது போல, நான் காணாமல் எத்தனை பேரை மாட்டி விட்டாரோ யாருக்குத் தெரியும்? சரியான இளிச்சவாயர்களும், ஏமாளிகளும் அகப்பட்டிருந்தால் செல்வம் காலாண்டிதழை காலாண்டுக்கு ஒரு முறை வெளியிட்டிருக்கக் கூடும்.

இப்படியெல்லாம் தான் செல்வத்தின் முப்பது வருடத்தில் அறுபது இதழ் விட்ட காலாண்டிதழ் காலம் வெளியாகி அவ்வப்போது வந்து, இப்போது சஷ்டியப்த பூர்த்தி கண்டு, பூரண முக்தி நிலைக்குத் தயாராகி இருக்கிறது.

இங்கே இலக்கிய நிகழ்வுகள் எது நடந்தாலும், புத்தகங்களோடு வந்து கடை விரிக்கிற செல்வம் அதற்கு 'வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சி' என்று பெயரும் வைத்திருக்கிறார். அவர் புத்தகங்களை விற்பதில்

எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இலக்கிய நூல்களுக்கான கேள்வி அதிகமாகவும், வழங்கல் குறைவாகவும் இருக்கும் இடத்தில் கிடைக்கிற பொருளாதாரச் சந்தர்ப்பத்தை ஒருவர் பயன்படுத்துவதில் என்ன தவறு?

ஆனால், செல்வம் ஆளுக்குத் தகுந்த விலை சொல்கிறவர் என்றே பலரும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அகப்பட்டவனின் தலையில் பச்சைத் தண்ணிப் பலகாரம் சுடுகிறவருக்கு அது சிக்கலாகவும் இருந்திருக்காது.

இந்த வாழும் தமிழ் கண்காட்சி செல்வத்தோடு பல நண்பர்கள் சேர்ந்து தொடங்கிய முயற்சி. அதை ஒரு பொதுமுயற்சியாக நம்பித் தான் பல நண்பர்கள் அதில் தங்கள் உழைப்பைச் செலவிட்டார்கள். செல்வம் தன் சுயநலத்திற்காக அவர்களைப் பயன்படுத்தி விட்டு, அவர்களைக் கழற்றி விட்டு விட்டார். அதில் இருந்த நண்பர்கள் இதைப் பற்றி இன்றைக்கும் எங்காவது பின்னூட்டம் விட்டபடி தான் இருக்கிறார்கள்.

செல்வத்திற்கு இலக்கியம் இப்படிப் பிழைப்பதற்கும் பெயர் பெறுவதற்குமான வழியாகத் தான் இருக்கிறதே ஒழிய, தன் சொந்தப் பணத்தைச் செலவிட்டு இலக்கியம் செய்கிறவர், இந்த இலக்கியம் செய்து தன் வாழ்வை நாசமாக்கும் இலக்கிய அறம் செல்வத்திடம் இருக்கும் என நம்புகிறவர்கள் அவர் பச்சைத் தண்ணியில் சுட்ட பலகாரங்களை ருசித்தவர்களாக மட்டும் தான் இருக்க முடியும்.

செல்வம் எங்காவது காணும் போது, 'உங்களுக்கு நான் காலம் இதழ் வர வேண்டும்' என்று நான் கேளாமலேயே கைகளில் திணிக்கும்போது, பெரும்பாலும் என் பொக்கட்டில் பணம் இருப்பதில்லை. நானும் அன்பளிப்பு மாதிரி வாங்கிக் கொள்வேன். வீட்டில் சொல்வேன், 'ஜோர்ஜ் புத்தகம் வாங்கினால் காசு தாறேலை எண்டு எத்தனை பேரிட்ட சொல்லித் திரியுதோ!?'.

பிறகு எங்காவது காணும் போது, 'அண்ணை, வைச்சுக் கொள்ளுங்கோ, நான் உங்களுக்கு தர அப்ப காசு இருக்கேலை' என்று நானும் கைகளில் திணிப்பேன்.

**செல்வத்திற்கு இலக்கியம் இப்படிப் பிழைப்பதற்கும் பெயர் பெறுவதற்குமான வழியாகத் தான் இருக்கிறதே ஒழிய, தன் சொந்தப் பணத்தைச் செலவிட்டு இலக்கியம் செய்கிறவர், இந்த இலக்கியம் செய்து தன் வாழ்வை நாசமாக்கும் இலக்கிய அறம் செல்வத்திடம் இருக்கும் என நம்புகிறவர்கள் அவர் பச்சைத் தண்ணியில் சுட்ட பலகாரங்களை ருசித்தவர்களாக மட்டும் தான் இருக்க முடியும்.**

ஒரு நாள் ஐரோப்பாவிலிருந்து என் நண்பர் நீண்ட நாட்களுக்குப் பின் போன் அடித்தார்.

'என்ன செல்வம் ஒரே அழுகையாய் கிடக்கு?'.

எங்கள் உரையாடலில் பெரும்பாலும் செல்வம் பற்றி எதுவும் இருப்பதில்லை. நானும் செல்வம் பற்றி மோசமான எதையும் பிறருக்குச் சொல்வதுமில்லை.

காலச்சுவடு சஞ்சிகையில் கனடாவுக்கான தொடர்பாளராக இருந்த காலம் செல்வத்தை, காலச்சுவடு சுவடு தெரியாமல் கழற்றி விட்டிருக்கிறது. அந்த பதவியை இன்னொருவர் தட்டிப் பறித்துக் கொண்டு விட்டாராம்.

எனக்கு இதன் முன்கதைச் சுருக்கம் தெரியாது.

நான் காலச்சுவட்டின் பரம வாசகனாய் இல்லாத, இலக்கிய ஞானசூன்ய அற்பன்!

தட்டிப் பறித்தவர் முன்பு என்னோடு இருந்தவர்.

'அவருக்கு ஏன் தேவையில்லாத வேலை? அவர் தற்போது கனடாவில் கூட இல்லையே!? பிறகெதற்கு அதற்குள் போய் அந்த மனிசனின் பிழைப்பைக் கெடுக்கிறார்?'.

இலக்கிய நிகழ்வுகளில் வாழும் தமிழ் என்று புத்தகக் கண்காட்சி நடத்தி காலச்சுவட்டை வியாபாரம் செய்வதற்கு, 'அங்கீகரிக்கப்பட்ட ஏஜண்டாக' இருக்க வேண்டிய கட்டாயம் இல்லையே? தட்டிப் பறித்தவரும் அண்டிப் பிழைப்பவரே அன்றி, வியாபாரத்தில் நாட்டம் உள்ளவராகவும் இல்லை.

என்னுடைய சிற்றறிவு அப்படித் தானே யோசிக்கும்?

பிறகு என்னோடு இருந்தவரைக் கண்டபோது, 'ஏனப்பா? அந்த மனிசன்ரை பிழைப்பில மண்ணைப் போடுறாய்?' என்று கேட்டேன்.

'அது என்னுடைய தற்போதைய வேலைக்கு உதவும்' என்றார்.

ஆக இது மொத்தத்தில் எல்லாருக்கும் பிழைப்பு பற்றியது தான். நமக்கு ஆகாத விடயம் அது. அப்படியே கதையை நிறுத்தி விட்டேன்.

ஆனால், செல்வம் பிரான்சுக்கு போன் அடித்த காரணம் எதுவாக இருக்கும்?

தட்டிப் பறித்தவரைக் கோபித்துக் கொள்ளாமல் அவருக்கும் நல்லவராக நடிக்க வேண்டும். தட்டிப் பறித்தவர் எனக்குத் தெரிந்தவராக இருப்பதால், அநீதியைத் தட்டிக் கேட்கக் கூடியவன் நான் தான். எனக்கும் நேரடியாக அதைச் சொல்லி முறைப்பாடு செய்ய முடியாது. எனக்குக் காலச்சுவட்டின் அடிநுனி தெரியாது. எனவே பிரான்சில் உள்ள நண்பருக்குச் சொன்னால், அவர் எனக்குச் சொல்வார், நான் கேட்டால் தட்டிப் பறித்தவரிடம் நீதி கேட்பேன்.

இப்போது செல்வத்தின் பதவியைப் பறித்த சம்பந்தப்பட்டவர் என்னோடு கோபித்துக் கொண்டு பேஸ்புக்கில் 'டிஜிட்டல் அபானவாயு' விட்டபடியே, செல்வத்தோடு செல்பி எடுத்துக் கொண்டிருக்கிறார்.

எல்லாம் காலம் செய்யும் கோலம் தான்!

செல்வத்தின் இலக்கியப் பயணம் என்பது, இவ்வளவு காலமும் சரக்கு இல்லாத வியாபாரம் தான். மற்றவர்களை முதுகில் சுமந்தும், மற்றவர்களின் முதுகில் சுமையாக ஒட்டிக் கொண்டும் தன்னை முன்னெடுத்தது தான் செல்வத்தின் இந்த இலக்கியப் பயணம்.

மற்றவர்களின் பணத்தில் சஞ்சிகை விட்டு, மற்றவர்களின்

புகழில் தொத்திக் கொண்ட!

பச்சைத் தண்ணியில் பலகாரம் சுட்ட நன்றிக்காக கொஞ்ச நாள் குமார் மூர்த்தியைச் சுமந்து கொண்டிருந்தார். குமார் மூர்த்தி இறந்து கொஞ்சக் காலம், தான் தான் குமார் மூர்த்தியை வருடாந்தம் நினைவு கூர்கிறேனாம் என்று நடித்துக் கொண்டிருந்தார். இப்போது ஆசானும் பிக்பொஸ்ஸூம் கண்ட செல்வத்திற்கு, குமார் மூர்த்தியை நினைவிருக்குமோ தெரியாது. இப்போது கதையே கிடையாது.

முன்பு சுந்தர ராமசாமி, மு.தளையசிங்கம் என்று தான் ஆரம்பித்தார். கொஞ்ச நாள் சேரன், செழியன், சோபா சக்தி என்று லோக்கல் இலக்கியர்களைக் காவிக் கொண்டு திரிந்தார். 'உவன் சேரன், சோபா சக்தி' என்று ஒருமையில் விளித்து, தன்னை ஒரு இலக்கிய உலகின் elder statesman மாதிரி பீலா விடுவார்.

பிறகு முத்துலிங்கத்தின் கோட் வாலில் தொங்கிக் கொண்டிருக்கத் தொடங்கியதன் பின்னால், விருது கொடுக்கப்படும் தமிழ்நாட்டு இலக்கியர்களுக்கு சிறப்பு இதழ் வெளியிட்டு அவர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு, இப்போது ஆசானுக்கே அன்பனாகி, பிக் பொஸ் பிரபலமான பின்னால், செல்வம் வேற லெவல்!

கடந்த ஏழு வருடங்களில் விடப்பட்ட பத்து காலம் இதழ்களும் வருடாந்தம் விருது பெற்றோருக்கான சிறப்பிதழாக, அந்த விருதை ஒட்டிய அவர்களின் விளம்பரத்தில் தான் பிழைப்பு நடத்துவதற்காக முதலீடு செய்த வெளியீடுகளாகத் தான் இருக்க வேண்டும்.

நான் சொன்ன மாதிரி, தமிழ்நாட்டு இலக்கிய உலகத்திலேயே தங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று புலம்பாத மும்மூர்த்திகளில், முத்துலிங்கம், சோபா சக்தியோடு செல்வமும் மூணாவது!

சொந்தச் சரக்கு என்று எதுவும் இல்லாமல், இரவல் புடைவைகளில் கொய்யகம் கட்டின சின்ன மேளம் மாதிரி, செல்வத்தையும் காலம் ஏதோ வழியில் இலக்கியத்தின் உச்சத்தில் கொண்டு போய் விட்டிருக்கிறது.

**நான் சொன்ன மாதிரி, தமிழ்நாட்டு இலக்கிய உலகத்திலேயே தங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று புலம்பாத மும்மூர்த்திகளில், முத்துலிங்கம், சோபா சக்தியோடு செல்வமும் மூணாவது!**

**சொந்தச் சரக்கு என்று எதுவும் இல்லாமல், இரவல் புடைவைகளில் கொய்யகம் கட்டின சின்ன மேளம் மாதிரி, செல்வத்தையும் காலம் ஏதோ வழியில் இலக்கியத்தின் உச்சத்தில் கொண்டு போய் விட்டிருக்கிறது.**

**அறிஞர் அண்ணா யாரையோ, ஆடிக்காற்றில் அடிபட்டு கோபுரத்தில் ஒட்டிக் கொண்ட குப்பைக் காகிதம் என்றது போல!**

அறிஞர் அண்ணா யாரையோ, ஆடிக்காற்றில் அடிபட்டு கோபுரத்தில் ஒட்டிக் கொண்ட குப்பைக் காகிதம் என்றது போல!

இப்படி, பிரபலங்களுடன் தன்னை இலவச இணைப்பாக ஒட்டிக் கொண்டு, hitch the wagon என்பது போலத்தான் செல்வத்தின் இலக்கியப் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அ.முத்துலிங்கத்தின் தொடர்பும் இயல்விருதுகளும், அதனால் வெளிவந்த சிறப்பு இதழ்களும் இல்லாமல் செல்வத்திற்கு ஆசான் முதலான தமிழ்நாட்டுப் பிரபலங்களைக் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க முடியாது. அவர்களை நெருங்கக் கூடிய எந்த ஆளுமையும் தன்னம்பிக்கையும் செல்வத்திற்கு இல்லை. இன்னொருவரில் ஒட்டிக் கொண்டதால் மட்டுமே இத்தனையும் சாத்தியமாயிற்று. அடிக்கடி தமிழ்நாடு போகாத முத்துலிங்கத்தின் பிரதிநிதி மாதிரி, செல்வத்தை உபசரித்தால் முத்துலிங்கத்தை உபசரித்த மாதிரி, அதனால் விருது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான், செல்வத்திற்குத் தமிழ்நாட்டில் இத்தனை மரியாதையும்.

இதெல்லாம் கிடைக்காமல் இருந்திருந்தால், செல்வத்தின் காலம் இன்னொரு 'அலை'யாக, கோயில் திருவிழா மலர் மாதிரி வருடாந்தம் வெளிவரும், காலாண்டிதழாகத் தான் வெளிவந்திருக்கும்.

கனடாவில் தமிழ் அகதிகள் கப்பலில் வந்து இறங்கிய கதையை வைத்து எடுத்த, Welcome To Canada படம் திரையிடப்பட்ட போது, செல்வமும் என்னோடு இருந்தார். படம் முடிந்ததும் இயக்குனரோடு கதைக்க வேண்டும் என்று நான் போன போது, செல்வமும் என்னோடு இலவச இணைப்பாக ஒட்டிக் கொண்டு வந்தார். செல்வம் சரளமாக ஆங்கிலம் கதைக்கக் கூடியவரும் அல்ல. நான் படத்தில் அனுரதபுரத்தில் காட்சி இருந்த போது, நாதஸ்வர இசையுடனான ஊர்வலம் வந்தது பற்றிக் கேட்டிருந்தேன். இயக்குனர் அதற்கு தங்களுக்குக் கிடைத்த வளங்கள், ஆலோசனைகள் பற்றிப் பதில் சொல்லியிருந்தார். இத்தனைக்கும் செல்வம் பின்னால் சிரித்துக் கொண்டிருந்தது மட்டும் தான். ஆனால், அவரது இலக்கியப் பயணத்தில் அந்த இயக்குனரைச் சந்தித்ததும் எங்காவது அவரின் மலரும் நினைவுகளில் எனது பெயர் இல்லாமல் வந்திருக்கக் கூடும்.

செல்வத்தின் காலம் இதழை 'விகடனின் புலன் பெயர்ந்த இதழுக்கான விருதைப் பெற்றது' என்றெல்லாம் வரலாறு எழுதுகிறார்கள். எனக்குச் சிரிப்பு வரும். எஸ்.ராமகிருஷ்ணனுக்கு இயல் விருது கொடுக்கப்பட்டதற்கு நன்றிக்கடனாக, அவர் விகடனிடம் செல்வத்திற்கு வாங்கிக் கொடுத்தது அது. எந்த வித விருது விழாவும் இன்றித் திடீர் வெளியீடாக பெட்டிச் செய்தியாக வந்த விருது அது.

அதில் விகடன், ஜி. நாகராஜனின் 'குறத்தி முடுக்கு நாவல்' காலம் இதழில் வெளிவந்தது என்று வேறு வரலாறு சொல்லியிருந்தது.

அது பற்றி அன்றே எழுதியிருக்கிறேன் செல்வம் காலத்தில் இடம் நிரப்ப, கையில் கிடைத்த கடைசிப் பக்கம் கிழிக்கப்பட்ட குறத்தி மிடுக்கு

நாவலை, பதிப்புரிமை அனுமதி எதுவும் இன்றி, மறுபிரசுரம் செய்து, கிழிக்கப்பட்ட இறுதிப் பக்கங்கள் இருந்தால் அனுப்பும்படி எழுதியும் இருந்தார். இது தான் விகடனினதும் அது வழங்கிய விருதினதும் லட்சணம்.

காலத்தின் அந்த பெருமை மிகு வரலாற்றை, ஆசானும் தன்னுடைய பக்கத்தில் பகிர்ந்தும் இருந்தார். ஆசானுக்கு ஜி.நாகராஜன் பற்றித் தெரியாமல் இருந்திருக்குமா? அவரும் இலக்கிய உலகத்தில் இருந்திருந்து, யாராலாவது புகழப்பட்டிருந்தால், ஆசானால் அவதூறு செய்யப்பட்டிருக்கப்படக் கூடியவர் தானே!?

இந்தப் பரஸ்பர முதுகு சொறிதல்களால் தானே இன்றைய இலக்கிய உலகம், நோயில் விழுந்து படுக்கைப் புண் வராமல், உயிர் பிழைத்தபடி காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறது!?

காலம் இதழை மணிக்கொடியின் ரேஞ்சுக்கு தானே உரிமை கோரிக் கொள்ளும் செல்வம் காலம் இதழ் மூலம் ஒரு தனியான எழுத்துத் தலைமுறையை உருவாக்கியிருக்கிறாரா? காலத்தில் எழுதிப் பிரபலமானவர்கள் என்று யாராவது இருக்கிறார்களா? தாயகத்தில் எழுதியவர்கள் அறியப்பட்டது போல, காலத்தில் எழுதப்பட்ட பத்திகளின் பெயரால் அறியப்பட்டவர்கள், காலம்காரர் என்று யாராவது உண்டா? இவரால் இலக்கிய உலகில் அறிமுகப்படுத்தப்பட்டவர்கள் என்று யாராவது இருக்கிறார்களா?

காலம் இலக்கிய வரலாற்றில் ஒரு இலக்கிய இயக்கம் என்று எவராவது சொல்வார்களா?

வீடு விற்பனை விளம்பரங்களுக்கும், இடம் நிரப்பும் கட்டுரைகளுக்கும் இடையில் இலக்கியக் கட்டுரைகள் வெளியிடும் பத்திரிகைகளுக்கும் காலத்திற்குமான வித்தியாசம் தான் என்ன?

ஏற்கனவே பிரபல மானவர்களிடம் கேட்டு வாங்கியவற்றையும், இயல் விருது சிறப்பிதழ் என்று பிரபலங்களின் நிழலில் குளிர் காய்ந்தும்,

**காலம் இலக்கிய வரலாற்றில் ஒரு இலக்கிய இயக்கம் என்று எவராவது சொல்வார்களா?**

**வீடு விற்பனை விளம்பரங்களுக்கும், இடம் நிரப்பும் கட்டுரைகளுக்கும் இடையில் இலக்கியக் கட்டுரைகள் வெளியிடும் பத்திரிகைகளுக்கும் காலத்திற்குமான வித்தியாசம் தான் என்ன?**

**ஏற்கனவே பிரபல மானவர்களிடம் கேட்டு வாங்கியவற்றையும், இயல் விருது சிறப்பிதழ் என்று பிரபலங்களின் நிழலில் குளிர் காய்ந்தும், தென்னாலிராமன் குதிரையோடு பூனை விற்ற கதையாகத் தான், செல்வம் தன்னையும் சேர்த்து விற்றுக் கொண்டிருக்கிறார்.**

தென்னாலிராமன் குதிரையோடு பூனை விற்ற கதையாகத் தான், செல்வம் தன்னையும் சேர்த்து விற்றுக் கொண்டிருக்கிறார்.

பெயருக்கு ஆசிரியராக இருக்கும் இவருடைய சஞ்சிகையின் தொகுப்பாளர்கள் தமிழ்நாட்டில் இருப்பவர்களே. ஆசிரியர் கருத்துக் கூட வேறு யாரோ எழுதிக் கொடுப்பது. அவர்களுக்கு அனுப்பப்படும் கட்டுரைகள், அவர்களின் சஞ்சிகைகளில் பிரசுரம் பெறத் தகுதியில்லாத கட்டுரைகள் என்று கூட்டி அள்ளி குப்பை வாளிக்குள் கொட்டியது போல, அச்சிட்டு வந்து சேர்ந்த பின்னால் தான் செல்வத்திற்குத் தெரியும் அந்த இதழில் என்ன ஆக்கங்கள் வந்திருக்கின்றன என்பது.

அதைக் கூட ஏதோ 'எழுத்து' சி.சு.செல்லப்பா முதுகில் சுமந்து விற்ற ரேஞ்சில் தானும் விற்பது மாதிரிக் காட்டிக் கொள்ளும் செல்வம், காலத்தைக் கொண்டு திரிந்து செய்வதெல்லாம் இலக்கிய யாசகமே!

இதழ்களைக் கைகளில் திணித்து விட்டு, 'மேல கொஞ்சம் கூடப் போட்டுத் தாங்கோ!' என்று நாண்டு கொண்டு நிற்பது தான் செல்வத்தின் இலக்கிய 'யா(ச)கம்'.

இப்படிச் சொந்தச் சரக்கு இல்லாமல், மற்றவர்களின் சரக்குக்கு தரகர் வேலை பார்த்துக் கொண்டிருப்பது தான் செல்வத்தின் இலக்கியம். (அதை மாமா வேலை என்று சொல்வது சில நேரம் மாமாக்களை அவமதிப்பதாகவும் இருக்கும் அளவுக்கு அவர்களுக்கும் ஏதாவது தொழில் தர்மம் இருக்கக் கூடும்!)

ஒரு படைப்பாளிக்கு இருக்க வேண்டிய தன்னம்பிக்கையும் திமிரும் செல்வத்திற்கு ஒரு போதும் இருந்ததில்லை. ஆசானோடு சரியாசனம் கண்டாலும் கதிரை நுனியில் பவ்வியமாக உட்கார்ந்தபடி, ஹி... ஹி... நசியல் தான்!

இப்படிக் கைகளில் திணித்தால் ஒழிய, கடைகளில் காத்திருந்து வாங்கும் அளவுக்கு எவரும் இல்லை. அதில் எழுதியவர்கள் தங்கள் ஆக்கங்கள் வந்திருக்கிறதா என்பதற்காக அவசரப்படக் கூடும் என்பதைத் தவிர.

அவர்களும் வருடம் ஒரு முறை வரும் காலாண்டிதழ் என்பதால், கிரகண தரிசனம் 'வந்தால் கண்டு கொள்ள வேண்டிய ஒன்றுதான்!'.

செல்வம் பற்றித் தாயகம் நண்பர்களுக்குள் ஒரு நகைச்சுவைக் கற்பனைக் கதை ஒன்றுண்டு.

இங்கு வெளிவந்த செந்தாமரை என்ற பத்திரிகைக்கு முன்பு கனக.அரசரத்தினம் என்பவரே ஆசிரியராக இருந்தார். இவர் இலங்கையில் நிருபராக இருந்தவர். அவர் தனது அரசியல் ஆசிரியர் தலையங்கங்களில் பெரிதாக நீட்டி முழக்கி இறுதியில், 'இதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்' என்று முடிப்பார்.

இதைப் பார்த்ததும், செல்வம் 'அடடே, இதுக்குக் காலம் பதில் சொல்ல வேணும் எண்டு எழுதியிருக்கிறாங்கள். சொல்லாட்டி மதிக்க மாட்டாங்கள்' என்று விட்டு, உடனே குமார் மூர்த்திக்கு போன் அடிப்பாராம்.

'செந்தாமரை காலம் பதில் சொல்ல வேணும் எண்டு போட்டிருக்கு. ஒருக்கா

செந்தாமரையை வாசிச்சுப் போட்டு, அதுக்கு பதில் ஒண்டு எழுதி விடுங்கோ!' என்று.

செல்வத்தின் அறிவுப் பெருக்கையும், முதுகுத் தண்டில்லாத துணிச்சலையும் பற்றி நாங்கள் சொல்லிச் சிரிக்கின்ற பகிடிக் கதை அது.

செல்வம் என்னுடனும், தாயகம் பத்திரிகையுடனுமான உறவு பற்றி ஒரு போதும் வெளியில் சொல்வதில்லை. புலன் பெயர் இலக்கியத்தில் தாயகத்தின் பங்கு பற்றிச் சொன்னால், புலன் பெயர் இலக்கியம் 'எண்டால் அது நாங்கள் தான்' என்று தமிழ்நாட்டில் அடித்து விடும் கதைக்கு முரணாகி விடும் என்பதால் வரலாற்றையே மறைக்கிற முயற்சியில் செல்வம் என்றைக்குமே சளைப்பதில்லை.

செல்வம் தமிழ்நாட்டில் நடந்த தன் புத்தக வெளியீட்டு விழா உரையில், தான் தாய்வீடு பத்திரிகையில் தான் முதலில் எழுதத் தொடங்கினேன் என்று வரலாறு சொல்வார். மாதாந்தம் வெளிவரும் தாய்வீடு செய்த 'இலக்கியப்பணி' செல்வம் செய்ததைவிட, அதிகம்... எண்ணிக்கை அளவிலாவது!

தாய்வீடு ஆசிரியர்களின் ஒப்பேற்றுதலால் இலக்கியவடிவம் பெறும் தன்னுடைய எழுத்துக்களை, தன்னுடைய சஞ்சிகையிலேயே வெளியிடும் அளவுக்கு செல்வத்திற்கு தன்னம்பிக்கையும் இல்லை. காலத்தில் வெளிவருகிற 'பெரிய ஆக்களின்ரை' எழுத்தோடு தன்னுடையதும் ஒப்பிடப்பட்டால், நாறிப் போக நேரிடும் என்பதைவிட, தமிழ்நாட்டு காலம் இதழ் தொகுப்பாளர்களுக்கு தன்னுடைய வண்டவாளம் வெளித்து விடும் என்பதை அறியாதவரல்லர்.

ஆனால், இதற்கு எல்லாம் முன்பே, தாயகம் இதழில், 'கிளுவை மரச்சிலுவை' என்ற நாடகத்தொடர், 'போனேன் யாழ்ப்பாணம்!' என்ற பயணக் கட்டுரைத் தொடர், கிழியன் என்ற பெயரில் எழுதிய கவிதைகள் பற்றி செல்வம் ஒரு போதும் பேசுவதேயில்லை.

அதைச் சொன்னால் தாயகம் பற்றிச் சொல்ல வேண்டியிருக்குமே என்பதற்காக, தான் எழுதியதையே மறுதலிக்கிற அறவாளன் அவர்.

**ஆனால், இதற்கு எல்லாம் முன்பே, தாயகம் இதழில், 'கிளுவை மரச்சிலுவை' என்ற நாடகத்தொடர், 'போனேன் யாழ்ப்பாணம்!' என்ற பயணக் கட்டுரைத் தொடர், கிழியன் என்ற பெயரில் எழுதிய கவிதைகள் பற்றி செல்வம் ஒரு போதும் பேசுவதேயில்லை.**

**அதைச் சொன்னால் தாயகம் பற்றிச் சொல்ல வேண்டியிருக்குமே என்பதற்காக, தான் எழுதியதையே மறுதலிக்கிற அறவாளன் அவர்.**

சுந்தர ராமசாமி இயல் விருது பெற ரொறன்ரோ வந்த போது, அவரை நேர்காணல் செய்யத் தகுதியுள்ளவன் என்று நினைத்து செல்வம் என்னைத் தான் அழைத்திருந்தார். நானோ குடும்பஸ்தன். குடும்பக் கடமைகளால் நேரத்திற்குப் போகவும் முடியவில்லை. இருந்தும் காத்திருந்தது குறித்து சு.ரா முகம் சுளிக்கவில்லை. அவரை நான் பிடித்த படங்களும் அடிக்கடி கண்ணில் படும். தேடும்போது கிடைப்பதுமில்லை.

ஜெ.ஜெ சில குறிப்புகளில் ஓமனக்குட்டி என்ற பெண் எழுதிய கவிதைகளை ஜெஜெ தரமற்றவை எனச் சொல்வது எனக்கு என்னவோ ஒவ்வாததாக இருந்தது. அதற்கு காரணமாக நான் பத்திரிகை ஆசிரியராக இருந்து, பலருடைய கவிதைகளை தரம் பற்றிய கவலை ஏதும் இன்றி, சீராக்கி செம்மைப்படுத்திப் பிரசுரித்திருந்ததும் காரணமாக இருக்கலாம். இலக்கிய அளவுகோல் எதுவும் என்னிடம் இருந்ததில்லை. ஆர்வம் ஒன்றே எனக்குப் போதுமானதாக இருந்தது. அதை விட, கவிதை மூலமாகவே அறிமுகமாகிய என் மனைவியின் பெயரும் மொனிக்கா வேறு.

எனவே, அது பற்றிக் கேட்டபோது, எனக்கே ஆச்சரியமாக இருந்தது, உட்கார்ந்திருந்த சு. ரா துள்ளி எழுந்து அதை நியாயப்படுத்தியது. அவர் பற்றி விமர்சனங்கள் பலருக்கும் இருந்தாலும், அவருடைய இங்கிதமும் நாகரிகமுமான பண்புகளும், என்னுடைய கேள்விகளுக்கு ஆழமான பதில்கள் அளித்த விதமும் என்னைக் கவர்ந்திருந்தன. அவற்றுக்கான மரியாதை எனக்கு என்றும் இருக்கும்,

அவருடைய அந்த நேர்காணல் பற்றி நான் எழுதி காலம் சஞ்சிகையில் அது வெளிவந்தது.

அவ்வளவுக்கு செல்வத்திற்கு நான் ஒரு முக்கியமான ஆளாகத் தான் இருந்தேன்.

ஆனால் செல்வம் ஒருபோதும், காலம் சஞ்சிகையில் தாயகம் இதழ் பற்றியோ, என்னைப் பற்றியோ எழுதியதில்லை. தேவகாந்தன் அண்ணன் கூர் இதழ் வெளியிட்ட போது, என்னைப் பேட்டி காண விரும்பிய போது, நான் 'அதெல்லாம் வேண்டாம், அண்ணை' என்று மறுத்திருந்தேன். பின்னர் எப்போதுமே தாயகம் பற்றிச் சொல்வதில் உற்சாகம் கொள்ளும் நண்பர் வ.ந.கிரிதரன் என்னோடு கதைத்துத் தகவல்கள் பெற்றுக் கொண்டு கூர் சஞ்சிகையில் தாயகம் பற்றி நீண்டதொரு கட்டுரை எழுதியிருந்தார்.

தாயகத்தில் எழுதியிராத தேவகாந்தன் அண்ணைக்குக் கூட என்னைப் பற்றி எழுத வேண்டும் என்று தோன்றியிருந்த போது, தாயகத்தில் எழுதிய காலம் செல்வம் தாயகத்தை இருட்டடிப்புச் செய்வதன் நோக்கமே தன்னைப் பெரிய ஆளாகச் சித்தரிக்க முடியாது என்பதால் தான்.

நண்பர் கிரிதரன் அடிக்கடி பேஸ்புக்கில் காலம் இதழ், தாயகம் பற்றி எதுவும் எழுதுவதில்லை என்று பதிவு செய்வார். அப்போதெல்லாம் எங்கிருந்தோ முன்பின் தெரியாதவர்கள் ஓடி வந்து, 'இந்த வருடம் வெளிவந்த இத்தனையாம் இதழில் சுந்தர ராமசாமியை ஜோர்ஜ் பேட்டி கண்ட கட்டுரை வெளிவந்தது' என்று பின்னூட்டம் விடுவார்கள். ஒரு தடவை இஸ்லாமிய பெயர் கொண்ட இந்தியர் ஒருவர், பின்னர் வேறு ஒருவர். இப்படி அதைக் கூடத் தானே

நேரடியாக சொல்ல வக்கில்லாமல், இப்போதும் கொண்டோடிகளையும் பேக் ஐடிக்களையும் வைத்துத் தான் செல்வம் என்னைப் பற்றிக் கருத்துச் சொல்ல வேண்டியிருக்கும் அளவில் தான் நிலைமை இருக்கிறது.

செல்வத்தை பெரும் எழுத்தாளர் என்று அவரிடம் நக்கி நாவிழந்தோர் சொல்லிக் கொள்வதுண்டு. செல்வத்தின் கையெழுத்து எழுத்துக்களை வாசித்த எனக்கு மட்டுமன்றி, அவரின் எழுத்துக்களை வாங்கிப் பிரசுரித்த மற்ற ஆசிரியர்களுக்கும் தெரியும்.

எழுவாய், பயனிலை உட்பட்ட எந்த இலக்கண விதிகளுக்கும் உட்படாமல் எழுதப்பட்ட அந்த எழுத்துக்கள் பற்றி. செல்வத்தின் எழுத்து அவர் கூட்டங்களில் பேசுவது போலத் தான் இருக்கும்.

வெட்டிக் கொத்துகிற ஒரு ஆசிரியர் இல்லாமல், செல்வத்தின் எழுத்துக்கள் பிரசுரத்திற்கு தகுதி பெறக் கூடியவை அல்ல.

செல்வத்தைக் கதை சொல்லி என்கிறார்கள்.

எங்களுக்கும் ஊரில் கதை சொல்லிகள் இருந்தார்கள். கலியாண வீட்டு நாலாம் சடங்குகளின் போது, பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் போடப்பட்டிருந்த வாங்குகளில் இருந்தபடி, செத்த வீடுகளில் கயிற்றில் எரித்த நெருப்பில் சுருட்டு மூட்டியபடியே சுற்றி வர உட்கார்ந்து வாயைப் பிளந்தபடி கதை கேட்கும் கூட்டத்திற்குக் கதை சொல்லும் கதை சொல்லிகள்.

சுற்றி வர இருப்போர் வயிறு நோகச் சிரித்துக் கொள்வார்கள். ஆனால், அவர்கள் எங்கே போனாலும் சொல்வது ஒரே கதை தான்.

அதை வண்ஸ் மோர் கேட்கிற நேயர்கள் எப்போதும் இருப்பார்கள். ஏற்கனவே கேட்ட சஸ்பென்ஸ் எதுவும் இல்லாத கதை என்றாலும், கதையைச் சொல்வதில் உள்ள திறில்லும் விதமும் தனியானவை.

அவ்வாறான கதைகள் தான் செல்வம் சொல்கிற கதைகள்.

இப்படியான கதை சொல்லி ஒருவர் எங்கள் ஊரிலும் இருந்தார். ராசையா அண்ணை என்று. அவர் தன்னை ஒரு ரயில் என்ஜின் ட்ரைவராக நினைத்துக் கொண்டிருந்த மனநோயாளி. ரயில் என்ஜின் ராசையா அண்ணை, சுடலையில் எரிக்கக் கிடத்தப்பட்டு சடங்குகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்த பிணத்தின் கையை நாடி பிடித்துப் பார்த்து விட்டு, 'ஆள் முடிஞ்சுது!' என்று கண்டுபிடித்துச் சொன்னவர்.

ராசையா அண்ணை, உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வைத்து, தான் புகையிரதப் பாதையில் படுத்திருந்த யானையை, என்ஜினை நிறுத்தி திரும்பிப் போய் வேகமாக வந்து அடித்ததாகவும், அப்போது நெய் சிதறிக் கிடந்தது என்றும் சொன்னபோது, அரைநிஜார் நான் 'நெய் எண்டா என்ன?' என்று கேட்டதற்கு, 'மூளை' என்று சொல்லியிருந்தார்.

இப்படி செல்வம் மாதிரிக் கதை சொல்லிகளை நீங்கள் ஐரோப்பிய அகதிவாழ்வில் சனி இரவுப் பார்ட்டிகளிலும் கண்டிருப்பீர்கள். வேறு நகரங்களில் இருந்த வந்து ஸ்டார் கதை சொல்லிகளாக இருப்பார்கள். சுற்றிவர இருந்து சிரித்துக் கொண்டிருப்போம்.

இப்படி ஊருக்கு நாலு கதை சொல்லிகள் எங்கும் தான் உண்டு. இங்கே எங்கள் மித்திரன் அண்ணை முப்பது வருடங்களாகச் சொல்லிக் கொண்டிருக்கும், மன்னாரில் யாரோ மண்ணெண்ணெய் குடித்த கதைக்கு இப்போதும் எத்தனை வண்ஸ் மோர்கள் கிடைக்கிறதோ எனக்கு நினைவில்லை. அவர் செல்வத்தை விடச் சிறந்த கதை சொல்லி.

பேச்சுவடிவத்தில் சுவாரஸ்யமாக இருக்கும் அந்தக் கதைகள் எழுத்து வடிவத்திற்கு வரும்போது, வெட்டுக் கொத்து ஆசிரியர்கள் இல்லாமல் முழுமை பெறாது. இன்றைக்கும் செல்வம் எழுதுகிறவற்றைச் செம்மைப்படுத்தும் ஆட்களை எனக்குத் தெரியும். முன்பு இருந்த ஒருவர் இப்போது இல்லை. அவர்கள் இல்லாமல் செல்வத்தின் பகிடிக் கதைகள் இலக்கியவடிவம் பெற்றிருக்க முடியாது.

அவர் கதைசொல்லி என்றால், எல்லாப் புகழும் அவரது 'வெட்டி ஒட்டு எடிட்டர்களுக்கே'!

இவருடைய எழுத்துக் களுக்கே எடிட்டர்கள் தேவைப்படுகிற போது, இவர் எடிட்டராக இருந்து ஒரு சஞ்சிகையை நடத்துகிறார் என்பது நம்பக் கூடியதா? எல்லாம் இவர் அனுப்புகிற பணத்திற்காக தமிழ்நாட்டில் உள்ளவர்கள் அள்ளிக் கொட்டி ஒப்பேற்றுவது தான்!

**பேச்சுவடிவத்தில் சுவாரஸ்யமாக இருக்கும் அந்தக் கதைகள் எழுத்து வடிவத்திற்கு வரும்போது, வெட்டுக் கொத்து ஆசிரியர்கள் இல்லாமல் முழுமை பெறாது. இன்றைக்கும் செல்வம் எழுதுகிறவற்றைச் செம்மைப்படுத்தும் ஆட்களை எனக்குத் தெரியும். முன்பு இருந்த ஒருவர் இப்போது இல்லை. அவர்கள் இல்லாமல் செல்வத்தின் பகிடிக் கதைகள் இலக்கியவடிவம் பெற்றிருக்க முடியாது.**

**அவர் கதைசொல்லி என்றால், எல்லாப் புகழும் அவரது 'வெட்டி ஒட்டு எடிட்டர்களுக்கே'!**

**இவருடைய எழுத்துக்களுக்கே எடிட்டர்கள் தேவைப்படுகிற போது, இவர் எடிட்டராக இருந்து ஒரு சஞ்சிகையை நடத்துகிறார் என்பது நம்பக் கூடியதா? எல்லாம் இவர் அனுப்புகிற பணத்திற்காக தமிழ்நாட்டில் உள்ளவர்கள் அள்ளிக் கொட்டி ஒப்பேற்றுவது தான்!**

செல்வம் முப்பது வருடம் இலக்கிய இதழ் நடத்துகிறார். அவரது ஆசிரியர் கருத்து என்று ஏதோ எவருக்காவது நினைவில் இருக்குமா? அதை எழுதுவது கூட ஆசிரியர் குழுவில உள்ள வேறு யாரோ தான். அதைக் கூட அவர் எழுதுவதில்லை.

இதை நான் சவாலாகத் தான் இதைச் சொல்கிறேன்,

முடிந்தால், பரீட்சை மாணவர்களுக்கானது மாதிரி, ஒரு இடத்தில் உட்கார வைத்து, ஒரு தலைப்பைக் கொடுத்து செல்வத்தை எழுதச் சொல்லுங்கள், பார்க்கலாம்!

ஒரு coherent composition

ஐ எழுத செல்வத்தால் ஒரு போதும் முடியாது!

அவரது மேடைப் பேச்சுக்கள் மாதிரியே அதுவும் இருக்கும்.

எந்த தயாரிப்பும் இல்லாமல், 'உவேக்கு என்ன தெரியும்?' என்கிற நினைப்பில், போகிற போக்கில் அடிச்சு விடுகிற, தொடர்ச்சியும் தொடர்பும் இல்லாத, பிதற்றல்!

ஆனாலும், செல்வத்திற்கு தன்னிடம் இலக்கியத்திற்கான அளவுகோல் இருக்கிறது என்ற நினைப்பு வேறு. எல்லாரும் இலக்கியம் படைக்கும்போது, செல்வம் 'இலக்கியம் செய்கிறவர்' என்று தான் தன்னை அழைத்துக் கொள்வார். அவர் தன்னை 'கலகக்காரன்' என்று எங்கேயாவது சொன்னது காதில் விழுகிற அளவுக்கு நான் முற்பிறவியில் பாவங்கள் எதுவும் செய்ததுமில்லை.

அவர் இங்கேயுள்ள எவரையும் இலக்கியம் செய்கிறவர்களாக அங்கீகரித்ததில்லை. இங்கே யாராவது தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப் பட்டவர்களாக இருந்தால் மட்டும் 'உவன்' என்று அழைத்து தன்னுடைய நெருக்கத்தைக் காட்டுவாரே ஒழிய, இவர் அவர்களைக் கூட தமிழ்நாட்டு அங்கீகாரம் இல்லாதிருந்தால் கணக்கில் எடுத்திருக்க மாட்டார். தமிழ்நாட்டில் அறியப்படாத புலன் பெயர்ந்த எழுத்தாளர்களை செல்வம் காலத்தில் பிரசுரித்திருந்தால், அது தன்னைப் புகழ்வதற்கான ஆட்சேர்ப்புக்கு ஆனதாயும், தன்னோடு பகைக்காமல் இருக்கட்டும் என்பதற்காகவும், எதிர்த்தரப்பிலிருந்து தூண்டில் போட்டதாகவும், வேறுயாருக்கோ கோபம் ஊட்டட்டடும் என்ற நோக்கம் கொண்டதானதாகவும், ஆன இன்னோரன்ன நரித்தனங்களுக்கான காரணங் களுக்கானதாகவே இருக்கும்.

இங்கே எத்தனையே பேர் சஞ்சிகைகள், நூல்கள் வெளியிட்டி ருக்கிறார்கள். தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் எவரையுமே செல்வம் இலக்கியம் செய்கிறவர்களாக அங்கீகரித்ததில்லை. இந்த சிறு சஞ்சிகைகள் பேசிய அரசியலைக் கூட செல்வத்தின் முப்பது வருடக் காலம் பேசியதில்லை.

**இங்கே எத்தனையே பேர் சஞ்சிகைகள், நூல்கள் வெளியிட்டி ருக்கிறார்கள். தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் எவரையுமே செல்வம் இலக்கியம் செய்கிறவர்களாக அங்கீகரித்ததில்லை. இந்த சிறு சஞ்சிகைகள் பேசிய அரசியலைக் கூட செல்வத்தின் முப்பது வருடக் காலம் பேசியதில்லை.**

**அவர்களில் யாருக்காவது முத்துலிங்கத்திடம் விருது வாங்கிக் கொடுத்தாலும், அதற்கும் மேற்சொன்ன காரணங்கள் இருக்கும்.**

**ஆனால், அவர்களில் யாருக்காவது எங்கேயாவது தமிழ்நாட்டில் அடையாளம் கிடைத்தால், 'அவரை எனக்கு நல்லாத் தெரியுமுங்கோ!, அடுத்த காலம் இதழில அவற்றை படைப்பு வருகுது' என்று அதில் தான் பிழைப்பு நடத்தக் கூடியவர் தான் செல்வம்.**

அவர்களில் யாருக்காவது முத்துலிங்கத்திடம் விருது வாங்கிக் கொடுத்தாலும், அதற்கும் மேற்சொன்ன காரணங்கள் இருக்கும்.

ஆனால், அவர்களில் யாருக்காவது எங்கேயாவது தமிழ்நாட்டில் அடையாளம் கிடைத்தால், 'அவரை எனக்கு நல்லாத் தெரியுமுங்கோ!, அடுத்த காலம் இதழில அவற்றை படைப்பு வருகுது' என்று அதில் தான் பிழைப்பு நடத்தக் கூடியவர் தான் செல்வம்.

செல்வத்திற்கு என அரசியல் நிலைப்பாடு எதையும் அவர் பகிரங்கமாச் சொன்னதில்லை. நாற்பது வருடங்களாக யுத்தமே வாழ்வாக இருந்த சமூகத்தில் அரசியல் பேசாமல் இலக்கியம் செய்த இந்த விண்ணன், தன்னை யுத்தத்தின் சாட்சியாக தமிழ்நாட்டில் கடந்த வருடம் இலக்கியவிழாவில் பீலா விட்டிருப்பார்.

கலை கலைக்காகவே என்ற பசுத்தோல் போர்த்திய புலிவால் அவர். இவர் புலி இருந்த காலத்தில் வன்னியிலோ, யாழ்ப்பாணத்திலோ காலத்திற்கான ஒரு வெளியீட்டுக் கூட்டத்தையோ, விமர்சனக் கூட்டத்தையோ நடத்தியிருக்க முடியுமா? 'நாங்கள் இஞ்ச உயிரைக் குடுத்துப் போராடிக் கொண்டிருக்கிறம், பாப்லோ நெருடாவும் பு....!' என்று தமிழ்ச்செல்வன் காதுக்குள் வைத்திருக்க மாட்டாரா?

இடதுசாரிச் சிந்தனையுள்ள தேடகம் நண்பர்களோடு ஒட்டிக் கொண்டிருந்த செல்வம் தான், இடதுசாரிச் சிந்தனைக்கு எதிர்முகாமிலிருந்த சுந்தர ராமசாமியையும், மு. தளையசிங்கத்தையும் காவிக் கொண்டு திரிந்தார். செல்வம் காவிய தமிழ்த் தேசியக் கவிஞர்களை உங்களுக்கும் தானே தெரிந்திருக்கும்.

கருத்துச் சுதந்திரம் என்பது கூட செல்வத்திற்கு ஒரு பொருட்டானதாக இருந்ததில்லை. புலன் பெயர்ந்த புலிவால்களால் கருத்துச் சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல்கள் நடந்த போதெல்லாம், நோகாத இலக்கியம் செய்து செய்து கொண்டிருந்தவர் அவர்.

இவர் எழுதிய கிளுவை மரச் சிலுவை நாடகத்தில் இவர் எழுதிய 'கெட்ட வார்த்தை' ஒன்றுக்கான விமர்சனத்தையும், இவரது மகன் பொதுநிகழ்வு ஒன்றில் ஆங்கிலம் பேசியதைக் கிண்டல் பண்ணியும் செந்தாமரை பத்திரிகையில் எழுதியபோது, தாயகத்தில் நாங்கள் தான் செல்வத்தின் கருத்துச் சுதந்திரத்திற்காக சண்டையிட்டுக் கொண்டோம்.

ஆனால், செல்வம் பின்பக்கத்தால் போய் அவர்களுடன் சமரசம் செய்து, சண்டைக்கான பழியை எங்கள் தலையில் பொறித்து விட்டு, எழுதியவரோடு நெருக்கமாகி விட்டார். நாங்கள் தான் வீண்பழி சுமந்தோம். அன்றைக்கு செல்வத்திற்கு எதிராக எழுதியவர் தற்போது காலம் சஞ்சிகையில் எழுதிக் கொண்டிருக்கிறார்.

இப்படித் தன்னுடைய கருத்துச் சுதந்திரம் பற்றி செல்வத்தின்

நிலைப்பாடு இருக்கும் போது, மற்றவர்களின் கருத்துச் சுதந்திரம் பற்றி இந்த 'நோகாத இலக்கியம் செய்கிறவர்' குரல் கொடுப்பார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

புலிகள் இல்லாவிட்டால் தமிழனைச் சிங்களவன் அழிச்சுப் போடுவான் என்று அன்றைக்கு என் காதுபட நியாயம் சொன்னவர் செல்வம். கொழும்பில் இலக்கியச் சந்திப்பு நடந்த போது சன்னதம் ஆடிய எஸ்.பொ போல, இவரும் 'இரத்தம் காய முன் இலக்கியச் சந்திப்பா?' என்றவர். பின்னர் இரத்தம் எல்லாம் காய்ந்து முடிந்த பின்னால், சிங்களவன் அழிக்காத தமிழர்களைப் பார்க்க, யாழ்ப்பாணத்திற்குப் போய் வந்தபடி தான் இருக்கிறார்.

'துரையப்பாவைக் கொன்றதை' இன்றைக்கும் நியாயப்படுத்துகிற செல்வம் தமிழ்த் தேசியம் பேசுவதற்கு முக்கியமான காரணம், பிரபாகரனின் சாதியாகத் தான் இருக்கும் என்பதே என் கருத்து. அதை மீறி ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப் என்றதெல்லாம் மாற்று இலக்கியங்களுக்கு ஊடாக எங்கயாவது மேல ஏறலாம் என்ற நம்பிக்கை மட்டும் தான்.

அதனால் தான் செல்வத்தின் 'கட்டடக்காட்டுக்குள்!' கவிதைத் தொகுப்பு வந்து சேர்ந்தது. சபாலிங்கம், உமாகாந்தனின் தொடர்பு இல்லாவிட்டால், அது புத்தகமாக வெளிவந்திருக்காது. செல்வத்திற்குக் கூட, அதைத் தன்னுடைய கவிதைத் தொகுதி என்று வெளியிடுகிற துணிவு இருந்திருக்காது.

தன்னுடைய அந்த one-hit wonder ஐ வைத்துக் கொண்டு, தன்னையும் ஒரு கவிஞன் என்று பீலா காட்டுகிற செல்வத்தால், ஏன் இன்னமும் இந்த முப்பது வருடச் சஞ்சிகை வெளியீட்டில் ஒரு நல்ல கவிதையை எழுத முடியவில்லை?

சரக்கு கையிருப்புத் தீர்ந்து விட்டதா? இல்லை.

அந்தக் கவிதைத் தொகுப்பின் வரலாற்றை அறிந்தவர்கள் சொன்ன போது, அது வேறு ஏதோ கவிதா நிகழ்வுக்காக பலர் சேர்ந்து எழுதியதை, செல்வத்தின் பெயரில் வெளியிட்டதாகத் தான் அறிய முடிந்தது.

செல்வம் என்னை மட்டுமல்ல, வேறு யாரையும் புகழ்வதில்லை. நேரடியாக முகத்துக்காக புழுகக் கூடும். வேறிடங்களில் சொல்வதில்லை. அவர்களைச் சுமந்து சென்று, தன்னையும் அந்த விற்பனையில் இலவச இணைப்பாகத் தள்ளி, விற்க முடியும் என்றால் அன்றி, செல்வம் யாரையுமே புகழ்ந்ததில்லை.

அதைப் போல, வேறு யாராவது யாரையாவது புகழ்ந்தால் செல்வத்திற்கு மனம் பொறுக்கவும் மாட்டாது.

சி.புஷ்பராஜா அண்ணனின் மரணத்தின் போது, அவரது நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்ற போது, செல்வம் பேசியிருந்தார். அவர் அந்தக் கூட்டத்தில் சொல்ல முனைந்தது எல்லாம், 'இவர் வெறுமனே அமிர்தலிங்கத்தின் அடியாளாக இருந்தவர், எதையும் இவர் சாதித்ததில்லை. நீங்கள் சும்மா அவரை ஏதோ பெரிய ஆள் மாதிரி!?' என்பது தான். இறந்து போன ஒரு மனிதனுக்கு காட்டப்படுகின்ற சமூகம் சார்ந்த ஒரு மதிப்பைக் கூடச் செய்யாமல், இறுதி அஞ்சலியில் கூட தன்னுடைய ஈனத்தனத்தைக் காட்டுவதில் இந்த மனிதன் பின்நிற்பதில்லை.

இவரைக் கவிஞனாக்கிய சபாலிங்கத்தைப் பற்றிக் கூடச் சொல்லும் போது, 'அவருக்குக் கவிதை தெரியாது. வெறும் சண்டியனாகத் தான் இருந்தார். நான் தான் அவருக்குக் கவிதை படிப்பித்தேன்' என்பது போலத் தான் தனது பேட்டியில் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

கனடாவில் இருப்பவர் ஒருவர் விபுலானந்தரின் யாழ் நூலை மறுபதிப்புச் செய்திருந்தார்.

தமிழ்நாட்டின் அயோக்கிய அச்சக, பதிப்பாளரும் அவரது பணத்துக்கு புத்தகத்தை அச்சிட்டு அனுப்பி விட்டு, அதே புத்தகத்தை தங்கள் பெயரில் தமிழ்நாட்டில் அடித்து விற்று விட்டார்கள்.

அந்தப் புத்தகம் பற்றிய விமர்சனக் கட்டுரை ஒன்று காலம் சஞ்சிகையில் வந்தது. ஆனால், பதிப்பு விபரம் முழுக்க தமிழ்நாட்டுத் திருடர்களினதாகத் தான் இருந்தது. தான் உதவி பெறுகின்ற ஒருவருக்குப் பெயர் வந்து விடக் கூடாது, அவர் நன்மை பெற்று விடக் கூடாது என்று நினைக்கிற செல்வத்திற்கு அவரிடம் தன்னுடைய காலம் இதழைக் கையளித்து கைவிசேஷம் வாங்க நாண்டு கொண்டிருக்க மட்டும் முடிகிறது.

நல்லகாலம், சேரனும் சோபா சக்தியும் இவரது காலத்திலேயே தாங்களும் வாழ்ந்து கொண்டிருப்பது குறித்து பெருமை கொள்ள வேண்டியது மட்டுமன்றி, கடவுளுக்கும் நன்றி கூற வேண்டும். இல்லையென்றால், அவர்களுக்கு கவிதையும் கதை சொல்லலும் தான் தான் கற்பித்தேன் என்ற இவரது கதையளப்பையும் நாங்கள் கேட்க வேண்டியிருக்கும்.

செல்வத்திற்கு என்னை யாரும் புகழ்ந்து கொண்டால், பொறாமை பொங்கி விடும். இலக்கியக் கூட்டங்களில் யாராவது முக்கியஸ்தர்கள் வந்தால், என் நண்பர் என் தயக்கத்தையும் மீறி என்னை இழுத்துக் கொண்டு போய், 'இவர் தாயகம் என்ற பத்திரிகை நடத்தியவர்' என்று அறிமுகம்

**வேறு யாராவது யாரையாவது புகழ்ந்தால் செல்வத்திற்கு மனம் பொறுக்கவும் மாட்டாது.**
**மு.புஷ்பராஜா அண்ணனின் மரணத்தின் போது, அவரது நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்ற போது, செல்வம் பேசியிருந்தார். அவர் அந்தக் கூட்டத்தில் சொல்ல முனைந்தது எல்லாம், 'இவர் வெறுமனே அமிர்தலிங்கத்தின் அடியாளாக இருந்தவர், எதையும் இவர் சாதித்ததில்லை. நீங்கள் சும்மா அவரை ஏதோ பெரிய ஆள் மாதிரி!?' என்பது தான். இறந்து போன ஒரு மனிதனுக்கு காட்டப்படுகின்ற சமூகம் சார்ந்த ஒரு மதிப்பைக் கூடச் செய்யாமல், இறுதி அஞ்சலியில் கூட தன்னுடைய ஈனத்தனத்தைக் காட்டுவதில் இந்த மனிதன் பின்நிற்பதில்லை.**

செய்வார். ஒரு தடவை செல்வத்தின் அழைப்பில் வந்த ஒருவருக்கு என்னை அறிமுகம் செய்த போது, செல்வத்தின் முகத்தில் இருந்த வெறுப்பை நான் நேரடியாகவே காணக் கூடியதாக இருந்தது.

வீட்டில் சொல்வேன், நான் இருக்கும்போதே இப்படியெல்லாம் நடந்து கொள்கிற மனிசன், நான் இல்லாத இடங்களில் எவ்வளவு பொய்களை என்னைப் பற்றிச் சொல்லியிருக்கும், நான் சொல்லாத எத்தனை பொய்களை நான் சொன்னதாகச் சொல்லியிருக்கும் என்று.

அது உண்மையில் நடந்தது. செல்வம் கனடாவிலிருந்து பிரான்ஸ் போயிருந்த போது, அங்கே அவர்கள் தாயகம் பற்றி பெருமையாகச் சிலாகித்துச் சொன்ன போது, செல்வம் பொறாமை மிகுதியில் என்னைப் பற்றி அவதூறுகள் சொல்லியிருக்கிறார். போகுமிடங்களில் தாயகம் பற்றியும், என்னைப் பற்றியும் சிலாகிக்கப்படும்போதும் செல்வம் அடையும் பொறாமை பற்றி நான் அறிவேன்.

அதே அளவுக்கு காலம் இதழ் பற்றி யாரும் சிலாகிப்பதில்லை என்பதற்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?

என்னோடு முன்பு நெருக்கமாக இருந்த இருவர் செல்வம் பற்றிச் சொல்லும் போதெல்லாம், நான் சுருக்கமாக ஒரே ஒரு வார்த்தை தான் சொல்வேன்...

‘செல்வம் ஒரு நஞ்சன்!’.

என்னுடைய அப்பு நச்சு மனிதர்களை ‘வஞ்சக நஞ்சன்’ என்றே சொல்வார். அதைப் போல, ‘உடம்பெல்லால் நஞ்சு’ என்று சொல்கிற பொறாமை நிறைந்த ஆலகால விஷம் தான் செல்வம்.

அது சில நேரம் அதிகமானதாக இருக்கலாம். செல்வத்தைத் தெரிந்த பலருக்கு அது நம்ப முடியாததாக இருக்கலாம். செல்வம் அவர்களோடு அவ்வாறான இயல்பைக் காட்டாமலும் இருந்திருக்கலாம்.

அவர்கள் எல்லாம் செல்வத்தின் இருப்புக்கும் பிழைப்புக்கும் அச்சுறுத்தலாக இருந்திருக்க மாட்டார்கள். ஹி...ஹி... என்று தன்னோடு கதைக்கிறவர்களை அளவுக்கு மீறிப் புகழும் பழக்கத்துடன், ‘நசியல் கள்ளனாக’ திரியும் செல்வத்தின் அந்த முகத்தை யாருமே காணாமலும் இருக்கக் கூடும். செல்வம் அவர்களுக்குத் தேவைப்படுகிற ஒருவராக இருக்கலாம். செல்வத்தின் எழுத்துகளால் பிரமிப்படைந்து நான் சொல்வதை நம்பாமலும் இருக்கலாம்.

> **செல்வம் அவர்களின் கவனத்தைத் திருப்பும் முயற்சியாக, ‘தாயகம் ஒரு இருநூறு பிரதிகள் விற்கும்’ என்கிறார். அதை யாரும் கணக்கெடுப்பதாகத் தெரியவில்லை.**
> **அவர்கள் உரையாடலில் பிஸி.**
>
> **என்ன, ஒரு இருநூறு பிரதிகள் விற்கிற பத்திரிகை அவ்வளவு முக்கியத்துவமானதோ? என்பது தான் அதன் தொனி.**
> **இரண்டாம் தடவையாக ‘தாயகம் ஒரு இருநூறு பிரதிகள் விற்கும்.’ என்று முயற்சிக்கிறார். மற்றவர்கள் தீவிர இலக்கிய சர்ச்சையில். கணக்கே எடுக்கவில்லை.**
>
> **சோபாக்களில் உட்கார்ந்திருந்தவர்களை நான் பின்னால் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். முயற்சியில் சற்றும் மனம் தளராது மூன்றாம் தடவையாக முக்கிப் பார்க்கிறார்.**
> **‘தாயகம் ஒரு இருநூறு பிரதிகள் விற்கும்’.**
> **எவருமே கணக்கு எடுக்கவில்லை.**

ஒருநாள் எனது வீட்டில் ஒரு சனிக்கிழமை இப்படி ‘இலக்கியச் சந்திப்பு’ பார்ட்டி ஒன்று நடந்து கொண்டிருந்தது. தாயகத்தில் எழுதிக் கொண்டிருந்த பலரும் ரொறன்ரோவில் அரசியல், கலை, இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவர்களும் வழமை போலக் கலந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது தாயகத்தைப் பற்றியும் அதன் நிலைப்பாடுகள், செயற்பாடுகள், அது இலங்கை அரசியல் மட்டுமன்றி கலை, இலக்கியத்தில் ஏற்படுத்துகிற தாக்கங்கள் பற்றி பலரும் உயர்ந்தேத்தி உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

என்னைப் புகழ்ந்து கொண்டிருப்பதை பொறுக்க முடியாத செல்வம், தன்னுடைய காலத்தை யாரும் கணக்கெடுக்கவில்லை என்றோ என்னவோ, பொறாமையால் வெதும்பி அந்த வெப்பியாரத்தில், ‘தாயகம் என்ன செய்தது?’ என்று புழுங்கத் தொடங்கினார். இதனால், தாயகத்தில் தீவிரமாக எழுதிக் கொண்டிருந்த ஒருவருக்கும் செல்வத்திற்கும் பெரும் வாக்குவாதமே எழுந்தது.

‘உம்மட காலம் என்ன செய்தது?’ என்று அவர் கேட்டது செல்வத்திற்கு தாங்கவும் முடியவில்லை. அங்கே இருப்பவர்கள் தாயகம் பற்றிப் புகழ்வது தான் செல்வத்துக்குப் பிரச்சனையாக இருந்தது.

நான் வரவேற்பாளன். பேசுவதும் என்னைப் பற்றியது. எதையும் சொல்ல முடியாது.

Conflict of interests.

இந்த வாக்குவாதமெல்லாம் முடிந்து மற்றவர்கள் அமைதியாகக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

செல்வம் அவர்களின் கவனத்தைத் திருப்பும் முயற்சியாக, ‘தாயகம் ஒரு இருநூறு பிரதிகள் விற்கும்’ என்கிறார். அதை யாரும் கணக்கெடுப்பதாகத் தெரியவில்லை.

அவர்கள் உரையாடலில் பிஸி.

என்ன, ஒரு இருநூறு பிரதிகள் விற்கிற பத்திரிகை அவ்வளவு முக்கியத்துவமானதோ? என்பது தான் அதன் தொனி.

இரண்டாம் தடவையாக ‘தாயகம் ஒரு இருநூறு பிரதிகள் விற்கும்.’ என்று முயற்சிக்கிறார். மற்றவர்கள் தீவிர இலக்கிய சர்ச்சையில். கணக்கே எடுக்கவில்லை.

சோபாக்களில் உட்கார்ந் திருந்தவர்களை நான் பின்னால் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். முயற்சியில் சற்றும் மனம் தளராது மூன்றாம் தடவையாக முக்கிப் பார்க்கிறார்.

'தாயகம் ஒரு இருநூறு பிரதிகள் விற்கும்'.

எவருமே கணக்கு எடுக்கவில்லை.

இந்தக் கதையை இப்போதும் நான் அடிக்கடி மனைவிக்குச் சொல்லிக் கொள்ளுவேன். 'எப்படியான நச்சு மனிதன்?'.

தாயகம் இதழை அச்சிட்டு, கடைகளில் விற்பனைக்கு மட்டுமே வைத்திருப்பேன். உலகின் சகல இடங்களிலும் இருந்து சந்தாதாரர்கள் இருந்தார்கள். தாயகம் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக, தாயகத்தை அதிகமான இதழ்கள் பெற்று ஐரோப்பிய நாடுகளில் கடைகளிலும், தாங்கள் நேரடியாகவும் வினியோகித்த நண்பர்கள் இருந்தார்கள். கிடைத்த ஒரு பிரதியை பெரும் நட்பு வட்டத்திற்குள் சுற்றுக்கு வைத்திருந்து வாசித்தார்கள்.

பாரிசில் விற்பனைக்குத் தடை வந்திருந்த போதும், ஒளித்து வைத்து விற்றார்கள்,

கனடாவில் தாயகம் விற்ற கடைகளை உடைத்து, வினியோகம் செய்யப் போன என் தம்பியைத் தாக்கி பணத்தைப் பறித்தார்கள். தங்கள் வாடிக்கையாளர்கள் வேறிடங்களுக்குப் போய் விடக் கூடாது என்று புலிகளுக்குப் பயந்து மேசைக்கு கீழ் வைத்து, கஞ்சா விற்பது போல விற்றார்கள்.

வியாழக்கிழமைகளில் தாயகம் வரும் நேரமாகப் பார்த்து, காவல் இருப்பார்கள். நான் தனியாக இதையெல்லாம் செய்து கொண்டிருந்ததால், என்னால் முடியாமல் சில நேரங்களில் சனிக்கிழமைகளில் தான் வினியோகிக்க முடியும். திரும்பத் திரும்ப வந்து காவல் இருப்பார்கள்.

ஒருநாள் சனிக்கிழமை ஒரு கடைக்கு பத்திரிகை வைக்கப் போகிறேன். வழியில் மறித்து தனக்கு ஒரு பிரதி வேண்டும் என்று ஒருவர் கேட்க, 'கடையில வாங்குங்கோ' என்கிறேன். உள்ளே போய் கடையில் வைத்துக் கணக்கு முடித்து வெளியே வருகிறேன். அவர் பத்திரிகையை வாங்கிக் கொண்டு நடனமாடிக் கொண்டே வந்து நண்பர்களுக்குச் சொல்கிறார், 'அவன் தர மாட்டன் எண்டிறானடா!'.

தாயகம் ஆயிரக்கணக்கான பிரதிகள் விற்பனையாகின்றன என்றெல்லாம் நான் கதை அளக்க மாட்டேன். ஆனால், அது ஏற்படுத்திய தாக்கம் அன்றைக்குப் பலமானது.

காலாண்டு இதழ் என்று அவ்வப்போது எங்காவது பச்சைத்தண்ணியில் பலகாரம் சுடக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் ஓசியில் சஞ்சிகை வெளியிட்டு, அதைக் கொண்டு போய் காண்போரிடம் கேளாமலேயே கைகளில் திணித்து யாசகம் செய்தும், யாராவது ஏமாளிகள் இருந்தால் நூறு, இருநூறு என்று நாண்டு கொண்டு, வழிந்து நின்று அதிகமாகவே பெற முனைந்தும் இலக்கிய யாகம் செய்து கொண்டிருந்த செல்வத்திற்கு, 'ஒரு இருநூறு பிரதிகள் விற்கும்' தாயகத்தை தாங்களாகவே தேடி வந்து பணம் கொடுத்து வாங்கினார்கள் என்பதைப் பார்க்கும் போது பொறாமையாகத் தான் இருக்கும்.

பிரான்சில் இருந்து வந்து என்னைச் சந்திக்க வந்த உமாகாந்தன் அண்ணன், தாயகத்தைப் பற்றியும் என்னைப் பற்றியும் செல்வம் சொன்னதை, பண்பு கருதி எனக்கு அவரால் சொல்லவும் முடியவில்லை. என் மீது இருந்த அன்பினால் சொல்லாமல் இருக்கவும் முடியவும் இல்லை.

இழுத்து இழுத்து... எதையுமே சொல்லாமல், கடைசியில்.. சொன்னார்.

'செல்வம் அதுதான்!' அதற்கு மேல் அவர் எதையும் சொல்லவில்லை.
அவர் பண்பாளர். நானும் அவரை முழுக் கதையும் சொல்லும்படி வற்புறுத்தவும் இல்லை.

'அதுதான் செல்வம்' என்பது செல்வத்தை நன்கு தெரிந்த எல்லாருக்கும் தெரியும்.

புதுநூற்றாண்டின் தொடக்கத்தில் மிகவும் பிரபலமான ஆபாசப்பட நடிகர், Ron Jeremy பற்றி ஒரு விவரணத் திரைப்படம் வந்தது. அது பற்றி எழுதப்பட்ட விமர்சனங்களை றொறன்ரோ ஸ்டார், Now Magazine போன்றவற்றில் வாசித்திருந்தேன். ஆபாசப் பட நடிகரான இவர் தான் ஒரு நடிகராக வர வேண்டும் என்பதற்காக தன் ஆசிரியர் பதவியையும் விட்டு முயற்சி செய்து, கடைசியில் ஆபாசப் பட நடிகராக வந்து முடிந்தார்.

அந்தப் படத்தின் விமர்சனத் திற்காக அவரைத் தொடர்பு கொண்டிருந்த ஒரு விமர்சகருக்கு, தான் இன்னமும் தன்னை ஒரு சீரிய நடிகனாகவே நினைப்பதாக றொன் கூறியிருந்தார். அதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்த அந்த விமர்சகர், 'தன்னை ஒரு நடிகனாக அவர் இன்னமும் நினைத்துக் கொண்டிருப்பது தான் பெரும் Tragedy' என்று முடித்திருந்தார்.

செல்வத்திற்கு தமிழ்நாட்டில் பல நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செல்வத்தை நண்பர் என்கிறார்கள். யாராவது எழுத்தாளர்களுக்குப் பரிசு கிடைக்கும்போது அவர்களைத் தனது நண்பர் என்கிறார். செல்வத்தை நன்கு தெரிந்ததால், அவருடைய நண்பர்கள் எவ்வாறானவர்களாக இருப்பார்கள் என்பதை அறிந்து கொள்வதில் எனக்கு எந்தச் சிரமமும் இல்லை. A man is known by the company he keeps.

செல்வம் கனடாவிலிருந்த கொண்டு போகிற அன்பளிப்பு களுக்காகவும், இயல்விருது எதிர்பார்ப்புக்காகவும் செல்வத்திற்கு அந்த மேதகுக்கள் சரியாசனம் கொடுப்பதில் எனக்கு என்ன ஆட்சேபனை?

செல்வம் தன்னையும் ஒரு 'இலக்கியம் செய்கிற' 'இலக்கியகாரன்' என்று நினைப்பதும், பீற்றிக் கொள்வதும், பெருமை கொள்வதும் இலக்கிய உலகத்தின் துயரம் Tragedy என்பதை விட, இதெல்லாம் எனக்கு ஒரு Comedy என்ற அளவில், 'நானும் ரவுடி தான்' வடிவேலு காமடியாகவே இருக்கிறது! அ

'ஒரு தனிமனிதனின் குறைபாடுகளோ, ஈனத்தனங்களோ எதற்காக இங்கே எழுதப்பட வேண்டும்? நாங்கள் இலக்கியத்தை மட்டுமே பிரித்து (மேய்கிற!) உபாசிக்கின்ற அன்னப் பறவைகள் அன்றோ? அவதூறு என்பது நாங்கள் கைக் கொண்டிருக்கும் அறத்திற்கும், அறச்சீற்றத்திற்கும் முரணானவை ஆச்சே? எவருக்கு விருதும் பெருமையும் கிடைத்தாலும் நாங்கள் மனம் நிறைந்து...' என்றெல்லாம் சில இலக்கியப் பிரகிருதிகள் முறைப்படக்கூடும். அதற்கான பேக் ஐடிக்களும் அல்லக்கைகளும் செல்வத்திற்கு நிறையவும் உண்டு.

இதெல்லாம் ஒரு முப்பது வருடங்களுக்கு மேலாக எனது மனதை உறுத்திக் கொண்டிருந்த விடயங்கள். ஒரு போதும் இதைப் பற்றி எழுத வேண்டும் என்று கூட விரும்பியதில்லை. யாருக்கும் சொல்லி மனதை தேற்றிக் கொள்ள வேண்டும் என்று கூட நினைத்ததில்லை. ஒரு ஈனமனிதன் குறித்து சொல்வது எனக்குத் தான் வெட்கத்திற்குரிய விடயம் என்று நினைத்திருந்தேன்.

செல்வத்தின் அகழ் மின்னிதழ் பேட்டிக்கு பதில் அளிக்க வேண்டும் என்று நண்பர்கள் கேட்டுக் கொண்டும் அதில் அக்கறைப்படவில்லை. அபத்தம் வெளிவந்த கடந்த தை மாதம், தமிழ் நாட்டு இலக்கிய விழாவிலும் அதன் பின்னரும் நடந்த நிகழ்வுகளில் என்னைப் பற்றிய பொய்களைச் சொன்ன போது கூட அதற்குப் பதிலளிக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. அபத்தத்தில் அவ்வப்போது கிண்டல் பண்ணியிருக்கிறேன்.

நான் அகழ் மின்னிதழுக்கு பேட்டியளித்ததற்கான காரணங் களில் ஒன்று, செல்வம் அங்கு சொன்ன என்னைப்பற்றிய பொய்கள். ஆனாலும், அகழுக்கு நான் அளித்த பேட்டியில் செல்வம் பற்றி பெரிதாக எதையும் சொன்னதேயில்லை. என்னுடைய பக்கத்தைச் சொல்லி என்னை நியாயப்படுத்த முனையவும் இல்லை. என்னை நிலைநிறுத்தவும், நியாயப்படுத்தவும் இன்னொருவரை அவதூறு செய்ய வேண்டிய நிலை எனக்கு ஒரு போதும் இருந்ததில்லை.

செல்வத்தை நான் ஒரு பொருட்டாகவே ஒருபோதும் மதித்ததில்லை. அவரோடு இப்போது ஒட்டிக் கொண்டிருக்கும் ஒருவர் சொன்னது போல, 'உவர் என்னண்டு எங்களுக்குள்ள வந்தார் எண்டு தெரியேலை!'.

செல்வம் என்னை அங்கீகரிக்கவில்லை என்றோ, எனக்கு கிடைக்க வேண்டிய அங்கீகாரங்களை கிடைக்க விடாமல் தடுத்து நிறுத்தி விட்டார் என்றோ ஒரு போதும் நான் நினைத்ததும் இல்லை. பச்சைத்தண்ணியில் செல்வம் சுட்ட பலகாரங்களிற்கான நன்றிக்கடனாக, அவரை இலக்கிய மேதகுவாக அங்கீகரித்திருக்கும் அயோக்கியர்கள் என்னையும் அங்கீகரித்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கவும் இல்லை.

**இதையெல்லாம் வாசித்து செல்வத்தை தங்கள் நண்பர்கள் என்பதில் புளகாங்கிதம் அடையும் தமிழ்நாட்டின் இலக்கிய மேதகுக்களும், பெருந்தகைகளும், செம்மல்களும் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்பது கூட என் நோக்கம் இல்லை. அந்த அயோக்கியர்களின் அறம் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். அவர்கள் அறத்தை விட, செல்வம் சுமந்து வரும் arrack க்குக்கும் விஸ்கிக்கும் வாணீர் ஊற்றுவார்கள் என்பது எனக்குத் தெரியும்.**

**இப்போதும் கூட அவர்களிடம் செல்வம் 'ஐயோ, அவர் ஒரு தலித் எண்டு தெரிஞ்சும் அவருக்கு வீட்ட கூப்பிட்டு சாப்பாடு குடுத்தனானுங்கோ, காலத்தில சுந்தர ராமசாமியைப் பேட்டி கண்டு எழுத வைச்சனானுங்கோ, இப்பிடிச் செய்து போட்டாருங்கோ' என்று புலம்பக் கூடியவர் என்பதும் எனக்குத் தெரியும்.**

அபத்தம் இதழ் வெளிவந்ததற்குக் கூட செல்வம் ஒரு காரணமாக இருந்திருக்கிறார் என்பதை உங்களால் நம்ப முடியாமல் இருக்கக் கூடும்.

தமிழ்நாட்டில் எழுத வேண்டும் என்று நினைத்து, டாக்டர் நோயல் நடேசன் தொடர்பு ஏற்படுத்தி விட்ட தளவாய் சுந்தரத்திற்கு நான் பிரசுரிப்பதற்காகக் கட்டுரை அனுப்பியபோது, அவர் அதைப் பிரசுரிப்பதற்காகச் சொல்லி விட்டு, பின்னர் என்னுடைய தொடர்புகளுக்குப் பதில் சொல்வதைத் தவிர்த்துக் கொண்டார். அதன் பின்னால் தான் நான் சொந்தமாகவே அபத்தத்தை வெளியிடத் தீர்மானித்தேன்.

பின்னர் செல்வம் சென்னை போன போது, தளவாயின் வீட்டில் குடும்பமாக விருந்தினராக இருந்தார். தன்னுடைய நண்பர் என்று பெருமிதத்துடன் படமும் போட்டிருந்தார். என்னுடைய ஊகம், தளவாய் என்னுடனான தொடர்புகளைத் தவிர்த்ததற்கு, கல்லுக் குத்தியது செல்வமாகத் தான் இருக்கும் என்பதே. அது உண்மையாக இருந்தால், செல்வம் தான் மனம் நொந்து கொள்கிற தன்னுடைய பிழை என்று நினைப்பது அதுவாகத் தான் இருக்கும். (இதை தளவாய் மறுத்தால் அதை உண்மை என ஏற்றுக் கொள்கிறேன்.)

சரக்கு இல்லாத வியாபாரியான செல்வத்திற்கு இப்படி அங்கீகாரம் பெற முடிந்தால், அந்த ஈனப்புத்தியும் இல்லாமலேயே இவ்வாறான அங்கீகாரத்தைப் பெறுவதில் எனக்கு எந்தச் சிரமமும் இருந்திருக்காது. தமிழ்நாட்டில் பெயர் வாங்க வேண்டும் என்று நான் நினைத்திருந்தால், செல்வம் கேட்ட போதுகளில் காலத்தில் எழுதிக் கூட நான் பெயர் வாங்கியிருக்க முடியும்.

என்னுடைய எழுத்துக்கள் உயிருக்கான அச்சுறுத்தல்களுக்கு இடையில் எழுதப்பட்டவை. கொலைகாரர்களுக்கு எதிராக எழுதப்பட்டவை. இந்த நாசமாய் போகிற சமூகத்திற்கானவை. இந்த அயோக்கியர்களின் அங்கீகாரத்திற் கானவையாக ஒருபோதும் இருந்ததில்லை. இதையெல்லாம் ஒரு பிழைப்பாகக் கொள்ள வேண்டிய தேவை கூட இல்லாமல், முழு நேர வேலை செய்து கொண்டு தான் என்னுடைய இந்த

சேஷ்டைகள் எல்லாம் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இதையெல்லாம் வாசித்து செல்வத்தை தங்கள் நண்பர்கள் என்பதில் புளகாங்கிதம் அடையும் தமிழ்நாட்டின் இலக்கிய மேதகுக்களும், பெருந்தகைகளும், செம்மல்களும் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்பது கூட என் நோக்கம் இல்லை. அந்த அயோக்கியர்களின் அறம் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். அவர்கள் அறத்தை விட, செல்வம் சுமந்து வரும் arrack க்குக்கும் விஸ்கிக்கும் வாணீர் ஊற்றுவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

இப்போதும் கூட அவர்களிடம் செல்வம் 'ஐயோ, அவர் ஒரு தலித் எண்டு தெரிஞ்சும் அவருக்கு வீட்ட கூப்பிட்டு சாப்பாடு குடுத்தனானுங்கோ, காலத்தில சுந்தர ராமசாமியைப் பேட்டி கண்டு எழுத வைச்சனானுங்கோ, இப்பிடிச் செய்து போட்டாருங்கோ' என்று புலம்பக் கூடியவர் என்பதும் எனக்குத் தெரியும்.

இப்போது அபத்தத்திற்கு பல்வேறு தமிழ்நாட்டு இலக்கிய முக்கியஸ்தர்கள் வாசகர்களாக இருக்கிறார்கள். அவர்களில் பலர் செல்வத்தின் நண்பர்களாகவும் இருக்கிறார்கள். செல்வத்திற்கு சம்பந்தம் இல்லாமல் நான் இருந்து புகழ் பெற்றிருந்தால், 'அவரை எனக்குத் தெரியும், அவருக்கு பத்திரிகையியல் நான் தான் கற்பித்தேன், அவருடைய பத்திரிகையில் முன்பு நான் எழுதினேன்' என்றெல்லாம் செல்வம் கதையளக்கக் கூடியவர். இன்னொருத்தரின் புகழில் 'அவரைத் தெரியும், அவர் எனது நண்பர்' என்பது தான் செல்வம் பெருமை கொள்கிற விடயம்.

தற்போதைய நிலையில் 'அவனை நான் அறியேனே!?' என்பது தான் செல்வத்திற்கு தப்பித்துக் கொள்ள வாய்ப்பாக இருக்கக் கூடியது.

எனக்குத் தெரியாதவர் களிடமும், என்னைத் தெரியாதவர் களிடமும் என்னைப் பற்றி அவதூ றுகளும் பொய்களும் சொல்வது பற்றி நான் ஒரு போதுமே கவலைப்பட்டதில்லை. இந்த முப்பது வருடங்களில் நான் செல்வம் பற்றி எழுதுவது என்ன, நெருங்கிய நண்பர்களுக்குச் சொல்வது பற்றிக் கூட நான் அக்கறைப்பட்டதில்லை. இதில் சொல்லியுள்ள பல விடயங்கள் என்னோடு நெருக்கமாக இருந்த நண்பர்களுக்குக் கூட புதியதாக இருக்கும் அளவுக்கு அவர்களுக்குக் கூட நான் சொல்லியதில்லை.

**இதை நான் ஒரு சவாலாகக் கூட விடுக்கிறேன்.**
**இந்தக் கட்டுரையில் நான் சொன்ன ஏதாவது ஒரு விடயம் பொய் என்றோ, உண்மையைத் தெரிந்து கொண்டு, வேண்டும் என்றே சொன்ன அவதூறு என்றோ...**
**அல்லது செல்வம் இவ்வாறான இயல்புகள் கொண்ட ஒருவர் இல்லை, அவர் அப்பழுக்கற்ற பண்பாளர் என்றோ...**
**அவர்கள் யாராவது சொன்னால்...**
**நான் அத்தோடு தமிழில் எழுதுவதையே நிறுத்திக் கொள்கிறேன்!**

ஈனத்தனமான ஒரு மனிதனைப் பற்றி இன்னொருவரிடம் சொல்வதும், நியாயம் தேடுவதும் எனக்கு எப்போதுமே வெட்கத்துக்குரியவை.

முன்பின் தெரியாத ஆளாக நான் இருந்தபோது இதை எழுதியிருந்தால், அல்லது பேஸ்புக்கில் எழுதியிருந்தால், செல்வம் சுலபமாகவே 'உங்க எத்தின பேர் தாங்களும் இலக்கியம் செய்யிறம் எண்டு திரியினம், அப்பிடி உது சும்மா ஆரோ பொறாமையில எழுதியிருக்கினம், தமிழ்நாட்டில உதை ஒருத்தரும் வாசிக்க மாட்டினம்' என்று கடந்து போயிருப்பார்.

ஆனால், இப்போது தமிழ்நாட்டில், அபத்தம் மூலமாக, என்னைத் தெரிந்தவர்கள், எனக்குத் தெரிந்தவர்கள் அதிகமாகிக் கொண்டு வருகிறார்கள். அவர்களிடம் எல்லாம் என்னைப் பற்றி இன்னும் எத்தனையோ அவதூறுகளை, நான் இல்லாத இடத்தில் செல்வம் அவிழ்த்து விடக் கூடும் என்பதற்காக மட்டும் தான் இதை எழுதியிருக்கிறேன்.

இப்போது பொதுவெளியில் எழுதி இருக்கிறேன். இதை ஏதோ பழி தீர்ப்பதற்காகவோ, பாரத்தை இறக்கி வைப்பதற்காகவோ, செல்வத்தின் 'புகழின்' மீதான பொறாமையினாலோ எழுதவில்லை.

வீட்டில் கூட, 'அந்த மனிசன் அங்க இங்க வாங்கி, அதை வைச்சு காலத்தை ஓட்டி ஏதோ பிழைச்சுக் கொண்டிருக்கு, அதை நீ ஏன் கெடுக்கிறாய்? அது பிழைச்சிட்டுப் போகட்டுமன்' என்று தான் சொல்வார்.

செல்வம் என்னைப் பற்றிச் சொல்லும் அவதூறுகள் அநியாயமாக மற்றவர்கள் என்னைப் பற்றித் தவறாக நினைக் வைக்கக் கூடாது என்பதையும் விட, அனாவசியமாக வரலாறு ஆகி விடக் கூடாது என்பதற்காகத் தான் இதையெல்லாம் எழுத நேரிட்டது.

இதை நான் ஒரு சவாலாகக் கூட விடுக்கிறேன்.

இந்தக் கட்டுரையில் நான் சொன்ன ஏதாவது ஒரு விடயம் பொய் என்றோ, உண்மையைத் தெரிந்து கொண்டு, வேண்டும் என்றே சொன்ன அவதூறு என்றோ... அல்லது செல்வம் இவ்வாறான இயல்புகள் கொண்ட ஒருவர் இல்லை, அவர் அப்பழுக்கற்ற பண்பாளர் என்றோ,

கடந்த முப்பத்தைந்து வருடங்களாக என்னையும் செல்வத்தையும் தெரிந்த யாராவது, அவர்களுக்கும் தனியே தங்கள் பெயரை மட்டும் போட விருப்பம் இல்லாவிட்டால் ஆசிரியர் குழு மாதிரி கூட்டறிக்கையும் விடலாம், நடுநிலையாளர்களாகத் தான் இருக்க வேண்டும் என்பதுமில்லை, என்னோடு இருந்து செல்வத்தைத் திட்டி விட்டு, செல்வத்தோடு தற்போது ஒட்டிக் கொண்டிருப்பவர்களாக இருந்தாலும் பரவாயில்லை...

அவர்கள் யாராவது சொன்னால்...

நான் அத்தோடு தமிழில் எழுதுவதையே நிறுத்திக் கொள்கிறேன்!



# செல்வம் அண்ணை

## கற்சுறா

**அகழ் மின்னிதழில்
காலம் செல்வம் அளித்த பேட்டி குறித்து
கற்சுறா தன் வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தது இது!**

நீண்ட ஒரு காலத்தின் முன் முதன் முதலாகப் பாரிசில் செல்வம் அண்ணையைச் சந்திக்கக் கிடைத்தது.

காலம் செல்வம் அவர்கள் வந்திருக்கிறார் என அறியப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு மிகவும் எண்ணிக்கை குறைவான ஆட்களைக் கொண்டிருந்த நிகழ்வு அது. மிக இயல்பாகவே எவ்வளவு பிரச்சனையான விடயத்தையும் பகிடியாகக் கடந்து போகக் கூடிய வல்லமை வாய்ந்த செல்வம் அண்ணாவிடம் இலக்கியம் சமூக அரசியல் பற்றிய ஒரு கலந்துரையாடலாக அனைவரும் உரையாடிக் கொண்டிருந்தோம் .

ஒரு இடத்தில் கனடாவில் பெண்ணியவாதிகளது செயற் பாடுகள் எப்படியிருக்கின்றன என ஒருவர் வினாவிய போது, மிக இயல்பாகவே எவ்வளவு பிரச்சனையான விடயத்தையும் பகிடியாகக் கடந்து போகக் கூடிய வல்லமை வாய்ந்த செல்வம் அண்ணா;

‘அதுவாங்கோ; அங்க பெண்ணியவாதிகள் எண்டு இருக்கினமுங்கோ அவையள் எங்கட குடும்பத்துக்குள்ள வந்து சிரித்துப்பேசி நீங்கள் சந்தோசமாக இருக்கிறிங்களா எண்டு விசாரிப்பினம். இல்லை எண்டு சொன்னா பிரிச்சு விட்டிட்டுப் போவினம். ஓம் எண்டாலும் பிரிச்சு விட்டிட்டுப் போவினம்;.‘ எண்டார்.

மிக இயல்பாகவே எவ்வளவு பிரச்சனையான விடயத்தையும் பகிடியாகக் கடந்து போகக் கூடிய வல்லமை வாய்ந்த செல்வம் அண்ணரின் நிலை அன்றய நிகழ்வில் எப்படியிருந்திருக்கும் என்பதனை நாங்கள் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

நிகழ்வு முடிய வெளியில வந்து ஒரு சிகரட்டை எடுத்து புகைத்தபடி ‘இப்படியெல்லாம் கோவிப்பினம் எண்டு தெரியாது. அப்படி நான் நினைத்துச் சொல்லயில்ல.‘ நான் சும்மா முசுப்பாத்தியாயிருக்கும் என நினைத்துச் சொன்னேன்.‘ என்றார்.

ஆனாலும் இவ்வாறு முசுப்பாத்தியாக நினைத்துத்தான் இந்த நேர்காணலையும் வழங்கியிருக்கிறார் என்று நான் கருதவேயில்லை.

அவருக்கென்று ஒரு நிலைப்பாடு இருக்கிறது. ஒரு இலக்கியச் செயல் முறை இருக்கிறது. அரசியல் செயற்பாடு இருக்கிறது. அது வெறுமனே பகிடி என்ற போர்வையில் நுணுக்கமாகக் கையாண்டு மிகப் பெரிய சமூக நெருக்கடிகளை காயடித்து ஒன்றுமே இல்லாதவாறு பூசி மெழுகிவிட முனைகிறது அது.

அதன் ஒரு சாரம் தான் இந்த நேர்காணல் அதன் தொடக்கத்தையே ‘தமிழில் எவ்வளவோ பெரிய ஆளுமைகள் இருக்க பிரியோசனமோ உறுதியான அரசியல் கருத்துகளோ இல்லாமல், தனிய இலக்கியத்தின் பக்கமாய் இருக்கும் என்னை ஏன் தெரிவு செய்தீர்கள் என்று தெரியவில்லை‘ எனக் கேட்டுத் தொடங்குவதுதான் அவரது நகைச்சுவைத் தந்திரம்.

மேற்கொண்டு சொல்லத் தொடங்கும் அவதூறுகளுக்கும் குழறுபடிகளுக்கும் இந்தவகை நகைச்சுவைத் தந்திரம் தனக்கு நற்சான்றிதழ் வழங்கிவிடும் என நினைத்தே அவர் சொல்லத் தொடங்குகிறார். அதன்படியே பலர் நேர்காணலையே வாசிக்காமலும் வாசித்தவர்களும் அவருடைய நகைச் சுவையையேபிரதானமாக்கிஅவருக்கு நற்சான்றிதழ் வழங்கிவிடும் துர்ப்பாக்கிய நிகழ்வும் நடந்தேறியது.

தான் சார்ந்த ஒரு சமூகம், தனது நண்பர்கள் அல்லது அந்த இனம் வலிகளால் வளைக்கப்பட்ட கதைகளை வெறும் அபத்தக் கதைகளால் சுற்றி வளைத்து எதுவுமேயற்றதாக்கி கடந்த காலம் முழுவதும் தாம் கொண்டாடிய முட்டாள் தனத்திற்கு நகைச்சுவை என அடையாளம் இட்டுக் கடக்க முடிவதென்றால் அது எங்கள் செல்வம் அண்ணையால் மட்டுந்தால் இயலும்.

இனி செல்வம் அண்ணை குறித்த நேர்காணலில் ஆங்காங்கே என்ன சொல்லியிருக்கிறார் எனப் பார்ப்போம்.

அவர் பாரீஸ் வந்த காலங்கள்

அவர் வேலை தேடியலைந்த காலங்கள் பின் ஈரோஸ் அமைப்பில் இணைந்து கொண்ட காலங்கள் எனக் கதைகளைச் சொல்லி வரும் செல்வம் அண்ணை தன்னுடைய கட்டிடக் காட்டுக்குள் என்ற கவிதைத் தொகுதியை சபாலிங்கத்தின் ஆசியா பதிப்பகம் வெளியிட்ட தருணத்தைச் சொல்ல வரும் போது தன்னுடைய பகிடி மனோபவத்துடன் 'அப்போது என் நண்பர்களில் ஒருவன் செல்வத்தாரின் கவிதைகளை புத்தகமாக்கியதால் தான் = யாரோ கவிதை விமர்சகரால் அவர் சுடப்பட்டார் என்று நக்கல் அடித்தான்.' எனக் குறிப்பிட்டுக் கடந்து போகிறார். சபாலிங்கம் படுகொலை செய்யப்பட்ட அந்த நாட்களில் பாரிசில் அவர் அகதிகளுக்கான விண்ணப்பக் கோரிக்கை எழுதிக் கொடுத்து வருபவர் என்பதனால் யாரோ அகதிக் கேஸ் எழுதி ஏமாந்தவனால் அவர் சுடப்பட்டார் என்ற கதையைப் புலிகள் ஊருக்குள் கசிய விட்டிருந்தார்கள். அதனையும் பலர் நம்பிவிடும் நிலையும் அப்போது இருந்தது. ஏனெனில் ஈழத்தில் கொலை என்பது அவ்வாறு வெறும் அற்பத்தனமான காரணங் களுக்கெல்லாம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

ஆனால் பாரிசில் அவர் வாழ்ந்த வீட்டில் மனைவியின் முன்னால் மிகவும் திட்டமிடப்பட்ட முறையில் அவரது படுகொலை நடை பெற்ற அவலத்தை இவ்வளவு காலத்தின் பின்னாலும் மடை மாற்றி செயலிழக்கப்பண்ணுவது செல்வம் அண்ணைக்கான அரசியல் நிலைப்பாடு. அந்தக் காலத்தில் செல்வம் அண்ணைதான் கனடாவில் தலைமை தாங்கி கண்டனக் கூட்டம் நடாத்தினார் என்பதனை இந்த இடத்தில் நினைவு கொள்ளும்படி நண்பர்கள் நினைவுறுத்துகிறார்கள். மிக நல்ல விடயம். அன்றய தலைமை உரையையாவது மேற்கோளிட்டு மாற்றுப் பதிப்பகங்களேயற்றிருந்த அந்தக்காலத்தில் ஆசியாப் பதிப்பகத்தினை நடை முறைப்படுத்தி வந்த கதையைச் சொல்லும் ஒரு இடை வெளி அந்த நேர்காணலில் அவருக்குக் கிடைத்தது. அவர் அந்த இடத்தை மறைத்து மறந்து சென்றதுதான் அவருக்கு ஒரு அரசியல் நிலைப்பாடு இருக்கிறது என நான் சொல்வது. அன்றைய புலம்பெயர் சூழலின் அத்தனை வடுக்களையும் சொல்லிவிடக் கிடைத்த இடத்தை மறைத்து நகர்ந்து செல்வதுதான் இன்றைய செல்வம் அண்ணையின் அரசியல் நிலைப்பாடு.

அடுத்து கி.பி. பற்றிய அவரது கருத்து. 'கி.பி.அரவிந்தன் 90களுக்கு பிறகு, நான் கனடாவுக்கு வந்தபிறகுதான் பாரிஸ் வந்தார். அவருடைய கவிதைகள் நல்லதாயிருக்கலாம். சில சிலபேர் வேறு காரணங்களுக்காக அவர் புலம் பெயர்ந்த முதற் கவிஞன் என்று எழுதியதைப் பார்த்திருக்கிறேன். என்கிறார். இங்கே என்ன எழுதியது என்பதனை விடுத்து யார் முதலில் எழுதியது என்கிற போட்டி வருகிறது. இன்று முகநூலிலும் இப்படியான தர்க்கங்களுக்கே அதிக முக்கியம் கொடுத்து நிற்கிறார்கள் சிலர். யார் முதற் கவிஞன் என்பது குறித்து போட்டியிடுகிறார்கள். ஆனால் செல்வம் அண்ணை கி.பி.யின் கவிதைகள் 'நல்லாயிருக்கலாம்' என்று சொல்லும் வார்த்தைகளுக்குள் இருக்கும் அற்பத்தனத்தைக் கணக்கிட மறந்து போய்விட்டார்கள். கேள்வி கேட்டவர்களின் நோக்கங்கள் வேறாக இருக்கும் பொழுது அற்பத்தனங்களை அவர்களாலும் கண்டடைய முடியாது இருக்கும்தானே. கி.பின் கவிதைகள் குறித்த தர்க்கங்களையாவது பேசிவிடக் கிடைத்த இடை வெளியையும் தவறவிட்டார் அவர். அவருக்கு கி. பியின் அரசியற் கருத்துக்களில் முரண்பாடு இல்லை. கி. பியின் 'முகங்கொள்' கவிதைத் தொகுதியும் செல்வம் அண்ணையின் 'கட்டிடக் காட்டுக்குள்' கவிதைத் தொகுதியும் அருந்ததியின் 'இரண்டாவது பிறப்பு' கவிதைத் தொகுதியும் ஒரே காலத்தில் தொகுப்புக்களாக வெளிவந்தவை. அதிலும் அருந்ததியின் கவிதைத் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட்டு பாரீஸ் எயார்போட் கஸ்டம்ஸ் பகுதியினரால் வெளியே கொடுக்க அனுமதியாது கைவிடப்பட்டதால் அவர் தனது இரண்டாவது தொகுப்பிற்கு இரண்டாவது பிறப்பு எனப் பெயரிட்டார் என்பதனை 1992 இலக்கியச் சந்திப்பில் தெரிவித்தார். இந்தக் காலத்தின் கவிதைகள் குறித்த ஒரு உரையாடலாகவும் அதன் தொடர்ச்சியாக கி.பியின் கனவின் மீதி எழுப்பிய அரசியல் என எத்தனையோ விடயங்களை உரையாடக்கிடைத்த இடத்தை வெறும் அற்பத்தனங்களால் கடந்து போய் கவிதை எழுதுபவனது மனதையும் தொலைத்து ஒரு இலக்கிய ஆர்வலனது முகத்தையும் தொலைத்து வெறுமனே யார் முதல் அரசவைக் கவிஞன் என்பதில் மட்டுமே போட்டியாக பதில் சொல்லிக் கடக்கிறார். தொடர்ந்து; சில்லாலை என்ற ஊரில் தனது கிறிஸ்தவக் குடும்பத்தின் மனநிலை அதற்குள்ளும் மெல்லிதாக இருந்த மனிதநேயம் குறித்துப் பேச முனையும் செல்வம் அண்ணை மலையக மக்கள் குறித்து சொல்லும் கருத்து மிக முக்கியமானது. ஆனால் அது அவர் பேசியும் ஆதரித்தும் நிற்கும் தமிழ்த் தேசியத்தின் மனநிலைக்கு எப்போதுமே முரணானது. அதனை அடுத்துக் கேட்கும் கேள்வியிலேயே அடியொட்டத் துடைத்தெடுத்து விடுகிறார். போரையும் ஆதரிக்கிறீர்கள், யுத்தத்தை மறுக்கவும் செய்கிறீர்கள்; ஒரு கலைஞனின் அல்லாட்டமாக இதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் அப்போது உங்கள் கருத்தியல் நிலைப்பாடு என்னவாக இருந்தது? இன்று அதனை மீள் பரிசீலனை செய்கிறீர்களா? எனக் கேட்டதற்கு; 'உண்மையைச் சொல்லப் போனால் இன்றைக்கு நடிக்க தேவையில்லை. துரையப்பாவைக் கொலை செய்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை.' என்ற பதிலை அன்றைய காலத்தில் தான் பார்த்தறிந்ததாகச் சொல்லி அந்தக் கொலையை ஆதரித்து நிற்கிறார். ஒரு கலைஞனாகவும் சமூக அக்கறையாளனாகவும்

பார்க்க வேண்டிய கண்ணைக் கூடத் தொலைத்து வெறும் புலித் தேசியவாதியினதும் இன்றைய அப்பட்டமான தமிழ்த் தேசியவாதியின் கண்ணை செல்வம் அண்ணை கொண்டிருப்பது மிகுந்த ஏமாற்றம் அளித்தது. இலக்கியத் தளத்தில் தன்னை ஒப்புக் கொடுத்ததாகச் சொல்லும் அவர் சொல்லியிருக்கவே கூடாத பதில் இது.

இந்த இடத்தில் தான் 'தேவி எழுந்தாள்' தொகுப்பில் கவிஞர் சிவசேகரம் அவர்கள் எழுதியிருந்த

'துரோகி எனத் தீர்த்து
அன்றொருநாள் சுட்ட வெடி
சுட்டவனைச் சுட்டது
சுடக் கண்டவனைச் சுட்டது
சுற்றி நின்றவனைச் சுட்டது
சும்மா நின்றவனையும் சுட்டது'

என்ற கவிதையை செல்வம் அண்ணை அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

அதிலும், இன்று அந்தக் கருத்துக்களில் மாற்றங்கள் இருக்கலாம் என்று சொல்லிப் போகும் செல்வம் அண்ணை 'நான் சொல்வது என்னவென்றால் அந்தக்காலத்தில் போராட்டம் செய்வது சரி என்று நினைத்த ஆள் நான். ஆனால் இப்படி எல்லாம் தலை கீழாக போகும். இப்படி எல்லாம் செய்வாங்கள் என்று தெரியாது. போர் செய்வது சரி, அது வெல்லும் என்றும் நம்பினேன் நான்.' என்கிறார்.

ஒரு கலைஞனாக அன்றைக்கும் இன்றைக்கும் என்ன கருத்தில் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது என்பதனை அவர் அறுதியாகச் சொல்ல வேண்டும். இருக்கலாம் என மழுப்புவதிலோ இப்படித் தலை கீழாகப் போகும் எனத் தெரியாது எனச் சொல்வதிலோ ஒரு கலை வாழாது. சமூகத்தின் மீது பற்றுள்ள கலைஞனுக்கு இத்தனை அழிவுகளுக்கும் பின்னாலாவது அறுதியான கணக்கீடு கிடைத்துவிடும். ஆனால் அது இங்கு நிகழவில்லை.

தொடர்ந்து சபாலிங்கம் பற்றிச் சொல்லும் கருத்துக்கள் ஈழத்துச் சீமானாகக் காட்டியிருந்தது. தன்னைச் சந்திக்கின்ற காலத்தில்தான் அவர்(சபாலிங்கம்) வாசிக்கத் தொடங்குகிறார் 'வாசித்து வாசித்து அவர் கொஞ்சம் தன்னை மாற்றிக்கொள்கின்றார்.' என்று சொல்கிறார். அவருக்கு எல்லாம் கவிதை வராது என்று சொல்கிறார். கிட்டத்தட்ட கவிதை வாசித்து அவருடைய முரட்டுக்குணங்கள் இல்லாமல் போகிறது என்கிறார். ஆனால் அவருக்கு ஒரு புலி எதிர்ப்பு இருந்தது. என்கிறார்.

இந்தப் பதிவில் அவருடைய கொலை குறித்த அச்சத்தை அல்லது அது தரும் வலியை அதன் பின்னால் புலம் பெயர் சூழலில் ஏற்பட்ட மிகப்பெரிய அச்சுறுத்தலைக் கணக்கிடுவதை விட சபாலிங்கத்திற்கு பிரான்சின் ரெலோவுக்கான தலைமைப் பொறுப்புக் கொடுக்கப்படாத கவலையை முன்நிறுத்துவதில் காட்டும் அக்கறைதான் செல்வம் அண்ணையினது அரசியல் தந்திரத்தைக் காட்டி நிற்கிறது. அதனால் தான் சொல்கிறேன் செல்வம் அண்ணை அரசியல் நீக்கம் செய்யப்பட்ட மனநிலை கொண்டவரல்ல. மிகுந்த நேர்த்தியான அரசியல் செயற்பாடு கொண்டவர். ஆனால் அது எப்பொழுதும் நான் பேசும் சமூகநீதிக்கு எதிர்த் திசையில் இருப்பது. அதனை இந்த நேர்காணலின் ஒவ்வொரு வரிகளும் உணர்த்தி நிற்கிறது.

தொடர்ந்து கனடா இலக்கிய அரசியற் சூழல் பற்றிச் சொல்கிறார். தேடகம் தேடல் நண்பர்கள் குறித்த சில கதைகளில் நண்பர்கள் கூட இருந்தவர்கள் முரண்படுவதாகச் சொல்கிறார்கள். அதனை அவர்கள் தான் எழுதவேண்டும் அந்த நண்பர்கள் இந்த இடத்திலேனும் சொல்லமுடியாத கருத்துக்கள் எப்போதும் தேவையற்றவை.

'புலிகள் அழிந்த பின்னரும் சொல்கிறேன். இன்னும் முப்பது வருடங்களின் பின்னர் பிரபாகரன் பென்னம் பெரிய ஆளாக இருப்பார்.' எனச் சொல்வதில் அவரே சொல்வது போலான வெள்ளீசு மனநிலை தான் அதுவாக இருக்கிறது.

தொடர்ந்து 'ஒன்றைச் சொல்லலாம், 2009 இல் புலிகள் தோற்று அழியேக்கை புலிகளின் தோல்வி மாத்திரமல்ல இனி தமிழ் மக்கள் முழங்காலில்தான் இருக்கவேண்டும் என்றேன். 'விதியே விதியே தமிழ் சாதியை என்ன செய்ய நினைத்தாய்' என்ற கவிதையோ அல்லது நிலாந்தன் சண்டைக்கால் தப்பி வந்து 'சொற்கேளா புதல்வர்களின் சூடு இறங்கா உடல்களைக் கடந்து வந்தோம்' என்ற மாதிரியான ஒரு கவிதை எழுதிய ஞாபாகம், இதுகளை நினைக்க வேண்டியதுதான்.' என அறுதியுரைக்கிறார்

அதுவரை புலிகள் மக்களை தம்மோடு அழைத்து வந்து தமக்காக மக்களைப் பலி கொடுத்த கதையை கொஞ்சமும் ஞாபகப்படுத்த மறுக்கிறார். ' ஐயோ நாங்கள் தாண்டி வந்த பிரேதங்கள் எல்லாம் தனியே ஆமி சுட்டுக் கொன்ற பிரேதங்கள் மட்டுமல்ல' என்ற அந்தச் சனத்தின் கதையை தன்னுடைய புலி விசுவாசத்தால் ஒட்ட மழுங்கடித்து விடுகிறார். அந்த மறதிக்கு நிலாந்தனைத் துணைக்கழைக்கிறார். நண்பர் நிலாந்தனது இன்றைய கருத்துக்களில் எந்தவித பிசகையும் கொண்டிராத செல்வம் அண்ணை அவரைத் துணைக்கழைப்பதில் என்ன பிழை?

கனடாவிற்குப் புலம் பெயர்ந்த பின் மொன்றியலில் பார்வை சஞ்சிகை வெளியிட்ட வரலாறு, பின் ரொரண்டோவிற்கு இடம் மாறி தேடகம் அமைப்போடு இணைந்து செயலாற்றியது எனச் சொல்லிப் போகும் செல்வம் அண்ணை தாயகம் ஜோர்ஜ் குருசேவ் பற்றிக் குறிப்பிடும் தருணத்தில் 'தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற முக்கியமான இடம் அருகே ஒருவன் தமிழில் அச்சிட்ட பேப்பர்களை விற்றுக்கொண்டு இருந்தான். எமக்கு தமிழ் பேப்பர்களைப் பார்க்க பெரிய ஆச்சரியமாகப் போய்விட்டது. யார் அதனைச் செய்க்கிறார் என்று கண்டுபிடித்தால் ஜோர்ஜ் என்று தெரிந்தது. அவர் நல்ல கெட்டிக்காரன். பத்திரிகை மீது ஆர்வம் கொண்டவர். முன்னோடி என்று சொல்லலாம். ஜோர்ஜோடு தொடர்பு கொண்டோம்.

விடுதலைப்புலிகள் தங்களுடைய விடயங்களுக்கு ஜோர்ஜ் உதவுகிறார் இல்லை என்று அவரோடு தொடர்பு கொண்டு தூசணத்தால் பேசியிருக்கிறார்கள். அப்ப தொலைபேசியில் தொடர்பு கொண்டு யாரென்று தெரியாமல் ஏசலாம் தானே. அதனால் நொந்துபோய் கடும் புலி எதிர்ப்பில் அவர் இருந்தார்.' என்று குறிப்பிடுகிறார்.

உண்மையில் ஜோர்ஜ் எவ்வாறு எங்கு நின்று தாயகத்தை விற்றார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் புலிகள் தொலைபேசியில் தூசணத்தால் பேசியதால் தான் அவர் புலி எதிர்ப்பாளராக மாறினார். அல்லது கடும் புலி எதிர்ப்பில் இருந்தார் எனக் குறுக்கி விடுவதின் பின்னாலுள்ள அரசியல் மிக நுணுக்கமானது,

அத்தனை பன்முக கருத்தியல்களையும் ஆயுத முறையில் கையகப்படுத்தி மிக நீண்ட - கொடிய யுத்தத்தை போராட்டம் என்ற போர்வையில் புலிகள் மேற்கொண்டிருந்த காலங்களை, அதற்குள் பேச்சற்றும் மூச்சற்றும் இருந்த மக்களின் குரல்களை பேசியது மட்டுமல்லாது. ஈழத்திலும் புலம் பெயர் தேசங்களிலும் மீடியாக்கள் எனச் செல்லமாக சொல்லிக் கொள்ளும் அத்தனை ஊடகங்களும் முதுகெலும்பை மறைத்து புலிகளின் பினாமிகளாகிப் போன காலத்தில் அதனை இறுதிவரை மறுத்து நின்ற ஒரு பத்திரிகையை மிக நாசூக்காக தனது கெட்டித்தனத்தால் கதை மாற்றி சின்னத்தனமாக்கிவிடுகிறார் செல்வம் அண்ணை.

இதுதான் அவரது அரசியல் என்கிறேன் நான். இதனை அவர் வேண்டுமென்றே செய்கிறார். தாயகத்தின் அத்தனை பக்கங்களையும் ஒருவர் இன்று புரட்டிப் பார்க்க நேரிடின் இந்தக் கள்ளத் தனத்தை உடனே கண்டு பிடித்து விட முடியும்.

அடுத்துக் காலம் இதழ் குறித்துப் பேசுகிறார்.

'இது முற்று முழுதாக தமிழ் இலக்கியத்தில் ஒரு புது முயற்சி. மணிக்கொடி மரபில் வந்த ஒரு சஞ்சிகை என்று இதைச் சொன்னாலும், இது முற்று முழுதாக வேறு.' என்கிறார். இது வெறும் பிதற்றல். இதன் முழு எதிர் நிலைப்பாடு என்னுடையது. இது பற்றி நான் அதிகம் இங்கு பேசவில்லை 50வது காலம் இதழ் வெளியீடு றொரண்டோவில் நடைபெற்றது. அதற்கு நான் போயிருந்தேன். அந்த நிகழ்வு குறித்து அப்போதே எனது முக நூலில் (28 மார்ச் 2017)நான் எழுதிய பதிவினைப் பதிவிட்டு இதனைக் கடந்து செல்கிறேன்.

'கனடாவில் வெளிவந்து கொண்டிருக்கும் காலம் சஞ்சிகை 50 இதழ்களை கண்டடைந்திருக்கிறது. நாம் அனைவருமே பெருமைகொள்ளப்படவேண்டிய விடையம். அதன் உழைப்பு; மனவலி உடல்வலி பட்டவருக்குத்தான் தெரியும்.

புலம்பெயர் சூழலில் பள்ளம், ஊதா, கண், தூண்டில், தேடல், மூகரம், நான்காவது பரிமாணம், பனிமலர், சுமைகள், சுவடுகள், சிந்தனை, தேனீ, அம்மா, புன்னகை, எக்ஸில், உயிர் நிழல், என்று என் நினைவில் உள்ளவை எவையும் (நான் மறந்து போனதை நண்பர்கள் அறியப்படுத்துக) ஒரு 20த் தாண்டியிருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் நம்மிடையில் காலம் இதழ் 50 வெளியீட்டைத் தொட்டிருக்கிறது. இது பாராட்டப்படவேண்டியதும் நாம் பெருமைப்படவேண்டியதுமான ஒரு விடயம்.

ஆனால் ஒரு விடயம். மேற் சொன்ன அத்தனை இதழ்களும் பேசிய ஒரு விடயத்தையாவது காலம் இதழ் பேசியதா? அதன் இலக்கியத்தின் மீதான பங்களிப்பென்ன? நாம் கடந்து வந்த காலத்தின் இலக்கியத்தை அது பேசியதா? இரட்டை இதழுடன் நின்று போன ஒரு இலக்கிய இதழ் பேசிய சீரிய இலக்கியத்தை அல்லது அரசியலை ஏன் காலம் இதழ் பேசமறுத்தது? என்று நாம் தற்போதும் பேசமுடியாதா? காலத்தைப் பேசாத காலமாய் இருந்த காலத்தை நாம் பேசவேண்டாமா?

காலம் 50 இதழ் வெளியீட்டு நிகழ்வு இப்படியான கேள்விகளுக்கான பதில் நிகழ்வாக இருக்கும் என்று ஒருபுறம் நான் நினைத்திருந்தேன். அதிலும் விட காலம் சஞ்சிகை குறித்து நான் வைத்திருக்கும் எதிர் கருத்துக்களைப் புறக்கணித்து அதன் புகழ் சொல்லும் நிகழ்வாக இருந்து விடும் என்றும் நினைத்திருந்தேன். ஆனால் இரண்டுமேயற்று, காலம் இதழ் குறித்த ஒருவித அக்கறையுமற்று நடைபெற்ற நிகழ்வு அது. மிகுந்த ஏமாற்றம். யாராவது எதையாவது எழுதுவார்கள் என இன்று வரை பொறுத்திருந்தேன். நிகழ்வு குறித்து மிகுந்த ஏமாற்றம். மிக அதிகமான கோபம்.

காலம் இதழ்குறித்து மட்டும் தீவிரமாகப் பேசாது வேறு விடையங்களை அதிகமாகப் பேசிய நிகழ்வு அது. என்று எழுதியிருந்தேன்.

காலம் இதழில் எழுதியவர்கள் மற்றும் எழுத்துக்கள் பற்றிப் பேசும் இடத்தில் 'எப்பவும் என்னுடன் சண்டைபிடிக்கும் கற்சுறாவின் படைப்பு வந்திருக்கு. இவற்றில் நான் நல்ல கவனமாகத்தான் இருப்பேன். விடுதலைப்புலிகளை கடுமையாக எதிர்த்து அல்லது ஆதரித்து ஒரு கட்டுரையும் நான் பிரசுரித்தது இல்லை.' என்கிறார்.

எனக்கும் அவருக்குமான சண்டை என்பது எதுவாக இருக்கிறது? குடும்பச் சண்டை - மாமன் மருமகன்- அண்ணன் தம்பி சண்டை? அல்லது காசுக்கணக்குச் சண்டையா?

இலக்கியத்திலும் ஈழ அரசியலிலும் ஒரு மங்கலான ஒரு மழுப்பலான மறதியான தோற்றத்தை வரலாறு எனவும் அதுவே காலத்தின் சாகசம் எனவும் காட்ட முனைந்த பொழுதுகளில் இல்லை என மறுத்த சண்டை மற்றும்படி அவருக்கும் எனக்கும் தனிமனிதத் தகராறு எதுவும் இல்லை. அவர் செய்கின்ற கேலிக் கூத்துக்களை சூப்பர் என்றோ செம்மையான அலுவல் என்றோ கட்டை விரலை தம் பிடித்துக் காட்ட முடியவில்லை. தொடர்ந்தும் 'செம' என்பதாக கனடாவிலும் தமிழகத்திலும் இருப்பவர்கள் செய்து காட்டி அவரைப் பாழ் கிடங்கில் தள்ளாதீர்கள்.